2851

# T.N.L.A. Debates

OFFICIAL REPORT

VOL: VIII NO: 4

JUNE 18th 1985

(C)

V211,31 5

N85.8.4 j1

136383

668/86

வெளியீடு 9-4-1986] [Issued 9-4-1986

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, ஜூன் 18, 1985 - தொகுதி VIII எண் 4

Tuesday, the 18th June 1985 - Volume VIII No. 4

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
**Legislative Assembly, Secretariat, Fort St. George, Madras - 600009**

விலை ரூ. 3-00] [Price Rs. 3-00

136383
ஆவணக்காப்பக
சென்னை-600 008.

## உள்ளடக்கம்

18-6-1985

| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்-விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. . | 773—821 |
| 2. வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பியுள்ள இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களுக்குப் பாராட்டுகள் .. .. .. | 821—825 |
| 3. தகவல் கோரல்— | |
| (அ) மாநில் சுயாட்சி பற்றி சர்க்காரியா கமிஷனுக்குத் தமிழக அரசு தம் கருத்துக்களை அளித்தல் .. .. .. | 825—827 |
| (ஆ) அறிவிப்புக் கொடுத்த வரிசைப்படி வினாக்களை எடுத்துக்கொள்ளுதல் .. | 827—829 |
| 4. கவன ஈர்ப்பு— | |
| தஞ்சை மாவட்டத்திலுள்ள வடிகால்களான ஆறுகளை ஆழ, அகலப்படுத்தும் பணி | 830—833 |
| 5. அறிக்கை அளித்தல்— | |
| புறநகர் பேருந்துக் கட்டண உயர்வு—போக்குவரத்துத் துறை அமைச்சரின் அறிக்கை .. | 833—836 |
| 6. வரவு-செலவுத் திட்டம் 1985-86, வாக்கெடுப்பு கோரிக்கை எண். 26—கைத்தறியும் நெசவுத் தொழிலும் .. .. கோரிக்கை எண். 27—கதர்த்தொழில் .. | 836—940<br>971—972 |
| மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் .. | 836—838<br>913—930 |
| *மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி .. .. .. | 837—839<br>931—939 |
| *திரு. எஸ். பி. மணவாளன் .. .. | 839—845 |
| *திருமதி பா. வளர்மதி .. .. | 845—852 |
| *திரு. பொன். முத்துராமலிங்கம் .. | 852—860 |
| திரு. ஏ. தங்கராசு .. .. | 860—865 |

பக்கங்கள்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் .. .. 865—870
*திரு. எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன் .. 870—874
*திரு. கு. சுப்பராயன் .. .. 874—879
திரு. கே. பாலாஜி .. .. .. 879—886
திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் .. .. 886—890
திரு. பு. கோ. நாராயணன் .. .. 890—893
திரு. ஜி. கிருஷ்ணராஜ் .. .. 893—898
திரு. எஸ். என். இராமசாமி .. .. 898—900
திரு. க. நரசிம்மபல்லவன் .. .. 900—902
திரு. கே. ஆர். கணபதி .. .. 902—905
திரு. மு. இராமலிங்கம் .. .. 905—913

7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 941


## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

---

**1985, ஜூன் 18, செவ்வாய்க்கிழமை.**

**ஆனி 4, குரோதன—திருவள்ளுவர் ஆண்டு-2016.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

"செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு
எய்த உணர்ந்து செயல்"

செய்கின்றவனுடைய தன்மையை ஆராய்ந்து, செயலின் தன்மையையும் ஆராய்ந்து, தக்க காலத்தோடு பொருந்துமாறு உணர்ந்து செய்விக்க வேண்டும்.

### 1. வினாக்கள்-விடைகள்.

#### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**சென்னையில் திருமதி இந்திரா காந்திக்கு நினைவுச் சின்னம்**

174—(* வினா எண் 540) **திரு. கி. வெங்கடாசலம் :** மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருமதி இந்திரா காந்தி அவர்களுக்கு தமிழக அரசின் சார்பில், சென்னை மெரினா கடற்கரையில் அண்ணல் காந்தி யடிகள் சிலை அருகில் நினைவுச் சின்னம் அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, இல்லை.

**திரு. கி. வெங்கடாசலம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய திருநாட்டின் இணையில்லாத் தலைமை அமைச்சராக விளங்கி, 70 கோடி மக்களின் இதயங்களில் இரத்தம் வடிகின்ற வகையில் திடீரென்று சுட்டுக் கொலை செய்யப்பட்டு

நம்மையெல்லாம் ஆளாத்துயரத்திற்கு உள்ளாக்கிச் சென்ற பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அன்னை அவர்களின் நினைவாக நினைவுக் கம்பங்கள் நடப்பட்டு, நினைவு மண்டபம் எழுப்பி பொது மக்கள் வந்து தரிசித்து செல்லுகிற வகையில் தமிழக அரசு தன் செலவில் அமைக்க, மீண்டும் அது குறித்து பரிசிலனை செய்யுமா என்று மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** தலைவர் அவர்களே, இப்போது இங்கே கேட்கப்பட்டிருக்கின்ற மூலக் கேள்வி திருமதி இந்திரா காந்தி அவர்களுக்கு தமிழக அரசின் சார்பில், சென்னை மெரினா கடற்கரையில் அண்ணல் காந்தி அடிகள் சிலை அருகில் நினைவுச் சின்னம் அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா என்று கேட்டிருக்கிறார்கள். அதற்குத்தான் நான் இல்லை என்று பதில் அளித்திருக்கிறேன். ஆனால் இந்தியாவினுடைய வரலாற்றில் ஒரு மிகச் சிறந்த இடத்தைப் பெற்றிருக்கிற, இந்தியப் பிரதமராகவும், இந்தியாவின் தலைசிறந்த தலைவியாகவும் விளங்கிய அன்னை இந்திரா காந்தி அவர்களுக்கு முறையாக என்றென்றும் நிலைத்து நிற்கிற வகையில், அவர்களின் சிறப்புக்கு ஏற்ற வகையில், நினைவுச் சின்னம் எப்படி அமைக்க வேண்டும் என்பது பற்றி தக்க தருணம் வருகிறபோது இந்த அரசு பரிசீலித்து அப்படி ஒரு நினைவுச் சின்னத்தை உருவாக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கி. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்த நேரத்தில் அவர்களுடைய நோயினைப் போக்குகிற அளவில் முயற்சிகள் எடுத்து, தாய் உள்ளத்தோடு தன்னை அதில் ஈடுபடுத்திக் கொண்ட மறைந்த பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கிற வகையில், மீண்டும் அதனை அரசு பரிசீலிக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** தலைவர் அவர்களே, அதைப்பற்றி அரசு கூர்ந்து பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்திருக்கிறேன்.





**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்திலே கூர்ந்து பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்ற நல்ல பதிலைச் சொல்லியிருக்கிறார்கள். நான் உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்வதெல்லாம், அந்த நடவடிக்கைகளை விரைந்து எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, இந்த மாமன்றத்திலே இந்திய திருநாட்டினுடைய முன்னேற்றத்திற்கும், வளர்ச்சிக்கும், விடுதலைக்கும் பாடுபட்ட தலைவர்களின் படங்களை நாம் வைத்திருக்கிறோம். நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள், மறைந்த பாரதப் பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்களின் திருவுருவப்படம் இந்த மாமன்றத்திலே திறந்து வைக்கப்படும் என்று முன்பே அறிவித்திருக்கிறார்கள். எனவே இந்த ஆண்டு அன்னை இந்திரா காந்தி அம்மையார் அவர்களின் பிறந்த நாள் அன்றே இந்த மன்றத்திலே அவரது படத்தினை திறந்து வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நமது முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கு நினைவுச் சின்னம் அமைப்பதோ அல்லது சிலைகள் எழுப்புவதோ, எதுவானாலும் அதை முறையாக அமைக்க வேண்டும் என்று மத்திய அரசிடமிருந்து மாநில அரசுகளுக்கு ஒரு அறிவிப்பு வந்திருக்கிறது. சிலைகள் வைப்பதானால் எப்படி வைக்கப்படவேண்டும்; நினைவகங்கள் அமைப்பதானால் எப்படி அமைக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றிய கருத்துக்களைப் பரிசீலித்து அவர்கள் தெளிவாக மாநிலங்களுக்குத் தெரிவிக்க இருக்கிறார்கள். அப்படி ஒரு கருத்துரு பெறப்பட்டதற்குப் பிறகு அந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

அடுத்து நம்முடைய சட்டமன்றப் பேரவையில் அவர்களுடைய திருவுருவப் படத்தை திறந்து வைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து, அந்த திருவுருவப்படத்தை வரைவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அது நிறைவு பெற்று, இந்த ஆண்டு அவர்களுடைய பிறந்த நாள் அன்று இந்தச் சட்டமன்றப் பேரவையில், அந்த திருவுருவப்படம் திறந்து வைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல நம்முடைய நேரு அவர்

களுடைய திருவுருவப் படத்தையும் இந்தச் சட்டமன்றத்தில் திறந்து வைக்கப்படவேண்டும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டு, அதுவும் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. சா. துரைசாமி: தலைவர் அவர்களே, மறைந்த பாரதப் பிரதமர் அன்னை இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கு நினைவுச் சின்னம் அமைப்பது பரிசீலனை செய்யப்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறி இருக்கிறார்கள். அவர்களை ஈன்றெடுத்த இந்திய வரலாற்றில் நிலைத்த வரலாற்றைப் படைத்திருக்கிற மறைந்த ஜவஹர்லால் நேரு அவர்களுக்கு பிரம்மாண்டமான சிலை அமைக்கிற பணி மேற்கொள்ளப்பட்டு, கிண்டி அருகில் கத்திப்பாரா என்ற இடத்தில் அமைக்கப்படு மென்று விளம்பரப் படுத்தப்பட்டு, இன்னும் அந்தப் பணி நடைபெறாமல் இருக்கிறது. அந்தப் பணியை விரைவில் எடுத்துக் கொள்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, இந்தியாவினுடைய முதல் பிரதம அமைச்சர், ஆசியாவின் ஜோதி என்று புகழப் பெற்ற மறைந்த பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுக்கு சுமார் 12 லட்சம் ரூபாய் செலவில் தமிழகத்தினுடைய தலைநகரத்தில் மிகச்சிறந்த வகையில் ஒரு சிலை அமைக்கப்பட வேண்டுமென்பதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்தச் சிலையை உருவாக்குகிற முயற்சியில் நேரு அவர்களுடைய சரியான உருவத் தோற்றம் உள்ள சிலை அமைக்கப்பட வேண்டுமென்பதில் நம்முடைய முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் அக்கறை செலுத்தினார்கள். மறைந்த பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் அந்தச் சிலை எப்படி அமைக்கப்பட வேண்டுமென்பதில் அக்கறை கொண்டு நம்முடைய வரைபடங்களை எல்லாம் அவர்கள் வரவழைத்துப் பார்த்தார்கள். இங்கே வந்தபோதும் அவர்கள் நேரிலேயே அதுபற்றி விவாதித்தார்கள். எனவே, அமைக்கப்படுகிற சிலை தமிழ் நாட்டிலேயே சிறந்த முறையில், முதல் முறையாக அரசின் சார்பில் அமைக்கப்படுகிற சிலை. அவர் அவர்களுடைய தோற்றத்தை, உணர்வுகளை நல்ல முறையில்



வெளிப்படுத்துகிற வகையில் அமைக்கப்பட வேண்டுமென்ற கருத்தில், சிறந்த சூழ்நிலையில், வேறு எந்தச் சிலையும் அப்படி அமைக்கப்படாத சூழ்நிலையில், தலைநகருக்கு வருகை தருகின்ற உலக மக்கள், உலகப் பயணிகள் உட்பட அதைப் பார்த்து சிறப்பாக எண்ணுகிற வகையில் அது அமையவேண்டு மென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் விரும்பிய காரணத்தால் 12 லட்சம் ரூபாய் செலவில் அந்தச் சிலை சென்னையினுடைய நுழைவு வாயிலில் நிறுவப்படயிருக்கிறது. இறுதியாக அந்தச் சிலையினுடைய வடிவமைப்பும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்தச் சிலை உருவாக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு முன்னாள் இந்தியப் பிரதம அமைச்சர் அவர்களுடைய பிறந்த நாளன்று அங்கே நிறுவுகிற விழா மிகப்பெரிய அளவில் நடைபெறும்.

### இந்து அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலங்கள்

175—(*வினா எண் 603) திருவாளர்கள் டி. ஆர். வேங்கட ரமணன் மற்றும் திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்து அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலங்களில் குறைந்த வாடகையில் இருந்து கொண்டு உள்வாடகைக்கு விட்டுப் பணம் சம்பாதிப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும், இந்து அறநிலையத் துறைக்கு (MCTP ACT) இருந்து விலக்கு அளிக்கவும் அரசு முன்வருமா?

(ஆ) மேற்படி சட்டத்தில் மீண்டும் Proviso to Section 12 இடம்பெற அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலங்களை, குறைந்த வாடகையில் அனுபவித்துக் கொண்டு வருபவர்களிடமிருந்து நியாய வாடகை வசூலிக்கவும், அவசியமானால், அவர்களை வெளியேற்றவும் இந்து சமய அற நிலையங்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் சென்னை நகர வாடகைதாரர் பாதுகாப்புச் சட்டத்திலிருந்து அவைகளுக்கு விலக்களிப்பது அரசின் பரிசீலனையில் உள்ளது. ஏற்கனவே இச்சட்டத்தில் விதி 12-க்கு இருந்த காப்புரையை, புரவிசோவை இடம் பெறச் செய்வதும் அதிலே அடங்கும்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்** : தலைவர் அவர்களே, இந்தச் சட்டப்பிரிவுகள் மீண்டும் இடம் பெறும் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இந்தச் சட்டப் பிரிவானது முதலில் சட்டத்தில் இடம் பெற்றிருந்தபோது கிட்டத்தட்ட 1922-ம் ஆண்டிலிருந்து இடம் பெற்றிருந்து, பின்னால் 1974-ம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்த போது, குளோப் தியேட்டர் என்ற வழக்கிலே ஈடுபட்டு ஒரு தனி நபருடைய இலாபத்திற்காக விலக்களிக்கப்பட்டதாக அது சர்க்காரியா கமிஷனில் விரிவாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் பிரிவானது அகற்றப்பட்டதன் காரணமாக அதிகமாக பாதிக்கப்பட்டவர்கள் நம்முடைய அறநிலையத் துறையும், சென்னையில் உள்ள பச்சையப்பன் டிரஸ்டும் தான் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். அதனைக் கருத்தில் கொண்டு எவ்வளவு விரைவில், முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில், முடிந்தால் இந்தச் சட்டமன்றத் தொடரிலேயே அந்தச் சட்டம் கொண்டு வரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்** : தலைவர் அவர்களே, சிட்டி டெனன்ட்ஸ் புரடக்ஷன் ஆக்ட் என்கிற அந்தப் பாதுகாப்புச் சட்டம் இந்தியாவில் முதல் முறையாக 1922-ம் ஆண்டில் நீதிக்கட்சி ஆட்சி செய்தபோது தான் கொண்டு வரப் பட்டிருக்கிறது. அது கொண்டு வரப்பட்டதன் நோக்கம் ஏழை, எளிய மக்கள் தாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிற இடங்களிலிருந்து அப்புறப்படுத்தக் கூடாது என்பதற்காக கொண்டு வரப்பட்டது. ஆனால் பின்னாலே இது வளர்ந்து வளர்ந்து எப்படி ஆகிவிட்டது என்றால் இது ஏழைகளுக்குப் பயன்படாமல் வசதி படைத்தவர்கள், காலி நிலங்களை அல்லது வீடுகளைக் குறைந்த வாடகைக்கு நீண்டகாலம் குத்தகைக்கு எடுத்துக்கொண்டு, அதைக் காலி செய்யாமல் அதிலே லட்சக்கணக்கான ரூபாய்களை அவர்கள் சம்பாதிக்கிற ஒரு சூழ்நிலைக்கு ஆளாகி, அப்படி இழப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கிற அந்த உரிமையாளர்களை, சொந்தக்காரர்களை வெளியேற்ற முயற்சிக்கிறபோது அவர்கள் இந்தச் சட்டத்தினுடைய பாதுகாப்பை வைத்துக்கொண்டு, இடத்தின் உரிமையாளர்களுக்கு நஷ்டத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிற சூழ்நிலை இன்றைக்கு வளர்ந்து கொண்டிருக்



கிறது. ஆகவே இந்தச் சட்டம் எந்த நோக்கத்திற்காக இயற்றப் பட்டதோ, அந்த ஏழைகளுக்குப் பயன்படாமல், இந்தச் சமுதாயத்தை ஏமாற்றி, சட்டத்தைப் பயன்படுத்திக்கொண்டு, தனி நபர்களுக்கு அல்லது பொதுச் சொத்துக்களை, அறச் சொத்துக்களை அபகரித்துக் கொண்டு இருப்பவர்களுக்கு இன்றைக்குப் பயன்பட்டுக் கொண்டு இருக்கிறது. ஆகவேதான் இந்தச் சட்டத்திற்கு திருத்தம் கொண்டு வரவேண்டும் என்று எண்ணுகிறோம். 1972 ஆம் ஆண்டிலே கொண்டுவரப்பட்ட ஒரு திருத்தத்தினாலே, இருந்த உரிமைகளும் பறிக்கப்பட்டு, பாதுகாப்பற்ற நிலைமைக்கு இந்து அறநிலையத் துறை போன்ற நிறுவனங்கள் தள்ளப்பட்டு இருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற இந்த பச்சையப்பன் அறக்கட்டளைகளுடைய சொத்து என்பது, அதனுடைய விவரங்களைத் தெரிந்து கொண்டால், நாம் எல்லாம் மிகுந்த வேதனைப்படுவோம், லட்சக்கணக்கான சொத்துக்கள் பலரால் இன்றைக்கு சூறையாடப்பட்டு வருகின்றன. அதற்கு நடவடிக்கை எடுக்கப்பட முடியாமல் அந்த நிர்வாகத்தினருடைய கைகள் கட்டப்பட்டு இருக்கின்றன. அதைப்போலவேதான் அறநிலையத்துறைக்குச் சொந்தமான பல லட்சக்கணக்கான பெறுமானமுள்ள இடங்களிலும், அல்லது வீடுகளிலும் குடியிருந்து கொண்டு, குறைந்த வாடகையை 50 ரூபாய், 100 ரூபாய் என்று குத்தகை அல்லது வாடகையைத் தந்து கொண்டு இருப்பவர்கள் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி, அதிலேயிருந்து வெளியேறாமல், வெளியேற்றவும் முடியாமல், இன்றைக்கு அறநிலையத்துறை சங்கடப்பட்டுக் கொண்டு இருக்கிறது, நஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறது. அதைப்போல சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் பச்சையப்பன் அறக் கட்டளையினுடைய நிர்வாகம் இழந்துகொண்டிருக்கிறது. ஆகவே பொது நன்மையைக் கருதி, மக்களுடைய நன்மையைக் கருதி, நம்முடைய முன்னோர்கள் எந்த நோக்கத்திற்காக அறக் கட்டளைகளை நிறுவினார்களோ, அந்த நோக்கம் முறையாக நிறைவேற்றப்படவேண்டும் என்று எண்ணுகிற, அந்த உணர்வில் இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவது அவசியம் என்று அரசு உணர்ந்து பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே குறிப்பிட்டதைப் போன்று, முதலிலே இந்தச் சட்டம் அமலுக்கு வந்தபோது, வீடுகள் அதாவது ரெசிடென்சியல் பில்டிங்க்கு மட்டும் தான் இருந்தது. பின்னால், இந்தச் சட்டம் பல காரணங்களுக்காக நான்-ரெசிடென்சியல் பில்டிங்ஸ் என்று சொல்லப்படுகிற, வியாபாரத்தை நோக்கமாகக் கொண்டு உள்ள கட்டிடங்களுக்கும் அது விஸ்தரிக்கப்பட்டது. அதன் காரணமாக அறநிலையத் துறைக்குச் சம்பந்தப்பட்ட காலி மனைகளில் திரைப்பட அரங்குகளை கட்டிக்கொண்டு இருப்பவர்களைக்கூட வெளியேற்ற முடியாத ஒரு நிலை ஏற்பட்டு இருப்பதன் காரணமாக, இந்தச் சட்ட மாற்றங்கள் ஏற்படுத்தும்போது, இந்த ரெசிடென்சியல் பில்டிங்ஸ்க்கு மட்டும் இந்தச் சட்டத்தை ஒதுக்கி, நான்-ரெசிடென்சியல் பில்டிங் என்று சொல்லப்படுகிற அந்த கட்டிடங்களை எடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்னாலே சொன்னதைப் போன்று, இந்தச் சட்டம் கொண்டு வந்ததினுடைய நோக்கம், குடியிருக்கின்ற வீடுகளில் வாழ்ந்து கொண்டு இருப்பவர்களுக்கு பாதுகாப்பாகத்தான் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்கள் டெனன்ட்ஸ் என்று போட்ட காரணத்தாலே, பின்னாலே பில்டிங்ஸ் என்பதற்கு அந்தச் சட்டத்தில் கொடுக்கப்பட்டு இருக்கிற விளக்கங்கள் விரிவுபடுத்தப்பட்டு. அந்தக் கட்டிடம் அல்லது வீடு என்பதற்கு மிகப் பெரிய விளக்கங்கள் ஏற்பட்டு, அது காலி மனை எல்லாமே அதற்குள்ளே வந்து, கடைசியில் அதைத் தவறாகப் பயன்படுத்துகின்ற அந்த உரிமையைப் பயன்படுத்துகின்ற அளவிற்கு இந்தச் சட்டம் இன்றைக்கு பயன்பட்டு வருகிறது. ஆகவே இந்தத் திருத்தத்தைப் பற்றி, அல்லது விதிவிலக்கைப் பற்றி அரசு பரிசீலிக்கின்றபோது, அந்த பில்டிங்ஸ் என்று தரப்பட்டு இருப்பதற்கு உள்ள விளக்கத்தையும் மாற்றுவதற்கு அரசு பரிசீலிக்கும்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்ற நேரத்தில் இந்தச் சட்டம் எந்த நோக்கத்திற்காக கொண்டுவரப்





பட்டதோ, அந்த நோக்கம் ஏழைகளுக்கு பாதுகாப்பு அளிக்கின்ற நன்மை அளிக்கின்ற விதத்திலே நடைமுறையில் இல்லை என்று தெரிவித்தார்கள். எனவே இந்தச் சட்டத்தில் இருக்கிற குறைகளை எல்லாம் நிவர்த்தி செய்து, அந்தக் குறைகளை தீர்க்கின்ற முறையில் ஒரு காம்பர்ஹென்சிவ் சட்டம், இந்தச் சமுதாயச் சொத்துக்களுக்கு மட்டும் அல்லாமல், ஏனைய மதங்களுக்கும் பொருந்துகின்ற வகையில்—தற்போது வக்ப் போர்டுக்கும், கிருத்துவ மதத்திற்கும் சொந்தமாக நிலங்கள் இருக்கின்றன—இவைகளை எல்லாம் சேர்த்து ஒட்டுமொத்தமாக சட்டம் கொண்டு வர முடியுமா? இதுமாதிரியான ஒரு சட்டம் இங்கிலாந்து நாட்டிலே இருப்பதாக அறிகிறேன். அப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டுவர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தினுடைய அடிப்படை நோக்கம் குறிப்பாக ஒரு மதத்திற்கு என்று இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போன்று எல்லாச் சொத்துக்களுக்கும் வரு கிறது. ஆகவே, சட்டம் நிறைவேற்றப்பட்டு, அல்லது திருத்தப் பட்டு விட்டால் எல்லாச் சொத்துக்களையும் தான் அது கட்டுப் படுத்தும். அதிலே இருந்து விதிவிலக்கு தருவதற்கு வேண்டு மானால், ஏதாவது ஒரு குறிப்பிட்ட சொத்துக்களுக்கு விதி விலக்கு தருவதற்கு அரசுக்கு அதிகாரம் இருக்கிறதே தவிர, அதாவது இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டபோதும், இப்போது ஒரு வேளை நாம் திருத்துகின்ற அந்தப் பரிசீலனையிலும் எல்லாச் சொத்துக்களுக்கும் உள்ளடக்கித்தான் இந்தச் சட்டத் திருத்தம் வரும்.

**திரு. உ. சுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலில், அறக்கட்டளையையும், கோயிலுக்கு சொத்துக்களையும் ஏற்படுத்தியவர்கள் கொண்ட நல்லெண்ணத்திற்கு மாறாக இப்போது நடைபெற்று வருகிறது; அதைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசாங்கம் சட்டத் திருத்தம் கொண்டு வருவதாகச் சொல்கிறார்கள். நாங்கள் வரவேற்கின் றோம். ஒரு திருத்தமோ, புதிய சட்டமோ வரும் என்று அறிந்த உடனே அதை பைபாஸ் செய்வதற்கு அதை புறக்கணிப்பதற்கு இப்போது நியாய விரோதமாக, சட்ட விரோதமாக

[1985 ஜூன் 18

அனுபவித்துக் கொண்டு இருக்கிறவர்கள் முயலக்கூடிய வாய்ப்பு இருக்கிற காரணத்தால் இந்தக் கூட்டத் தொடரிலேயே, அதற்கு ஏதாவது பாதுகாப்பான முறையிலே அவசரமான ஒரு சட்டத்தைப் பிறப்பிக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இது ஒரு 60 ஆண்டுக்கு மேலாக இருந்து வருகிற சட்டம். அதற்குப் பிறகு பல நேரங்களிலே திருத்தங்கள் இதற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. இந்தத் திருத்தங்கள் எல்லாம் நான் முன்னாலேயே சொன்னதைப் போல, ஏழைகளுக்குப் பயன்படாமல், வசதி உள்ளவர்களுக்கு, நல்ல செல்வந்தர்களுக்கு இந்த மாதிரியான சொத்துக்களை வைத்துக் கொண்டு அனுபவித்துக் கொண்டு இருக்கிறவர்களுக்கு வாய்ப்பாகத் தான் இந்தத் திருத்தங்கள் இருந்து வந்திருக்கின்றன. ஆகவே, இதைக் கொஞ்சம் ஆழ்ந்து பரிசீலித்து, என்றைக்கும் நீதிமன்றத்திற்குச் சென்றாலும், அல்லது இந்தச் சட்டத்தைப் பற்றிய பரிசீலனை எந்த இடத்திலே எடுத்துக் கொண்டாலும் அது நின்று நிலைத்து நிற்கிற வகையில் இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரவேண்டி இருக்கிறது. ஆகவே, எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவிலே இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்படும்.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்** (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சிட்டி டெனன்ட்ஸ் ப்ரொட்டக்ஷன் ஆக்ட்'டிலிருந்து அறநிலையத்துறை சொத்துக்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். விதிவிலக்கு அளித்தாலும் கூட, இப்போது அந்தக் கட்டிடங்களிலோ, காலி நிலங்களிலோ இருக்கிறவர்களை காலி செய்யவேண்டும் என்றால், அறநிலையத்துறை சிவில் நீதிமன்றங்களைத் தான் நாடவேண்டும். சிவில் நீதிமன்றம் என்கிறபோது, முனிசீப் கோர்ட்டிலே 3 வருஷம், சப்-கோர்ட்டிலே 3 வருஷம், உயர்நீதிமன்றத்திலே 3 வருஷம் என்று 10 வருஷங்கள் அவர்களைக் காலி செய்ய ஆகும். எனவே, அறநிலையத் துறை சம்பந்தப்பட்ட சொத்துக்களுக்கும், அறநிலையத் துறைக்கும், மற்றவர்களுக்கும்



1985 ஜூன் 18]

நடக்கின்ற வழக்குகளை விசாரிக்க அறநிலையத் துறைக்கென்று தனி டிரிப்யூனல் ஏற்படுத்த மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப் போன்ற வழக்குகளிலே முடிவு காண்பதற்கான ஒரு டிரிப்யூனல் அமைப்பதற்கான கருத்து, அதற்கான சட்டத் திருத்தம் கொண்டு வருவதற்கு அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

**திருமதி பா. வளர்மதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பச்சையம்மன் கோயிலுக்குச் சொந்தமான இடத்தையும், கபாலீசுவரர் கோயிலுக்குச் சொந்தமான இடத்தையும், தனியார்கள் மொத்தமாக விலை பேசி விற்றுக் கொண்டிருப்பது அரசுக்குத் தெரியுமா? அப்படித் தெரிந்து இருந்தால் ஏதேனும் நடவடிக்கை இதுவரை எடுக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அறநிலையத் துறையினுடைய கட்டுப்பாட்டுக்குள்ளே இருக்கிற ஆலயங்களுடைய சொத்துக்களை தனியார் யாரும் விற்பனை செய்ய முடியாது. அப்படி இது வரை தகவல் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்கு உரிய குறிப்புக்களோடு அந்தத் தகவலைத் தந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். அறநிலையத் துறைக்கு அல்லது ஆலயத்திற்குச் சொந்தமான நிலங்கள் எதையும் தனியார் விற்பனை செய்ய முடியாது.

(முற்பகல் 9-20)

**திரு. க. பாலசுப்பிரமணியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அறநிலையத் துறையினுடைய கட்டிடங்களுக்கான பாதுகாப்புச் சட்டம் வரும் என்று அறிவித்தார்கள். அறநிலையத் துறையிலே வீடுகளாக இருந்தாலும் சரி, அல்லது வீடுகள் அல்லாத வியாபார ஸ்தலங்களாக இருந்தாலும் சரி, அவைகளுக்கு வாடகை 20, 30 ஆண்டுகளுக்கு முன்னாலே நிர்ணயிக்கப்பட்டதுதான் தொடர்ந்து குறைந்த வாடகையே இருந்து வருகிறது. அதைக் கூடக் கொடுப்பதற்கு மக்கள்

[1985 ஜூன் 18

முன்வர மறுக்கிறார்கள் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆகவே, அந்த வாடகையை அன்றைய நிலத்தினுடைய விலையைப் பொறுத்து, அன்று வாடகை நிர்ணயிக்கப்பட்டது. இன்று நிலத்தின் விலை, கட்டிடத்தின் விலை அதிகமாக இருக்கிற காரணத்தால் அந்த வாடகைகளை அதிகப்படுத்தி, அதிகமான வருவாயை அறநிலையத் துறை ஈட்டுவதற்கு அமைச்சரவர்கள் முயற்சி எடுத்துக்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, கட்டிடங்கள் அல்லது சிறிய கடைகள் போன்ற இடங்களுக்கு வாடகையை 3 ஆண்டுகள் அல்லது 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை நிர்ணயித்து அன்றைய நிலவரப்படி அதிக வாடகையை நிர்ணயித்து வசூலிக்கின்ற முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. இப்போது இங்கே நாம் விவாதித்துக் கொண்டிருக்கிற விஷயங்கள் மிகப் பெரிய அளவிலே உள்ள காலி மனைகளை குத்தகைக்கு எடுத்துக் கொண்டு அதிலே கட்டிடங்களைக் கட்டிக் கொண்டு இருக்கிறவர்கள் அல்லது பெரிய வீடுகள், பெரிய சொத்துக்களை நீண்ட காலக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டு இருக்கிறவர்கள்—அவர்களைப் பற்றிய பிரச்சினைதான் இந்தச் சட்டத்தின்படி பெரிய இழப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது என்ற கருத்தை இங்கே விவாதித்துக் கொண்டிருக்கிறோம். சிறிய கடைகள், சிறிய வீடுகளை வைத்திருப்பவர்கள் நடுத்தர மக்கள் அல்லது ஏழைகளாக இருப்பார்கள். அல்லது சிறிய வியாபாரிகளாக இருப்பார்கள். அவர்களைப் பொறுத்தவரை நாம் அறநிலையத் துறையினால் ஏதாவது சலுகைகளை தந்து அவர்கள் பலன் பெற்றால்கூட அதிலே தவறு இல்லை. ஆகவே, இந்தப் பிரச்சினையை அவ்வப்போது பரிசீலித்து வாடகையை உயர்த்துவது போன்ற காரியங்கள் நடைபெற்று வருகின்றன.



1985 ஜூன் 18]

## ஏலக்காய் பயிரிட நிலங்கள்.

176—(*வினா எண். 707) **திரு. எஸ். இராசாராமன் :** மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த மூன்று ஆண்டுகளில் ஏலக்காய் பயிரிடுவதற்காக எவ்வளவு நிலங்கள் தனியார்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டது ?

(ஆ) அதன் மூலம் அரசுக்குக் கிடைத்த வருமானம் எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, (அ) கடந்த மூன்று ஆண்டுகளில் ஏலக்காய் பயிரிடுவதற்காக, குத்தகை அடிப்படையில் புதிதாக நிலங்கள் ஏதுவும் வழங்கப்படவில்லை.

(ஆ) வன நிலங்கள் புதிதாக குத்தகைக்கு விடப்படாததால், அதனால் வருமானம் ஏதும் இல்லை.

**திரு. ந. சிவஞானம் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஏலக்காயை அரசாங்கமே பயிரிடுவதற்கு முயற்சி செய்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்குச் சொந்தமான காடுகளிலே இந்த ஏலக்காய் பயிரிடுவதற்காக குத்தகை விடுகின்ற பழக்கம் நீண்ட காலமாக இருந்து வந்தது. அதிலே 50 வருஷம், 75 வருடம் என்று பல பேர் அதனை அனுபவித்துக் கொண்டு அரசினுடைய நிலத்தை வைத்துக் கொண்டு பெரிய எஸ்டேட் சொந்தக்காரர்கள் என்ற பெயரையும் அவர்கள் பெற்றுக்கொண்டு இருந்தார்கள். 1976-ம் ஆண்டிலே இதிலே ஒரு திருத்தம் செய்து 25 ஆண்டுகள் என்று இருந்ததை 20 ஆண்டுகளாகவும், குத்தகை நில அளவு 50 ஏக்கர் என்று இருந்ததை 25 ஏக்கர் என்றும், குத்தகைத் தொகை 0 என்று இருந்ததை 100 என்றும் ஒரு ஆணை பிறப்பித்தார்கள். நம்முடைய அரசு வந்ததற்குப் பிறகு 1977-வது ஆண்டிலே இதிலே தீவிரமாகப் பரிசீலனை செய்து உண்மையாகவே ஏழை விவசாயிகள்—அந்த விவசாயத்தையே நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறவர்களுக்கு மாத்திரமே இனிமேல் இந்தக் குத்தகை விடப்

படவேண்டும் என்கின்ற ஒரு கொள்கை முடிவு எடுத்து இதுவரை குத்தகை பெற்று இருக்கிறவர்கள் அந்தக் குத்தகைக் காலம் தீர்ந்தவுடன் மீண்டும் அவர்களுக்குப் புதுப்பிப்பதில்லை என்ற கொள்கையும், அதற்கு பிறகு குறைந்தபட்சம் 2½ ஹெக்டேர்—அல்லது நம்முடைய ஏலக்காய் வாரியத்தின் மூலமாகப் பரிசீலனை செய்து ஒரு குறைந்தபட்சம் எவ்வளவு நிலம் இருந்தால் அந்த விவசாயி வசதியாக நஷ்டம் இன்றி அந்தத் தொழிலைச் செய்யமுடியும் என்பதைக் கண்டு அறிந்து அந்த அளவுக்கு குறைந்தபட்ச விஸ்தீரணத்தை குத்தகைக்கு விடலாம் என்று முடிவு எடுத்து அதற்கு குத்தகை நிர்ணயங்களும் ஏற்படுத்தி, வழங்கப் பெற்று வருகிறது. அதை எதிர்த்து வழக்குமன்றங்களுக்கு பல பேர் நீண்ட காலக் குத்தகைக்கு இருந்தவர்கள் சென்றார்கள். ஆனால் வழக்கு மன்றம், அரசு செய்த முடிவு சரியானது; அரசுக்கு அந்த முடிவு எடுக்க உரிமை இருக்கிறது என்று தீர்ப்பு அளித்து ஏற்கனவே ஒப்பந்தம் செய்து, பணம் செலுத்தியிருக்கிற அந்த விவசாயிகளுக்கு மாத்திரம் இந்த ஒப்பந்தத்தை ஏற்று அமல்படுத்தவேண்டும் என்று உயர் நீதிமன்றம் ஆணை பிறப்பித்திருக்கிறது. இப்போது அப்படி நிலமற்ற விவசாயிகளுக்கு இதைப் பகிர்ந்து கொடுப்பதாக ஒரு குழு அமைத்து அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

**திரு. உ. சுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மூன்றாண்டுகளில், அரசு நிலங்கள் எதுவும் யாருக்கும் கொடுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். இந்தியாவின் வெளிநாட்டு நாணயத்தைச் சம்பாதிக்கக்கூடிய ஏலம் பயிரிடப்படவேண்டியது அவசியம் என்பதை மத்திய சர்க்காரும், மற்ற பிற மாநிலங்களும் ஒப்புக்கொண்டுள்ளன. அது மட்டுமல்லாது, அதிகமான காடுகள் வளர்க்கப்பட வேண்டும் என்று சொல்கிற நேரத்தில், ஏல விவசாயத்திற்கு மட்டும் தான் காடுகளை உற்பத்தி செய்து, அதைப் பாதுகாத்து செய்யக்கூடிய தொழில் ஏல விவசாயம். ஆகவே, அரசாங்கம் குறிப்பிட்ட அளவுக்கு குறிப்பிட்ட நபர்களுக்கு எப்படிவேண்டுமானாலும்



அவர்கள் நிர்ணயிக்கின்ற வகையில், ஊக்குவிக்கின்ற வகையில் அரசு ஏல விவசாயம் செய்வதற்கு ஒத்துழைக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அதைத்தான் நான் முன்னாலே தெரிவித்தேன்—கொள்கை அளவிலே இந்த ஏலக்காய் விவசாயம் செய்வதற்கு கட்டண குத்தகை விடுவதை அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. காரணம், இந்த விவசாயத்தினால் காடுகள் அழிக்கப்படுவதில்லை. பெரிய மரங்கள் வளர்த்து, அதற்குள் ஏலக்காய் விவசாயம் நடைபெறுகிறது. ஆனால் தனியார் சிலர் 50 ஏக்கர், 100 ஏக்கர், 200 ஏக்கர் என்று குத்தகை வைத்துக் கொண்டு இருப்பதனால், ஏலக்காய் விவசாயிகளுக்கு இதனால் எந்தப் பலனும் கிடைக்காமல் இருக்கிறது என்ற முறையை அரசு தடுத்து நிறுத்தியிருக்கிறது. இப்போது அரசு புதிய கொள்கையின்படி, 2 ஹெக்டேர் அதாவது 5 ஏக்கர் நிலம் ஒவ்வொருவருக்கும் கொடுக்கலாம் என்ற முடிவு எடுத்திருக்கிறோம். அவர்கள் நிலமற்றவர்களாக இருக்க வேண்டும். 15 ஆண்டுகள் என்று முதலில் குத்தகை காலம்; அதற்குப் பிறகு 5 ஆண்டு காலம் அதிகமாக வழங்கலாம் என்று முடிவு எடுத்து, மொத்தம் 20 ஆண்டு காலம். இதற்கு முன்பு பரம்பரை பரம்பரையாக நடத்திக்கொண்டு வந்த முறையை அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. அதை தடுத்து நிறுத்தியிருக்கிறது. அதைப் போல, குத்தகைக் கட்டணமும் ஒவ்வொரு மாவட்டத்திற்கு ஏற்ற வகையில் விளைச்சலின் தரம் இருக்கிறது, அந்த வளம் இருக்கிறது. இந்த விளைச்சலின் வளத்தையும், தரத்தையும் கருத்திற் கொண்டு, குத்தகை தொகை நிர்ணயிக்கப்படுகிறது. இந்த சமுதாய நீதியின் அடிப்படையில் இந்த ஏலக்காய் குத்தகை விடப்பட்டு வருகிறது. ஆனால், இன்னும் முடிவாகி அவர்களிடம் ஒப்படைக்கப்படவில்லை என்பதைத் தான் முன்னாலே தெரிவித்தேன்.

[1985 ஜூன் 18

## கோவை மாநகராட்சி.

177—(*வினா எண். 491) திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகராட்சிக்குப் புதியதாக அலுவலகக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) அதன் மதிப்பீடு இன்னும் தயாரிக்கப்படவில்லை.

**திரு. மு. இராமநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை நகராட்சியாக இருந்தது, மாநகராட்சியாக மாற்றப்பட்டு ஆண்டுகள் பல ஆகிவிட்டன. ஏற்கனவே மாநகராட்சியாக மாற்றப்பட்ட பிறகு மாநகராட்சி மன்றம் என்கிற தகுதிக்கு உண்டான வகையில் மாநகராட்சி மன்றத்திற்கான கட்டிடமும், அலுவலக வசதியும், மற்ற ஏற்பாடுகள் எல்லாம் செய்ய வேண்டியிருக்கிறது. அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலிலே இருந்து பூர்வாங்கமான ஏற்பாடுகள் இருக்கின்றன. மதிப்பீடு தயாரிக்கப்படயிருக்கின்றது என்று சொன்னதே தவிர, இடத்தைப் பற்றியும், மற்ற விபரங்களைப் பற்றியும் சொல்லவில்லை. ஆனால், மாநகராட்சி எல்லைக்குள் செல்வ சிந்தாமணி வளாகக் குளத்தில் 25 ஏக்கர் நிலம் இருக்கிறது. அதை ஆர்ஜிதம் செய்து, அந்த செல்வ சிந்தாமணி குளத்தில் மாநகராட்சிக்கு புதிய கட்டிடம் கட்டலாம் என்ற பரிந்துரை ஏற்கனவே இருக்கிறது. எனவே, அதற்கான இடம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறதா ? எப்போது கட்டுவதற்கான ஏற்பாடுகள் தொடங்க இருக்கின்றன என்பதையும், விரைந்து அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்குமா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாநகராட்சி மன்றம் தனது தீர்மானத்தில் மாநகராட்சி அலுவலகத்திற்கு மேற்கில் உள்ள மௌலானா முகமதலி மார்க்கெட் தெருவினை நிரந்தரமாக மூடிவிட்டு, அந்த இடத்தையும் அதற்கு மேற்கில் உள்ள பல்நோக்கு குடிநீர் மேல்



1985 ஜூன் 18]

நிலைத் தொட்டியைச் சார்ந்த இடத்தினையும் மாநகராட்சி வளாகத்துடன் இணைக்கத் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். அந்த இடத்தை இன்னும் எடுக்கவில்லை ; அதற்கான தொகை இன்னும் ஒதுக்கவில்லை. ஆனால், அந்தக் கட்டிடம் கட்ட வேண்டுமென்று அரசு முடிவெடுத்திருக்கிறது.

**திரு. மு. இராமநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மௌலானா முகமதலி மார்க்கெட் என்பது ஒரு பெரிய மார்க்கெட். அதை ஒட்டி இருக்கின்ற நிலம், கட்டிடம், பி.டபிள்யூ. டி. அலுவலகம் ஆகியவற்றை அப்புறப்படுத்தி விட்டு, மாநகராட்சிக்கு புதிதாக கட்டிடம் கட்ட வேண்டுமென்ற அவசியம் ஏற்பட்டு, அதற்கு இடமும் தேர்ந்தெடுத்து, அதற்குத் தேவையான ஏற்பாடு செய்யவேண்டிய அவசியம் இருக்கிறது. ஆகவே, இதைப் பற்றி தனி கவனம் செலுத்தி, மாநகராட்சித் தேர்தலை நடத்துவதற்கு அமைச்சர் அவர்கள் விரைந்து நடவடிக்கை எடுப்பதாக ஏற்கனவே, அறிவித்தார்கள் ; இந்த நிலையில் கோவை மாநகராட்சிக் கட்டிடம் கட்ட வேண்டியது எவ்வளவு முக்கியம் வாய்ந்தது என்பதை அரசு உணர்ந்து, உடனடியாக இதைப் பற்றி மறு பரிசீலனை செய்து அதற்கான இடத்தைத் தேர்ந்தெடுத்து கட்டிடம் கட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, கட்டிடம் கட்டப்படும் ; நிச்சயமாகக் கட்டப்படும். ஆனால் எப்போது என்று சொல்ல இயலாது. அது நிதி நிலையைப் பொறுத்தது.

178—(*வினா எண். 496) திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகராட்சியில் குடிநீர்க் கட்டண வரி, வீட்டு வரி உயர்த்தப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அவைகளை ரத்து செய்ய அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): குடிநீர் கட்டண விகிதத்தைப் பொறுத்தவரை, பழைய கோவை மாநகராட்சி 1—7—1977 முதல் மாதம் ரூ. 2 என்றிருந்ததை ரூ. 10 ஆக உயர்த்த முடிவு செய்ததை பரிசீலித்து, 1—4—1983 முதல் ரூ. 6 ஆக குறைத்து விதிக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. எனினும் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பழைய கணபதி, மற்றும் கொமாரபாளையம் பஞ்சாயத்துக்களைப் பொறுத்தமட்டில் முன்பிருந்ததைக் காட்டிலும் தற்போது விதிக்கப்படும் வீட்டு வரி விகிதம் ஓரளவு குறைவாகவே உள்ளது.

கோயம்புத்தூர் மாநகராட்சியில் விதிக்கப்படும் சொத்துவரி விகிதம் கோவை மாநகராட்சிச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள குறைந்த பட்ச அளவிலேயே விதிக்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 9-30)

**திரு. மு. இராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே இரண்டு பிரச்சினைகள் இருக்கின்றன. ஒன்று, குடிதண்ணீர்க் கட்டணத்தைப் பொறுத்தது. அதில் பழைய நகராட்சி, அதாவது நகராட்சியில் ஒரு குடும்பத்திற்கு ஒரு பைப் வைத்திருக்கிறவர்களுக்குக் குறைந்த பட்சம் 6 ரூபாய் என்றும் டெனன்ட் என்ற முறையிலே வாடகைதாரர்கள் இருந்தால் ஒரு குடித்தனக்காரருக்கு 8 அணா என்றும் முறை இருந்தது. இப்போது மீட்டர் சிஸ்டம் வந்த பிறகு ஏற்கெனவே இருந்த நிலைமையில் இருந்து மாறுதல் அடைந்து 300, 400 ரூபாய் ஒவ்வொரு குடும்பமும் கட்டவேண்டிய நிலை—மீட்டர் தானாகவே காற்றுப் புகுந்து ஓடுவதால் சிக்கல் இருக்கிறது—இருப்பதால் அந்த முறையை மாற்றி குடிநீர்க் கட்டணத்தை மாற்றி அமைக்க வேண்டுமென்று கோரிக்கை இருக்கிறது. அல்லது ஃபிரி அலவன்ஸ் என்று பிற மாநகராட்சிகளில் கொடுக்கிற கணக்கை எடுத்து பொது மக்கள் பாதிக்கப்படுகிற நிலையிலிருந்து மாற்ற வேண்டுமென்று சம்பந்தப்பட்ட குடிநீர் வடிகால் வாரிய அமைச்சர் அவர்களிடமும் புகார் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இதைக் கவனத்தில் கொண்டு கட்டணத்தைக் குறைப்பதற்கும் அதைப் போலவே வீட்டுவரி இப்போது தாங்க முடியாத அளவுக்கு இருப்பதால் பழைய நகராட்சி எல்லைக்குள்ளே உள்ள பகுதிகளைப் பொறுத்தவரையில்



அதையும் மறுபரிசீலனை செய்து நடவடிக்கை எடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, குடிநீர்க் கட்டணத்தைப் பொறுத்தவரையிலே திடீரென்று உயர்த்தப்பட்டதாக மாண்புமிகு உறுப்பினர் எண்ணுவதாகத் தெரிகிறது. 22 கோடி ரூபாய் சிறுவாணித் திட்டத்திற்காகக் கடன்வாங்க 25—11—1975-லேயே உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. பத்து ரூபாய் என்று போட வேண்டியிருந்ததை, குறைத்து இப்போது ஆறு ரூபாய் என்று குறைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர், ஏதோ காற்றுப்புகுந்து மீட்டர் ஓடுவதாகச் சொன்னார்கள். தனியார் அதுபற்றிப் புகார் எழுதிக் கொடுத்தால் அரசு பரிசீலிக்கும். சொத்துவரியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். பழைய நகராட்சியாக இருந்தால், என்ன சொத்துவரி விதிக்கலாமோ அந்த முறையிலே குறைந்தபட்ச சொத்துவரிதான் விதிக்கப்பட்டிருக்கிறது. இணைக்கப்பட்ட பகுதியிலே இன்னும் அதிகமாக வரி விதிக்கப்படவில்லை, ஏற்கெனவே விதிக்கப்பட்டதுதான். இணைக்கப்பட்ட பகுதிகளான கணபதியிலே 7½ சதவீதமும், தெலுங்குபாளையத்திலே 7½ சதவீதமும், சங்கானூரிலே 8½ சதவீதமும், கோயம்புத்தூர் ரூரலிலே 8½ சதவீதமும், குமாரபாளையத்திலே 10½ சதவீதமும் வரி விதிக்கப்பட்டிருக்கிறதே தவிர வேறு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மு. இராமநாதன்:** தலைவர் அவர்களே, சிறுவாணித் திட்டம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே போடப்பட்டது. அதனுடைய திட்ட மதிப்பீடு ஆரம்பக் கட்டத்திலே 1976 ஆம் ஆண்டிலே உள்ள திட்டமதிப்பீடு 12 கோடி ரூபாயாக இருந்தது. ஆனால் பின்னாலே வந்த ஆட்சி விரைந்து நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் 32 கோடி ரூபாய்க்கு மதிப்பீடு வந்துவிட்டது. ஆகவே உலக வங்கியிடமும் வேறு பல நிறுவனங்களிடமும் இருந்து கடன் பெற்றிருப்பது உண்மைதான். ஆனால் அதற்காக கோவை மாநகர மக்கள் தண்டிக்கப்படக் கூடாது. ஆகவே அதைப் பரிசீலனை செய்து திட்ட மதிப்பீடு உயர்ந்துவிட்ட காரணத்தினால் மக்கள் தாங்கமுடியாத அளவுக்குக் குடிநீர்க் கட்டணத்தை விதிக்கக்கூடாது என்ற கோரிக்கை இருக்கிறது. அதைப்பற்றி அமைச்சர் அவர்கள்

கவனிப்பார்களா ? அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் கவுன்சில் வருகின்ற வரையிலேயாவது அதை நிறுத்திவைக்கும்படி நான் கேட்டுக்கொள்கிறேன், அதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, இந்த அரசு மந்தப் போக்கினால் காலதாமதம் ஏற்பட்டதாகவும் அதனால் திட்ட மதிப்பீடு கூடியதாகவும் குற்றஞ்சாட்டுவது சரியானதல்ல. கேரள அரசுதான் அதைக் கட்டி முடித்தார்கள், இந்த அரசு கட்டி முடிக்கவில்லை. இந்த அரசு மந்தப் போக்கினால் உயர்ந்தது என்று சொல்கிற குற்றச்சாட்டுச் சரியானதல்ல. 10 ரூபாய் என்று விதிக்கப்பட்டதை 6 ரூபாய் என்று குறைத்து விதித்து இருக்கிறார்கள். 1977 ஆம் ஆண்டிலிருந்து அதை விதிக்காமல் இந்த அரசு 1983 ஆம் ஆண்டிலிருந்து வசூலித்தால் போதும் என்று உத்திரவிட்டிருக்கிறது. ஆகவே பெரிய சுமையாக இல்லை. கட்ட வேண்டிய கடனுக்கு போட்டிருக்கிற கட்டணம் குறைவுதான் என்பது அரசின் கருத்து.

**திரு. மா. சின்னராசு:** தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளிலே சொத்துவரி பற்றி முறையீடு—அப்பீல்—செய்வதற்கு நீதிபதிகள் கொண்ட டிரிபியூனல் அரசால் அமைக்கப்பட்டிருக்கிறதா ? அது இப்போது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, தனிக் கேள்வி வேண்டும்.

### திருமயம் பஞ்சாயத்தைத் தரம் உயர்த்துதல்.

179—(* வினா எண். 567) திரு. த. புஷ்பராசு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் பஞ்சாயத்தை நகர பஞ்சாயத்தாக உயர்த்த அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது உயர்த்தப்படும்?



**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இல்லை.

**திரு. த. புஷ்பராசு:** தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள திருமயம் தாலுகாவினுடைய தலைமையிடம். அதோடு சரித்திரப்புகழ்பெற்ற இடமுமாகும். ஊமையன் கோட்டை திருமயத்தில் இருக்கிறது. இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும், உலக நாடுகள் பலவற்றிலிருந்தும் சுற்றுலாப் பயணிகள் தினந்தோறும் அங்கே வந்து கொண்டிருக்கிறார்கள். அப்படியிருக்கின்ற திருமயம் பஞ்சாயத்தைப் பேரூராட்சியாக உயர்த்துவது பற்றி அரசு மறுபரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர்கள் அவர்களே, ஏற்கனவேகூட உள்ளாட்சிகள் பற்றிய மானியம் நிறைவேற்றப்பட்டபொழுது நான் அறிவித்தேன், ஒரு இலட்சம் ரூபாய்க்குக் கீழே வருமானம் உள்ள ஊராட்சிகளை சாதாரண பேரூராட்சிகளாக மாற்றுவது பற்றி, திருமயம் பஞ்சாயத்திற்கு வருமானம் ஆண்டுக்கு 45,700 ரூபாயாக இருப்பதால் அதை உயர்த்துவதற்கு தற்சமயத்திற்கு இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. த. புஷ்பராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருமயம் பஞ்சாயத்தைப் பொறுத்தவரையில் இப்பொழுது ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள்ளே இருக்கிறது. பக்கத்தில் உள்ள மேலூர் போன்ற பஞ்சாயத்துக் கிராமங்களையும் இணைத்துக் கொண்டால் நிச்சயமாக அதனுடைய வருமானம் ஒரு இலட்சம் ரூபாய்க்கும் அதிகமாக வரும். ஆகவே, இதை மறுபரிசீலனை செய்து எப்படியும் திருமயம் பஞ்சாயத்தை பேரூராட்சியாக உயர்த்துவதற்கு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சியாக ஆக்குவது என்று சொன்னால் ஆண்டுக்குக் குறைந்தபட்சம் 75,000 ரூபாய், 80,000 ரூபாய்களை சம்பளமாகவே கொடுக்கவேண்டி வரும். 45,000 ரூபாய்.

வருமானம் உள்ள பஞ்சாயத்தைப் பேரூராட்சியாக ஆக்குவதில் அர்த்தமே இல்லை. அதை இப்பொழுது ஆக்குவதாக உத்தேச மில்லை.

## ஒன்றியங்களைப் பிரித்தமைத்தல்.

180 (* வினா எண். 224)—திரு. சீ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், நாமகிரிப்பேட்டை ஒன்றியத்தினைப் பிரித்து நாமகிரிப்பேட்டை, மங்களபுரம் ஒன்றியங்களாக ஏற்படுத்த அரசு பரிசீலனை செய்து வருகிறதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்**: தலைவர் அவர்களே, தற்போது இல்லை.

**திரு. சீ. சிவப்பிரகாசம்**: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சேலம் மாவட்டம் நாமகிரிப்பேட்டை ஒன்றியம் மிகுந்த பரப்பளவு கொண்டிருப்பதாலும், மேற்கண்ட நாமகிரிப் பேட்டை ஒன்றியத்தில் 13 பஞ்சாயத்துக்களை ஒன்றாக இணைத்தும், மங்களபுரம், காரூரான்பட்டி பஞ்சாயத்தை இரண்டாகப் பிரித்தும் வருங்காலத்தில் புதிய ஊராட்சி ஒன்றியமாக ஏற்படுத்துவது பற்றி அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்**: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே ஐந்து ஊராட்சி ஒன்றியங்களை இரண்டாகப் பிரித்து அரசு அறிவித்திருக்கிறது. மேற்கொண்டும் தேர்தலுக்கு முன்பாகப் பிரிக்க முடியாது. தேர்தல் முடிந்த பிறகு அதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

181. (* வினா என். 671)—திரு. க. நரசிம்மபல்லவன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் பெரிய ஊராட்சி ஒன்றியமான உத்திரமேரூரை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் எந்த அளவில் உள்ளது?



**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்**: தலைவர் அவர்களே, தமிழகத்தில் பெரிய ஊராட்சிகளைப் பிரிக்கும் திட்டத்தின் கீழ் முதற்படியாக 1,50,000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள ஐந்து ஊராட்சி ஒன்றியங்களைத் தற்போது பிரிவினைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தில் 1,21,000 ஜனத்தொகை உள்ளது. இதைவிட அதிகமான ஜனத் தொகை உள்ள ஊராட்சி ஒன்றியங்களும் உள்ளபடியால், வரும் ஊராட்சித் தேர்தலுக்குப் பின் உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தைப் பிரிப்பதற்கான திட்டம் அவசரத்திற்கேற்ப பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. க. நரசிம்ம பல்லவன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே கடந்த ஊராட்சிமன்றத் தேர்தலின் பொழுது உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தை சாலவாக்கம் என்றும், உத்திரமேரூர் என்றும் பிரிப்பதாக மாவட்ட ஆட்சித் தலைவருடைய செயற்குறிப்பு ஒன்று பெறப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில் அடுத்த தேர்தலின்பொழுது பிரித்துத் தருவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்பொழுது அதைப் பிரிப்பதற்கான சாத்தியமில்லை என்றாலும், அடுத்த வருஷத்திலேயாவது நிச்சயமாக அதைப் பிரித்து, கிராமப்புற வளர்ச்சியைக் கருதி அதை நிறைவேற்றித் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்**: பேரவைத் தலைவரவர்களே, தற்சமயம் தேர்தல் நடக்க இருப்பதால், தேர்தலுக்கு முன் பிரிக்க இயலாது. தேர்தல் முடிந்த பிறகு, அடுத்த தேர்தல் வருவதற்குள்ளாக அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

## சோடியம் ஆவி விளக்குகள் பொருத்தல்.

137—(* வினா எண். 73)—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட தலைநகரங்களிலும் நகராட்சிப் பகுதிகளிலும் சோடியம் ஆவி விளக்குகள் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே
(அ) இல்லை.

(ஆ இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவரவர்களே தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் மாவட்டத் தலைநகரங்களிலும் நகராட்சி போன்ற இடங்களிலும் மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களைக் கொண்டு வந்ததைப்போல, நகராட்சிப் பகுதிகள் மற்றும் மாவட்டத் தலைநகரங்களிலேயும் இப்படிப்பட்ட சோடியம் ஆவி விளக்குகளை அமைக்கின்ற திட்டத்தைப் பற்றி அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவரவர்களே, சோடியம் வேப்பர் லேம்ப் என்பது கொஞ்சம் விலை உயர்ந்த பல்புகள் ஆகும். இதைப்போடுவது என்பது அந்தந்த நகராட்சிகள், பேரூராட்சிகள் ஆகியவைகளின் நிதிநிலைமையைப் பொறுத்தது. எனவே, நிதிநிலைமை சரியாக இருந்தால் அவர்கள் கேட்டால் அரசு பரிசீலனை செய்து ஆணை பிறப்பிக்கும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவரவர்களே, சென்னை கார்ப்பரேஷன் போன்ற பகுதிகளில் சில குறிப்பிட்ட தெருக்களில் சோடியம் ஆவி விளக்குகள் போடப்பட்டிருக்கின்றன. சென்னை கார்ப்பரேஷனில் உள்ள எல்லாப் பகுதிகளிலேயும் இந்த சோடியம் ஆவி பல்புகளைப் போடுவதற்கு அரசு ஆவன செய்யுமா? மேலும், பல்புகளை அரசு எவ்வளவுதான் போட்டாலும் சென்னை போன்ற இடங்களில் இரவு நேரங்களில் பல்புகளைத் திருடிக்கொண்டு போகிறார்கள். இதைத் தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா? குறிப்பாக, ஜெமினி மேம்பாலத்தில் இரண்டு பகுதிகளிலேயும் பாலத்தில் டியூப் லைட்டுகள் இருந்தன. இப்பொழுது அதை அப்புறப்படுத்தி விட்டார்கள் அதனால் கீழே பஸ்கள் போகின்றபொழுது தெரியாமல் இருக்கிறது. (மணியடிக்கப் பெற்றது).

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவரவர்களே, சோடியம் வேப்பர் லேம்ப்கள் திருடு போவதாக அரசுக்குத் தகவல் இல்லை; அப்படியொன்றும் இல்லை



சென்னையில் அண்ணா மேம்பாலத்திற்கு மேல் விளக்குகள் போடும் திட்டம் நிச்சயமாக அரசின் பரிசீலனையில் இருக்கிறது; போடும்.

(முற்பகல் 9-40)

**திரு. சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சோடியம் வேப்பர் விளக்குகளுக்கு அதிகமான தொகையும், அதிகமான மின்சாரமும் ஆகிறது என்று சொல்கிறார்கள். சாதாரண விளக்குகளைப் பயன்படுத்துவதை விட இந்த சோடியம் விளக்குகளுக்கு 7 மடங்கு வித்தியாசம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். எனவே அதிகப்படியாக செலவு செய்து இந்த சோடியம் வேப்பர் விளக்குகளைப் பயன்படுத்துவது அவசியம்தானா என்பதை அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வது சரியான தகவல் அல்ல. சோடியம் வேப்பர் விளக்குகள் கூடுதலான விலையாக இருந்தாலும் அதிகமான வெளிச்சம் கொடுக்கிறது. அதிகமான காலத்திற்கு நீடித்து வருகிற காரணத்தால் இது பயன் உள்ளதாக இருக்கும் என்று கருதப்பட்டு போடப்பட்டு வருகிறது. ஆனால் நிதி ஆதாரத்தைப் பொறுத்துத் தான் அதனுடைய விஸ்தரிப்பு, விரிவாக்கம் செய்யப்படும்.

138—(* வினா எண். 278)—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோடியம் வேப்பர் பல்புகளை பஞ்சாயத்துகளுக்கு விஸ்தரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

**திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு** பேரவைத் தலைவர் அவர்களே, நானும் மிகவும் அதிகமாக ஆசைப்பட்டுதான் கேட்டேன். தப்பு தான். இருந்தாலும் ஊராட்சி மன்றங்களில் இருக்கிற விளக்குகளை முறையாக எரிய வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சிகளில், ஊராட்சி மன்றங்களில், நகராட்சிகளில் பல்புகள் இது போல் எரியவில்லை என்ற குற்றச் சாட்டுகள் இல்லாமல் இருப்பதற்காகத்தான் இருக்கின்ற விதிமுறைகளை மாற்றி மாவட்ட ஆட்சித் தலைவர்களை இனி பொறுப்பு ஏற்று, பல்புகள் வாங்கித் தர வேண்டும் என்ற புதிய உத்திரவை அரசு பிறப்பித்து இருக்கிறது. அந்த உத்தரவு அமலுக்கு வந்து இருக்கிறது. இனிமேல் மாண்புமிகு உறுப் பினர்கள் இது போன்ற புகார்கள் சொல்வதற்கு வாய்ப்பு இருக்காது என்று நான் நம்புகிறேன்.

**திரு. மா. மணிமாறன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கிராமங்களில் மின்சாரத் திட்டம் விஸ்தரித்த தற்குப் பின்னால் முன்பு எரிந்து கொண்டிருந்த விளக்குகள் கூட இப்போது முறையாக எரியவில்லை. அதற்கு அவர்கள் சொல்லு கின்ற காரணங்கள் எல்லாம் மேனுபாக்சர் டிபக்ட்ஸ் நிறைய இருக் கிறது என்று எல்லாம் டெக்கினிக்கல் ஆகச் சொல்கிறார்கள். அது உண்மையா இல்லையா என்பது எனக்குத் தெரியாது என்றாலும் முறையாக திறமை வாய்ந்த கம்பெனிகளிடமிருந்து விளக்குகளை, சோக்குகளை, ஸ்டார்ட்டர்களை வாங்கிப் பொருத்தினால் கிராமங்களில் தொந்தரவு இல்லாமல் இருக்கும் என்பதைச் சொல்லி, இன்னும் ஒன்று, விளக்குகளை பொருத்து கிற நேரத்தில் அலுமினிய கண்டக்டர்களைப் பயன்படுத்து கிறார்கள். அப்படி அலுமினிய கண்டக்டர்களைப் பயன்படுத்து வதால் மழை காலங்களில் பாசி ஏற்பட்டு இரண்டுக்கும் இணைப்பு துண்டிக்கப்படுவதாகச் சொல்கிறார்கள். எனவே விளக்குகளுக்கு பொருந்துகின்ற அந்த அலுமினிய ஒயர்களை எடுத்துவிட்டு காப்பர் ஒயர்களைப் பொருத்துவதற்கு அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதில் இருக்கின்ற நுணுக்கங்களைப் பற்றி எல்லாம் சொல்கிறார்கள். இதுபற்றி மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடம் தான் கேட்கவேண்டும். எந்த பல்பு சிறந்த பல்போ அந்த பல்பைப் போடுவதற்கு அரசு முயற்சிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**சைதை ஜோன்ஸ் சாலையில் சுரங்கப்பாதை.**

139—(* வினா எண். 746)—**திரு. சா. துரைசாமி :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சைதை ஜோன்ஸ் சாலையில் சுரங்கப்பாதை அமைக்கும் பணிகள் நடைபெறுவதில் காலதாமதம் ஆவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இப்பணிகள் துரிதப்படுத்தப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சைதை ஜோன்ஸ் சாலையில் சுரங்கப் பாதை அமைக்கும் பணி தொடங்கப்படவில்லை. ஆனால், அதற்கான பூர்வாங்க வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன. சுரங்கப்பாதை பணி குறித்த நேர்பாடு (Alignment) வரைபடம் சென்னை மாநகராட்சியால் தயாரிக்கப்பட்டு, தென்னக இரயில்வே பணி பிரிவிற்கு கருத்து பரிமாற்றத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. தென்னக இரயில்வேயிலிருந்து பதில் கிடைத்த பின்னர் இப்பணி குறித்து மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த சுரங்கப்பாதையினுடைய திட்ட மதிப்பீடு எவ்வளவு? அந்தப் பணியை விரைவில் தொடங்க அதை தொடர்ந்து அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு பணம் செலவு ஆகும் என்று கேட்கிறார்கள். திட்ட மதிப்பீடு இன்னும் தயாரிக்கவில்லை. அலைன்மெண்டு ஒத்துக்கொண்டதற்குப் பிறகுதான், இந்தத் திட்டத்தைத் தயாரிக்க இயலும். அது ரயில்வேயிடமிருந்து வந்ததற்கு பிறகு தான் தயாரிக்கப்படும்.

**திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாப்பூர் லஸ் பகுதியிலும் அடையாறிலேயும் சுரங்கப்பாதை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசிடம் தற்போது திட்டம் எதுவும் இல்லை.

### திண்டுக்கல் நகரில் பாதாள சாக்கடை அமைப்புத் திட்டம்.

182—(* வினா எண். 529) - - **திரு. ஆ. பிரேம்குமார் மற்றும் மாண்புமிகு திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், திண்டுக்கல் நகரில் பாதாளச் சாக்கடை ஏற்படுத்தும் திட்டம் அரசு செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்பொழுது ஏற்படுத்தப்படும்?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, (அ) திட்டம் ஏதும் தற்சமயம் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஆ. பிரேம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா மாவட்டத்தினுடைய தலைநகராக அறிவிக்கப்பட்டுள்ள திண்டுக்கல் நகரத்திலே இப்பொழுது மேல் சாக்கடை இருக்கின்ற காரணத்தால் சுகாதாரக் கேடுகள் விளைகின்றன. அதே போல், கொசுத் தொல்லைகளும் அதிகமாக இருக்கின்றன. ஆகவே, நகரைத் தூய்மைப்படுத்தும் வண்ணம், அரசு மறுபரிசீலனை செய்து இந்தப் பாதாளச் சாக்கடைக்கு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, ஆய்வு செய்வதற்குரிய கட்டணத்தை நகராட்சி கட்டினால் அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.



136383

### திருப்பாச்சேத்தி மற்றும் அருகிலுள்ள கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கு திட்டம்.

183—(* வினா எண். 592)—**திரு. க. பாரமலை:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மானாமதுரைத் தொகுதி திருப்பாச்சேத்தி மற்றும் அதன் அருகிலுள்ள கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்டக் குடிநீர் வழங்க கூட்டுக் குடிநீர் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் தற்போது இல்லையென்று சொன்னார்கள். அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அடிக்கடி அந்தப் பகுதிக்கு வந்திருக்கிறார்கள். வைகையின் இரு பகுதிகளிலுள்ள, அநேகமாக, எல்லா ஊர்களுக்கும் பாதுகாக்கப்பட்ட தண்ணீர் கொடுக்கப்படுகிறது. அந்தத் திருப்பாச்சேத்தி பகுதிக்கு மட்டும் அந்தத் தண்ணீர் கொடுக்கப்படவில்லை. திருப்பாச்சேத்தி நகரம் வைகைக் கரைப்பகுதியில் இருக்கிறது. அங்கு மட்டும் 5,000 மக்கள் வசிக்கிறார்கள். அந்தப் பகுதியிலுள்ள 10, 15 கிராமங்களிலுள்ள 20,000 மக்கள் பயனடையும் திட்டத்தை விரைவாக நிறைவேற்றினால் அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் வெகுவாக எதிர்பார்க்கும் அந்த நோக்கம் நிறைவேறும். ஆகவே, வருகின்ற ஆண்டிலே அப்படி ஒரு திட்டத்தை அமுல்படுத்த அமைச்சர் அவர்கள் முயற்சிப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, திருப்பாச்சேத்தி ஊராட்சியைப் பொறுத்தவரை அந்த ஊர் வகை 6 என்பதைச் சேர்ந்தது என்ற வகையிலே அது குறிப்பிடப்பட்டு, அங்கே நல்ல நீர் நிலை இருக்கிறது என்ற வகையிலேதான் இப்பொழுது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. அந்த ஊராட்சியைச் சேர்ந்த சாசெப்பனோடை, புதுக்குடியிருப்பு போன்ற ஊர்கள் மூன்றாவது வகையைச் சேர்ந்தன என்ற

வகையில் கை பம்பு மூலம் தண்ணீர் வழங்கப்படுகிறது. ஆகவே, தண்ணீர் பற்றாக்குறை இருக்கிறது என்ற நிலை ஏற்படுமானால் அரசு அதுபற்றி பரிசீலிக்கும்.

**திரு. க. பாரமலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபொழுது அந்தத் திருப்பாச்சேத்தி கிராமம் 6-வது வகையைச் சேர்ந்தது என்று சொன்னார்கள். சென்ற 2 மாதங்களுக்கு முன்னாலே கூட மிகக் கடுமையான தண்ணீர் தட்டுப்பாடு இருந்த அந்தப் பகுதியிலே ஒரு ஆழ் துளைக் கிணறு போட வேண்டுமென்று கேட்ட போது, ட்வாட் நிறுவனத்தால், அது 6-வது வகையிலே சேர்க்கப் பட்டிருக்கிறது, ஆகவே, நல்ல நீர் வசதி இருக்கிறது என்று சொன்னார்கள். பல இடங்களிலே இப்படி கிராமங்களுக்குத் தண்ணீர் கேட்கும்போது அது 6-வது வகையிலே சேர்க்கப் பட்டிருக்கிறது என்று சொல்லிவிடுகிறார்கள். இப்படிப் பார்க்கிறபொழுது கிராமங்களை வகைப்படுத்துதலில் மிகப் பெரிய தவறு நடந்திருக்கிறது என்பதுதான் என்னுடைய தாழ்மையான கருத்து. ஆகவே, இந்த வகைப்படுத்துதலை மீண்டும் ஆரம்பித்து, அதை நடத்த முடிந்தால் தற்சமயம் இருக்கிற தேவைகளை, உண்மையான தேவைகளை நாம் கணக்கில் எடுத்துக்கொள்ள இயலும் என்ற வகையிலே அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப் போன்று எனக்கு வந்த தகவலிலே திருப்பாச்சேத்தியை 6-வது வகையிலேயிருந்து மாற்ற வேண்டுமென்று அரசுக்கு நாங்கள் பரிந்துரை செய்து அனுப்பியிருக்கிறோம். அரசிடமிருந்து பதில் வந்தவுடனே அதுபற்றி பரிசீலிக்கப்படும் என்று பதில் வந்திருக்கிறது. ஆகவே, அதற்கும் உடனடியாக ஆணைகளைப் பிறப்பித்து, அந்த வேலையை உடனடியாகச் செய்வதற்கு மீண்டும் பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, வகைப்படுத்துதலிலே தவறு ஏதும் இல்லை. ஆனால், வகைப் படுத்தப்பட்டபோது இருந்த நிலைமைக்கும் இப்பொழுது இருக்கிற நிலைமைக்கும் சில மாறுபாடுகள், வேறுபாடுகள், முரண்பாடுகள் ஏற்பட்டிருக்கக் கூடும். அதனாலேதான் அவைகளை எல்லாம் மறு ஆய்வு செய்ய வேண்டுமென்று அரசு



தீர்மானித்திருக்கிறது. 50,000 குடியிருப்புகளை மறு ஆய்வு செய்வதற்கு அரசு திட்டம் தீட்டியிருக்கிறது. ஆகவே, அந்த ஆய்விற்குப் பிறகு இருக்கக்கூடிய சூழ்நிலைகளைக் கருத்திலே கொண்டு அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. பொ. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை தொகுதியைச் சேர்ந்த இராஜன் வீரத்திலே இருந்து கடலாடி தொகுதிக்குத் தண்ணீர் தருகின்ற திட்டம் உள்ளது. அதைப் போல இடைக்காட்டிலிருந்து சிவகங்கைக்குத் தண்ணீர் கொண்டு செல்கின்ற திட்டம் இருக்கிறது. திருபுவனத்திலிருந்து அருப்புக்கோட்டைக்குத் தண்ணீர் கொண்டு செல்கின்ற திட்டம் இருக்கிறது. மானா மதுரையிலிருந்து மதுரை மாநகருக்குத் தண்ணீர் எடுத்துச் செல்கின்றார்கள். ஆனால், இவ்வளவு பகுதிகளுக்கும் தண்ணீர் தருகின்ற மானாமதுரை தொகுதியைச் சேர்ந்த திருப்பாச்சேத்தி அருகே உள்ள ஆவாரங்காடு போன்ற பல்வேறு கிராமங்களுக்குத் தண்ணீர் கொடுக்கின்ற ஒரு புதிய திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, வளம் இருக்கின்றவர்கள், வளம் இல்லாதவர்களுக்குக் கொடுப்பது தான் சமதர்மம். அந்த வகையிலேதான் அரசு திட்டமிட் டிருக்கிறது. ஒருவேளை அந்தத் தொகுதியிலே தண்ணீர் பற்றாக்குறை இருக்கிற கிராமங்களைச் சுட்டிக்காட்டினால், அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திண்டுக்கல் பகுதியில் தொழிற்சாலைக் கழிவு நீர் அகற்றல்.**

184—(* வினா எண். 538)—திரு. ஆ. பிரேம்குமார் மற்றும் மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் பகுதியில் வெளியேற்றப்படும் தொழிற் சாலைகள் கழிவு நீர் சுத்திகரிக்கப்பட்டே வெளியேற்றப்பட அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மூலம் அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

**திரு. ஆ. பிரேம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் நகரத்தினுடைய எல்லைப் புறங்களின் நத்தம் ரோடிலும், மதுரை ரோடிலும் மற்றும் பெரியகுளம் செல்கின்ற ரோடிலும் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலை களிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் அங்கே இருக்கக்கூடிய நிலங்கள் உவர் நிலங்களாக மாறி இருக்கின்றன. மேலும் அங்கே இருக்கக்கூடிய நிலத்தடி நீரானது மிகவும் கெட்டு, உபயோகப் படுத்த முடியாத அளவுக்கு மாறியிருக்கிறது. அவற்றைப் போக்க அரசு உடனடியாக ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் பகுதியில் ஏறக்குறைய 44 தொழிற்சாலைகள் 1974 ஆம் ஆண்டு நீர் மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு சட்டத்தின் கீழ் தங்களுடைய தொழிற்சாலைகள் கழிவு நீரை வெளியிட அனுமதி கோரி, தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு விண்ணப்பித்துள்ள னர். 44 தொழிற்சாலைகளில் 29 தோல் பதனிடும் தொழிற்சாலை களாகவும் மீதி உள்ள 15 தொழிற்சாலைகள் இரசாயனம், துணி நெய்தல், டிஸ்டிலரி போன்ற தொழிற்சாலைகளாகவும் உள்ளன. வாரியம் நிர்ணயித்திருந்த வரைமுறைக்கு ஏற்ப கழிவுநீரைச் சுத்திகரித்து வெளியிட வேண்டுமென்ற நிபந்தனையின்கீழ் இதுவரையிலே 21 தொழிற்சாலைகளுக்கு வாரியம் அனுமதி வழங்கியுள்ளது.

(முற்பகல் 9-50)

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** தலைவரவர்களே, இந்த தோல் பதனிடும் தொழில் திண்டுக்கல்லில் 1940-லிருந்தே இருந்து வருகிறது என்றாலும் அப்போது எல்லாம் இல்லாத கொடுமை இப்போது மிகவும் அதிகமாக இருக்கிறது. நச்சுத்தன்மை வாய்ந்த இரசாயனப் பொருள்களைப் பயன்படுத்துவதால் இந்தக்





கொடுமை ஏற்படுகிறது. புதிதாகத் தொடங்குகிற தோல் தொழிற்சாலைகளில் கூட கழிவுநீரை சுத்திகரிப்பதில்லை. அந்தக் கழிவுநீர் திண்டுக்கல் அருகில் இருக்கிற குளங்களில் நிரம்பி விடுவது மட்டுமல்ல, குடிநீரிலும் கலந்து வேடசந்தூர் பகுதியும் பாதிக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கு காலக் கெடு நிர்ணயித்தாலும் எதையும் அவர்கள் பொருட்படுத்தாமல் இருக்கிறார்கள் என்பதைக் கருத்திற்கொண்டு சுத்திகரிப்பு செய்யாத தொழிற்சாலைகளை தடை செய்ய அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** தலைவர் அவர்களே, தொழிற்சாலைகள் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறோம். அண்மையிலே 19—10—1984-ல் நடைபெற்ற பொல்லூஷன் கன்ட்ரோல் போர்டு என்கிற உயர் மட்டக் குழுவில் இந்த முடிவினை எடுத்திருக்கிறார்கள். Five industries in Dindigul area which did not make an application to the Board for consent within the stipulated date. . . . . .. . . . அவர்கள்மீது நடவடிக்கை எடுத்துக்கொள்வது என்று முடிவு எடுத்திருக்கிறோம். அதிலும் குறிப்பாக,

Some industries like Tanneries, Distilleries, Sugar Mills, paper and chemicals have to take urgent steps to treat their effluents. There seems to be a tendency to delay this. இந்த மன்றத்தின் மூலமாகக்கூறினால் இது பயனுடையதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

The industries are warned that the Government will be strictly enforcing Water and Air Pollution Act and that further time will not be granted as a matter of routine. The Pollution Control Board is empowered to order the closure of a unit in the public interest. என்கிற வகையிலே பத்திரிகைகள் மூலமாக அட்வர்டைஸ் மென்ட்ஸ் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இந்தத் தொழிற் சாலைகள் நாம் இட்டிருக்கிற ஆணையை ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1985 ஜூன் 18

## இளம்பிள்ளை வாத குழந்தைகளுக்கு இரும்புக் காலணிகள்.

185—(* வினா எண் 619) — திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு இரும்புக் காலணிகளை இலவசமாக வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, செயற்கை உறுப்புக்கள் மற்றும் உபகரணங்கள், அரசு அனுமதித்துள்ள மிக குறைந்த விலையில் வழங்கப்படுவதால் இரும்பு காலணிகள் இலவசமாக வழங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, இதை மீண்டும் மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன். அது மட்டுமல்லாமல் இப்போது சொட்டு மருந்து, தடுப்பு ஊசி ஒரே இடத்தில் போடுகிறார்கள். கிராமப்புறங்களில் சென்று அவற்றை போட ஏற்பாடு செய்யப்படுமா? போலியோ தடுப்பு நடவடிக்கையாக குழந்தைகளுக்கு சொட்டு மருந்து, டிரிபிள் ஆன்டிஜன் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, படிப்படியாக சென்ற 7, 8 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த நிலைமைகளையும் இப்போதுள்ள நிலைமைகளையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பார்த்தால் நன்கு தெரியும். ஒவ்வொரு ஆண்டுக்கும் ஏறத்தாழ 10 சதவீதம் குழந்தைகள் அதிகமாக இந்த பாதுகாப்பினுடைய எல்லைக்குள் கொண்டுவரப்பட்டிருக்கிறார்கள். முன்பு இருந்ததைவிட தற்போது இரண்டு மடங்குகளுக்குமேல் தடுப்பு ஊசி போடுகிறோம். சொட்டு மருந்து, போலியோ ஓரல் வாக்சின் கொடுக்கிறோம். மத்திய அரசிலிருந்து கொடுக்கிற மருந்துகளை முழுமையாகப் பயன்படுத்துகிறோம். முழுமையாகப் பயன்படுத்திவிட்டோம் என்று சொல்லி, கூடுதலாகவும் பெறுகிறோம். அது மட்டுமல்லாமல் ரோட்டரி சங்கங்களுடன் இணைந்தும் போலியோ வாக்சின் ட்ராப்ஸ், சொட்டு மருந்து கொடுக்கிறோம். இந்த மூலம்



1985 ஜூன் 18]

கேள்வியைப் பொறுத்தவரையில் இரும்பு காலணிகள் இலவசமாக கொடுக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். 300 ரூபாய்க்கு குறைந்த வருமானம் உடையவர்களாக இருந்தால் 38 ரூபாய்தான் பிளாட்ரேட்டாக வாங்குகிறோம். 300 ரூபாயிலிருந்து 499 ரூபாய் வரையில் செயற்கை உறுப்பின் விலையில் 25 சதவீதத்தை வாங்குகிறோம். மாத வருமானம் 500 ரூபாயிலிருந்து 699 ரூபாய் வரை உள்ளவர்களிடம் 50 சதவீதம் வசூலிக்கப்படுகின்றது. 700 ரூபாய்க்கு மேற்பட்ட மாத வருமானம் இருக்கக்கூடிய நபர்களிடத்திலிருந்து முழுமையான தொகை பெற்றுக்கொண்டிருக்கிறோம்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகளுக்குத் தாய்ப்பால் கொடுக்கப்படாததன் காரணத்தால்தான் இளம்பிள்ளைவாத நோய் வருவதாகச் சொல்லப்படுகிறதே, எனவே கிராமப்புறங்களில் இவ்வாறு தாய்ப்பால் கொடுக்காததால்தான் இளம்பிள்ளை வாத நோய் வருகின்றது என்று பிரச்சாரம் செய்யப்படுமா? மேலும் சித்த வைத்தியத்தின் மூலம் இளம் பிள்ளை வாத நோய்க்கு நல்ல முறையில் வைத்தியம் செய்யலாம் என்று சொல்கிறார்களே, அதுபற்றியும் அரசு ஆராயுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, இளம் பிள்ளை வாதத்தைப் பொறுத்தவரையில் அதனை முழுமையாக அகற்றிவிட வேண்டும் என்றால் எல்லா குழந்தைகளுக்கும் போலியோ வேக்ஸின் என்று சொல்லப்படுகின்ற சொட்டு மருந்து கொடுத்தால் முடியும். மாண்புமிகு உறுப்பினர் சொல்லக்கூடிய வகையில் தாய்ப்பால் கொடுக்காத காரணத்தால் குழந்தைகளுக்கு அந்நோய் வருகின்றது என்பது விஞ்ஞான ரீதியாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை.

186—(*வினா எண். 722)—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலுள்ள ஆம்புலன்ஸ் வண்டிகள் எத்தனை?

(ஆ) இவ் வண்டிகள் எப்பொழுது வாங்கப்பட்டன?

(இ) இவ் வண்டிகள் மிகவும் பழுதடைந்து இருப்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே (அ) ஏழு.

(ஆ) இவ்வண்டிகளின் பதிவு எண்ணும் வாங்கப்பட்ட நாட்களும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:—

எம்.டி.ஓ. 5683—26—7—1966.

எம்.டி.ஓ. 5684—26—7—1966.

டி.என்.ஓ. 540—15—3—1977.

டி.எம்.ஓ. 174—5—6—1981.

டி.எம்.ஓ. 724—6—10—1981.

டி.எம்.ஓ. 4196—13—3—1982.

டி.எம்.ஓ. 4720—5—4—1982.

(இ) ஏழு வண்டிகளில், இரண்டு வண்டிகள் (எம்.டி.ஓ. 5683, டி.என்.ஓ. 540) மட்டுமே அடிக்கடி பழுது ஏற்பட்டு சீர்செய்ய முடியாத நிலையில் இருக்கிறது. அவைகளை பயனற்றதென கழிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கார்டியாலஜி பிரிவில் அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருந்தும் அந்த கார்டியாலஜி பிரிவுக்கு என்று வார்டு கிடையாது. அதற்கு தனி வார்டு அமைக்கப்படுமா? இல்லை என்றால் மற்ற பிரிவுகளில்





இருக்கின்ற வார்டுகளில் இரண்டிரண்டு படுக்கைகள்; நெப்ராலாஜி பிரிவுக்கு ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அதுபோன்று இதற்கும் ஒதுக்கித் தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும், இதற்கும் தொடர்பு இல்லை. கார்டியாலாஜி டிப்பார்ட்மெண்ட்டைப் பொறுத்தவரையில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. நானே சென்று கார்டியாலாஜி பிரிவைப் பார்த்து இருக்கிறேன். ஆனால் கூடுதலாகப் படுக்கைகள் தேவை என்ற கருத்து இருக்கின்றது. ஒட்டுமொத்தமாக எல்லா மருத்துவமனைகளிலும் இவ்வாறு கூடுதலாகப் படுக்கைகள் தேவை என்பது ஒரு இயற்கையான கருத்து. ஆனால் நிதிநிலையைப் பார்த்து அதற்கான நடவடிக்கையை நாம் எடுத்துக் கொள்ளலாம்.

டாக்டர் கே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் டி.எஸ்.எம்.ஓ. என்ற வகையில் சித்த மருத்துவத்திற்கென்று மாவட்ட மருத்துவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் போக்குவரத்து வாகன வசதி இல்லாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். எனவே ஒவ்வொரு மாவட்ட சித்த மருத்துவ அதிகாரிக்கும் இந்த வாகன வசதி செய்து கொடுக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கும் இல்லை என்ற பதிலைத்தான் சொல்ல வேண்டியிருக்கின்றது.

திரு. ந. சிவஞானம்: பேரவைத் தலைவர் அவர்களே, வண்டிகள் மிக மோசமாக இருப்பதாக அமைச்சர் அவர்கள் பதிலளித்தார்கள். எனவே புதிதாக ஆம்புலன்ஸ் வண்டிகளை வாங்க அரசு உத்தேசித்திருக்கின்றதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கு பதிலளிக்கும்போதே இரண்டு வண்டிகளைக் கண்டம் செய்யவேண்டும் என்று நான் சொல்லியிருக்கிறேன். அரசாங்கத்தில் உள்ள நிலைமையைப் பொறுத்த

வரையில் கண்டம் செய்வதற்கு சில நாட்கள் ஆகும். அவ்வாறு கண்டம் செய்ததற்குப் பிறகு இரண்டு வண்டிகள் வாங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### கணபதிபுரம் அரசு மருத்துவமனைக்குப் புதிய கட்டிடம்.

187—(*வினா எண். 1625)—திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம் கணபதிபுரம் அரசு மருத்துவமனைக்கு 10 படுக்கைகள் கொண்ட புதிய கட்டிடம் கட்ட அரசு அனுமதி வழங்கியும் பணி துவங்க காலதாமதம் ஆவதன் காரணம் என்ன?

(ஆ) பணி எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே,

(அ) கணபதிபுரம் மருந்தகத்திற்கு 10 படுக்கைகள் கொண்ட புதிய கட்டிடம் கட்ட அரசு அனுமதி எதும் வழங்கவில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கணபதிபுரம் அரசு மருத்துவமனை தொடங்கப்பட்டு ஏறத்தாழ 30 ஆண்டுகள் ஆகின்றன. இன்னும் அந்த மருத்துவமனைக்கு கட்டிடங்களும் சரியாக இல்லை. போதுமான மருந்துகளும் இல்லாத நிலை இருக்கிறது. ஆகவே மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதியில் உள்ள அந்த மருத்துவமனைக்கு, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பொதுப் பணித் துறையால் ஆய்வு செய்யப்பட்டு அனுப்பப்பட்டுள்ள திட்ட மதிப்பீடு அடிப்படையில் 10 படுக்கைகள் கொண்ட புதிய கட்டிடத்தை விரைவில் கட்ட உத்தரவு இடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த மருத்துவமனை குறித்து அக்கறை எடுத்துக் கொள்வது நியாயம் தான். ஆகவே, நான் அவர்களுக்கு ஒரு யோசனையாகச் சொல்கிறேன், அது சம்பந்தப்பட்ட எல்லாக் குறிப்புகளையும் அவர்கள் எனக்குத் தருவார்களேயானால், அரசாங்கத்தின் மூலமாக, துறையின் மூலமாக அதனைப் பரிசீலனை செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறேன் என்ற அந்த வாக்குறுதியைத் தருகிறேன்.

திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பொதுப்பணித் துறை மூலமாக 10 படுக்கைகள் கொண்ட புதிய கட்டிடம் கட்டுவதற்காக ஆய்வு செய்யப்பட்டு, திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதை நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதை விரைவிலே நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டு, அதை விரைவில் தருவதற்கு முயற்சி எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த வாக்குறுதியை தருகிறேன் என்று ஏற்கெனவே சொன்னேன். அதிலே இதுவும் அடங்கியிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

### பட்டுக்கோட்டையில் உணவுப் பொருள் சேமிப்புக் கிடங்கு.

188—(*வினா எண். 1644)—திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டையில் மேலும் ஒரு உணவுப் பொருள் சேமிப்புக் கிடங்கு புதிதாகக் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** (அ) மற்றும் (ஆ): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை வட்டம், மகாராஜ சமுத்திரம் கிராமத்தில் சுமார் 15 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கிடங்குகளும் துணைக் கிடங்குகளும் கட்ட இடம் தேர்வு செய்யப்படுகிற நிலையில் இருக்கிறது.

**திரு. ப. ந. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை, பேராவூரணி, மதுக்கூர் போன்ற இடங்கள் அதிகம் நெல் விளைகிற பகுதியாக இருக்கிற காரணத்தால் பட்டுக்கோட்டையின் உள் பகுதியில் நவீன அரிசி ஆலைக்கு அருகிலேயே சேமிப்புக் கிடங்குகளை விரிவுபடுத்தி கட்டுவதற்கான திட்டம் அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் இருக்கிற நவீன அரிசி ஆலைக்கு அடுத்துள்ள, பொன்னவராயன் குடிகாடு, உட்கடை என்னும் கிராமங்களில் ஏறக்குறைய 7 ஏக்கர் தனியார் நிலங்களை வாங்குவதற்கான ஏற்பாடுகள் இப்போது பரிசீலனையில் இருந்து வருகிறது. எனவே அந்தப் பகுதியிலேயும் உணவுப் பொருள்களை சேமித்து வைப்பதற்கு வேண்டிய இடம் ஒதுக்கப்பட்டு கூடங்கள் கட்டப்படும்.

**திரு. ப. ந. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியின் கீழ் நம்முடைய அமைச்சர் அவர்கள் இதுபோன்ற நல்ல நடவடிக்கைகளை எடுத்து வருவதற்காக, நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்தோடு நேரிடை கொள்முதல் ஒழுங்கு நிலையங்களை கூட்டு சேர்ந்து, உணவு வழங்கல் துறை, சேமிப்புக் கிடங்குகளைக் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவர் அவர்களே, நேற்று கூட மானியக் கோரிக்கையில் பேசுகிறபோது வருகிற 7 வது ஐந்தாண்டுத் திட்டத்திலே 50 கிடங்குகளை சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக நேரிடை கொள்முதல் நிலையத்தோடு கூடிய சேமிப்புக் கிடங்குகளாகக் கட்ட வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. வருகிற 1985-86 ஆவது ஆண்டிலே 5 இடங்களில் கட்டப்பட இருக்கின்றன.





**கைத்தறி நெசவாளர்களுக்கு வீடு கட்டும் திட்டம்.**

**189—(* வினா எண் 578)—திரு. ஆர். கோவிந்தசாமி :** மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

**கைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டும் திட்டத்தை விரைந்து செயல்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?**

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி :** தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள நெசவாளர்களுக்காக வீடு கட்டும் திட்டத்தை தீவிரப்படுத்தும் நோக்கத்துடன், ஏழாவது ஐந்தாண்டு கால திட்டத்தின் 10,000 வீடுகள் கட்ட உத்தேசிக்கப்பட்டு, நெசவாளர்களுக்கு வீடுகள் கட்ட தமிழ்நாடு நெசவாளர் வீட்டு வசதிக் கழகம் என்ற ஒரு தனி அமைப்பை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டும்போது ஒரு வீட்டுக்கு எவ்வளவு பணம் என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. நேற்றைய தினம் கூட குறிப்பிலே, ஒரு வீட்டிற்கு 12 ஆயிரம் ரூபாய் என்றும் அதிலே ஆயிரம் ரூபாய் மானியமாகவும், மீதியுள்ளதை கடனாக அவர்களே போட்டு கட்ட வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களே போடுவது என்றால், கிராமப் பகுதிகளிலே அது அவ்வளவு சரியாக இருக்காது. அத்தோடு கூட்டுறவு முறையிலேதான் வீடுகளைக் கட்ட வேண்டுமென்றால் உண்மையில் பல கிராமங்களில் அது சரியாக நடக்காத நிலை வரும். ஆக ரூரல் ஹவுசிங் ஸ்கீமிலே, 5 வீடுகள் 6 வீடுகள் இருந்தால் கூட்டாக கட்டித் தருகிறோமே, அந்த அடிப்படையில் இவர்களுக்கு வீடுகளைக் கட்ட வழி வகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த திட்டத்தின்படி ஒரு வீட்டின் மதிப்பு மொத்தம் 12 ஆயிரம் ரூபாய் என்ற அளவில், அரசு ரூபாய் ஆயிரம் மானியமாகத் தருகிறது. ஹட்கோ நிறுவனம் 9,700 ரூபாயை கடனாக வழங்குகிறது. மீதம் உள்ள 1,300-ஐ பயன் அடையும்

நெசவாளர்கள் முதலீடு செய்ய வேண்டும். 6-வது ஐந்தாண்டு திட்டத்தில் 5,000 வீடுகள் கட்ட முடிவு செய்யப்பட்டு அதிலே 3,219 வீடுகளைக் கட்டுவதற்கு கட்டுமானப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, அதிலே 2,286 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு உள்ளன. பல்வேறு கட்டுமான நிலையில் உள்ள 933 வீடுகள் விரைவில் கட்டி முடிக்கப்படும்.

### அத்தியாவசியப் பொருள்களுக்கு ஒருமுனை வரி.

190—(* வினா எண் 616)—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எல்லா அத்தியாவசிய பொருள்களுக்கும் ஒருமுனை வரி விதிக்க வேண்டும் என வர்த்தகக் கழகம் அரசிடம் கோரிக்கை மனு கொடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஆம். எல்லோராலும் உபயோகப்படுத்தப்படும் மிளகாய், புளி, மஞ்சள், கொத்துமல்லி, மிளகு ஆகிய அத்தியாவசிய வேளாண்மைப் பண்டங்கள் மீதிருந்த பலமுனை வரியை 26—3—1985 முதல் ஒருமுனை வரியாக அரசு மாற்றி உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, ஒருமுனை வரியிலிருந்து அரசுக்கு எவ்வளவு வருமானம் வருகிறது? இருமுனை வரியில் எவ்வளவு வருமானம் வருகிறது என்பதை அறிய விரும்புகிறேன். இந்த அரசு ஆட்சிப் பொறுப்பிற்கு வந்ததற்குப் பிறகு எத்தனை பொருள்களுக்கு இருமுனை வரியிலிருந்து ஒருமுனை வரி கொண்டுவரப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: தலைவர் அவர்களே, விற்பனை வரி அரசுக்கு வணிக வரித் துறையின் மூலமாக வருகிற வருமானத்தில் 88 விழுக்காடு ஒருமுனை வரி மூலமாக வருகிறது. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப்



பொறுப்பிற்கு வந்ததற்குப் பிறகு, 1977 ஆம் ஆண்டிலிருந்து 1984 ஆம் ஆண்டு முடிய 29 பலமுனை வரி விதிப்பு பட்டியலில் இருந்த பொருள்களை ஒருமுனை வரி விதிப்பு பட்டியலுக்குக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 26—3—1985-க்கு பிறகு ஐந்து பொருள்களை பலமுனை வரி விதிப்பிலிருந்து ஒருமுனை வரிவிதிப்புக்கு கொண்டு வந்திருக்கிறோம். ஆக மொத்தம் 34 பொருள்களுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சியில் ஒருமுனை வரிவிதிப்பு விதிக்கிற முறையை உருவாக்கி இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, வரி ஏய்ப்பு செய்பவர்கள் மீது அரசு எவ்வளவு தான் கடுமையாக நடவடிக்கைகளை எடுத்தாலும் ஒரு சில அதிகாரிகள் அரசுக்கு வருகிற வருமானத்தை கெடுக்கிற அளவிற்கு செய்கிறார்கள். சில அதிகாரிகளுக்கு கவரில் வைத்து கொடுத்தால் கணக்கு சரியாக இல்லாவிட்டாலும் சரியாகப் போகிறது. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு கூடாது.

திரு. சா. துரைசாமி: தலைவர் அவர்களே, ஒருமுனை வரி விலக்கு அளிக்கப்பட்ட பட்டியலை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மக்கள் மிக அவசியமாக பயன்படுத்துகிற கடலெண்ணெய், பிண்ணாக்கு, வெல்லம் போன்ற பொருள் களுக்கும், இன்றைக்கு ஆயிரக்கணக்கானவர்கள் வேலை வாய்ப்பை பெறுகிற பிளாஸ்டிக் பொருள்களுக்கும் ஒருமுனை வரி விதிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: தலைவர் அவர்களே, கடலெண்ணெய், பிண்ணாக்கு, வெல்லம் போன்ற பொருள் களுக்கு ஒருமுனை வரி விதிப்பு கொண்டு வரப்படுமா என்று உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். வெல்லம், பிண்ணாக்கு, கடலெண்ணெய் போன்ற பொருள்கள் ஒருமுனை வரி விதிப்பிலிருந்து, வியாபாரிகள் வரி ஏய்ப்பு போன்ற பல தவறுகளை செய்த காரணத்தால் அவை மீண்டும் பலமுனை வரி

விதிப்பிற்கு மாற்றப்பட்டிருக்கின்றன. ஆகவே அதை மாற்றுகிற யோசனை அரசுக்கு இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சங்குகளை மூலப்பொருளாகக் கொண்டு தொழில் தொடங்கல்.**

191—(*வினா எண் 146)—திருவாளர்கள் கு. சுப்பராயன் மற்றும் பொ. உத்திராபதி: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமேஸ்வரம், மண்டபம் பகுதிகளில் கிடைக்கும் சங்குகளை மூலப் பொருளாகக் கொண்டு. ஒரு தொழிற்சாலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: தலைவர் அவர்களே, இல்லை.

திரு. கு. சுப்பராயன்: தலைவர் அவர்களே, வேலை வாய்ப்பை அதிகரிக்க வேண்டுமென்ற பரந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிற மாநில அரசு மூலப்பொருள்கள் அதிகமாக கிடைக்கிற அந்தப் பகுதியில் இனிமேலாவது தொழிற்சாலை தொடங்குவதற்கு செயற்குறிப்பை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: தலைவர் அவர்களே, இராமேஸ்வரம், மண்டபம் பகுதியில் கிடைக்கிற சங்குகளை வைத்து இராமநாதபுரத்தில் ஒரு சங்கு தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்று முன்பு ஒரு திட்டம் இருந்தது. ஆனால் தமிழ் நாட்டில் கிடைக்கிற சங்குகள் அனைத்தையும் மீன்வளத் துறை மேற்கு வங்கத்திற்கு இப்போது விற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள். சங்குகளிலிருந்து வளையல் செய்கிற தொழில் மேற்கு வங்கத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் இந்தத் தொழிலை நடத்துவதற்கு குறிப்பாக யாரும் முன்வரவில்லை. அதுமட்டுமின்றி மேற்கு வங்கத்தில் உள்ள கைத்தறி



வளர்ச்சிக் கழகம், அகில இந்திய கைத்தறி வாரியம், குடிசை மற்றும் சிறுதொழில் நிறுவனத்தின் இயக்குநரகம், போன்ற மத்திய மாநில அரசு அலுவலகங்கள் மூலமாக நாம் பல முயற்சிகளை மேற்கொண்டு இருந்தும் கூட அவைகள் அனைத்தும் தோல்வியடைந்தன. ஆகவேதான் இப்போது எந்தவிதமான திட்டமும் செயற்குறிப்பும் அரசிடம் இல்லை என்று சொன்னேன்.

**பட்டுக்கோட்டையில் சிறுதொழில் மையம்.**

192—(*வினா எண் 1700) — திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை பகுதியில் சிறு தொழில் மையம் ஏற்படுத்தும் திட்டம் அரசு செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: தலைவர் அவர்களே, (அ) தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை பகுதியில் தொழிற்பேட்டை ஏற்படுத்தும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடம் இல்லை.

திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பட்டுக்கோட்டைப் பகுதியில் இப்போது தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் இல்லை என்று சொன்னார்கள். விவசாய மக்களின் வாட்டம் போக்கிட நாட்டம் கொண்டுள்ள இந்த அரசு தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், பட்டுக்கோட்டைப் பகுதியில் தென்னை, உப பொருட்கள், உப்பு, அதன் உபபொருட்களிலிருந்து தொழில் துவங்கிட 10 கோடி அளவிலே ஒரு திட்டத்தை அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதை நிறைவேற்றித் தருவார்களா? என்று கேட்பதோடு, பட்டுக்கோட்டைப் பகுதி நீங்கலாக, தஞ்சை மாவட்டத்தில் உள்ள பேராவூரணி, ஒரத்தநாடு போன்ற பகுதிகளுக்கு 15 சதவீதம் அரசு மானியம் தொழில் தொடங்குவதற்காக அளிக்கிறார்கள். மற்றப் பகுதிகளில் எல்லாம் 10

சதவீதம்தான் தருகிறார்கள். எனவே இதை 15 சதவீதமாக உயர்த்தி, விவசாயிகளின் நலிவு நீங்கி வளம் பெற்றிட வகை செய்வார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் அரசு முயற்சிகள் மேற்கொண்டு தொழில் கூடங்கள் பல கட்டியிருக்கின்றன. அதிலே இன்றைக்குக்கூட 24 செட்டுகள் காலியாக இருக்கின்றன. மற்றும் டைனி செட்டுகள் ஏறக்குறைய 169 காலியாக இருக்கின்றன. அதேபோல் ஏறக்குறைய 142 மேம்பாடு செய்யப்பட்ட மனைகள் இன்றைக்கும் பயன் படுத்தப்படாமல் கேட்பாரற்ற நிலையில் இருந்து வருகின்றன. இப்படி பல இடங்களில் காலியாக இருக்கின்ற காரணத்தினால் தான், புதிதாக தொடங்குவதற்கு எந்தத் திட்டமும் அரசிடம் இல்லை என்று கூறினேன். மேலும் தஞ்சைத் தொழிற் பேட்டையில் இப்போதுகூட ஏறக்குறைய 11 மேம்படுத்தப்பட்ட மனைகளும், 5 சின்னஞ்சிறு தொழில் கூடங்களும் ஒதுக்கீடு செய்வதற்கான செயற்குறிப்பு இருக்கிறது. குறைந்தபட்சம் 10 தொழில் முனைவர்கள் வங்கிகளில் நிதி உதவிக்கு ஏற்பாடு செய்யப்பட்ட திட்டங்களுடன் முன்வந்தால், பட்டுக்கோட்டையில் கூட ஒரு தொழில்பேட்டையை அமைக்கும் முயற்சியை அரசு மேற்கொள்ளும்.

**திரு. ப. ந. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயப் பெருங்குடி மக்கள் தஞ்சை மாவட்டத்தில் இருப்பவர்கள் தொழிலைப் பற்றி அதிகம் நாட்டம் இல்லாதவர்களாகவும், விவரம் இல்லாதவர்களாகவும் இருக்கின்ற காரணத்தால், அதை ஊக்குவிக்கின்ற வகையில் தொழில் முனைவர்கள், வங்கி அதிகாரிகள், அரசு அதிகாரிகள், வேளாண் குடிமக்கள் ஆகியவர்களைக் கொண்ட ஒரு குழு ஒன்றை அரசு அமைக்க முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்:** அரசு பரிசீலிக்கும்.

**திரு. துரை கோவிந்தராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, பட்டுக் கோட்டை வட்டத்தில் தொழில்பேட்டைத் துவங்குகிற செயற்



குறிப்பு இல்லை என்று சொன்னார்கள். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தமிழகத்திற்கு என, குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் ஒரு தொழில்பேட்டை துவங்குகிற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அப்படியிருந்தால், அதை இந்த ஆண்டு துவங்கி செயல்படுத்த முன்வருமா? பட்டுக்கோட்டையினுடைய பகுதியில் வேதாரண்யம், பட்டுக்கோட்டையில், தென்னை மற்றும் உப்பு அதைச் சார்ந்த தொழில்கள் செய்வதற்கு நிரம்ப சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்பதை தொழில் வல்லுநர்கள் அறிவித் திருக்கிறார்கள். 200 கோடி ரூபாயில் உப்புத் தொழிற்சாலை நிறுவுவதற்கு வேதாரண்யத்திலே வாய்ப்பிருக்கிறது. அப்படிப் பட்ட ஒரு பெரிய தொழிலையாவது, நம்முடைய சிறு தொழில் அமைச்சர் அவர்கள் பெருந்தொழில் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்து, துவங்குகிற ஒரு நிலையை தஞ்சை மாவட்டத்திற்கு உருவாக்கித்தர முன்வருவார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டையைப் பொறுத்த வரையில் எந்தச் செயற்குறிப்பும் அரசிடம் இல்லை என்று சொன்னேன். ஆனால் உப்பு, தேங்காய் நார் போன்ற பொருட் களைக் கொண்ட சிறுதொழில் தொடங்குவதற்கான ஏற்பாடுகளை அரசு செய்து கொண்டிருக்கிறது. அந்த மாவட்டத்தைப்பற்றி என்னைவிட மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும்.

### ஆதங்கோட்டில் பனைத் தொழில் மையம் அமைத்தல்.

**193—(*வினா எண் 700) திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர்-கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுகாவில் ஆதங்கோடு என்னும் இடத்தில் பனைத் தொழில் மையம் அமைப்பதற்கு நிதி ஒதுக்கப் பட்டுள்ளதா?

(ஆ) இம்மையம் எப்பொழுது அமைக்கப்படும்?

[1985 ஜூன் 18

**மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி :** தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ). ஆதங்கோட்டில் பனைத் தொழில் மையம் ஏற்படுத்துவது குறித்து கதர் வாரியமும் மாநில பனை வெல்ல இணையமும் பரிசீலித்து வருகின்றன. நிதி ஒதுக்கீடு இதற்கு ஏதும் செய்யப்படவில்லை.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனைத் தொழிலாளர்களின் மேம்பாட்டுக்கான மாவட்டம் தோறும் பனைத் தொழில் மையங்கள் ஆரம்பிக்கப் படும் என்று 1983 ஆம் ஆண்டு நிதி அறிக்கையில் பிரகடனம் செய்யப்பட்டு அதற்கு இணங்க 27 லட்சம் செலவில் விளவங் கோடு தாலுக்காவில் ஆதங்கோடு என்னும் இடத்தில் பனைத் தொழில் மையம் அமைக்க ஒத்துக்கொள்ளப்பட்டது. அப்படி ஒத்துக்கொள்ளப்பட்டதற்கு பிறகும் இன்னும் அந்த மையம் ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறது. இதை கணக்கில் எடுத்து உடனடியாக அந்த மையத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆதங்கோடு என்னும் இடத்தில் ரூபாய் 38.452 லட்சம் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஒரு பனைப் பொருள் மையம் துவங்குவது குறித்து அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டது. இந்தத் திட்டத்தை சிறப்புக் கூட்டு திட்டத்தின்கீழ் துவங்குவதாக இருப்பதால் திட்டத்தின் பயன்பெறும் நபர்கள் அனைவரும் ஆதி திராவிடர்களாக இருக்க வேண்டும். ஆக, இந்தத் திட்டத்தில் எத்தனை ஆதி திரா விடர்கள் பயன்பெறுவார்கள் என்ற விபரங்களை கோரியதில் விளவங்கோடு பகுதியில் உள்ள சுமார் 22 கிராமங்களில் பிற்பட்ட நாடார் சமூக மக்கள் மட்டுமே மரம் ஏறும் தொழிலை செய்கிறார்கள். இத்தகைய திட்டத்தை செயல்படுத்த குறிப்பிட்ட பகுதியில் ஆதி திராவிடர்கள் அதிகமாக இல்லாததால் இந்தத் திட்டம் பிற்பட்ட மரம் ஏறும் பாரம்பரை தொழிலாளர்களின் நலனைக் கருதி அரசு 100 சதவீதம் மானியம் என்ற அளவில் அளித்தால் இந்தத் திட்டத்தை மாநில இணையத்தால் சிறப்பாக நடத்த இயலும் என கதர் வாரியத் தலைமை அலுவலர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.



1985 ஜூன் 18]

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனைத் தொழிலாளர்கள் மேம்பாட்டுக்கான திட்டத்தின்கீழ் அமைக்கப்படக்கூடிய இந்த மையத்தை ஆதி திராவிடர்கள் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இருந்தால் தான் அமல் செய்யப்படும் என்ற அரசினுடைய நிலை தவறானது என்பதை கணக்கில் எடுத்து அந்த பனை ஏறும் தொழிலாளர்களை சேர்த்து ஆதி திராவிடர்கள் மட்டும் அல்ல, பனை ஏறும் தொழிலாளர்களை சேர்த்து இப்படி இந்தத் திட்டத்தை அமல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர் களுடைய கருத்தை அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடி வுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

**2. வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பியுள்ள இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி அவர்களுக்குப் பாராட்டுகள்.**

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2 வார காலமாக எகிப்த், அல்ஜீரியஸ், பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்கா, சுவிட்ஸர்லாண்டு ஆகிய நாடுகளில் தனது நல்லெண்ண சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு உலக நாடுகள் மத்தியில் பாரத பாரதத்தின் பெருமைகளை நன்கு உயர்த்திக் கொள்ளவும், கூட்டு சேராக் கொள்கையிலும், சமாதானக் கொள்கையிலும் நம் நாட்டுக்கு உள்ள நம்பிக்கையை மேலும் தெளிவுபடுத்தியும் தனது சுற்றுப் பயணத்தை வெற்றிகர மாக நிறைவு செய்து இன்று தாயகம் திரும்பும் இந்தியப் பேரரசின் இளைய பிரதமர் மாண்புமிகு திரு. ராஜீவ் காந்தி அவர்களுக்கு இந்தப் பேரவையின் சார்பிலும், தமிழக மக்களின் சார்பிலும் மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும், தாங்களும்

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1985 ஜூன் 18

வாழ்த்துக்களையும், பாராட்டுதலையும் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். சொல்லவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று இந்தியாவினுடைய பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் சில வாரங்களுக்கு முன்னால் ரஷிய நாட்டுக்கு பயணம் செய்து அங்கே பல்வேறு இடங்களை சுற்றிப் பார்த்ததோடு மட்டும் அல்லாமல் இந்தியாவுக்கும், ரஷியாவிற்கும் இருக்கின்ற நட்புறவு மேலும் வலிவுபெறத் தக்க வகையிலும் இந்தியாவுக்கும் ரஷியாவுக்கும் இருக்கின்ற பல்வேறு தொடர்புகள் மேலும் சுமுகமாக அமையத் தக்க வகையிலும் சுற்றுப் பயணத்தை மிக வெற்றிகரமாக நடத்தி முடித்து வந்தார்கள். ரஷியாவினுடைய சுற்றுப் பயணம் முடிந்ததற்கு பிறகு உடனடியாக பிரான்ஸ் நாடு, எகிப்து நாடு, அல்ஜீரிய நாடு பிறகு அமெரிக்கா, கடைசி 2 நாட்களாக ஸ்விட்சர்லாண்டு நாடு ஆகியவற்றில் அவர்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருப்பது உள்ளபடியே இந்தியாவினுடைய நடுநிலை கொள்கையை மேலும் வலியுறுத்துகின்ற வகையில் மிக சிறப்பாக அமைந்த ஒன்று ஆகும்.

(முற்பகல் 10·20)

இரஷ்ய நாட்டுக்குச் சென்று வந்தவுடனேயே, அமெரிக்கா நாட்டுக்கும் சென்று வருகிறார்கள். இரஷ்ய நாட்டின் வரவேற்பினை மிகச் சிறப்பாகப் பெற்றும், அதே நேரத்தில் அமெரிக்கா நாட்டினுடைய வரவேற்பையும் மிகச் சிறப்பாகப் பெற்றார் என்று சொன்னால் எந்த ஒரு அணியின் பக்கமும் இந்தியா இல்லை என்பதைக் காட்டுகின்ற வகையிலே இருக்கிறது. ஆகவே, எல்லா நாடுகளுடனும் சுமுகமான நட்புறவை நடுநிலையிலேயிருந்து இந்தியா பெறும் என்ற கருத்து இதன் மூலம் வலியுறுத்தப்பட்டிருப்பதோடு மட்டுமல்லாமல் இந்தியாவினுடைய பிரதமர் மாண்புமிகு இராஜீவ் காந்தி அவர்கள் ஆங்காங்கு நிருபர்களிடத்திலே எடுத்துச் சொன்ன பொழுதுகூட இதைப் பற்றி மிகவும் நல்ல முறையிலே தெளிவுபடுத்தி வந்திருக்கிறார்கள்.



1985 ஜூன் 18] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

நாங்கள் எந்த ஒரு அணியிலேயும் சேர மாட்டோம் என்றும், சேருகின்ற கொள்கையை நீண்டபெரும் காலமாகக் கொண்டிருக்கவில்லை என்றும், 101 நாடுகளைக் கொண்ட, கூட்டு சேரா நாடுகளுக்கு இப்பொழுது இந்தியா தான் தலைமைதாங்கி வருகிறது என்றும், அந்தக் கொள்கையை மேலும் மேலும் நிலைநாட்டி, உலகத்திலே கூட்டு சேரா நாடுகளின் நலன் கருதி பல்வேறு நன்மைகளைப் பயக்கும் முயற்சிகளில் ஈடுபடுவோம், அதில் இந்தியா முன்னோடியாக இருந்து பாடுபடும் என்று எடுத்துச் சொல்லியதோடு மட்டுமல்லாமல், இந்தியாவிற்கு ஆதரவாக, உறுதுணையாக உதவிபுரியும் முறையில் உலகத்திலே உள்ள எந்த நாடு முன்வந்தாலும் அந்த நாட்டோடு தன்னுடைய நட்புறவை வைத்துக் கொள்ளத் தயங்க மாட்டோம் என்றும், அந்த முறையில் இரஷ்யப் பயணத்தை மேற்கொண்டதாகவும், அதே அடிப்படையில் அமெரிக்கப் பயணத்தை மேற்கொண்டதாகவும் மிகவும் தெள்ளத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

இந்தியாவின் அந்நிய நாட்டுக் கொள்கை என்ன என்பதையும் மிகத் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். சிலபல கருத்துக்களில் அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலே வேறுபாடுகள் இருந்தாலும், உலகப் பிரச்னைகளைப் பொறுத்தவரையில் சில பல வகைகளிலே இரு நாடுகளும் முரண்பட்டு நின்றாலும், ஒன்றுக்கொன்று நட்புறவைக் காப்பாற்றுவதிலேயும், உலக அமைதியைக் காப்பாற்றுவதிலேயும், அணு ஆயுதப் போர் தடுத்து நிறுத்தப்பட வேண்டுமென்பதிலேயும் அமெரிக்காவோடு இந்தியா ஒத்துழைக்கும். அதைப்போல அமெரிக்காவும் இந்தியாவின் கொள்கைகளுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இந்த வகையில் அமெரிக்க சுற்றுப் பயணத்தை முடித்து இருக்கிறார்கள்.

பிரான்ஸ் நாடு, எகிப்து நாடுகளிலேயும் சுற்றுப் பயணம் செய்து, நேற்று ஜெனிவாவில் நடந்த கூட்டத்திலேயும் மிகச் சிறப்பாக எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இவைகளையெல்லாம் நாம் நேரடியாகச் சென்று பார்ப்பதைப்போல, தொலைக்காட்சி மூலம் வெளிப்படுத்தியிருந்தார்கள்.

அவர்கள் அமெரிக்க நிருபர்களுக்குப் பேட்டி அளித்த பொழுதுகூட, எல்லாத் தரப்பினரும் பாராட்டத் தக்க அளவில், போற்றத் தக்க அளவில், உறுதியாகவும், தெளிவாகவும், திட்பமாகவும், குழப்பத்திற்குச் சிறிதும் இடமில்லாத வகையிலேயும் தெரிவித்திருக்கிறார்கள். ஆரவாரச் சொற்களையோ அல்லது பகட்டான சொற்களையோ சொல்லாமல், ஆடம்பரமான முறையில் கருத்துக்களைச் சொல்லாமல், நிதானமாகவும், அமைதியாகவும், மிகச் சாதாரணமான முறையிலேயும் பதில் சொன்னார் என்று அமெரிக்க நாட்டுப் பத்திரிகையாளர்களும் பாராட்டியிருக்கிறார்கள்; மற்றவர்களும் பாராட்டியிருக்கிறார்கள்,

அதைவிட மிகமிக முக்கியமான ஒன்று என்னவென்றால், அவர் அமெரிக்க நாட்டில் சுற்றுப் பயணம் செய்கின்றபொழுது அவரைக் கொல்வதற்கான முயற்சிகள் சிலபலவற்றை, அதிலும் இந்த நாட்டைச் சேர்ந்தவர்களே செய்தபோதிலும், அமெரிக்க நாடு அவற்றையெல்லாம் கண்டுபிடித்து தடுத்து நிறுத்திய நிலையில், இப்பொழுது போக வேண்டுமா என்ற ஐயப்பாட்டையும் பலர் எழுப்பிய நிலையிலேயும், என்னுடைய உயிர் பெரிதல்ல, என்னுடைய நாட்டிற்காக நான் எதையும் ஏற்றுக்கொண்டு என்னுடைய கடமையை நிறைவேற்றுவேன் என்று சொல்லி, அமெரிக்காவிற்குச் சென்று, அந்த அமெரிக்கப் பயணத்தையும் மிகவும் வெற்றிகரமாக நடத்தி விட்டுத் திரும்பி வந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கேட்கின்றபொழுது நாம் அனைவரும் மிக்க மகிழ்ச்சி அடைகிறோம்.

அந்த வகையில் தக்க பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்த அமெரிக்க நாட்டு அரசுக்கு—இதுவரை வேறு யாருக்கும் இவ்வளவு முனைப்புள்ளத்தோடு இவ்வளவு பந்தோபஸ்து ஏற்பாடுகளைச் செய்ததில்லை என்று சொல்லக்கூடிய அளவிற்கு அமெரிக்க அரசு செய்த அந்த ஏற்பாடுகளுக்காக அந்த அரசையும் பாராட்டுகிறேன்.





அங்கே மட்டுமல்லாமல், பிரான்ஸ் நாட்டிலேயும் அப்படிப்பட்ட நிலைமைகளைப் பிரான்ஸ் நாட்டு அரசு தக்க ஏற்பாடுகளைச் செய்து மிகப் பாதுகாப்பான முறையில் இந்த நிகழ்ச்சிகள் நடப்பதற்கு இடம் அளித்திருந்தது. அந்த அரசும் நம்முடைய பாராட்டுகளுக்கு உரியதாகும்.

அந்த முறையிலே இந்தியாவிற்கு மேலும் பெருமை சேர்க்கும் வகையில், இந்தியா புகழ் பெறும் வகையில், இந்தியாவினுடைய இடம் அகில உலகத்தின் படத்தில் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு இடம் பெறத் தக்க அளவிற்கு இந்தச் சுற்றுப் பயணம் அமைந்தது குறித்து இந்தப் பேரவை தன்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறது. அவர்கள் தன்னுடைய பயணத்தை மிகவும் வெற்றிகரமாக முடித்துக்கொண்டு இன்று தான் வந்து சேருவார்கள்—இன்னும் வந்து சேர்ந்திருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன்—வந்து கொண்டிருப்பார்கள் என்று கருதுகிறேன். அவர்களை மகிழ்ச்சியோடு வருக, வெற்றிகரமாக வருக வருக என்று இந்த அவையின் சார்பாக வாழ்த்துவோமாக என்று கூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவை முன்னவரவர்களின் வாழ்த்துக்களோடும், பாராட்டுதலோடும், மாண்புமிகு உறுப்பினர்களுடைய வாழ்த்துக்களோடும், பாராட்டுகளுடனும் நம்முடைய இளைய பிரதமர் அவர்களுக்குத் தமிழ்நாடு சட்டமன்றத்தின் சார்பிலேயும், என் சார்பிலேயும் என்னுடைய வாழ்த்துக்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3. தகவல் கோரல்.

### (அ) மாநில சுயாட்சி பற்றி சர்க்காரியா கமிஷனுக்கு தமிழக அரசு தம் கருத்துக்களை அளித்தல்.

**திரு. அ. ரகுமான்கான் :** மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, இந்த அவையிலே இருக்கக்கூடிய அத்தனை பேர்களுடைய முக்கியமான பிரச்சினையான மாநில மத்திய அரசுகளுடைய அதிகார வரம்பு குறித்து விசாரிப்பதற்காக அல்லது ஆலோசனை சொல்வதற்காக நீதிபதி சர்க்காரியாவைக் கொண்ட ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆந்திராவைச் சேர்ந்த முதல்

[திரு. அ. ரகுமான்கான்] [1985 ஜூன் 18

அமைச்சரும், கர்நாடகாவைச் சேர்ந்த முதல் அமைச்சரும் அந்த மாநிலங்களின் சார்பாகக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆளுநர் பதவியே தேவையில்லையென்று சொல்லக்கூடிய அளவுக்குக்கூட அவர்கள் கருத்துத் தெரிவித்து இருக்கிறார்கள். நீதிபதி சர்க்காரியா பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டி அளிக்கின்றபொழுது, தமிழ்நாடு அரசு இந்த மாநில சுயாட்சி குறித்து, அதிகாரங்கள் குறித்து, எந்தக் கருத்துமே தெரிவிக்கவில்லையென்று சொல்லியிருக்கிறார்கள். இந்த அவையிலே ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்து இந்த மாநில சுயாட்சி கருத்து. ஆகவே, அரசின் கருத்து என்ன என்பதை நான் தெரிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இது பெரிய பிரச்னை. எழுதிக் கொடுத்து, அறிவிப்பு கொடுத்து, விவாதிக்கலாம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்காரியா கமிஷன் மாநில சுயாட்சி பற்றியும், மாநிலத்திற்கும் மத்திய அரசுக்கும் இருக்கிற உறவு முறைகளைப் பற்றியும், அதிகாரப் பங்கீட்டு முறைகளைப் பற்றியும் ஆராய்வதற்காக—சர்க்காரியாவினுடைய தலைமையிலே—ஒரு குழு மத்திய அரசால் அமைக்கப்பட்டு, எல்லா மாநிலங்களுடைய கருத்துக்களையும் கேட்டு, கடைசியிலே அவர்கள் ஒரு அறிக்கையைப் பரிந்துரையாக வைப்பது என்ற முடிவின் அடிப்படையில் எல்லா மாநிலங்களுக்கும் அவர்கள் அனுப்பிய வினாக்களைக் கேட்டிருந்தார்கள். தமிழக அரசின் சார்பாக ஏற்கனவே இதுபற்றிய கருத்துக்களை நாம் தெளிவாகவும் திட்டமாகவும் பல தடவைகளில் எடுத்துத் தெரிவித்திருக்கிறோம். ஏற்கனவே, இராஜமன்னார் குழுவும் தனது கருத்தைத் தெரிவித்து இருக்கிறது. சர்க்காரியா குழு அமைத்ததற்குப் பிறகு, நீதிபதி இராமபிரசாத் ராவ் அவர்களைத் தலைவராக வைத்து எல்லாக் கருத்துக்களையும் இப்பொழுது இருக்கிற சூழ்நிலையை அடிப்படையாக வைத்து, சர்க்காரியா கமிஷனுக்கு எடுத்துத் தெரிவிக்கிற வகையில் கருத்துக்களைத் திரட்டி ஒரு அறிக்கையாகத் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருந்தோம். அவர்களும் தந்திருக்கிறார்கள்.



1985 ஜூன் 18] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அதே நிலையில் பிற மாநிலங்களும் எப்படிப்பட்ட கருத்துக்களை எடுத்துத் தெரிவிக்கின்றன என்கின்ற வகையில், அவற்றினுடைய கருத்தை அறிந்து, அந்தக் கருத்துக்குப் பிறகு முற்றும் முடிந்த கருத்தாக நாம் சொல்வதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தினுடைய அடிப்படையில் கொஞ்சம் காலந்தாழ்ந்து செய்துகொண்டு வந்தோம். அதே நிலையில் சர்க்காரியா கமிஷனிடம் கொஞ்சம் காலம் கேட்டு இருக்கிறோம். இன்னமும் அவர்களுக்குத் தரவில்லை. ஆனால், இராம பிரசாத் ராவ் கொடுத்த பரிந்துரைகளை மற்றவைகளை அரசு மட்டத்திலே துறையினர் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். விரைவிலே அமைச்சரவை கூடி, அதிலே முடிவெடுத்த பிறகு சர்க்காரியா குழுவுக்கு அறிக்கை அனுப்பி வைக்கப்படும். அதுவரையிலும் கால நீடிப்புத் தரவேண்டுமென்று, சில காலம் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். சர்க்காரியா கமிஷனும் அதற்கு ஒப்புதல் அளித்திருக்கிறது.

**திரு. சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில சுயாட்சியைப் பற்றி திரு. ரகுமான்கான் அவர்கள் சொன்னார்கள் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒருவர் கேட்டதை வைத்து விவாதம் நடத்த வேண்டாம்.

(முற்பகல் 10-30)

## அறிவிப்புக் கொடுத்த வரிசைப்படி வினாக்களை எடுத்துக் கொள்ளுதல்

**திரு. கு. சுப்பராயன்** : தலைவரவர்களே, சட்டமன்றப் பேரவை விதிகளில் ஒரு வினா தங்களால் அனுமதிக்கப்பட்டால் 42 நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட துறையிலிருந்து பதில் அளித்திருக்க வேண்டும். ஆனால் தங்களால் அனுமதிக்கப்பட்டு 102 நாட்களுக்கு மேலாகியும் கூட என்னுடைய வினாக்கள் பலவற்றிற்கு இதுவரையில் பதில் வரவில்லை. ஆனால் எனக்குப் பின்னாலே போட்ட கேள்விகளுக்குப் பதில் அளிக்க பட்டியலில் சேர்க்கப்படுகிறபோது என்னுடைய வினாக்கள் ஏன் சேர்க்கப்படவில்லை?

[1985 ஜூன் 18

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதிக்கப்பட்ட வினாக்கள் எல்லாவற்றிற்கும் பதில் அளிக்கப்படும்; அத்தனை வினாக்களும் எடுத்துக் கொள்ளப்படும்: உங்கள் கேள்வியும் வரிசைப்படி வரும். மேலும் இப்படிப்பட்ட பிரச்சனைகளை அவையில் எழுப்பாமல் என்னுடைய அறையில் வந்து கேட்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, கேள்விகள் அனுமதிக்கப்பட்டால், தங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னால் அவற்றை இந்த அவையிலே எடுத்துக்கொள்வதிலே சில சிக்கல், குறைகள் ஏற்படுகின்றன. எப்படி குறை ஏற்படுகிறது என்றால் சில முக்கியமான கேள்விகள் வரும்போது அவற்றைத் தாமதப்படுத்துவதிலே குறை வந்துவிடுகிறது. எனவே ஓப்பன் ரெஜிஸ்டர் வைத்து, எந்த எந்தக் கேள்விகள் தங்களால் ஏற்றுக் கொள்ளப் பெற்றனவோ அவற்றை தேதிவாரியாகப் பதிவு செய்து வைத்தால் உறுப்பினர்களுக்கு அதைப் பார்த்து விவரம் தெரிந்து கொள்ள வாய்ப்பாக இருக்கும். அதற்கு . . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதை எல்லாம் நாம் அவையில் வைத்துப் பேசவேண்டாம். நீங்கள் சொல்வதை ஆலோசனையாக ஏற்றுக்கொள்கிறேன். என்னுடைய செயலகத்தைப் பற்றிய ஆலோசனைகளை என்னுடைய அறையில் வந்து சொல்லுங்கள். அலுவல் ஆய்வுக் குழுவிலே அவற்றை விவாதித்து, முடிவு செய்யலாம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, வினாக்களை எடுத்துக்கொள்ளும்போது, ஏற்றுக்கொள்ள முடியாத வினாக்களாக இருந்தால் பேரவைத் தலைவருடைய அலுவலகத்திலிருந்து இந்த வினாக்கள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்று சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. ஏற்றுக்கொள்ளப்படுகிற வினாக்களுக்கு, இந்த இந்த வினாக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன என்று தகவல் அனுப்புகிறார்கள். அவையிலே அவற்றை எடுத்துக்கொள்வதிலேதான் காலத்தாழ்வு ஏற்படுகிறது என்று உறுப்பினர்கள் சொல்கிறார்கள். முன்னால், பின்னால். . . .



1985 ஜூன் 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுபற்றி இங்கே விவாதிக்க வேண்டாம். இப்படிப்பட்ட பிரச்சனைகள் பற்றி என்னுடைய அறையில் பேசலாம். (குறுக்கீடு) என்னுடைய செயலகத்தைப் பற்றி இங்கே எல்லோரும் கேட்கும்போது அதற்கு நான்தான் பதில் சொல்ல வேண்டும். உறுப்பினர்களுடைய கேள்விகள் என்னை குறுக்கு விசாரணை செய்வதுபோல் இருக்கின்றன. இது முறையல்ல, நல்ல மரபு அல்ல. எனவே என்னுடைய அறையில் வந்து கேளுங்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, முன்னால் போட்டது, பின்னால் போட்டது என்பது கேள்வியினுடைய தன்மையைப் பொறுத்தது. சில வினாக்களுக்கு உடனடியாகத் தகவல் கிடைக்கிற அளவுக்கு வாய்ப்பு இருக்கும். தலைமைச் செயலகத்திலேயே விடை இருக்கும். சில வினாக்களுக்கு மாநிலம் முழுவதிலிருந்தும் பதில் சேகரிக்க வேண்டியிருக்கும். அப்படிப்பட்ட வினாக்களுக்கு பதில் பெறுவதில் தாமதம் ஏற்படும். அப்படிப்பட்ட நிலைமைகளில் வினாக்களை அவையில் எடுத்துக்கொள்வதில் வரிசை மாற்றம் ஏற்படக்கூடும். கூடிய வரையில் காலதாமதம் ஏற்படாமல் வினாக்களை அவையில் எடுத்துக்கொள்ள வேண்டும். அந்த வகையில் துறையினர் விரைவில் பதில் அனுப்ப வேண்டுமென்று ஏற்கெனவே எல்லாத் துறையினருக்கும் தகவல் அனுப்பப்பட்டிருக்கிறது. காலதாமதம் ஏற்படுகிறபோது பதில் சொல்லுகின்ற அமைச்சர்களுக்கும் சில சங்கடங்கள் ஏற்படுகின்றன. உரிய காலத்தில் சம்பந்தப்பட்ட துறையினரிடமிருந்து பதில் வந்து, அவையில் எடுத்துக்கொள்ளப்பட்டால் அது அமைச்சருக்கும் உறுப்பினருக்கும் நன்மை பயப்பதாக இருக்கும். அந்த வகையிலே எல்லாத் துறையினருக்கும் குறிப்பிட்ட காலத்திற்குள் பதில் அனுப்ப வேண்டுமென்று பேரவைத் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இப்போது மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த பிரச்சனைகளையும் எடுத்துக்கொண்டு எல்லாத் துறையினரும் விரைவாக பதில் அனுப்பி வைப்பார்கள் என்று நம்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது ஒரு நாளில் 20 கேள்விகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. அதற்கும் மேல் எடுத்துக்கொள்ள வேண்டும் என்றால் அதனை அச்சிட்டுத்தான் வைக்க முடியும்.

### 4. கவன ஈர்ப்பு.

### தஞ்சை மாவட்டத்திலுள்ள வடிகால்களான ஆறுகளை ஆழ, அகலப்படுத்தும் பணி.

**திரு. மா. மணிமாறன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, " தஞ்சை மாவட்டத்தில் திருமலைராஜன், அரசலாறு பிராவுடையான் போன்ற வடிகால்கள் ஆழப்படுத்தவும், அகலப் படுத்தவும் போதுமான புல்டோசர்கள் இல்லாததாலும், வேலை செய்கின்ற புல்டோசர்கள் பழுதுபட்டுவிடுவதாலும், ஆறுகளில் இடித்துத் தள்ளிய மண்ணை தண்ணீர் வருவதற்குள் சுத்தம் செய்யாவிடில் ஆறுகளின் போக்கு வேறு வகையில் மாறிவிடும் என்ற அச்சம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*** மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருமலைராஜன், அரசலாறு, பிராவுடையான் போன்ற வடிகால்களில் படிந்துள்ள வண்டலை அகற்ற விவசாயத் துறையிலிருந்து சுமார் பல டோசர்கள் வாடகைக்குப் பயன் படுத்த கோரப்பட்டுள்ளன. பாசனத்திற்காக ஆறுகளில் தண்ணீர் விடப்படுமுன் டோசர் கிடைத்தவுடன் வண்டல் அகற்றப்படும்.

2. ஒவ்வொரு ஆண்டும், விவசாயத்துறையிலிருந்து புல்டோசர்கள் வாடகைக்குப் பெறப்பட்டு வண்டலகற்றும் பணிகள் செயலாக்கப்படுகின்றன. இம்மாதிரி பணிகளை செயலாக்க தற்போது பொதுப் பணித்துறையின் வசம் புல்டோசர்கள் இல்லை. ஆகவே இப்பணிகளுக்கென புல்டோசர் களை வாங்கலாம் எனத் தலைமைப் பொறியாளர் கருதி, முதற் கட்டமாக இரண்டு புல்டோசர்களை வாங்குவதற்கு தலைமைப் பொறியாளர் அரசிற்கு செயற்குறிப்பு அனுப்பி உள்ளார். இரண்டு புல்டோசர்களின் விலை சுமார் ரூ. 24 இலட்சமாகும். மேற்படி செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளது.



**திரு. மா. மணிமாறன்:** பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளம் வந்தாலும் வறட்சி வந்தாலும் அடிக்கடி பாதிக்கப் படுவது தஞ்சை மாவட்டம் என்பதை எல்லோரும் அறிவார்கள். அப்படி பாதிக்கப்படுகின்ற நிலை இருப்பதற்குக் காரணம் ஒழுங்காக வடிகால்கள் இல்லாததுதான் என்பதையும் அனைவரும் நன்றாக அறிவார்கள். எனவே முறையான வடிகால்கள் இல்லாததால்தான் பாதிப்பு ஏற்படுகின்றது. கொள்ளிடத்திற்கும், வெட்டாறுக்கும் அரசலாறு, திருமலைராஜன் பிராவுடையான் போன்றவைதான் வடிகால்களாக இருக்கின்றன. அவை அகலம் இல்லாத காரணத்தாலும் ஆழமில்லாத காரணத்தாலும் தண்ணீர் வருகின்றபோது வடிய முடியாத நிலை ஏற்பட்டு பாதிப்பு ஏற்படுகின்றது. ஆனால் புல்டோசர்களைப் பொறுத்தவரையில் மூன்று புல்டோசர்களில் ஒன்று திருமலைராஜனில் பல நாட்களாக வேலை செய்யாமல் பழுதுபட்ட நிலையில் இருக் கின்றது. இரண்டு புல்டோசர்கள்தான் வேலை செய்கின்றன. அரசலாற்றில் ஒரு புல்டோசர்தான் இருக்கின்றது. பிராவு டையான் வடிகாலில் புல்டோசர்கள் இயக்கப்படவில்லை. இப்படிப்பட்ட நிலையில் 50 புல்டோசர்கள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். அது காவிரி டிவிஷனுக்கு உட்பட்டதா? இவ்வாறு புல்டோசர்கள் இல்லாததால்தான் இந்த ஆறுகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. எனவே இந்தக் குறையைப் போக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களோடு கலந்து 50 புல்டோசர்கள் இருக் கின்றன என்ற செய்தி உண்மையாக இருக்குமேயானால் அதனை விரைவில் பயன்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** பேரவைத் தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட வடிகால்களைப் பொறுத்தவரையில் 50 புல்டோசர்கள விவசாயத் துறையிலிருந்து வாடகைக்கு வாங்கிப் பயன்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை சம்பந்தப் பட்ட துறையிலிருந்து அனுப்பப்பட்டிருக்கின்றது. இதற்கு முன்பு கிடைத்த புல்டோசர்களை வைத்துக்கொண்டு ஆங்காங்கே பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இப்போது நாம் வாடகைக்கு புல்டோசர்களை வாங்குகிறபோது அந்தத் துறை

யினரின் தேவைக்கு நீங்கலாகக் கூடுதலாக இருந்தால்தான் வாடகைக்குத் தருவார்கள். அந்த வகையில் நாம் வேளாண்மைத் துறைக்கு கோரிக்கை வைத்திருக்கிறோம். வேளாண்மைத் துறையும் புல்டோசர்கள் அனுப்புவதாக உறுதியளித்திருக்கின்றது. என்றாலும் இதற்கான நிரந்தரமான ஒரு மாற்று ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதற்காகப் பொதுப்பணித் துறையின் சார்பில் மூன்று, நான்கு புல்டோசர்களை வாங்கலாம் என்ற கருத்தைத் தலைமைப் பொறியாளர் அவர்கள் அரசுக்கு அளித்து அது ஆய்வில் இருக்கின்றது. எனவே நிரந்தரமான வகையில் நாம் ஏற்பாடு செய்ய இருப்பதால் இனிமேல் பிரச்சினைகள் இல்லாத வகையில் உரிய முறையில் சரியான மாறுதல்கள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

**திரு. மா. மணிமாறன்:** பேரவைத் தலைவர் அவர்களே, 50 டோசர்கள் அங்கே உண்மையாகவே இயங்குகிறதா இல்லையா என்பதை அமைச்சர் அவர்கள் தெளிவாகத் தெரிந்து எங்களுக்குச் சொன்னால் நல்லது என்று நினைக்கிறேன். 50 புல்டோசர்களாவது குறைந்தபட்சம் அங்கே இயங்க வேண்டும். அப்படி அவை இயங்காமல் இருந்தால் 50 புல்டோசர்களை அங்கே உடனடியாக இயக்குவதற்கு அரசு முயற்சி செய்யுமா என்பதையும் அறிய விரும்புவதோடு, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 2 புல்டோசர்கள் போதுமானது அல்ல — குறைந்த பட்சம் 10 புல்டோசர்களாவது இருந்தால்தான், தஞ்சை மாவட்டத்தில் உள்ள வடிகால்களை சுத்தப்படுத்தவும் ஆழப்படுத்தவும் முடியும். எனவே அமைச்சர் அவர்கள் சிரமம் பார்க்காமல் தஞ்சை மாவட்டத்திற்கு 10 புல்டோசர்களையாவது பணியில் இறக்குவதற்கு அரசுத் துறை மூலமாக முயற்சி செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலேயே நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திரும்பத் திரும்ப தம் கருத்தையே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நான் குறிப்பிடும்போது ". . . . வடிகால்களில் படிந்துள்ள வண்டலை அகற்ற விவசாயத் துறையிலிருந்து சுமார் 50 டோசர்கள்





வாடகைக்குப் பயன்படுத்த கோரப்பட்டுள்ளன. பாசனத்திற்காக ஆறுகளில் தண்ணீர் விடப்படுமுன் புல்டோசர் கிடைத்தவுடன் வண்டல் அகற்றப்படும்." என்று சொல்லியிருக்கிறேன்.

அந்த அடிப்படையில் திரும்பச் சொல்கிறேன், விவசாயத் துறையிடமிருந்து 50 புல்டோசர்களை நாம் வாடகைக்குத்தான் கோரியுள்ளோம். ஆகவே அங்கே 50 புல்டோசர்கள் பயன்படுத்தப்படுவதாக நான் எங்கேயும் சொல்லவில்லை. சொல்லப் போவதும் இல்லை. ஆனால் அங்கே 50 புல்டோசர்களைப் பயன்படுத்த வேண்டும் என்ற உத்தேசம் அரசுக்கு இருக்கிறது. அதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நம்முடைய வேளாண்மைத் துறையினர் அந்த புல்டோசர்களை வாடகைக்கு அளித்தவுடன் உரிய ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

5. அறிக்கை அளித்தல்.

**புறநகர் பேருந்துக் கட்டண உயர்வு—போக்குவரத்துத் துறை அமைச்சரின் அறிக்கை.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 111-ன் கீழ் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பேரவைக்கு ஓர் அறிக்கை வழங்குவார்கள்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, டீசல் மற்றும் பேருந்துகளின் உதிரி பாகங்களின் விலை உயர்வு காரணமாக பேருந்துகளை இயக்குவதிலே பெரும் சிரமங்கள் ஏற்பட்டு, அதன் காரணமாகக் கடந்த 1—4—1985 முதல் சென்னைப் பெருநகர் பயணிப் பேருந்துக் கட்டணங்களை உயர்த்தி வசூலிக்க அரசு ஆணையிட்டு கட்டண உயர்வு ஏற்படுத்தப்பட்டது.

அதே காரணங்களின் அடிப்படையில் மற்ற இடங்களிலேயும் இடர்பாடுகள் ஏற்பட்ட காரணத்தினால் அங்கேயும் கட்டண உயர்வு ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக 18—4—1985 ஆம் நாளிட்ட சிறப்பு அரசிதழ் மூலம் ஒரு மாத காலம் பொது மக்களுடைய கருத்தை எழுத்து மூலமாகக் கேட்டு, அவகாசம் கொடுக்கப்பட்டது. 3—6—1985 அன்று உள்துறைச் செயலாளர் நேரிடையாக விசாரணை நடத்தினார். அந்த விசாரணையில்

[திரு. சு. முத்துசாமி] [1985 ஜூன் 18

கருத்துக்களையெல்லாம் பரிசீலித்த பின்பு கட்டணத்தைப் பின்வருமாறு உயர்த்தி 1—7—1985-லிருந்து அமல் ஆக்கலாம் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இவை மற்ற மாநிலங்களை விடக் குறைவான கட்டணம் என்பதையும் இந்த அவைக்கு நான் சொல்ல விரும்புகிறேன்.

நகரப் பேருந்துகளைப் பொறுத்தவரையில் 15 நிலையில் 30 கிலோமீட்டர் தூரம் இருக்கிறது. அதிலே ஏற்கெனவே இருந்த கட்டண விகிதப்படி முதல் நிலைக்கு 30 பைசாவும், கடைசி நிலைக்கு ரூ. 1.20-ம் இருந்தது. அவைகளை அரசிதழிலே அறிவித்தபோது, முதல் நிலைக்கு 40 பைசாவாகவும், அதிகபட்சக் கட்டணம் ரூ. 1.80 ஆகவும் உயர்த்தலாம் என்று முடிவெடுக்கப் பட்டது. பொதுமக்களுடைய கருத்தைக் கேட்டபின்பு, குறைந்தபட்சக் கட்டணம் 40 பைசாவாகவும், அதிகபட்சக் கட்டணம் ரூ. 1.50 ஆகவும் வைக்கலாம் என்று முடிவெடுத்து 1—7—1985-லிருந்து அமலாக்கப்பட வேண்டுமென்று தெரிவிக்கப் பட்டிருக்கிறது. அந்த 15 நிலைகளில் 1—7—1985-லிருந்து அமலாக்கப்பட இருக்கிற கட்டணத்தை நான் படிக்கிறேன்:

| நிலை. (1) | பைசாக்கள். (2) |
|---|---|
| முதல் நிலைக்கு | 40 |
| இரண்டாம் நிலைக்கு | 50 |
| மூன்றாம் நிலைக்கு | 60 |
| நான்காம் நிலைக்கு | 70 |
| ஐந்தாம் நிலைக்கு | 80 |
| ஆறாம் நிலைக்கு | 90 |
| ஏழாம் நிலைக்கு | 100 |
| எட்டாம் நிலைக்கு | 110 |
| ஒன்பதாம் நிலைக்கு | 120 |
| பத்தாம் நிலைக்கு | 125 |
| பதினொன்றாம் நிலைக்கு | 130 |
| பன்னிரெண்டாம் நிலைக்கு | 135 |
| பதிமூன்றாம் நிலைக்கு | 140 |
| பதினான்காம் நிலைக்கு | 145 |
| பதினைந்தாம் நிலைக்கு | 150 |



1985 ஜூன் 18] [திரு. சு. முத்துசாமி]

புறநகர்ப் பேருந்துகளைப் பொறுத்தவரையில் சமவெளிகளில் ஏற்கெனவே விதிக்கப்பட்டிருக்கிற கட்டணம் 7½ பைசா ஒரு கிலோ மீட்டருக்கு. அதை 9½ பைசாவாக ஆக்க வேண்டும் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டது. பொதுமக்களுடைய கருத்தைக் கேட்டதற்குப் பின்பு 8½ பைசாவாக விதிக்கப்படும் என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. மலைச்சாலைகளில் ஏற்கெனவே விதிக்கப்பட்டிருந்த கட்டணம் 9½ பைசா, அதை 12½ பைசாவாக விதிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டு, 10½ பைசா விதித்தால் போதும் என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

டீலக்ஸ் விரைவுப் பேருந்துகளைப் பொறுத்தவரையில் 11½ பைசாவாக வசூலிக்க வேண்டுமென்று அறிவிக்கப்பட்டது, 10½ பைசா வசூலித்தால் போதும் என்று நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது. டீலக்ஸ் ஏ.சி.-யிலே 14½ பைசா வசூலிக்கப் படுவதை, 16½ பைசாவாக உயர்த்த வேண்டுமென்று அறிவிக்கப் பட்டு, 15½ பைசா உயர்த்தினால் போதும் என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

சாதாரண விரைவுப் பேருந்தைப் பொறுத்தவரையில் இப்போது இருப்பது 7½ பைசா. அதை 9½ பைசா ஆக ஆக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. ஆனால் 8½ பைசா போதும் என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. சாதாரண ஏ.சி. வண்டிகளைப் பொறுத்தவரையில் 12½ பைசா இப்போது வசூலிக்கப்படுகிறது. அதை 14 பைசாவாக உயர்த்த வேண்டுமென்று அறிவிக்கப்பட்டது. ஆனால் 13½ பைசா இப்போது வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

Thiru A. RAHMANKHAN : Rule 114 (1) reads as follows: "114 (1) A Member wishing to point out a mistake or inaccuracy ............. ".

Mr. SPEAKER : I cannot allow. If there is a mistake you can give a notice. Without notice I cannot allow you.

Thiru A. RAHMANKHAN : Under Rule 114 I can raise a point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதி 111-ஐ மீண்டும் படிக்கிறேன். அந்த அறிக்கையின் மீது எவ்வித விவாதமும் அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்"

[1985 ஜூன் 18

**திரு. அ. ரகுமான்கான்:** தலைவர் அவர்களே, விதி 114-ஐயும் படிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் விதி 111-ஐச் சொல்கிற போது நீங்கள் 114 என்று சொன்னால் எப்படி?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, விதி 114-ல் என்ன இருக்கிறதென்றால், 'உறுப்பினர் ஒருவர் அதனைப் பேரவையில் குறிப்பிடுவதற்கு முன்னதாக, அத் தவறு அல்லது பிழைபற்றிய விவரங்களை எழுத்து மூலமாகப் பேரவைத் தலைவருக்கு அறிவிப்புக் கொடுத்து, அதைப் பேரவையில் எழுப்ப பேரவைத் தலைவர் அனுமதியைக் கோர வேண்டும்' என்றுதான் இருக்கிறது. ஆகவே முதலில் எழுத்து மூலம் கொடுக்க வேண்டும்.

**திரு. அ. ரகுமான்கான்:** எழுத்து மூலமாகக் கொடுத்தால் நாளை காலையிலேயே எடுத்துக்கொள்வதாகச் சொன்னால் கொடுக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** If you want an assurance I cannot give here. Please follow the Rules.

6. வரவு-செலவுத் திட்டம் 1985 86—வாக்கெடுப்பு.

கோரிக்கை எண். 26—கைத்தறியும், நெசவுத் தொழிலும்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 26 கைத்தறியும், நெசவுத் தொழிலும் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 19,27,07,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

**Thiru N. S. V. CHITHAN :** Sir, To discuss about the need to examine the cause of glut in the handloom trade and the need to take necessary steps to avoid it, I move that—"the sum of Rs. 19,27,07,000 under Demand No. 26—Handlooms and Textiles be reduced by Rs. 100".



1985 ஜூன் 18]

**திரு. கோ. வீரய்யன்:** தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் வட்டம், சிக்கல் என்ற ஊரிலுள்ள கூட்டுறவு கைத்தறி உற்பத்தி மற்றும் விற்பனை நிலையங்களில் ஏற்பட்டுள்ள துணி தேக்கத்தால் கைத்தறித் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டிருக்கும் இன்னல்கள் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 26 கைத்தறியும், நெசவுத் தொழிலும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 19,27,07,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

**திரு. கு. சுப்பராயன்:** தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் கைத்தறித் துணிகள் கோடிக்கணக்கில் தேங்கிக் கிடப்பதால் ஏற்பட்டுள்ள நெருக்கடி குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 26—கைத்தறியும், நெசவுத் தொழிலும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 19,27,07,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

கோரிக்கை எண். 27—கதர்த் தொழில்

**மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி:** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 27—கதர்த் தொழில் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 2,27,81,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

**திரு. கே. எம். தங்கமணி :** தலைவர் அவர்களே, கதர் ஆடைகள் விலையில் குறைந்து விடுவதால் கதர் நூலின் தரத்தை உயர்த்துவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 27—கதர்த் தொழில் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,27,81,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**திரு. கோ. வீரய்யன்:** தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் வட்டம், வேட்டைக்காரனிருப்பிலுள்ள நூற்பு மையத்தில் வேலை செய்பவர்களுக்கும், இதேபோன்ற மற்ற இடங்களில் வேலை செய்பவர்களுக்கும் உரிய நேரத்தில் ஊதியம் வழங்கப்படாமல் இருப்பதால் ஏற்பட்டிருக்கின்ற இன்னல்கள் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 27-கதர்த் தொழில் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,27,81,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

**திரு. எஸ். என். இராமசாமி:** தலைவர் அவர்களே, கதர்த் துணிகளுக்கு ஆண்டு முழுவதும் ரூபாய்க்கு 25 காசு தள்ளுபடி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 27-கதர்த் தொழில் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,27,81,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, கைத்தறியும் நெசவுத் தொழிலும் பற்றிய 26-ம் எண்ணுள்ள மானியக் கோரிக்கை குறித்து விளக்கமான கொள்கை விளக்கக் குறிப்புகள்* அச்சடிக்கப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. இவற்றை அவையில் நான் படித்ததாகக் குறிப்பேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்ததற்குப் பிறகு நான் அவைகளுக்குப் பதில் தெரிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* 170–183-ம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப் பெற்றுள்ளது.





**மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி:** தலைவர் அவர்களே, கதர்த் துறைபற்றிய கொள்கைகளும் திட்டங்களும் குறித்து குறிப்புகள்** அச்சடிக்கப்பட்டு மாண்புமிகு உறுப்பினர் களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவைகளை நான் அவையில் பேசியதாக ஏற்று குறிப்பேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்ததற்குப் பின்னால் என்னுடைய பதிலைச் சொல்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

* **திரு. எஸ். பி. மணவாளன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி மற்றும் பஞ்சாலைத் துறை மானியக் கோரிக்கை எண். 26-ன் மீதான விவாதத்தில் பேச அனுமதி தந்ததற்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலும், வேளாண்மைக்கு அடுத்தபடியான இடத்தை வகிப்பது இந்தக் கைத்தறித் தொழிலாகும். காலப்போக்கிலே மாறுதல்களைக் கண்ட இந்தத் துறையின் வளர்ச்சிக்காக, மாநில அரசும், மைய அரசும் மானியமாகவும், நிதி உதவி செய்தும், நல்லபல திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டு வருகின்றன. குறிப்பாக, கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் சேமிப்பு காப்புறுதித் திட்டம், நெசவாளர்கள் வீட்டு வசதித் திட்டம், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சலுகைகள் அடிப்படையில் நிதி உதவி, நவீன முறையில் நெசவாளர்களுக்குப் பயிற்சி அளித்தல், கைத்தறித் துணியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ஊக்குவிப்புத் திட்டங்கள், கைத்தறித் தொழில் நுட்பத்தினை மேம்படுத்தும் திட்டம், மற்றும் தேசிய வேளாண்மை ஊரக வளர்ச்சித் திட்டம் போன்ற திட்டங்கள் வரவேற்கத்தகுந்த திட்டங்களாகவும், பாராட்டுக்குரிய திட்டங்களாகவும் உள்ளன.

** 958 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

ச

[திரு. எஸ். பி. மணவாளன்] [1985 ஜூன் 18

வட ஆர்க்காடு மாவட்டம் வேலூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய சரகம் ஒன்றை ஏற்படுத்தக் கருதி உள்ளதற்கு நான் என்னுடைய நன்றியை இந்த அவையில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த மானியத்தின் தொடர்பாக என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல நான் விரும்புகிறேன்.

கைத்தறித் தொழில்நுட்பத்தினை மேம்படுத்தும் திட்டத்தில் 1984-85 ஆம் ஆண்டிலே சுமார் 42 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு இருந்தது. ஆனால் 1985-86 ஆம் ஆண்டிலே அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை 21 லட்சம் ரூபாய் மட்டுமே. எனவே இதைக் கடந்த ஆண்டைப் போலவே ரூபாய் 42 லட்சமாக உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறித் துணியின் விற்பனையின் மீது கொடுக்கின்ற தள்ளுபடியைப் பொறுத்தவரையில் கடந்த சில ஆண்டுகாலமாக, தேங்கிக் கிடக்கும் கைத்தறித் துணியின் விற்பனையைப் பெருக்குவதற்கு ஏற்படுத்தப்பட்ட திட்டமாகும். இது வருடத்திற்கு 60 நாட்களில் 20 சதவிதம் தள்ளுபடி செய்து கொடுக்கப்பட்டு வருகிறது. தள்ளுபடி கொடுக்கின்ற தொகையை மாநில அரசும், மத்திய அரசும் சம அளவிலே பகிர்ந்து கொள்ளுகின்றன. ஆனால் மற்ற நாட்களில் கைத்தறித் துணிக்கு விற்பனையில் தள்ளுபடி கொடுப்பது இல்லை. இதனால் கைத்தறித்துணியின் விற்பனை மிகவும் பாதிக்கப்படுகின்றது. அதேநேரத்தில் கைத்தறி நெசவாளர்களுக்கு என்று இருக்கிற தொழிலும் பாதிக்கப்படுகின்றது. இதற்கு நான் ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

குறிப்பாக நகராட்சிப் பகுதிகளில், கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களில் சாதாரணமாக 20 சதவிதம் தள்ளுபடி கொடுக்கின்ற காலங்களில், அந்த 60 நாட்களில், அதனுடைய விற்பனை சுமார் 15 லட்சமாக இருக்கிறது. ஆனால் மீதம் உள்ள 270 நாட்களிலே, தள்ளுபடி கொடுக்கப்படாமல் இருக்கின்ற காலங்களில் அதனுடைய விற்பனைத் தொகை ரூ. 2 லட்சம் மட்டும் என்ற அளவில்தான் இருக்கிறது. 60 நாட்களில் 15 லட்சம் எங்கே? 270 நாட்களில் 2 லட்சம் எங்கே? எனவே அரசு இதைக் கவனத்தில் கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



1985 ஜூன் 18] [திரு. எஸ். பி. மணவாளன்]

எனவே இந்த விற்பனையைப் பெருக்கின்ற வகையில் ஆண்டு முழுவதும் 10 சதவிதம் தள்ளுபடி கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கருத்தை, நான் ஏற்கனவே இந்தச் சட்டமன்றத்தில் 1985-86 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது பேசுகின்றபோது வலியுறுத்தியிருக்கிறேன். கைத்தறித் துணியின் விற்பனையைப் பெருக்குவதற்கு ஏற்படுத்தப்பட்ட திட்டம் என்று கூறும்போது, அரசு இந்தத் திட்டத்திற்காக 1984-85 ஆம் நிதியாண்டில், ஏறக்குறைய 16 கோடி ரூபாய் ஒதுக்கி அனுமதி அளித்தது. ஆனால் 1985-86 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கியிருக்கின்ற ரூபாய் 10 கோடி மட்டுமே. ஏன் இந்த நிதிக் குறைப்பு? எனவே சென்ற ஆண்டைப்போலவே 16 கோடியாக உயர்த்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கோ-ஆப்டெக்சைப் பொறுத்தவரையில், அதனுடைய விற்பனை 1983 84-ல் ரூ. 106 கோடியாக இருந்தது என்றும் 1984-85 ஆம் ஆண்டினுடைய விற்பனை ரூ. 72 கோடி என்றும், இந்தச் சாதனைத் திட்டக் குறிப்பில் குறிப்பிடப்பட்டு உள்ளது. எனவே இதனுடைய விற்பனை சுமார் 34 கோடி ரூபாய் அளவிற்குக் குறைந்து உள்ளது. மேலும் இந்த விற்பனையை வளர்க்கும் ஓர் திட்டமாக அரசுப் பணியாளர்கள், உள்ளாட்சித் துறைப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு கைத்தறித் துணிகள் கடனாக 1984-85 ஆம் ஆண்டில் விற்கப்பட்ட துணியின் தொகை 26·55 கோடி என்று உள்ளது. ஆனால் 1984-85-ல் மொத்த விற்பனையே 72 கோடி மட்டுமே. இந்த விற்பனைக் குறைவு எதனால் ஏற்பட்டது என்று தனி விளக்கம் இதிலே கூறவில்லை. முன்பு எந்த ஆண்டிலும் இல்லாத அளவுக்கு நவீன விளம்பரங்களையும் விற்பனைச் சலுகைகளையும் அளித்தும் இந்தச் சரிவு ஏற்பட்டுள்ளது. இந்த விற்பனைக் குறைவு துணியின் தரத்தின் குறைபாடா அல்லது தனியார் உற்பத்தி செய்யும் துணியின் விலைக்கு இது அதிகமாக இருக்கிறதா? அல்லது நான் முன்பு குறிப்பிட்டதைப்போல தள்ளுபடிச் சலுகை வருடத்தில் 60 நாட்கள் மட்டுமே கொடுக்கப்படுவதால், மற்ற நாட்களில் கொடுக்கப்படாமல் உள்ளதால் ஏற்பட்ட விற்பனை சரிவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மேலும் விற்பனை நிலயங்கள் தொடங்குவதன் வாயிலாகவும், நான் முன்பு கூறியது போல் ஆண்டு முழுவதும் விற்பனைக்கு தள்ளுபடி கொடுப்பதன் வாயிலாகவும் இந்த விற்பனைச் சரிவைப் போக்கி மேலும் விற்பனை வாய்ப்பை அதிகப்படுத்தலாம் என்ற என்னுடைய யோசனையை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் கோ-ஆப்டெக்ஸ் மூலம் விற்பனை செய்யப்படும் மலிவு விலைத் துணியின் தரமும் அதேபோல் பாலியஸ்டர் துணியின் தரமும் விலைக்கு ஏற்றாற்போல் இல்லை. அதன் தரத்தை உயர்த்த வேண்டுகிறேன். கோ-ஆப்டெக்ஸ் பொறுத்தவரையில் நடப்பு நிதியாண்டில் மைய அரசின் தேசிய ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலமாக சுமார் ரூபாய் 100 லட்சம் நிதி உதவி பயன்படுத்தக் கருதப்பட்டுள்ளது என்பதையும் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல் கூட்டுறவுச் சங்கங்களை எடுத்துக்கொண்டால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கும் விற்பனை தள்ளுபடித் தொகை மிகுந்த காலதாமதமாக அவர்களுக்குப் போய்ச் சேருகின்றன என்ற குறைபாடு உள்ளது. அந்தக் கால தாமதத்தைத் தவிர்த்து அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் நிதிநிலை பற்றாக்குறையால் செயல் இழக்காமல் இருக்கின்ற வகையில் துரிதமாக அந்தத் தள்ளுபடித் தொகையினை அளிக்க வேண்டுகிறேன். அது தவிர கடந்த 2 வார காலமாக தலைமைச் செயலகத்தில் அமைச்சர்களின் அலுவலகத்தின் வளாகத்தில் நான் காண்கிறேன் ** கூட்டுறவு நெசவுச் சங்கத்திற்காக தங்களுடைய நிர்வாக அங்கத்தினர்களை நியமிக்க வேண்டி அமைச்சர்களின் ஆதரவை நாடி வருகின்றனர். இந்த நியமன முறை உடனடியாக ஒழிக்கப்பட்டு கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தலை நடத்த வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஸ்லிபிங்காகச் சொல்ல வேண்டாம். ஒரு ஆலோசனையாகச் சொல்லுங்கள்.** என்ற வார்த்தையை நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

**திரு. எஸ். பி. மணவாளன்:** தனியார் துறையின் கீழ் நெசவாளர்களுக்கும் நியாய விலையில் நூல் பட்டு, நார்ப் பட்டு, பாலியஸ்டர், ஜரிகை, சாயம், ரசாயனப் பொருட்கள் கிடைக்க ஆவன செய்ய வேண்டுகின்றேன்.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.



நெசவாளர் வீட்டுவசதி திட்டம். நெசவாளர்களுக்கு ஒரு வீடு கட்டுவதற்கு ரூ. 12 ஆயிரம் செலவாகிறது. ரூபாய் ஆயிரம் மானியமாகவும், 9,700 ரூபாய் கடன் உதவியாகவும், மீதி 1,300 ரூபாய் நெசவாளர்கள் செலுத்த வேண்டும் என்று சொல்லப்படுகிறது. இந்தத் திட்டம் 1979-80 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப் பட்டது. வீடு என்பது நெசவாளர் குடியிருக்கும் இடம் மட்டும் அல்லாமல், அவர்களுடைய தொழில்கூடமும் ஆகும். இன்றுள்ள கட்டுமானப் பொருட்களின் விலை உயர்வினையும் மற்றும் கூலி உயர்வினையும் கணக்கில் கொண்டு பார்த்தால், ரூபாய் 12 ஆயிரம் என்பது போதாது. எனவே, இந்தத் தொகையை 25 ஆயிரமாக உயர்த்தி, ரூபாய் 5 ஆயிரம் மானியமாகவும், ரூபாய் 20 ஆயிரத்தை 25 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்துகின்ற கடனாகவும் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுகிறேன். மேலும் இந்தத் திட்டம் நன்கு செயல்பட நெசவாளர் வீட்டு வசதி வாரியம் ஒன்று அமைத்து, அதன் தலைவராக நெசவுத் தொழிலில் அனுபவம் பெற்றவரை நியமிக்க வேண்டுகிறேன். நெசவாளர் நலத் திட்டங்கள், சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் ஒரு நெசவாளர் இறக்க நேரிட்டால், அந்த நெசவாளர் சேமிப்பில் உள்ள தொகையும், அரசு மானியம், அதற்குண்டான வட்டியையும் சேர்த்து 3 ஆயிரம் ஆயுள் காப்பீட்டுக் கழகம் மூலம் அவர்கள் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படுகிறது. இந்தத் தொகையை ரூபாய் 10 ஆயிரமாக உயர்த்திக் கொடுக்க வேண்டுகின்றேன். அதேபோல், இந்தத் திட்டத்திலுள்ள வயது வரம்பு 55 ஆக உள்ளதை 58 ஆக உயர்த்தி, 58 வயதைக் கடந்து, இறக்காமல் உள்ள நெசவாளர்களுக்கும் ரூபாய் 10 ஆயிரத்தை வழங்கிட வேண்டுகிறேன். நெசவாளர்களின் குடும்பங்களில் படித்து வேலை இல்லாத இளைஞர்களுக்கு கைத்தறித் துறையிலேயும், கோ-ஆப்டெக்ஸ் போன்ற விற்பனை நிலையங்களிலேயும் வேலைவாய்ப்பு அளிக்க வேண்டுகிறேன்.

(முற்பகல் 11-00)

மிகவும் ஏழ்மையிலுள்ள நெசவாளர்களுக்கு இலவசமாக தறி சாமான்கள் கொடுத்திட வேண்டுகிறேன். அதே நேரத்தில் இலவசமாக மின்சாரத்தையும் கொடுக்க வேண்டுகின்றேன். தவிர, கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராக இருக்கிற நெசவாளர்

களுக்கு அளிக்கும் நலத் திட்டங்கள் யாவும் தனியார் துறையிலே உள்ள நெசவாளர்களுக்கும் விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கைத்தறியைப் பொறுத்தவரையில், நெசவாளி ரூபாய் ஆயிரம் முதலீடு செய்து, தொழில் செய்ய வாய்ப்பு ஏற்படுகின்றது. ஆனால் மற்ற தொழில்களைத் துவக்க வேண்டுமானால், பல லட்ச ரூபாய்களை முதலீடு செய்ய வேண்டியுள்ளது. எனவே கைத்தறி வளர்ச்சியை ஊக்குவிக்க வேண்டுகின்றேன். மேலும், தமிழக மேலவையில் கைத்தறி நெசவாளிகளின் பிரதிநிதிகள் இல்லை. அரசு அதற்கு பிரதிநிதிகளை நியமிக்க வேண்டுகிறேன். கைத்தறித் துறையின் வளர்ச்சிக்கு மாவட்டவாரியாக ஆலோசனைக் குழுக்களை நியமித்து, அதிலும் நெசவுத் தொழிலில் ஈடுபடுபவர்களை உறுப்பினராக நியமித்து, கைத்தறி வளர்ச்சிக்கு உதவிட வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன். விசைத் தறியைப் பொறுத்தவரையிலே, கைத்தறி கூட்டுறவு நெசவுச் சங்கங்களுக்கு மட்டுமே புதிதாக அனுமதிக்கின்றோம் என்ற கொள்கையை வரவேற்கின்றேன். அதே நேரத்தில் கைத்தறி ஏற்றுமதிக்கு என்று ஒதுக்குகின்ற சில இனங்களை விசைத் தறியாளர்கள் தயாரித்து அவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். அப்படி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அனுப்பப்படும் சரக்குகள் கைத்தறி இல்லை என்று திரும்பி விடுகின்றன. அதனால் நமக்கு அந்நியச் செலாவணி இழப்பு ஏற்படுகின்றது. இந்த விசைத் தறிகளின் ஆதிக்கத்தைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நூற்பு ஆலை — நூற்பு ஆலை இல்லாத அனைத்து மாவட்டங்களிலும், கைத்தறி நெசவாளர்கள் அதிகம் உள்ள பகுதிகளில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கூட்டுறவு நூற்பாலை ஏற்படுத்திட வேண்டுகிறேன்.

அடுத்து, இறுதியாக, கதர்த் தொழிலைப் பற்றி சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். தேசத் தந்தை அண்ணல் காந்தியடிகளால் துவக்கப்பட்டது, கதர்-கிராமக் கைத்தொழில் இயக்கம். காந்தியக் கொள்கை அடிப்படையில் கதர்த் துணியை





உடுத்திக் கொண்டு இருக்கிறோம். ஆனால் தற்சமயம் தனியார் சிலர்—கதர் உற்பத்தியாளர்கள், மில் துணி நூலினைக் கலந்து உற்பத்தி செய்கிறார்கள். அது காந்தியக் கொள்கைக்கு நேர் மாறானது. கதர்த் துணியை நெய்வதில் உள்ள கலப்படத்தைத் தடுக்க அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். கதர் கிராமக் கைத்தொழிலுக்கு இந்த நிதியாண்டில் ஒதுக்கிய மானியம் ரூபாய் 227 இலட்சம் மட்டுமே. ஆனால் சென்ற நிதியாண்டில் இதற்கு 277 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. கிராமப்புறத்திலே உள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பை அதிகரிக்கும் வகையிலே, இந்த மானியத் தொகையை அதிகரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பினை அளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து விடை பெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்த மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு 18 உறுப்பினர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, விவாதத்திலே பங்கு கொள்கின்ற உறுப்பினர்கள் அனைவரும் 10 நிமிடத்திலே முடித்து விடுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

* **திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கதர், நெசவு, கைத்தறி சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கையை நான் ஆதரித்துப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி என்னுடைய சில கருத்துக்களை இந்த அவையிலே எடுத்து வைக்க விரும்புகிறேன். கிராம வாழ்வில் குறிப்பாக கதர்த் தொழிலை இந்த நாட்டில் உள்ள ஏழை எளியவர்கள், வாழ்வதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று காந்தியடிகள், விரும்பினார்கள். அதைப்போலவே பேரறிஞர் அண்ணா அவர்கள் கைத்தறித் துறை தமிழ் நாட்டினுடைய பொருளாதாரத்திற்கு ஆதாரமாக இருக்க வேண்டும் என்று விரும்பினார்கள். இந்த இரண்டு துறைகளுமே தமிழ் நாட்டினுடைய பொருளாதார வாழ்விற்கு ஆதாரமாக இருக்க வேண்டுமென்பதில் யாருக்கும் எந்தவித கருத்து வேறுபாடும் இருக்க முடியாது என்றே நான் நம்புகிறேன்.

இந்தியாவிலேயே 1946 ஆம் ஆண்டு கதர்த் திட்டத்தை மேற்கொண்ட மாநில அரசு தமிழ்நாடு தான். கதர் கிராமத் தொழில்கள் குறைந்த மூலதனத்தில் வேலைவாய்ப்பினை

[திருமதி பா. வளர்மதி] [1985 ஜூன் 18

கிராமப்புறங்களில் அதிக அளவில் ஏற்படுத்தித் தருவதால் கதர் கிராமத் தொழில்களின் மூலம் தமிழகத்தில் நிலவி வரும் வேலையின்மைப் பிரச்னைக்கு முடிவு காண முடிகிறது.

கதர் கிராமத் தொழில்களின் வளர்ச்சியைத் தீவிரப்படுத்துவதற்காக 1960 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் கதர் கிராமத் தொழில் வாரியம் ஏற்படுத்தப்பட்டது. அரசுக்கு வேண்டிய அத்துணை பொருட்களும், கதர் கிராமத் தொழில் நிறுவனங்களில் கடன் வாங்க வேண்டுமென்று 1978-ல் ஏற்படுத்திய சட்டத்தின்படி கடந்த ஐந்து ஆண்டுகளில் கதர் கிராமத் தொழில்களில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

புரட்சித் தலைவர் அரசு அளித்து வருகின்ற ஊக்கத்தினால் கடந்த நான்கு ஆண்டுகளில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட நூற்புக் கூடங்கள் 190. ஆனால் இப்பொழுது செயல்பட்டு வரும் நூற்புக் கூடங்கள் 518. 1—4—1984 இல் திருத்தி அமைக்கப்பட்ட விதிகளின்படி நபர் ஒன்றுக்கு ஒரு நாளைக்கு ரூ. 5.75 முதல் ரூபாய் 7 வரை ஊதியம் கிடைப்பது கிராமத்தில் வாழும் ஏழை மக்களின் வேலையின்மையை ஓரளவு சரிக்கட்ட உதவி இருக்கிறது.

1978–80 இல் ரூ. 409.71 இலட்சமாக இருந்த கதர் உற்பத்தி 1983-84 ஆம் ஆண்டில் ரூபாய் 805 இலட்சமாக உயர்ந்துள்ளது என்பது உண்மையிலேயே வளர்ச்சிக்கு ஒரு அடையாளம்தான். 1979-80 இல் ரூ. 109 இலட்சத்திற்கும் மேலான மதிப்புள்ள பட்டு உற்பத்தி செய்யப்பட்டது. 1983–84 இல் அது 270-க்கும் மேற்பட்ட இலட்சமாக உயர்ந்திருக்கிறது என்றால், அது புரட்சித் தலைவர் அரசின் சீரிய சாதனை என்பதை நாட்டு மக்கள் நன்றாக உணர்கிறார்கள்.

மேலே குறிப்பிட்டுள்ள முன்னேற்றம், எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அரசின் சீரான கொள்கையால் ஏற்பட்டுள்ளது. அதை நாம் வரவேற்றே ஆக வேண்டும். கிராமத் தொழில்களில், பனைத் தொழில்கள், சோப்புத் தொழில், எண்ணெய் தயாரித்தல், கோல் தொழில், கைக் காகிதம் தயாரித்தல், தச்சுத் தொழில், கைக்குத்தலரிசி தயாரித்தல் போன்ற தொழில்கள் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.



1985 ஜூன் 18] [திருமதி பா. வளர்மதி]

தமிழ்நாடு மாநிலம் ரூபாய் 24 கோடிக்கும் மேலாக கதர் உற்பத்தி செய்து, அனைத்திந்தியாவிலேயே உத்தரப் பிரதேசத்திற்கு அடுத்து இரண்டாவது இடத்தை வகித்திருப்பது நமக்கெல்லாம் பெரும் மகிழ்ச்சியைத் தரக்கூடிய விஷயமாகும். அதேபோல கிராமத் தொழில்கள் உற்பத்தியில் ரூபாய் 91 கோடிக்கும் மேலாக மதிப்புள்ளவற்றை உற்பத்தி செய்து இந்தியாவிலேயே முதல் இடம் வகிப்பது நமக்குப் பெருமையாக இருக்கின்ற விஷயமாகும்.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் அரசு 875 நபர்கள் பயன் பெறும் பொருட்டு, நீலகிரி மாவட்டத்தில் தேனீப் பெட்டிகள் வழங்கவும், தைலம் காய்ச்சும் கருவிகள் வழங்கவும், எண்ணெய் மற்றும் ரொட்டி தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்துவதற்காகவும், ரூபாய் 36 இலட்சத்திற்கும் மேற்பட்ட தொகையை ஒதுக்கியுள்ளதை இந்த நேரத்தில் நான் நிச்சயமாக வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இதேபோன்ற சிறப்புத் திட்டங்களை கொடைக்கானல், தாண்டிகுடி போன்ற மலைப் பகுதிகளிலேயும் அமல்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு கதர் அமைச்சரவர்களையும், மாண்புமிகு கைத்தறி பஞ்சாலை அமைச்சரவர்களையும் நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

சங்க காலத்திற்கும் நம் கைத்தறித் துறைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. சங்க இலக்கியங்களில் தோல் ஆடையைக் காண முடியாது; ஆனால் நூலாடையைப்பற்றி நிறைய ஆதாரங்கள் உண்டு. பேறிஞர் அண்ணா எழுதியதையும் நூல் என்கிறோம்; ஆடைக்கு நாம் பயன்படுத்துவதையும் நூல் என்கிறோம். செய்யுளில் "பா" வருகிறது; அதேபோல் நெசவுத் தொழிலுக்கும் "பா" வேண்டும் என்று சொல்கிறோம். இதை இங்கே நான் இந்த நேரத்தில் குறிப்பிடுவதற்குக் காரணம், இங்கே எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இதெல்லாம் தெரியாதா என்று கேட்கலாம்; நிச்சயமாக இலக்கியங்கள் படித்தவர்கள் எதிர்க்கட்சியிலே இருப்பார்கள், அவர்களுக்குத் தெரியும். இதை இங்கே நான் குறிப்பிடுவதற்குக் காரணம், வாழ்க்கையோடு, இயற்கையோடு, நம் நாகரீகம் தொடங்கிய காலம் முதல் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட

தொழில் நெசவுத் தொழில். அதன் மானியத்திலே இந்தக் கருத்துக்களைச் சொல்வதில் நான் உண்மையிலேயே பெருமைப் படுகின்றேன்.

பெருமதிப்பிற்குரிய மூதறிஞர் இராஜாஜி அவர்கள் ஆட்சி செய்த காலத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களும், மரியாதைக்குரிய செங்கல்வராயன் அவர்களும், கைத்தறி வார விழாவில் பேசும்பொழுது, பேரறிஞர் அண்ணா அவர்கள் அழகான ஒரு கருத்தைச் சொன்னார்கள். நீண்ட இழையும், குறுக்கு இழையும் சமத்துவமாக, ஒழுங்காக இணைந்தால்தான் ஆடை கிடைக்கும்; ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியும்,—'எதிரிக்கட்சி அல்ல'— இணைந்து சென்றால்தான் பிரச்னைகள் தீரும் என்று சொன்னதைத்தான் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவரவர்களின் ஆட்சியிலே நாம் இன்றைக்குக் கண்டு கொண்டிருக்கிறோம்.

அடுத்து, தமிழ் நாட்டின் மிகப் பெரிய குடிசைத் தொழிலான நெசவுத் தொழிலைப் பொறுத்தவரை, வேளாண்மைக்கு அடுத்த படியாக மிகப் பெரிய அளவில் மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பது இந்தத் தொழில்.

(முற்பகல் 11-10)

இந்த மானியக் கோரிக்கையில் பல நல்ல திட்டங்களை அளித்து, நெசவாளர் மற்றும் அவர்களைச் சார்ந்துள்ள தொழில்கள் பயன்பெறவும் மிகத் துரிதமாக இத்துறை இயங்கவும், இதற்கென்று ஒரு தனித் துறையை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஏற்படுத்தி உள்ளதை நல்ல உள்ளம் படைத்தவர்கள் நிச்சயம் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

நாட்டின் மொத்த கைத்தறி உற்பத்தியிலே நான்கில் ஒரு பங்கை நம்முடைய தமிழ்நாடு உற்பத்தி செய்கிறது. அடுத்து வரும் ஆண்டுகளில், கூட்டுறவுச் சங்கங்களுக்கு புத்துயிரளித்தல், கூட்டுறவுத் துறையில் உள்ள நெசவாளர்களுக்கு நியாய விலையில் நூல் கிடைக்க வகை செய்தல், புதுவகை வடிவமைப்புகளை ஏற்படுத்துதல், கைத்தறித் துணிகளின் விற்பனையைப் பெருமளவில் ஏற்படுத்த கோ-ஆப்டெக்ஸ் விற்பனைப் பிரிவுகளை





ஏற்படுத்துதல், நெசவாளர்களுக்கு வேண்டிய நல்ல பல திட்டங்களை ஏற்படுத்துதல் போன்ற பல திட்டங்களினால் இந்த அரசு தீவிர கவனம் செலுத்துவதை நான் பாராட்டுகிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள 40 இலட்சம் மக்களின், வாழ்வின் ஒரு அங்கமாக இந்தக் கைத்தறித் துறை இன்று விளங்கிக் கொண்டு இருக்கிறது. எனவே, கைத்தறி விற்பனைக் கிளைகளை நம்முடைய தமிழ்நாட்டிலே அதிகப்படுத்துகிறபொழுது குறிப்பாகப் பெண்கள் விரும்பி உடுத்த ஆரம்பிக்கிற காலம் இன்றைக்கு வந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அந்தக் கிளைகளை அதிகப்படுத்த வேண்டுமென்றுதான் இந்த நேரத்தில் அமைச்சர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கிறேன். அப்படி அதிகப்படுத்துகின்ற நேரத்தில், அங்குள்ள துணிகள் தரமானதாக இருக்கும்படி செய்ய வேண்டும். விற்பனைச் சங்கங்களைப் பொறுத்தவரை, இத்தனை சதவீதம் இலாபம் என்று வைத்து விற்பனை செய்யப்படுகிறது.

இந்த நேரத்தில், பாராட்டுகிறபொழுது, சில குறைகளைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. ஆகவே ஒரு சில குறைகளை நான் சொன்னால், தவறாக சொல்வதாகக் கருதக்கூடாது. அடுத்துப் பேசுகிற, எதிர்க்கட்சியிலே இருக்கிற உறுப்பினர்கள், ஆளுங்கட்சியிலே ஏதாவது சொல்ல மாட்டார்களா என்று தேடிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நான் இந்த நேரத்திலே தவறு செய்கிறவர்கள் என்று சொல்வதை, இடைத் தரகர்கள் என்று எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாஸ்டர் வீவர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் அதிகமான இலாபத்தைச் சம்பாதிக்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் இடைத் தரகர்கள் போல் இருந்து கொண்டு உழைக்கின்ற நெசவாளர்களுக்கு போதிய ஊதியம் கிடைக்காமல் செய்கின்ற நிலைமை இருக்கிறது. எனவே, இந்த இடைத் தரகரை ஒழிப்பது உண்மையான நெசவாளர்களுக்கு, நெசவுத் தொழிலையே நம்பி இருப்பவர்களுக்கு மிகச் சிறந்த ஒன்றாகும்.

1962 ஆம் ஆண்டு நிறுத்தி வைக்கப்பட்ட நெசவாளர் வீட்டு வசதித் திட்டம் புரட்சித் தலைவர் ஆட்சியில் புத்துயிர் பெற்று வீடற்ற, எண்ணற்ற ஏழை நெசவாளர் பெருங்குடி மக்களுக்கு நிறைய வீடுகள் கிடைக்கின்ற நிலை இன்றைக்குப் புரட்சித் தலைவர் ஆட்சியிலே புத்துயிர் பெற்று, ஏற்பட்டுள்ளது.

நெசவாளர்களுக்குப் பல்வேறு பாதுகாப்புத் திட்டங்கள் புரட்சித் தலைவர் ஆட்சியில் உருவாக்கப்பட்டுள்ளன. இன்றைக்குக் கூட நோயால் பாதிக்கப்படக்கூடிய நெசவுத் தொழிலாளர்களுக்கு, அந்தப் பகுதிக்கே நடமாடும் மருத்துவ ஊர்திகளை அனுப்பி, அவர்களைப் பரிசோதனை செய்யும் சிறப்பான பணியை ஏற்றுக் கொண்டிருக்கிறது எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அரசு என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன்.

கைத்தறித் தொழிலைப் பொறுத்தவரையில், உற்பத்தி விநியோகம், விற்பனை, நவீனப்படுத்துதல் இந்த நான்கும்தான் முக்கியம் என்று நான் நினைக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் ஐந்து உறுப்பினர்கள்தான் பெண் உறுப்பினர்கள். ஆகவே, எனக்குக் கொஞ்சம் நேரம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவையில் அனைவரும் உறுப்பினர்கள்; சமமானவர்கள்; பெண்களுக்கென்று தனிச் சலுகை இல்லை.

**திருமதி பா. வளர்மதி:** இத்தொழிலில் உற்பத்தி, விநியோகம், விற்பனை, நவீனப்படுத்துதல் இந்த நான்கும்தான் முக்கியம்.

விற்பனையில் சில குறைபாடுகள் இருக்கலாம். இதை முன்னேற்ற அரசு நல்ல வழிவகைகளைக் கடைபிடித்துவருகிறது. அதைப்போன்று விநியோகத்திலும் சில குறைபாடுகள் உள்ளன. ஏழைகள் செய்கின்ற இந்த நெசவுத் தொழிலில் கூட இடைத்தரகர்கள் செய்வது மிகவும் கண்டிக்கத்தக்கது. மாஸ்டர் வீவர்ஸ் என்ற பெயரில் அந்த தரகர்கள் உலவுகிறார்கள். அதுமட்டுமல்ல. இவர்கள் உற்பத்தி செய்து வைத்திருக்கும் பொருள்களைக் கூட சரியான விலை கொடுத்து வாங்காமல், மனிதாபிமான அடிப்படையில் வாங்க முயற்சி எடுக்காமல் இருக்கிறார்கள் இந்த இடைத்தரகர்கள்.

இடைத்தரகர்கள் யாரும் வெளியிலிருந்து வரவில்லை. இந்தச் சங்கங்களை நடத்திக் கொண்டிருப்பவர்கள் பலர் உள்ளனர். வறியவர்களின் வாழ்க்கையில், ஏழை மக்களின் எதிர்கால வாழ்க்கையில், அவர்களின் வயிற்றில் மண்ணைப் போடுகிற அளவிற்கு, நாம் கொடுக்கிற நூலை சரியாக வழங்காமல் தவறாகப் பயன்படுத்துகிறார்கள். இதை அரசு நன்றாகக் கவனித்து ஏழை



நெசவாளர்களுக்கு வழிகாண ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் இடைத்தரகர்கள் செய்கின்ற தவறுகளுக்கு எதிர்க்கட்சியில் இருப்பவர்கள், எதிர் வரிசையில் இருப்பவர்கள், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசுதான் காரணம் என்று குற்றஞ்சாட்டுவார்கள். ஆகவே, இடைத்தரகர்களைக் கண்டுபிடித்து, தயவுசெய்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் பெருமக்களை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தள்ளுபடி விற்பனை மூலமாகத்தான் கைத்தறித் துணித் தேக்கத்தை இதுவரை போக்கி வந்திருக்கிறது அரசு. தள்ளுபடி விற்பனையில்லாமல் பொது விற்பனை மூலம், கைத்தறித் துணியின் இருப்பை போக்குவதற்கு அரசு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு வல்லுநர் குழுவை அமைத்து கைத்தறி துணி உற்பத்தி மூலம், கடைசியில் முடியும் விற்பனை முடிய எல்லா நிலையங்களிலும் இந்தத் தொழில் பற்றி ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வரலாம். குழுவின் பரிந்துரையின்மீது தகுந்த நடவடிக்கை எடுக்கலாம்.

கோவாப்டெக்ஸின் முக்கியப் பங்கு, கூட்டுறவுச் சங்கங்களுக்கு நூல், பட்டு, சாயம் மற்றும் மூலப் பொருள்களை வழங்குவதாகும். இந்தியாவிலும் வெளிநாட்டிலும் இதற்கு விற்பனைப் பிரிவுகள் உள்ளன. இதனுடைய மொத்த மூலதனம் 14.78 கோடி ரூபாயாகும். 1975-76 ஆம் ஆண்டில் கோவாப்டெக்ஸ் பிரதம நெசவாளர் சங்கங்களிடமிருந்து 30 கோடி ரூபாய் மதிப்புள்ள துணிகளைக் கொள்முதல் செய்திருந்தது. ஆனால் 1983-84 ஆம் ஆண்டில் 100 கோடி ரூபாய்க்கு கொள்முதல் செய்து, இந்த அரசு ஒரு சாதனை புரிந்துள்ளது. இந்த சாதனைக்குக் காரணம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கைத்தறித் துறைக்கு ஊக்கமும் ஆதரவும்காட்டி வருவதுதான்; கைத்தறி நெசவாளர்கள்மீது அதிகமாக பற்று வைத்திருப்பதுதான்.

ஜனதா துணித் திட்டம், கடன் விற்பனைத் திட்டம், பாலியஸ்டர் துணி உற்பத்தி, கைத்தறிக்கான வளர்ச்சித் திட்டங்கள், நவீனச் சாயச் சாலைகள், வடிவமைப்புகள் முதலியவற்றின் மூலம் இத்துறை அளவில்லாத சாதனைகள் புரிந்து வருகிறது. இன்றைக்கு சிறப்பான திட்டங்களை புரட்சித்

தலைவர் அவர்கள் கைத்தறித் துறையில் அறிவித்திருப்பதற்கு உண்மையிலே இந்த நாட்டில் இருக்கிற மக்கள் அத்தனைபேரும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இந்த நேரத்தில் நான் என்னுடைய சிறிய ஆலோசனையாக ஒன்றை மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். 'ஹான்ட்லூம் ஹவுஸ்' என்பது மத்திய அரசு நிறுவனம். ஏற்றுமதி-இறக்குமதி அளிக்கிற அதிகாரத்தை மத்திய அரசு தனியார்களுக்கு வழங்குகிறது. இந்த அதிகாரத்தை தனியார்களுக்கு வழங்காமல் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அல்லது கூட்டுறவுத் துறையின் மூலமாக இயங்குகின்ற அமைப்புகளுக்கு வழங்க வேண்டுமென்று மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

நைஜீரியாவுக்கு 78 கோடி ரூபாய்க்கு 'ரியல் மெட்ராஸ் ஹான்ட் கர்ச்சீப்' என்கின்ற நைஜீரிய நாட்டு மக்களின் தேசிய உடையை ஏற்றுமதி செய்வதற்கு மத்திய அரசு தனியார்களுக்கு அனுமதி வழங்கியிருக்கிறது. அந்நாட்டிற்கு ஏற்றுமதி செய்கின்ற அதிகாரத்தைத் தனியார்களுக்கு வழங்குவதற்குப் பதிலாக, தமிழ்நாட்டில் தேங்கிக் கிடக்கிற துணிகளை ஏற்றுமதி செய்ய மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. இன்றைக்கு தமிழ்நாட்டில் தேங்கிக் கிடக்கிற துணிகளுக்கு மத்திய அரசு நஷ்டயீடு வழங்க வேண்டுமென்று அமைச்சர் பெருமக்கள் இரண்டு பேரும் மத்திய அரசை வற்புறுத்த வேண்டுமென்று கேட்டு, இந்த மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

(முற்பகல் 11-20)

*திரு. பொன்முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் 26, 27-வது மானியக் கோரிக்கைகளின் மீது அதாவது கைத்தறி, கதர்த் தொழில் பற்றிய மானியங்களின் மீது நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகச் சில கருத்துகளை மட்டும் இந்த மன்றத்தின் பரிசீலனைக்கு வைத்துவிடலாம் என்று நான் கருதுகிறேன். இந்தக் கைத்தறித் தொழிலைப் பொறுத்தமட்டில் தமிழகத்தில் வேளாண்மைக்கு ஒப்ப மிகப் பழமையான, தொன்மை வாய்ந்த தொழில் என்பதையும் Labour intensive or oriented Labour என்று சொல்லத்தக்க அளவுக்கு தொழிலாளர்களை அதிகமாக உள்ளடக்கிய பழமையான ஒரு தொழில் இது என்பதையும் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.





இந்தத் தொழிலைப் பொறுத்தவரையில் ஒருவரை வேலைக்கு அமர்த்துவதற்கு இரண்டாயிரத்திலிருந்து மூன்றாயிரம் ரூபாய் வரையில் செலவு செய்தால் நெசவாளருக்குத் தொழில் கிட்டும். ஆனால் அதையே ஆலைகளில் செய்ய முற்பட்டால் ஒன்றரை இலட்சம், இரண்டு இலட்சம் செலவு செய்தால்தான் ஒரு தொழிலாளியை நவீன நூற்பாலைகளில் வேலைக்கு அமர்த்த முடியும்.

தற்போது நடந்து வருகின்ற தொழில் புரட்சி காரணமாக நம் நாட்டிலே உள்ள கைத்தறித் தொழில் நசிந்துகொண்டிருக்கிறது. எனவே தொழில் புரட்சி என்பது வரவேற்கத்தக்க ஒன்று என்றாலும்கூட நம் நாட்டைப் பொறுத்தவரையில் 30 இலட்சம் நெசவுத் தொழிலாளர்கள் இன்றைக்கு இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். தொழில் புரட்சியை வரவேற்று நவீன ஆலைகளை உருவாக்கி 30 இலட்சம் நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குகின்ற திட்டம் தமிழக அரசினிடத்திலே இல்லை என்ற காரணத்தால்தான் இந்தத் தொழிலில் இருக்கக்கூடிய நெசவாளர்களை இந்த அரசு காப்பாற்றியாக வேண்டும் என்ற நிர்ப்பந்தத்திற்கு ஆளாகி இருக்கின்றது. அரசினுடைய ஆதரவும், அரவணைப்பும் இருந்தாலும்கூட, இந்தத் தொழில் காலத்தின் மாற்றத்தினாலே நசிந்துகொண்டே போகின்றது என்பதற்கு என்ன காரணம் என்பதை ஆட்சியிலே இருப்பவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தத் தொழிலுக்கு அரசினுடைய அரவணைப்பும், ஆதரவும் இருந்தாலும் கூட இது நசிந்துகொண்டே போகின்றது என்றால் ஆட்சி முறையில், அதிகாரம் செலுத்துகின்ற வகையிலே ஏதோ தவறு நடந்துகொண்டிருக்கின்றது என்பதை ஆட்சியிலே உள்ளவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். அதிகாரத்தைச் செலுத்துகின்றவர்கள் அதைத் தவறாகச் செலுத்துகிறார்கள் என்றால் உரிய நேரத்தில் சட்டத்தை உரிய முறையில் அமல்

படுத்தாததுதான் இவற்றிற்கெல்லாம் காரணமாக இருக்கின்றது. எனவே அதிகார வர்க்கத்தில் இருப்பவர்கள் உரிய நேரத்தில் சட்டங்களை உருவாக்கி, உரிய முறையில் அவற்றை அமல்படுத்தாத காரணத்தால்தான் இந்தத் தொழில் மேலும், மேலும் நசிந்து கொண்டு வருகின்றது என்பதை மன்றத்தின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

இந்த நெசவுத் தொழிலைப் பொறுத்தமட்டில் சாதாரணத் தொடக்க நிலைச் சங்கங்கள் தாங்கள் உற்பத்தி செய்தவற்றில் 50 சதவீதத்தைக் கோ-ஆப்டெக்ஸ் என்று சொல்லப்படுகின்ற தலைமைச் சங்கத்திற்குக் கொடுத்து அந்தத் தலைமைச் சங்கம் அதைப் பெற்றுக்கொண்டு விற்பனை செய்து விற்பனை செய்த தொகையையும், அரசு தருகின்ற தள்ளுபடித் தொகையையும் தொடக்க நிலையில் உள்ள சங்கங்களுக்கு 6 மாத காலத்திற்குள்ளாகத் திருப்பித் தரவேண்டும் என்பது கடைப் பிடிக்கப்பட வேண்டிய நடைமுறையாகும். ஆனால் சமீப காலத்தில், இந்த ஆட்சியில் அவ்வாறு 6 மாத காலத்திற்குள்ளாக கோ-ஆப்டெக்ஸ் என்று சொல்லப்படுகின்ற தலைமைச் சங்கம், விற்ற பணத்தையும், தள்ளுபடி பணத்தையும் தொடக்க நிலை நெசவாளர் சங்கங்களுக்குக் கொடுக்கவில்லை. அவ்வாறு தொடக்க நிலை நெசவாளர்களின் கைக்கு அது கிடைக்கவில்லை, வந்து சேரவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டாகும். இந்தக் குற்றச்சாட்டுகளை உள்ளடக்கி ஜூனியர் விகடன் பத்திரிகையில் இரண்டு மூன்று இதழ்களில் கட்டுரை எழுதப்பட்டிருக்கின்றது. 15–5–1985 தேதியிட்ட ஜூனியர் விகடன் பத்திரிகையிலும், 5–6–1985 தேதியிட்ட ஜூனியர் விகடன் பத்திரிகையிலும், 12–6–1985 தேதியிட்ட அப் பத்திரிகையிலும் கட்டுரை எழுதப்பட்டு அதற்கு அமைச்சர் அவர்களின் பதிலையும் வாங்கிப் போட்டு அதற்குப் பிறகு அமைச்சர் அவர்கள் கொடுத்த புள்ளி விவரங்கள் தவறான புள்ளி விவரங்கள் என்று முன்னால் இதே துறையில் பணியாற்றிய அமைச்சர் அவர்கள் சமீபத்தில் தெரிவித்திருக்கிறார்கள். அந்தப் புள்ளிவிவரங்களுக்குள் எல்லாம் சென்று அமைச்சர் அவர்களை நான் சங்கடப்படுத்த விரும்பவில்லை. ஒரே ஒரு கருத்தை மட்டும் நான் வலியுறுத்த விரும்புகிறேன். தள்ளுபடியினைப் பொறுத்தவரையில் 1980-81 ஆம் ஆண்டில் 4 கோடி ரூபாய் என்று நீங்களே குறிப்பிடுகிறீர்கள். அதற்குப் பிறகு 1984-85-ல் 16 கோடி ரூபாய் தள்ளுபடிப் பணம் மட்டும் வருகின்றது என்று குறிப்பிடுகிறீர்கள். அப்படியானால் 1984-85-ல் நீங்கள் நிதியொதுக்கம் செய்கின்றபோது தொலைநோக்குச் சிந்தனையோடு இவ்வளவு தொகையைத் தள்ளுபடிக்காக ஒதுக்கம் செய்திருக்க வேண்டும். 16 கோடி ரூபாய் 1984-85 ஆம் ஆண்டுக்குத் தள்ளுபடியில் மட்டும் வருகின்றது என்றால் தொலை நோக்குச் சிந்தனையோடு அவ்வாறு 16 கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கம் செய்திருக்க வேண்டும். அதற்கு என்ன காரணம்? ஏற்கெனவே 1980-81-ல் ஏறக்குறைய 4 கோடி ரூபாய் அளவில் தள்ளுபடி பணம் வருகிறது. அந்த அடிப்படையில் தொலை நோக்கு சிந்தனையோடு, இந்த ஆண்டு தள்ளுபடி தொகையாக இவ்வளவு வேண்டும் என்பதை, கடந்த கால அறிக்கைகளைக் கொண்டு, கடந்த கால சங்கத்தினுடைய நடவடிக்கைகளைக் கணித்து, அதன் அடிப்படையில் கோ-ஆப்டெக்சுக்கு அரசு கொடுக்க வேண்டிய தள்ளுபடி பணத்தை ஒதுக்காததன் காரணமாகத்தான், அரசு கொடுக்க வேண்டிய பணம் பாக்கியாக நிற்கிறது. அதைத் தொடர்ந்து தொடக்க நிலையிலே உள்ள சங்கங்கள் கடன்பட்டவைகளாக நிற்கின்றன. இறுதியிலே சங்கங்கள் கடன்பட்டவைகளாக நிற்கிறது. இறுதியிலே நெசவாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்கின்ற உண்மையை மட்டும் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எனவே இதன் விளைவாக தொடக்க நிலையிலே உள்ள சங்கங்களிலே உள்ள நெசவாளிகள் கடன்பட்டவராகிறார்கள்.





அவர்களுடைய கடனுக்கு அரசு என்ன சமாதானம் சொல்லப் போகிறது. ஏ.டி. (A.D.) மூலமாக கோ-ஆப்டெக்ஸ் தருகிற சர்ட்டிபிகேட்ஸ்களை வைத்துக்கொண்டு அவர்கள் வங்கிகளிலே கடன் வாங்கிக் கொள்ளலாம் என்று அரசு ஏதாவது சமாதானம் சொல்லலாம். ஆனால் நிலைமை என்ன? அரசு அந்தத் தள்ளுபடி தொகையை எவ்வளவு காலம் வைத்திருந்தாலும் அதற்கு வட்டி தருவது இல்லை. ஆனால் இந்தத் தொடக்க நிலையிலே உள்ள சங்கங்களைச் சார்ந்த நெசவாளர்கள் கோ-ஆப்டெக்ஸின் சர்டிபிகேட்டுகளை வைத்து ஈடு கட்டி பணம் பெற வேண்டுமென்றால், 8½ சதவீதம் வட்டியை வங்கிக்குக் கொடுக்க வேண்டியிருக்கிறது. எனவே அரசின் சார்பாக நெசவாளர்களுக்கு அரசு ஏதாவது செய்யவேண்டும் என்று உண்மையிலேயே விரும்பினால், அல்லது உதவி செய்வதாக இருந்தால்,

[திரு. பொன்முத்துராமலிங்கம்] [1985 ஜூன் 18

குறைந்தபட்சம் அந்த வட்டித் தொகை 8½ சதவீதத்தையாவது கொடுப்பதற்கு முன்வர வேண்டும் என்பதுதான் எனது கோரிக்கை. அத்தோடு வருங்காலத்தில் இதே நிலையைத் தொடராமல், தொலைநோக்கு சிந்தனையோடு, கோ-ஆப் டெக்ஸ்ஸுக்கு அரசாங்கம் பணம் ஒதுக்கீடு செய்து, மத்திய அரசிடமிருந்து பெற வேண்டிய பணத்தையும் பெற்று, அவர்களுக்கு அளித்து, கைத்தறி துணியில் தேக்க நிலையைப் போக்க நீங்கள் முயற்சி செய்ய வேண்டும். இல்லையென்றால், அந்தச் சோக கதை தொடர்கதையாகத்தான் ஆகிக் கொண்டிருக்குமேயல்லாமல், நெசவாளர்களுக்கு அதிலே ஒரு நன்மையும் இருக்காது என்பதையும் மாண்புமிகு தலைவர் மூலமாக நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து இதிலே எடுத்துக்கொள்ள வேண்டிய பிரச்னை வியாபார நோக்கு. மார்க்கெட்டிங் (Marketing) என்பது மிக மிக முக்கியமான அம்சம். அந்த வகையில் மிகத் தீவிரமாக கைத்தறி துணிகளை வியாபாரம் செய்கிற அடிப்படையில் இந்த அரசு என்ன செய்திருக்கிறது இதுவரையில்? கண்காட்சிகளை நடத்தியிருக்கிறார்கள். தலைவர்கள் பிறந்தநாள் அல்லது பண்டிகைக் காலங்களில் தள்ளுபடி தருகிறார்கள். 10 சதவீதம் 20 சதவீதம் என்று கைத்தறி துணிகளுக்குத் தள்ளுபடி விலை தருகிறார்கள். இந்த இரண்டைத் தவிர வேறு ஏதாவது உபயோகமாக கைத்தறி துணிகளை விற்பனை செய்வதற்காக, அல்லது அதனை அதிகப்படுத்தும் முயற்சி (Boost) என்கிற வகையில் எதையாவது இந்த அரசாங்கம் செய்ய நடவடிக்கை எடுத்திருக்கிறதா? நாவல் ஃபீச்சர் (Novel feature) என்று சொல்வார்களே அந்த வகையிலாவது ஸ்டேண்டிங்காக ஏதாவது செய்திருக்கிறார்களா என்றால் ஒன்றும் இல்லை.

அதே நேரத்தில் குஜராத் மாநிலத்தில் உள்ள சூரத் நகரில் இந்தக் கைத்தறி துணிகளை ஒட்டு மொத்தமாகச் சேர்த்து ஒரு பெரிய மார்க்கெட்டிங் காம்பிளக்ஸ் (Marketing Complex) என்ற அடிப்படையில் ஒன்றை நிர்மாணித்திருக்கிறார்கள். வெளிநாட்டு, உள்நாட்டு வியாபாரிகளை வருகை தரச் செய்து, அவர்களுக்குப் பல்வேறு விதமான ரகங்களையும் காண்பித்து, நல்ல முறையில் கைத்தறி துணிகளை விற்பனை செய்ய ஏற்பாடு



1985 ஜூன் 18] [திரு. பொன்முத்துராமலிங்கம்]

செய்திருக்கிறார்கள். அதுவும் இந்தியாவிலேதான் இருக்கிறது. நம்முடைய தமிழக அமைச்சர் அவர்களும், அத்துறையைச் சார்ந்தவர்களும் அங்கு போய் பார்த்து அவர்களை அணுகி, அந்த முறைகளைத் தெரிந்து கொண்டு, அதுபோன்ற முறைகளை இங்கும் கையாள வேண்டும். அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்ள நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

அது மட்டும் அல்ல, நவீன யுகத்தில் ஒவ்வொரு நாளும் மனிதனுடைய விருப்பங்கள் மாறிக் கொண்டிருக்கின்றன. அப்படி மாறிக் கொண்டிருக்கும் மனிதனுடைய விருப்பத்திற்கு ஏற்ப வீவர்ஸ் சர்வீஸ் சென்டர்கள் (Weavets Service Centres) என்று சொல்லி மத்திய அரசு ஒரு நிறுவனத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அதனுடைய பணி என்ன? புதிய புதிய ரகங்களை, டிசைன்களைத் துணியில் அறிமுகப்படுத்தி, மக்களின் விருப்பத்தை ஒட்டி புதிய ரகங்களை உருவாக்கி நெசவாளர்கள் அவற்றை வெளிச்சந்தைக்குக் கொண்டு வருவதற்காக அது ஏற்படுத்தப்பட்டது. இத்தகைய வீவர்ஸ் சர்வீஸ் சென்டர்களை கைத்தறி நெசவாளர் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கக்கூடிய தென் மாவட்டங்களில் நிர்மாணித்து, புதிய புதிய நவீன ரகங்களை உருவாக்கம் செய்வதன் மூலம் இந்தக் கைத்தறி உற்பத்தியிலும், விற்பனையிலும் ஏதாவது சாதனையை இந்த அரசு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்றால் இல்லை என்ற குற்றச்சாட்டை இந்த அரசின் முன்பாக நான் வைக்க விரும்புகிறேன்.

அடுத்து, இந்த நெசவுத் தொழிலிலே ஈடுபட்டிருக்கக்கூடிய தொழிலாளர்களுக்குச் சட்டப் பாதுகாப்புத் தரவேண்டும் என்பது நீண்ட நாள் கோரிக்கையாகும். அதற்காக 1981 ஆம் ஆண்டு நீங்கள் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தீர்கள். அதற்குப் பிறகு அது 1982-லே நிறைவேற்றப்பட்டதாக அறிகிறேன். ஆனால் அந்தச் சட்டம் நீதிமன்றத்திற்குச் சென்று தடை வாங்கப் பட்டிருக்கிறது. அதனால் இதுவரையில் அது அமலாக்கப்படாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. நீதிமன்றத்தில் தடை செய்யப்பட்டிருக்கிற அந்தச் சட்டத்தை அமலாக்குவதற்கு, அதன் மூலம் நெசவாளர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கு, இதுவரையில் அந்தத் துறையினரால் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை என்கிற குற்றச் சாட்டை இந்த மன்றத்தின் முன்னாலே நான் வைக்க விரும்புகிறேன்.

[திரு. பொன்முத்துராமலிங்கம்] [1985 ஜூன் 18

(முற்பகல் 11-30)

நம்முடைய அமைச்சர் அவர்கள் இலக்கிய நயப்பட ஜூனியர் விகடனில் கொடுத்த கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இராமச்சந்திர மூர்த்தி கை பட்ட காரணத்தால் கல்லாக இருந்த அகலிகை பெண்ணாக மாறினாள். அதேபோல நம்முடைய இராமச்சந்திர மூர்த்தி அவர்கள் கை பட்ட காரணத் தால் கைத்தறித் துறை மலர்ந்திருக்கிறது என்று சொல்லி இருக்கி றார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னொரு கருத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். அகலிகை கல்லாக இருந்து பெண்ணாக மாறினாளா? அல்லது பெண்ணாக மாறி திரும்ப கல்லாக மாறி விட்டாளா என்பதை அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும். நீங்கள் தொழிலாளர்களுக்கு நன்மை பயக்க வேண்டுமென்று சட்டத்தைக் கொண்டு வந்தீர்கள். அதே நேரத்தில் நீதிமன்றத்திற்குச் சென்று அந்தச் சட்டம் அமலாக்கப் படாத நிலையிருக்கிறதென்றால் அகலிகை கல்லாக இருந்து, பெண்ணாக மாறி பின்னாலே நீதிமன்றத்திற்குச் சென்று கல்லாக மாறிவிட்டாள். எப்போது இராமச்சந்திர மூர்த்தியின் தயவு கிடைக்குமென்று ஏங்கி இருக்கும் அந்தக் கல்லாகிய அகலிகைப் பெண்ணை இராமச்சந்திர மூர்த்தி தொட இருக்கிறார் என்பதை நான் இந்த மாமன்றத்தின் மூலமாக அறிய விரும்புகிறேன்.

இன்னொன்றையும் குறிப்பிடுவது என்னுடைய கடமையாகும். நவீன ஆலைகள் நெசவுத் தொழிலுக்கு நேரடியாக எதிரிகள். ஆனால் விசைத் தறிகள் (Powerloom) என்பவை பாராசைட்டு களாக (Parasite) இருக்கின்றன. ஒட்டிக்கொண்டு இந்தக் கைத்தறித் தொழிலின் பலனை எடுக்கிற அளவிற்கு பாரசைட்டுகளாக, புல்லுருவிகளாக இருந்து கொண்டிருக் கின்றன. கைத்தறித் தொழிலில் செய்யவேண்டிய சில துணிகளை எல்லாம் சில முதலாளிகள் என்ன செய்கிறார்கள் என்றால் விசைத் தறிகள், (Powerlooms) மூலமாக உற்பத்தி செய்து, விசைத் தறிகள் மூலமாக உற்பத்தி செய்த இந்தத் துணிகளை கைத்தறி மூலமாக உற்பத்தி செய்யப்பட்டவை என்று சொல்லி உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வணிகம் செய்கிறார்கள். அந்தக் காரணத்தினால்தான் பவர் லூம்களை கைத்தறியின் பாரசைட்டுகள், புல்லுருவிகள் என்று தெரிவிக்கிறேன். இவற்றால் கைத்தறித் தொழிலே அழிந்து கொண்டிருக்கிறது என்பதைக்



1985 ஜூன் 18] [திரு. பொன் முத்துராமலிங்கம்]

குறிப்பிட விரும்புகிறேன்.

விசைத்தறிகளைப் பொறுத்தவரையில் அரசு இன்றைக்கு அவற்றிற்கு அதிகமாக அனுமதி வழங்குவதை மாற்ற வேண்டும். உங்களுடைய கொள்கைக் குறிப்பில் என்ன குறிப்பிட்டிருக் கிறீர்கள்? எடுத்துக்காட்டாகச் சொல்ல வேண்டுமென்றால் ஒரு லட்சம் விசைத்தறிகள் இருக்கின்றனவென்றால் இந்த ஒரு லட்சத்திற்குச் சமமான அனுமதி பெறாத விசைத்தறிகள் இருக்கின்றன என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். எனவே நீங்களே உங்கள் கொள்கைக் குறிப்பில் அனுமதி பெறாத விசைத் தறிகள் அதற்குச் சரியாக இருக்கின்றன என்று தெரிவித்தால் எப்படி இந்த ஆட்சியைப் பாராட்ட முடியுமென்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இன்னும் கூட தெளிவுபடுத்த விரும்புகிறேன். இன்றைக்கு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் என்று ஏற்படுத்தி இருக்கிறார்கள். இந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை ஆரம்பிப்பதற்காக அரசியல் செல்வாக்கு படைத்தவர்கள் இன்றைக்கு நெசவாளர் சங்கங்களுடைய நிர்வாகக் குழுவிலே அங்கம் பெறுகிறார்கள். ஏழெட்டு ஆண்டுகளாக தொடக்க நிலையில் இருக்கிற சங்கங்களில் தேர்தலே இல்லாமல், அரசினுடைய நியமனம் மூலமாக அரசியல் செல்வாக்குப் பெற்றவர்கள் இந்தச் சங்கங்களின் நிர்வாகக் குழுவிற்கு வருகிறார்கள். அவர்கள் வருகிற காரணத்தால் அதிகாரிகள் தங்களுடைய பணிகளை ஒழுங்காக செய்யமுடியவில்லை. அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்திக் கொண்டு இன்றைக்கு என்னென்ன கொடுமைகள் நடக்கின்றன? 26—2—1985, 19—3—1985 ஆகிய தேதியிட்ட ஜனசக்தி ஏடுகளில் எல்லாம் இந்தத் தொடக்க நிலையில் உள்ள நெசவாளர்கள் சங்கங்களிலே நடைபெறுகிற கொடுமைகளைப் பற்றி தெரிவிக்கப்பட்டுள்ளன. இன்றைக்கு நூலை வாங்கி மறுபடியும் விற்று விடுவது, நூலை விற்று விட்டு மீண்டும் கோ-ஆப்டெக்சில் துணிகளை வாங்கி அந்தத் துணிகளை மறு விற்பனைக்குச் சங்கத்தில் வைத்துக் கொள்கிற மோசமான காரியங்கள் இந்தச் சங்கங்களிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை ஜனசக்தி போன்ற ஏடுகள் எல்லாம் படம் பிடித்துக் காட்டிக் கொண்டிருக்கின்றன. எனவே இன்றைக்குத் தொடக்க நிலையில் உள்ள சங்கங்கள் அனைத்தும் ஒழுங்கீனமான நிலையில் இருந்து கொண்டிருக்

கின்றன. உதாரணமாக ஒன்றைச் சொல்கிறேன். ஒரு கிராமத்தில் 2,000 ஜனத்தொகை இருக்கிறார்கள் என்றால், அந்த 2,000 பேர்களும் அந்தச் சங்கத்திலே உறுப்பினர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, ஒரு தலைவர் இருக்கிறார் என்றால் அவருடைய உறவினர்கள் எல்லாம் அந்தச் சங்கத்திலே உறுப்பினர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். எனவே போகஸ்-மெம்பர்ஷிப் (Bogus Membership) என்ற முறை அந்தச் சங்கத்தில் இருக்குமானால் எந்த அளவிற்கு இந்த அரசு கண்காணித்துக் கொண்டிருக்கிறது. மாறாக எந்த அளவிற்கு நெசவாளர்களுக்குத் துரோகம் செய்கிறது என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

நான் இறுதியாக ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். அழிந்து போகுமென்று கருதி அச்சப்பட்டு உருவாக்கப்படுவதுதான் சரணாலயம். ஆனால் அழிந்துவிட்டதோ என்ற ஏக்கப் பெருமூச்சோடு எழுப்பப்படுவதுதான் "நினைவாலயம்". இன்றைக்குக் கைத்தறித் தொழிலுக்கு இந்த அரசு சரணாலயம் எழுப்புவதற்குப் பதிலாக, தெரிந்தோ, தெரியாமலோ "நினைவாலயம்" எழுப்பிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்து, அளித்த வாய்ப்பிற்கு நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன்.

**திரு. ஏ. தங்கராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்கை எண் 26 மற்றும் கதர் கிராமத் தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்கை எண் 27—ஆகிய இரண்டு மானியக் கோரிக்கைகளையும் நான் வரவேற்று என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறைக்கு அடுத்து வருகின்ற துறை இந்தக் கைத்தறித் துறையாகும். இந்தக் கைத்தறித் தொழில் தமிழகத்தில் இந்த அரசாங்கம் வந்த பிறகு, குறிப்பாக கிராமப் பகுதியில் நன்றாக வளர்ந்துள்ளது. மாண்புமிகு தமிழ் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்கும்





பிறகு கைத்தறி நெசவாளர்களுடைய வாழ்க்கைத்தரம் உயர வேண்டும் என்ற அடிப்படையில்தான் ஒரு சிறப்பான திட்டமாக, மாண்புமிகு அமைச்சர் அவர்களை இந்தத் துறைக்கு பொறுப் பேற்கச் செய்திருக்கிறார்கள். ஏழை எளிய கூட்டுறவு நெசவாளர் களுடைய வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்றால் அவர்கள் நெய்கின்ற துணிகளை எல்லாம் நல்லமுறையில் விநியோகம் செய்யவேண்டும் என்ற அடிப்படையில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் இந்தத் துறைக்குத் தனியாக ஒரு அமைப்பை ஏற்படுத்தி, இந்தத் துறையும் கதர்த் துறையும் தனியாக செயல்பட்டு வருகின்றன. அந்த அடிப்படையில் இன்றையதினம் தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய ஏழை எளிய நெசவாளர்கள் உற்பத்தி செய்கின்ற துணிகளில் தேக்கம் இல்லாமல் நல்ல முறையில் விற்பனை செய்ய ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள் என்பதை நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அதற்குப் பின்னால், கைத்தறி நெசவாளர்களைக் கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டுவரவேண்டும் என்று இந்த அரசு ஒதுக்கீடு நிர்ணயம் செய்திருக்கிறது. அந்த வகையில் 600 சதவீதம் நெசவாளர்களைக் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டுவர வேண்டும் என்ற வகையில் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இருந்தாலும் 5.65 லட்சம் கைத்தறிகளில் 3.75 லட்சம் கைத்தறிகள் இந்த ஆண்டு மார்ச் வரையில் 1,500 தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களாக அமைக்கப்பட்டு உள்ளன. இந்த ஆண்டு மேலும் 25 ஆயிரம் கைத்தறி நெசவாளர்களைக் கொண்டு, 100 தொடக்கக் கூட்டுறவு சங்கங்களையும், 15 தொழில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களையும் அமைக்க திட்டமிடப் பட்டுள்ளது. அதற்காக 30 லட்ச ரூபாய் அனுமதித்து இருப்பதை நான் பாராட்டுகிறேன்.

அதற்குப் பின்னால், எற்றுமதி, கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலமாக தனியான அமைப்பு கோ-ஆப்டெக்ஸ் இன்டர்நேசனல் என்ற பெயரால் ஏற்படுத்தப்பட்டு, அதற்காக இரண்டு கோடி ரூபாய் அனுமதித்து இருப்பதற்காக நான் பாராட்டுகிறேன். அதற்குப் பின்னால், பாதுகாப்புத் துறையும், துணை இராணுவப் பிரிவும் இந்தத் துறையில் உற்பத்தி செய்யப்

பட்டிருக்கிற துணிகளை வாங்குவதற்கு அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு இருக்கிறார்கள், அதற்காகவும் நான் பாராட்டுகிறேன்.

அதோடு, முதல் அமைச்சர் சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயன் பெறும் பள்ளிக்கூட மாணவ, மாணவியர்களுக்குக் கைத்தறி சீருடைகள் வழங்குவதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதைப் பார்க்கிறபோது என்னைப் போன்றவர்கள் பாராட்டாமல் இருக்க முடியாது. ஆகவே அந்த வகையில் நெசவாளர்கள் வீட்டு வசதிக்கு என்று 1979-80 ஆம் ஆண்டு நிறுத்தப்பட்டிருக்கின்ற நெசவாளர்கள் வீட்டு வசதி வாரியத்தை மீண்டும் துவங்க இருக்கிறார்கள். இதில் 12 ஆயிரம் ரூபாயில் நெசவாளர்களுக்கு வீடுகளைக் கட்டித் தர ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். அப்படிப் பார்க்கிறபோது, இதிலே 1,000 ரூபாயை அரசாங்கம் மானியமாகவும், மீதியிருக்கின்ற தொகையில் 9,700 ரூபாயை வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகமும் 1,300 ரூபாயை பயனடையும் நெசவாளர்களும் செலுத்த வேண்டும் என்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். நான் கேட்டுக்கொள்வதெல்லாம் நெசவாளர்களுக்கு அதிகமான அளவில் கிட்டத்தட்ட 15 ஆயிரம் ரூபாய் அளவில் செலவு செய்து, அவர்களுக்குத் தறியோடு கூடிய கொட்டகையையும் இல்லத்தையும் அமைத்துக் கொடுத்தால் நல்லதாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

அதற்குப் பின்னால், கைத்தறித் துணிக்கு என்று நாம் தற்போது தள்ளுபடி தருகிறோம். கைத்தறி நெசவாளர்கள் உற்பத்தி செய்கின்ற துணிகளுக்கு மத்திய அரசும், மாநில அரசும் 50:50 என்ற வீதத்தில் மானியத் தொகையினைப் பகிர்ந்து கொள்கிறார்கள். இன்றையதினம் கிராமப் பகுதியில் உற்பத்தியாகின்ற, கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தி செய்கின்ற துணிகள் மாநிலம் முழுவதும் நல்ல முறையில் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. அந்த வகையில் போன ஆண்டு 16 கோடி ரூபாய் இதற்கு ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் வருகிற ஆண்டில் 10 கோடி ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறார்கள். 16 கோடி 10 கோடியாகக் குறைந்து இருக்கிறது. ஆகவே,





குறைகிறபோது கிராமப் பகுதியில் உற்பத்தி செய்கிற கைத்தறி நெசவாளர்களின் துணி தேங்கிவிடும். ஆகவே, இந்த நிலைமையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்தில் கொண்டு வருகிற ஆண்டில் அதை 20 கோடி அளவுக்கு உயர்த்தி ஆக வேண்டும். காரணம் கிராமப் பகுதியில் நிறைய கைத்தறி நெசவாளர்களுக்கு மேலும் மேலும் புதிய சங்கங்களை நாம் உற்பத்தி செய்துகொண்டு இருக்கிறோம். பல்வேறு தனியாரிடம் இருக்கின்ற நெசவாளர்களைக் கூட்டுறவு சங்கத்தின் கீழ் கொண்டு வந்து இருக்கிறோம். இப்படிப் பார்க்கிற போது நிறைய கைத்தறி துணிகள் உற்பத்தி ஆகின்றன. அப்படிப் பார்க்கிற காலத்தில் 50 சதவிதம் தள்ளுபடி என்று சொல்லுகிற போது 16 கோடிக்கும் 10 கோடிக்கும் 6 கோடி குறைகிறது. ஆகவே மேலும் மேலும் உற்பத்தி பெருகி வருகிற நிலையில் இருக்கும்போது அந்த சப்சிடி குறைகிற நேரத்தில் தொழிலாளர்கள், கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதை என்னுடைய கருத்தாக நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து நாம் சப்சிடி வழங்கினாலும் கிராமப் பகுதியில் பண்டிகை காலங்களில்தான் வருடத்தில் 60 நாட்களுக்கு மட்டும் தான் நாம் சப்சிடி தருகிறோம். அப்படி 60 நாள் என்று வருகிறபோது பண்டிகைக் காலங்களில் பொங்கல், தீபாவளி, கிருத்துமஸ் இப்படி வருகிற காலத்தில் வருடத்திற்கு 60 நாட்கள் தான் நாம் தள்ளுபடி கொடுக்கிறோம். ஆகவே, என்னுடைய கருத்தாக பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த தின விழாவுக்கும் தந்தை பெரியார் அவர்கள் பிறந்த தின விழாவுக்கும், காமராஜ் அவர்கள் பிறந்த தின விழாவிற்கும் ராஜாஜி அவர்கள் பிறந்த தின விழாவிற்கும் இன்னும் 20 நாட்கள் உயர்த்தி அதாவது இப்போது 60 நாட்கள் என்று இருப்பதை 80 நாட்களாக உயர்த்தி கைத்தறி நெசவாளர்கள் வாழ்க்கைத் தரம் உயர்வும் அவர்களுடைய முன்னேற்றத்தில் அக்கறை கொள்ளவும் இந்த நிலைமையை ஏற்படுத்த வேண்டும் என்று நான் வலியுறுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்குப் பின்னால் கைத்தறி கடைகள் திறப்பதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்து இருக்கிறது. ஆகவே, வருகிற 1985-86 ஆம் ஆண்டு கரூர், மதுரை, ஈரோடு ஆகிய மூன்று

[திரு. ஏ. தங்கராசு] [1985 ஜூன் 18

இடங்களிலும் புதிய கடைகள் திறப்பதாக இங்கே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்ளுவது எல்லாம் வடலூரில் கைத்தறி கடைகளை, துணி விற்கும் கடைகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்பது. குறிஞ்சிப்பாடியில் நெசவாளர்கள் வாழ்கின்ற பகுதியில் தனியார் இடத்தில் மற்றும் கூட்டுறவுத் துறையில் கைத்தறி நெசவாளர்கள் இருக்கிறார்கள். அங்கே இருக்கின்ற ஆதி திராவிடர்கள் தனியார் துறையில இருக்கின்ற நெசவாளர்களை ஒன்று சேர்த்து தொழில் இயல் நெசவாளர் சங்கம் ஏற்படுத்த வேண்டும் என்பதை நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்குப் பின்னால் இந்த மாநிலத்தில் 17 கூட்டுறவு நூற்பாலைகள் இருப்பதாகத் தெரிகிறது. ஆனால், இந்த 17 நூற்பாலைகளும் போதுமான நூல்களை உற்பத்தி செய்வது இல்லை. அதற்கு என்ன காரணம் என்றால் அந்த அந்த நூற்பாலைகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தான் இன்றைக்கு அதன் தலைவர்களாக இருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு இருக்கின்ற வேலை பளுவில் அடிக்கடி இந்தக் கூட்டத்தை கூட்டுவது இல்லை. அந்த நூற்பாலையில் இருக்கின்ற இயக்குநர்களையும் மகாசபை கூட்டத்தையும் கூட்டுவதற்கே முடியவில்லை. ஆகவே அந்த நிலைமையைக் கருத்தில் கொண்டு பார்த்தால் பெரும்பாலும் இருக்கின்ற அந்த நூற்பாலைகள் நஷ்டத்தில் இயங்குகின்றன. அதற்குக் காரணம் அடிக்கடி கூட்டம் கூட்டி அங்கே விவாதிப்பது இல்லை. ஏன் நஷ்டத்தில் இயங்குகிறது, அதற்கு என்ன காரணம் என்று அந்த நிர்வாகக் குழுவை கூட்டியும், ஆராய்ந்து முடிவு எடுப்பது இல்லை. அதற்குக் காரணம் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையில் இருப்பதால் இருக்கிற நிலைமையில் அடிக்கடி கூட்ட முடிவதில்லை. ஆகவே, விஷயம் தெரிந்தவர்களை 17 நூற்பாலைகளிலும் நியமிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக தென் ஆற்காடு மாவட்டத்தில் 25 ஆயிரம் கைத்தறி நெசவாளர்கள் இருக்கிறார்கள். 69 நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. இந்த மாவட்டத்தில் இருக்கின்ற கைத்தறி நெசவாளர்கள் தனியாக இருப்பவர்களும், சங்கத்தில் இருப்பவர்களும் புது சங்கம் துவக்குவதற்கு தொடர்பு கொள்ள



1985 ஜூன் 18] [திரு. ஏ. தங்கராசு]

வேண்டும் என்றால் உதவி இயக்குநர் அலுவலகம் திருச்சியில் இருக்கிறது. திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை, தென் ஆற்காடு ஆகிய நான்கு மாவட்டங்களை உள்ளடக்கிய நிலையில் திருச்சியில் அலுவலகம் இருக்கிறது. ஆகவே, இந்த நான்கு மாவட்டங்களில் நெசவாளர்கள் அதிகமாக இருக்கிற தென் ஆற்காடு மாவட்டத்தில் தனியாக உதவி இயக்குநர் அலுவலகம் தரவேண்டும் என்று போன சட்ட மன்றத்தில் பேசினேன். இன்றையதினம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பொறுப்பை ஏற்று இருக்கிற நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளுவது எல்லாம் தென் ஆற்காடு மாவட்டத்திற்குத் தனியாக உதவி இயக்குநர் அலுவலகம் வேண்டும் என்பதையும், குறிஞ்சிப்பாடியில் தொழில் கூட்டுறவு உற்பத்திச் சங்கம் வேண்டும் என்பதையும் வடலூரில் கைத்தறி நெசவாளர்கள் உற்பத்தி செய்கிற ஆடைகளை விற்பனை செய்ய வேண்டும் என்பதையும் தெரிவித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்று என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்**: மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று ஹேண்ட்லூம் செக்டாரைப் பொறுத்தவரையிலே ஒரு மிகப் பெரிய சவாலாக இருப்பது பவர் லூம் என்பது அனைவருக்கும் தெரிந்ததே. இந்த பாலிசி நோட்டிலேயே கூட என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால்,

"As on 29th February 1984, 95,591 authorised powerlooms are functioning in the State. It is feared that an equal number of unauthorised powerlooms are also functioning."

ஹேண்ட்லூம் தொழிலாளிகளுக்கு மிகப் பெரிய சவாலாக இருக்கும் பவர் லூம் ஏறத்தாழ ஒரு லட்சம் பவர் லூமை அரசு சென்ற ஆண்டிலே அனுமதித்து இருக்கிறதா? மறைமுகமாக அப்படி பவர் லூமை ஏற்படுத்துவதற்கு அனுமதித்திருந்ததா என்ற ஒரு கேள்வி இன்றைக்கு எழுப்பப்படுகிறது. இப்படி பவர் லூம ஏற்படுத்துகிற நேரத்தில் ஹேண்ட்லூம் தொழிலாளிகளுடைய பிரச்சினைகளுக்குப் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்க வேண்டிய அரசு அதைக் கவனிக்காமல் இருந்ததா? அல்லது அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதிலே ஏனோ, தானோ என்ற கொள்கையைக் கடைப்பிடித்தார்களா? என்று

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1985 ஜூன் 18

சந்தேகம் எங்களுக்கு ஏற்படுகிறது. இந்த நேரத்திலே ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்று இந்தக் கைத் தறித் தொழிலாளர்களை, அந்தத் துறையைப் பாதுகாக்க வேண்டுமானால், 1982-ம் ஆண்டு விசைத்தறி எந்த அளவு இருந்ததோ, அதற்கு மேல் விஸ்தரிப்பதற்கு அனுமதிக்கக்கூடாது. தமிழக அரசு 3½ லட்சம் கைத்தறியை விசைத்தறியாக மாற்றுவது என்ற யோசனையைக் கைவிட வேண்டும். லைசென்சு இல்லாமல் ஓடுகின்ற விசைத்தறிகளை பறிமுதல் செய்ய வேண்டும். கலர் நூல், ரயான் போன்றவை விசைத்தறி செய்ய அனுமதிக்க கூடாது. அதனைப்போல், டெக்ஸ்டைல் கன்ட்ரோல் கமிஷனுடைய உத்தரவு, சென்னை உயர்நீதிமன்றத்தில் தடை பெற்றதை ரத்து செய்வதற்கான, தேவையான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட இலாகா செய்ய வேண்டும். அப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுத்தால்தான், ஹேண்ட்லூம் துறையைப் பாதுகாக்க முடியும் என்ற ஒரு நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த நேரத்தில், பவர் லூமைப் பொறுத்தவரை, இதை நான் சொல்வதற்கு, நேற்றையதினம் மாநில ஐ.என்.டி.யூ.சி.-யின் ஓர்க்கிங் கமிட்டியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் ஒரு பகுதியைப் படித்துக் காட்ட விரும்புகிறேன்:

'The Powerloom sector should be brought under some discipline, particularly in respect of the application of all the labour laws, ensuring the workers security of employment and satisfactory working conditions and wage levels. In the weaving sector, the powerloom, the handloom and the mill sector should be made to function mutually complementary and not mutually destructive.'

பவர்லூம் எந்த அளவுக்குச் செயலாற்றிக் கொண்டிருக்கிறது என்றால், ஹேண்ட்லூமை டெஸ்ட்ராய் செய்கின்ற, நாசப்படுத்த வேண்டும் என்று செயலாற்றிக் கொண்டிருக்கிறது. ஏனென்றால், பவர் லூமோடு போட்டி போடுவதற்கு வசதி இல்லாத நிலை இருக்கிறது. பவர் லூமைப் பொறுத்தவரை, எந்தவிதமான லேபர் லாஸ்லும் அமல்படுத்தப்படவில்லை. தொழிலாளிகளுக்கு ஒழுங்காக கூலி கூட கொடுக்கப்படவில்லை. ஆகவே, இந்த நிலையைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்துக் கொண்டால்தான் ஹேண்ட்லூம் தொழிலாளிகளைப் பாதுகாக்க முடியும். இந்த ஹேண்ட்லூம் தொழிலாளிகளைப் பாதுகாப்பதற்காக ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.



1985 ஜூன் 18] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

1981 ஆம் ஆண்டிலே அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து விவாதிக்கக்கூடிய நேரத்திலே நாங்கள் சுட்டிக்காட்டினோம். இதிலே இருக்கக்கூடிய பல லூப்ஹோல்லை முதலாளிகள் பயன் படுத்தி, நாளை இந்தச் சட்டம் அந்தத் தொழிலாளிகளுக்கு எந்தவிதமான பிரயோசனமும் அளிக்காத நிலை ஏற்படும்; ஆகவே, அப்படிப்பட்ட லூப்ஹோல்லை வைக்கக்கூடாது என்று சொன்னோம். அன்றையதினம் தொழிலாளர் நலத் துறை அமைச்சராக இருந்தவர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. அதனுடைய விளைவு இன்றைக்கு என்னவென்றால், முதலாளிகள் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். அந்தச் சட்டம் இன்றைக்கு முழுக்க முழுக்க தொழிலாளர்களுக்கு எந்தவிதமான பிரயோஜனமும் இல்லாத அளவிற்கு கோல்ட் ஸ்டோரேஜில் வைக்கப்பட்டிருப்பதைப்போல் வைக்கப்பட்டிருக்கிற நிலைமை தான், இருக்கிறது. நீதிமன்றத்தில் வழக்காடி, தொழிலாளர் களுக்குச் சாதகமான முறையில் இந்தச் சட்டத்தை அமல்படுத்து வதற்கான நடவடிக்கைகளை என்ன என்ன எடுக்க வேண்டுமோ அதை அதற்கு சம்பந்தப்பட்ட இலாகாவோ அல்லது லேபர் இலாகாவோ எடுக்கவில்லை என்பதைத்தான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-50)

இன்னொரு விஷயம் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், குறைந்தபட்ச ஊதியம் இன்றைக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதுகூட பலவிடங்களில் தொழிலாளர்களுக்குக் கிடைக்காத நிலை இருக்கிறது. அமைச்சரவர்களுக்கே கூடத் தெரியும். கடலூரில் குறைந்தபட்ச ஊதியம் கிடைப்பதற்காகத் தொழிலாளர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள் ஹேண்ட்லூம் சென்டரிலே உள்ளவர்கள்.

அடுத்து, இந்தக் கூட்டுறவு சொசைட்டிகளைப் பொறுத்த வரையில் பாலிசி நோட்டிலே சொல்லப்பட்டிருப்பது, 60 சதவீதத்தை நேஷனல் டார்கெட்டாக நிர்ணயம் செய்திருந்தும், 67 சதவீதம் அளவிற்கு, அதாவது டார்கெட்டிற்கும் மேலாகவே கூட்டுறவுச் சங்கங்களுக்கு அதிலே விதிவிலக்கு கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆனால் துரதிருஷ்டவசமாக இந்த ஹேண்ட்லூம் அக்டைப் பொறுத்தவரையில் என்ன நிலைமை என்றால், கூட்டுறவுச் சங்கங்களுக்கு அதிலே விதிவிலக்கு கொடுக்கப்

பட்டிருக்கிறது. மினிமம் வேஜ் கூட்டுறவுத் துறையிலே அமல் படுத்தப்படாத நிலைமை இருக்கிறது. ஆகவே, கூட்டுறவின் கீழே அதிக அளவில் கொண்டுவருகிறோம் என்று ஒருபுறத்தில் சொன்னாலும், பாதகமான விளைவை ஏற்படுத்துகின்ற வகையில் இந்தச் சட்டம் கூட்டுறவுத் துறைக்குப் பொருந்தாது என்ற விதிவிலக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த விதிவிலக்கை எடுத்து வாபஸ் பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்குக் கூட்டுறவுத் துறையிலே உள்ள தொழிலாளர்களுக்கும், இந்தச் சட்டத்தின் பாதுகாப்பும் பலன்களும் கிடைக்கின்ற வகையில் கொண்டு செல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு விஷயம் என்னவென்றால், ரிபேட்டைப் பொறுத்த வரையில் இன்றைக்குப் பல கூட்டுறவுச் சங்கங்களுக்குக் காலாகாலத்திலே அந்த ரிபேட் அமவுண்ட் கொடுக்கப்படாததால் ஒழுங்கான முறையில் அங்கே செயல் ஆற்ற முடியவில்லை.

மேலும், இந்தத் துணிகளைக் கோவாப்டெக்ஸ் வாங்கியதற்கும், காலாகாலத்திலே அந்தப் பணம் கொடுக்கப்படாததால் அந்தச் சங்கங்கள் செயலாற்றுவதில் பிரச்னை இருக்கிறது.

புதிதாக டெக்ஸ்டைல் பாலிசி நோட்டில் ஒரு இடத்தில் சொல்லப்படுகிறது.

The responsibility for the entire production of controlled cloth shall be transferred to the handloom sector by the end of the 7th Five Year Plan. The quantum of controlled cloth shall be suitably increased in order to provide a larger quantum of cloth at affordable prices to the poorer sections of the population.

இது ஒரு தாப்பிலே இந்த ஹேண்ட்லூம் துறையைக் கடினமாகப் பாதிக்கும். ஏனென்றால், இன்றைக்கு ஜனதா க்ளாத் போன்றவைகளை உற்பத்தி செய்வதில் முதலாளிகள் முடியாது என்ற நிலையை எடுத்த பிறகு, அந்த முதலாளிகளுக்குப் பணிகின்ற முறையில் மத்திய அரசு கொள்கையை உருவாக்குவதால் இப்படிப்பட்ட தொழில்களை ஹேண்ட்லூம் செக்டாருக்கு விடுவது என்பது ஹேண்ட்லூம் தொழிலாளர்களுக்கு உதவாது, அவர்களைக் கொல்லத்தான் உதவும் தெரிவித்துக்கொள்கிறேன்.





இன்னொரு விஷயமும் சொல்லப்பட்டிருக்கிறது.

The Tamil Nadu Textile Corporation has been set up to look after the management of the sick mills in the State and to advance money to sick textile mills.

ஆனால் இன்றைக்கு டெக்ஸ்டைல் பாலிசியைப் பொறுத்த வரையில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால்

Take-over by the Government or nationalisation of sick units does not provide solution to the problems of sickness and the Government would not as a rule intervene in such cases.

இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அரசு, இந்த டெக்ஸ்டைல் பாலிசி சம்பந்தமாக, ஒரு பக்கத்திலே சிக் மில்களை எடுக்க வேண்டுமென்ற கொள்கையைப் பிரகடனம் செய்திருக்கின்ற நேரத்தில், டெக்ஸ்டைல் பாலிசி சம்பந்தமாக இப்படிப்பட்ட ஒரு கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. அந்த முறையிலே அதை ஆட்சேபிப்பதற்கோ, கண்டனம் பண்ணுவதற்கோ இந்த அரசு முன் வரவில்லையென்பதற்காக இந்த நேரத்திலே வருத்தம் தெரிவிக்கிறேன்.

ஐ.என்.டி.யு.சி. ரெசலூஷன் மூலமாக, டெக்ஸ்டைல் பாலிசியைப் பற்றி என்ன சொல்கிறார்கள்?

The new policy which permits the closure of nonviable units has not spelt out as to how the Government proposes to tackle the consequent disemployment of workers. They just cannot be discarded. The human aspect of the textile policy must have been spelt out in detail.

ஐ.என்.டி.யு.சி. சொல்கிற அளவுக்கு இந்த அரசோ ஆளுங் கட்சியோ இந்த டெக்ஸ்டைல் பாலிசி சம்பந்தமாக தங்களுடைய கருத்துக்களைச் சொல்லவில்லையென்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஸ்பின்னிங் மில்கள் பொறுத்த அளவிலே அவர்கள் கைத்தறி நெசவாளர்களுக்கு யார்ன் கொடுக்க வேண்டுமென்று சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால், ஸ்பின்னிங் மில்களிலே என்ன நடக்கிறது என்றால், சில கூட்டுறவு மில்களில், அவர்கள் தனியார் துறையோடு போட்டி போட்டுக்கொண்டு, அதிகமான விலையிலே நூலை

விற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இது நிச்சயமாக அந்தத் தொழிலாளர்களை, அல்லது அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்களைக் காப்பாற்றாது.

1981 ஆம் ஆண்டுக்குள் ஐடென்டிபிகேஷன் கொண்டு வர வேண்டுமென்று சட்டத்திலே சொல்லப்பட்டது. ஆனால், இன்று வரையில் ஐடென்டிபிகேஷன் கார்டுகள் கொடுக்கப்படவில்லை. இனியாவது அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் . . . (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. வே. இரா. ஜெயராமன்):** பேசுகின்றவர்கள் கைத்தறித் துறையோடு கதர்த் துறை பற்றியும் சேர்த்துப் பேசலாம்.

***திரு. எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கைத்தறி அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள இந்த மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை வைக்க விரும்புகிறேன். இந்த மானியக் கோரிக்கையில் நல்ல பல திட்டங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஏழை, நெசவாளர்கள் மீதும், அவர்கள் செய்கின்ற அந்தத் தொழிலின் மீதும் எந்த அளவு அக்கறை கொண்டுள்ளார்கள் என்பதை இங்கே வைக்கப்பட்டுள்ள இந்தக் கொள்கைத் திட்டத்தின் மூலமாக நாம் நன்கு தெரிந்துக் கொள்ளலாம். பல நல்ல திட்டங்களை எல்லாம் இந்த அரசு நல்ல முறையிலே செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. இந்த முறை, முன்னைவிட பல நல்ல திட்டங்களை உருவாக்கி, ஏழை நெசவாளத் தொழிலாளர்கள் நல்லமுறையிலே பயன் பெறத்தக்க வகையிலே, இந்த அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாகவே, நெசவுத் தொழில் செய்பவர்கள் பொறுமை குணம் படைத்தவர்கள். அவர்கள் உழைப்பதற்கு, எந்த சமுதாயத்தையும்விட தயங்குவதில்லை. குறிப்பாகச் சொல்லப் போனால், நெசவுத் தொழிலாளர்களுக் வேறு எந்தத்





தொழிலுமே செய்யத் தெரியாது. மற்ற தொழில்களை செய்பவர்கள் எல்லா தொழில்களையும் செய்ய முடியும். ஆனால், நெசவுத் தொழில் செய்பவர்கள் தாங்கள் செய்கின்ற தொழிலைத் தெய்வமாகக் கொண்டு பொருளாதார வளர்ச்சிக்காக, வேறு தொழிலைச் செய்ய தெரிந்து கொள்ளாதவர்கள். அந்தவகையிலே இருப்பதால், அந்தத் தொழிலுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து மாண்புமிகு புரட்சித் தலைவரின்கீழ் உள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்களால் இங்கே கொண்டு வரப் பட்டிருக்கிற இந்த மானியக் கோரிக்கையை நான் வரவேற்கிறேன்.

பொதுவாக, என்னுடைய திருச்செந்தூர் தொகுதியிலே பரமன்குறிச்சி பகுதியிலே ஆயிரக்கணக்கான நெசவுக் குடும்பங்கள் அந்தத் தொழிலை நம்பியேதான் காலத்தைக் கடத்தி வருகிறார்கள். அங்கே நான்கு ஐந்து சொசைட்டிகள் இயங்கி வருகின்றன. அந்த சொசைட்டிகள் சரியாக இயங்காததால், அவை நல்ல முறையிலே இயங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள். அந்த நடவடிக்கையை ஆதரிக்கிறேன்.

நெசவாளர்களுக்கு இன்னொரு முக்கியமான பிரச்னை உள்ளது. அவர்கள் கூலி உயர்வு கேட்கிறார்கள். அந்தக் கூலி உயர்வு நியாயமான கோரிக்கை. மீட்டருக்கு இப்பொழுது ரூ. 2¼ என்று கூலி வைத்திருக்கிறார்கள். குறைந்தபட்சம் ரூ. 3-ஆக ஆக்கிக் கொடுக்கலாம். ஒரு சொசைட்டி முற்போக்கான வீதத்திலே கூலி உயர்வு கொடுத்தால், வாங்குகின்றவர்களும் முற்போக்கான விலையிலே துணியைக் கொள்முதல் செய்கின்ற சூழ்நிலை உருவாகிறது. ஆகவே, அனைத்து மாவட்டத்திற்கும் முழுவதுமாக, சரியான நெசவுக் கூலியை வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று அன்போடு அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

இங்கே பேசியவர்கள் எல்லாம் சொன்னார்கள். ரிபேட் வழங்குவதை 30 நாளிலிருந்து 60 நாட்களாக உயர்த்த வேண்டுமென்று சொன்னார்கள். இப்போது இருக்கிற நாட்களைவிட

இன்னும் 20 அல்லது 30 நாட்கள் இந்த ரிபேட் வழங்குவதை கூடுதலாக்க வேண்டுமென்று நானும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அப்படிச் செய்தால் தேங்கிக் கிடக்கும் கைத்தறித் துணிகள் இன்னும் கூடுதலாக விற்பனை ஆகும். அதனால் ஏழை எளிய நெசவாளர்கள் வாழ்க்கை ஒளிபெறும் வாய்ப்பு ஏற்படும்.

நெசவாளர்களுக்கு வீடு கட்டும் நல்ல திட்டத்தை அரசு அறிவித்திருக்கிறது. வீடு கட்டுவதற்கு அரசு ஆயிரம் ரூபாய் மானியம் வழங்குவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதை சற்று உயர்த்திக் கொடுக்க வேண்டும். அரசு மானியத்தையாவது உயர்த்தி, சுமார் 2,000 ரூபாய் என்ற அளவுக்கு மானியத்தை உயர்த்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

நெசவாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் நல்ல திட்டத்தோடு, அரசின் முழு மானியத்தில் ஒவ்வொரு வீட்டுக்கும் ஒரு நெசவு மனையும் சேர்த்துக் கட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிக் கட்டிக் கொடுத்தால் நெசவாளர்களின் வாழ்வுக்கு, அவர்களுடைய, பொருளாதார வளர்ச்சிக்கு நல்ல உறுதுணை செய்ததாக இருக்கும். அது எல்லோராலும் வரவேற்கப்படும் ஒரு நல்ல திட்டமாக அமையும் என்பதை இந்த நேரத்தில் என்னுடைய ஆலோசனையாக அவைமுன் வைக்க விரும்புகிறேன்.

நெசவாளர்களுக்கு மூலப்பொருள் சப்ளை செய்வதில் சில இடையூறுகள் ஆங்காங்கே இருப்பதாகத் தெரிகின்றன. இந்தக் குறைபாடுகள் ஏற்படாமல், முறையாக குறிப்பிட்ட காலத்திலே அவர்களுக்கு வழங்க—சொசைட்டி மூலமாக வழங்கினாலும் சரி, அரசே விநியோகம் செய்வதாக இருந்தாலும் சரி—ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதிக்குப் பக்கத்தில் திருச்செந்தூர் கோவாப்பரேட்டிவ் ஸ்பின்னிங் மில்ஸ் என்ற ஒரு மில் நாசரேத்தில் இயங்கிக்கொண்டிருக்கிறது. இந்த மில்லை ஆரம்பிக்கும்போது இந்த நாசரேத் பகுதி திருச்செந்தூர் சட்ட மன்றத் தொகுதிக்கு உட்பட்டிருந்தது. தற்போது சாத்தான்குளம்





தொகுதிக்கு சென்று விட்டது. என்னுடைய தொகுதியில் குலசேகரப்பட்டினம் என்ற இடத்தில் அந்தப் பெயரைச் சொல்கிற அளவுக்காவது அந்த ஸ்பின்னிங் மில் கிளை ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது திருச்செந்தூர் ஸ்பின்னிங் மில்ஸ் என்று இருக்கிறதே தவிர என்னுடைய திருச்செந்தூர் தொகுதியில் அது இல்லை. அந்தப் பெயரைச் சொல்லத்தக்க அளவுக்கு அங்கே ஒரு கிளையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முன்னால் குலசேகரப்பட்டினம் நல்லதொரு துறைமுகமாக இருந்தது. இப்போது எந்தவிதமான வேலைவாய்ப்பும் இல்லாமல் அழிந்துபோகும் சூழ்நிலையில் இருக்கிறது. அந்த நகரத்தில் வாழ்கின்ற ஆயிரக்கணக்கான மக்கள் வேறு எந்தவிதமான தொழிலும் செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது. அவர்கள் நல்லமுறையில் வாழ அந்த மக்களுக்கு ஒரு ஸ்பின்னிங் மில் நிறுவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஸ்பின்னிங் மில்லில் வேலைவாய்ப்பு கொடுக்கும்போது நெசவாளர் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க தகுந்த ஆணை பிறப்பிக்க வேண்டும். 10,000 ரூபாய் பங்குத்தொகை கட்டினால் வருவதில் ஒருவருக்கு வேலை என்ற ஒரு குறிப்பு தற்போது இருப்பதாகச் சொல்கிறார்கள். இருந்தாலும் நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட சதவீதம் கூட்டுறவு ஸ்பின்னிங் மில்களில் ஒதுக்கீடு செய்ய வேண்டும். அப்படி இருந்தால்தான் நெசவாளர்கள் மேலும் நல்ல முறையில் வாழ முடியும். அவர்களுடைய பொருளாதாரம் வளர்ச்சி பெற முடியும். அவர்களுடைய பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு பாலம் கட்டுவதாக அமையும் என்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுக் தலைவர் அவர்கள் கதர் பற்றியும் சில வார்த்தைகள் சொல்ல வேண்டுமென்று கூறினார்கள். ஆனால் இப்போதே மணியாகிவிட்டது என்று குறிப்பு காட்டுகிறார்கள். கதரைப் பொறுத்தவரையில், தயவுசெய்து காங்கிரஸ்காரர்கள் கோபித்துக்கொள்ளக் கூடாது, காங்கிரஸ் நண்பர்களுடைய உடை என்பது மாறி, இப்போது அனைத்து தரப்பு மக்களும் அணிகின்ற

அளவுக்கு சூழ்நிலைகளை உருவாக்கியது எங்களுடைய இதய தெய்வம், பொன்மனச் செம்மல், புரட்சித் தலைவர் ஒருவர்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கதர் உற்பத்தி பெருகி, கதர் விற்பனையை நல்ல முறையில் உருவாக்கி, ஏழை எளிய மக்கள் பொருளாதாரம் முன்னேற்றம் அடைய, ஏழை எளிய மக்களுடைய பொருளாதாரம் சம்பந்தப்பட்டது இது என்ற அளவுக்கு நல்ல முறையில் விளம்பரங்கள் செய்து, சிறிய முறையில் அமைச்சர்கள் நிர்வாகம் செய்து, நல்ல முறையில் ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். இப்படி நல்ல பல திட்டங்களை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறது இந்த அரசு என்பதைத் தெரிவித்து, பேசுவதற்கு வாய்ப்பளித்த மாற்றுத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

***திரு. கு. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே பேரவையில் முன்மொழியப்பட்டிருக்கின்ற கைத்தறி மற்றும் பஞ்சாலை, கதர்த்தொழில் ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது நான் சார்ந்திருக்கின்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒருசில குறிப்பான விமர்சனங்களை மட்டும் வெளியிட விரும்புகிறேன்.

விவசாயத்திற்குப் பின்னர் அதிகமான வேலைவாய்ப்பு தரக்கூடியதென்றும், ஒரு பாரம்பரியம் உள்ள தொழில் என்றும் கொள்கைக் குறிப்பிலே பொருத்தமான பீடிகையோடு சொல்லப்பட்டிருக்கின்றது. அத்தகைய தொழில் இன்றைக்கு எந்த அளவுக்கு நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றது என்பதைப் பற்றியும் அக்கறையோடும், கவலையோடும் வெளியிட்டிருப்பது குறித்து உண்மையிலேயே நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்தக் கைத்தறித் துறை அவ்வளவு கலக்கம் அடைந்திருக்கின்றது, கவனிக்கப்படவேண்டிய துறை என்பது குறித்து, அரசு மிகுந்த அக்கறை கொண்டிருப்பது குறித்து என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அந்த அக்கறைக்கு உரியபடி அறிவிப்புகள் நடைமுறையில் காரியார்த்தமானதாக இல்லை என்பதைத்தான் வேதனையோடு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே குறிப்பாக இந்தத் துறையைப் பொறுத்தவரையில் இராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் கைத்தறிக்கு என்று குறிப்பிட்ட இரகங்களைக் கட்டாயமாக ஒதுக்கி





இருந்தார்கள். அவ்வாறு ஒதுக்கப்பட்டிருக்கின்ற ரகங்களை விசைத்தறியோ அல்லது மற்ற பஞ்சாலைகளோ தயாரிக்க முடியாதபடி தடையிட்டிருந்தார்கள். அதன்மூலம் கைத்தறித் துறை பாதுகாக்கப்பட்டது. ஆனால் தற்போது கைத்தறித் துறையில் தயாரிக்கப்படக்கூடிய பல்வேறு ரகங்களை பவர் லூம்களிலும், வேறு பல துறைகளிலும் தயாரிப்பதால் கைத்தறி நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றது. இதைத் தடுக்க என்ன வழி என்று ஒரு தெளிவான பாலிசி இந்தியாவில் இன்னும் தயாரிக்கப்படவில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

குறிப்பாக பவர் லூம் போட்டியின் காரணத்தால்தான் கைத்தறி பாதிக்கப்படுகின்றது என்று சொல்லப்படுகின்றது. அந்த பவர் லூம் இவ்வளவு வேகமாக வளர்ந்ததற்கு என்ன காரணம்? எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். உரிமம் பெற்ற பவர் லூம் தறிகளின் அளவுக்கு, உரிமம் பெறாமல் சட்டவிரோதமான முறையில் இயங்கிக்கொண்டிருக்கின்ற விசைத்தறி பற்றி எல்லாம் குறிப்பிட்டார்கள். இவ்வளவு வேகமாக விசைத்தறி வளர்வதற்குக் காரணமே பஞ்சாலை முதலாளிகள்தான். தொழிலாளி வர்க்கம் தொடர்ந்து போராடிப் பெற்றிருக்கின்ற சட்டரீதியான உரிமைகள் நடைமுறையில் கிடைக்காமல் தடுப்பதற்குரிய வகையில் காம்போசிட் ஃபேக்டரி யைச் சிதறடிக்கின்ற வகையில் ஆங்காங்கே பவர் லூம் ஃபேக்டரி களில் துணிகளைத் தயாரித்து மில் முத்திரை குத்தி எக்ஸ்போர்ட் செய்து விடுகிறார்கள். இதனைத் தடுக்க என்ன வழி? பஞ்சாலை முதலாளிகளினுடைய வரம்புக்கு மீறிய இலாப வேட்டைப் போட்டி காரணமாகத்தான் இவ்வளவு வேகமாக வளர்ந்திருக்கின்றது விசைத்தறி. அந்த விசைத்தறியைக் கட்டுப்படுத்துவதில் இந்த அரசு எவ்வளவு அக்கறை கொண்டிருக்கின்றது என்பதற்கு ஒரு மிகச் சிறந்த உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். சமீபத்திலே மத்திய அரசு ஒரு கொள்கையை அறிவித்திருக்கின்றது. புதிய ஜவுளிக் கொள்கை, பஞ்சாலை முதலாளிகள் கொள்ளை அடிக்க மிகத் தெளிவாக கதவுகளைத் திறந்து விடக்கூடிய கொள்கையை மத்திய அரசு அறிவித்திருக்கின்றது. இப்படி ஒரு ஜவுளிக் கொள்கை புதிய கொள்கை என்ற பெயரில் தேசத்தை சீரழிக்கக்கூடிய வாய்ப்பு பஞ்சாலை முதலாளிகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. இதுபற்றி இந்த அரசு என்ன

[திரு. கு. சுப்பராயன்] [1985 ஜூன் 18

கொள்கை விமர்சனம் வெளியிட்டிருக்கின்றது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இறுதியாகப் பேசுகின்றபோது இதுகுறித்து தெளிவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாடு அந்தரத்தில் இல்லை. தமிழ்நாடு இந்தியாவில் ஒரு பகுதிதான். எனவே மத்திய அரசு எடுக்கக்கூடிய கொள்கை காரணமாக தமிழ்நாடும் பாதிக்கப்படுகின்ற விஷயமாகும் இது. எனவே அவற்றுக்கு கொள்கை ரீதியான விமர்சனத்தை இந்த அரசு வெளியிட வேண்டும். அமைச்சர் அவர்கள் இறுதியாகப் பதிலளிக்கின்றபோது தெரிவிக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து சொல்கிறார்கள். விசைத்தறிகளை எல்லாம் முறைப் படுத்த வேண்டும் என்று. எப்படி முறைப்படுத்துவது? இந்தத் துறையில் இப்படி முறைப்படுத்த வேண்டும் என்று எந்த அறிவிப்பும் இங்கே அறிவிக்கப்படவில்லை என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

இந்தத் துறையில் மிக முக்கியமாக அரசு செய்யவேண்டிய ஒன்றைச் சொல்கிறேன். உள்நாட்டு மார்க்கெட்டை விஸ்தரிப்ப தோடு ஏற்றுமதிக்கு உரிய வாய்ப்பையும் அதிகப்படுத்தவேண்டும். மாநில அரசுக்கு டெல்லியில் சிறப்பு பிரதிநிதி இருக்கிறார்கள். ஆனால் டெல்லியிலே இருக்கின்ற சிறப்புப் பிரதிநிதி என்ன செய் கிறார் என்ற விஷயத்தின் உள்ளே போக நான் விரும்பவில்லை. டெல்லியில் சிறப்புப் பிரதிநிதி போடுவதைக் காட்டிலும் மிக முக்கியமான விஷயம் இந்தக் கைத்தறி ஏற்றுமதி வாய்ப்புக்களை அதிகப்படுத்துவது பற்றி ஆராயவும் பரிசீலிக்கவும் அதிகாரம் உள்ள குழு அமைக்கப்படவேண்டும். அது முக்கியத்துவம் வாய்ந்தது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு கோ-ஆப்டெக்ஸ் ரிபேட் தொகையையும் அதேபோல் கொள்முதல் செய்யப்பட்ட பாக்கித் தொகையையும் காலத்தில் வழங்குவ தில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் என்ன ஏற்படுகிறது தெரியுமா? தங்களுடைய நிலுவை பாக்கிகளைப் பெற்றுக்கொள்வதற்காக லஞ்ச ஊழல்களை நடைமுறையில் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்படுகின்றது.



1985 ஜூன் 18] [திரு. கு. சுப்பராயன்]

(பிற்பகல் 12-10)

ஆகவே, மாநில அரசு ஒரு குறிப்பிட்ட கால வரம்பிற்குள் அந்த நிலுவைத் தொகையை தந்துவிட வேண்டுமென்று கால வரம்பை நிர்ணயிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்வதோடு, கூட்டுறவு நூற்பு ஆலைகளில் உருவாக்கக்கூடிய நூல்களை கூட்டுறவுத் துறைக்கு மட்டுமே ஒதுக்க அரசாங்கம் உறுதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் இன்றைய தொழில் நுட்பத் துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து, நுட்பங்கள் அதிகப்பட்டு வருகிற இந்தக் காலத்தில், இன்றைய தேவைகளை ஈடு செய்வதற்குரியபடி பழைய கைத்தறியில் நுட்ப ஆற்றலை அதிகரிப்பதற்குரிய கடன் வசதியை இந்த மாநில அரசு வழங்குவதோடு நுட்பப் பயிற்சிகளையும் நெசவாளர்களுக்கு வழங்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்த முக்கியமான விஷயமாக கைத்தறித் துறையில் ஆங்காங்கே டெப்போக்களை வைத்து விற்பனை செய்கிறார்கள். குறிப்பாக பொருட்காட்சிகளிலே அப்படி விற்பனை செய்கிறார்கள். அந்தப் பொருட்காட்சிகளில் ஒரு கடைக்கு என்ன வாடகைக் கொடுக்கிறார்கள் என்று சொன்னால், மயங்கி விழுந்து விட வேண்டும். கைத்தறிக்கு தள்ளுபடி சலுகையை கொடுத்து விட்டு—அதை இந்தக் கையிலே கொடுத்து அந்தக் கையிலே தட்டிப் பறிப்பதைப்போல—பொருட்காட்சிகளிலே கடை போடு வதற்கு இவ்வளவு அதிகமான வாடகை வசூலிக்கக்கூடாது. ஆகவே, கைத்தறித் துறைக்கு பொருட்காட்சிகளில் வாடகை இல்லை என்பதை நடைமுறையில் கொண்டுவர வேண்டும் என்பதையும் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்து இதில் கூலித் தொழிலாளர்களுக்கு இருக்கக்கூடிய பாதுகாப்புச் சட்டங்களைப் பற்றி எனக்கு முன்னதாக பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். பொதுவாக இந்த மாநில அரசின் நடைமுறையே அறிவிக்கப் படுகிற சட்டங்கள் அமல் ஆகாது. அல்லது அமல் ஆகாத சட்டங் களை அறிவிப்பது. இதுதான் இந்த மாநில அரசினுடைய கொள்கை. ஆனால் ஊருக்கு மட்டும் சொல்கிறீர்கள். நாங்கள் இப்படி எல்லாம் சட்டங்களைப் போட்டிருக்கிறோம் என்று.

இந்த அரசு ஒரு மாடல் எம்பிளாயர் இல்லையா? அரசு என்பது ஒரு முன் உதாரணமான முதலாளியாக இருக்க வேண்டாமா? ஆனால் அரசே தான் அறிவிக்கின்ற சட்டங்களை தன்னுடைய துறைக்கே அமல் ஆக்காது என்றால் அதைக் காட்டிலும ஒரு கேலிக் கூத்து உண்டா? கூட்டுறவுத் துறையில் இருக்கக்கூடிய அந்தத் தொழிலாளர்களுக்கு இந்தச் சட்டத்தினுடைய அனுகூலங்கள் அமல் ஆக்கப்பட வேண்டும். அதற்குரிய நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு கூலிச் சட்டம். நெசவாளர் பாதுகாப்புச் சட்டம் போன்றவை எல்லாம் கறார்படுத்தப்பட வேண்டும்.

அடுத்து அரசியல் உள்நோக்கம் இதில் அதிகமாக தென்பட்டுக் கொண்டிருக்கிறது. நமக்கு விருப்பம் இல்லாத நபர்களாக இருந்தால் போர்டுகளை கலைப்பது. வேண்டியவர்களைக் கொண்டு போர்டுகளை நியமிப்பது, அல்லது தனி அதிகாரிகளைப் போடுவது. தனி அதிகாரிகள் என்றால் ஆளும் கட்சிக்கு எதிராக நிற்க முடியாது அல்லவா? ஆகவே தனி அதிகாரி களுடைய விருப்பத்திற்கு வழி கோலுவது என்ற போக்குகளை தயவுசெய்து கைவிட வேண்டும். அரசியல் மாச்சரியங்களின் காரணமாக போர்டுகளைக் கலைப்பதை நடைமுறையில் அனுமதிக்கக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு, கூட்டுறவுச் சங்கங்களுக்கு காலத்தில் முறையாக தேர்தல் நடத்த வேண்டும். ரிபேட் காலத்தை 60 நாட்களுக்கு என்பதைக் காட்டிலும் 120 நாட்கள் என்று உயர்த்த வேண்டும்.

அடுத்து இன்றைக்கு இருக்கக்கூடிய இந்தக் கைத்தறித் துறையில் மதுரையிலே செல்லூரிலே ஒரு போராட்டம் நடந்தது. அந்தத் தொழிலாளர்கள் தங்களுடைய கூலிக்காக போராடினார்கள். அந்தப் போராட்டத்திலே 144 தொழிலாளிகள் இன்றைக்கு வரையிலும் வழக்கிலே சிக்க வைக்கப் பட்டிருக்கிறார்கள். எனவே அந்தக் கைத்தறித் தொழிலாளர்கள் மீது அளவற்ற கருணை கொண்டதாகச் சொல்லுகிற இந்த அரசு, அவர்கள் மீது இந்த மாதிரி இருக்கக்கூடிய வழக்குகளை வாபஸ் பெறுவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று



தெரிவித்துக் கொள்வதோடு, கதர்த் துறையைப் பற்றி ஒரு வார்த்தை மட்டும் சொல்லி முடித்துக் கொள்ளலாம் என்று கருதுகிறேன். (மணியடிக்கப் பெற்றது.)

கதர்த் துறையில் பகிரங்கமாக ஊழல் புரையோடிக் கிடக்கிறது, கிராமப்புறங்களில். அந்தக் கதர்த் துறையில் இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு, அதுவும் அண்ணல் காந்தியடிகளின் உணர்வுகளை கௌரவிக்க நடத்தப்பட்டு வருகிற அந்தத் துறையில், அவர்களுடைய வியர்வை காய்வதற்குள் அவர்களுக்குரிய பங்கு செலுத்தப்பட வேண்டும் என்ற மிக முக்கியமான கருத்துக்களை எல்லாம் தந்திருக்கிற அதே துறையில் தான் ஊழியர்களுக்கு போதுமான நியாயச் சம்பளம் வழங்கப் படுவதில்லை.

தயவுசெய்து நான் கதர்த் துறையைக் கேட்டுக் கொள்கிறேன், அந்தத் தொழிலாளர்களின் நியாயமான உணர்வுகள் பரிசீலிக்கப் பட வேண்டும். நம்முடைய தேவைகளுக்காக மட்டும் மக்களின் கழுத்திலே கை வைத்து நெருக்கியாவது வசூலிப்பது என்பது, மட்டும் சரியான பாலிசி அல்ல. மக்களின் தேவைகளை உணர்ந்து, அந்தத் தேவைகளை மக்கள் ஈடேற்றிக் கொள்வதற் குரிய வலிமையை இந்த அரசு தரவேண்டும். அந்த வகையில் இந்தத் துறையில் கதர் தொழிலாளர்களுக்கு உரிய நியாயமான சம்பளத்தையும், வேலை நிலைமைகளையும் நிர்ணயிக்க வேண்டும் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. சே. பாலாஜி: பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, கைத்தறி, பஞ்சாலை மற்றும் கதர்த் துறை மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்குக் கைத்தறித் துறையில் பல்வேறு சாதனைகளை எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் தமிழகத்தில் உருவாக்கிக் கொண்டு வருகிறார்கள். அதிலே பல உதாரணங்களை என்னால் எடுத்துச் சொல்ல முடியும். இங்கே பேசிய பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த நண்பர்கள் எல்லாம் இங்கே சில கருத்துக்களை வரவேற்றும், ஒருசில கருத்துக்களை

[திரு. கே. பாலாஜி] [1985 ஜூன் 18

தங்கள் கருத்துக்களுக்கு மாறுப்பட்டவைகளாகவும் எடுத்து வைத்தார்கள். நெசவாளர்கள் என்று சொன்னாலே, எப்படி சிக்கு விழுந்த நூலை பொறுமையோடு பிரிக்க வேண்டுமோ, அந்த அளவிற்கு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், விவசாயத்திற்கு அடுத்தபடியாக இருக்கிற நெசவுத் தொழிலாளர்களின் பிரச்னைகளைப் பொறுத்தவரையில் தனியாக கவனம் செலுத்த வேண்டுமென்ற உணர்வோடு 1977-ம் ஆண்டில் இந்தத் துறைக்கு ஒரு தனி அமைச்சரை நியமித்தார்கள். இன்றைக்கு இதற்கு தனியாக ஒரு துறையை உருவாக்கி, தனியாக ஒரு செயலாளரைப் போட்டு நெசவாளர்களுடைய பிரச்னைகளைப் போக்குகிற பல்வேறு திட்டங்களை தமிழகத்தில் உருவாக்கிக் கொண்டு வருகிறார்கள். அதிலும் இன்றைக்கு நெசவாளர்களின் குறைந்தபட்சக் கூலியை புரட்சித் தலைவர் அவர்கள் நிர்ணயம் செய்திருக்கிறார்கள். அந்தக் கூலி நிர்ணயத்தை தனிப்பட்ட முதலாளிகளிடத்தில் நெய்கிற அந்த நெசவாளர்களும் பெறுகிற நிலைமைகளை நம்முடைய கைத்தறி அமைச்சர் அவர்கள் சட்டத்தின் மூலமாகவோ, அல்லது பேச்சுவார்த்தைகள் மூலமாகவோ செய்து தரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு மத்திய அரசு சமீபத்தில் அறிவித்துள்ள புதிய ஜவுளிக் கொள்கையின்படி கண்ட்ரோல் துணி உற்பத்தி முழுவதையும் கைத்தறிக்கு ஒதுக்கியதன் மூலமாக கைத்தறிக்கு ஒரு நல்ல பிரகாசமான எதிர்காலத்தை உருவாக்கியுள்ளது. இந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு நெசவாளர்கள் கண்ட்ரோல் துணிகளை தாமாக நெய்வதோடு மக்கள் விரும்பும் வண்ணங்களில், மக்கள் விரும்புகிற நவீன ரகங்களை உருவாக்க வேண்டும். நாம் பல்வேறு மாவட்டங்களில் டிசைன் செண்டர் என்று வைத்திருக்கிறோம். அந்த டிசைன் செண்டர்களில் மக்கள் விரும்புகிற டிசைன்கள், வண்ணங்கள் உருவாக்கப்படவில்லை என்பது தான் என்னுடைய நீண்ட நாளைய குறைபாடாகும். காரணம் மேல் நாடுகளில் ஆறு மாதங்களுக்குப் பின்னால் எந்த வண்ணங்களை, எந்த டிசைன்களை மக்கள் விரும்புவார்கள் என்பதை அங்கே இருக்கிற வல்லுநர்களை வைத்து அதனை உற்பத்தி செய்து ஆறு மாதம்



1985 ஜூன் 18] [திரு. கே. பாலாஜி]

கழிந்ததற்குப் பிறகு மக்கள் ஏற்றுக் கொள்கிற வகையில் அங்கே நிலைமைகளை உருவாக்குகிறார்கள். அதேபோல நாம் தமிழகத்தில் செய்வோமானால் மில் துணிகளோடு போட்டிப் போடுகிற நிலைமையை ஏற்படுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல தறிகளை நவீனப்படுத்த அரசு வழங்கும் மானியம் மற்றும் கடன்களை, வர்த்தக வங்கிகள் வழங்கும் கடன்களை நெசவாளர்கள் முழுமையாக பயன்படுத்திக்கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். அதேபோல நெசவாளர்களுக்கு நூல் நியாயமான விலையில் தரமாகக் கிடைக்கக் கூட்டுறவு நூற்பாலைகள் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இதைக் கூறுவதற்கு காரணம் நாம் குறைந்த விலையில் நூலை உற்பத்தி செய்தாலும் கூட நம்முடைய நிர்வாகச் செலவின் காரணமாக அங்கே நூல் விலை உயர்ந்து விடுகிறது. நம்முடைய அமைச்சர் அவர்கள் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு முயற்சிகளை மேற் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆலையில் நூலின் உற்பத்திச் செலவை குறைப்பதற்கு இது வழிசெய்யுமென்று கருதுகிறேன். நூற்பாலைகள் தரமான பஞ்சை கொள்முதல் செய்வதன் மூலமாக தரமான நூல் கிடைக்க வழிவகை செய்யும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் கொள்முதல் செய்யும் பருத்தி, பட்டு ரகங்களுக்கு தற்போது நான்கு முதல் ஆறு மாதங்கள் வரையில் காத்திருந்து பணம் பெறவேண்டிய நிலை இருக்கிறது. இதை எதிர்க்கட்சியில் இருப்பவர்களும் சொல்கிறார்கள். ஆளும் கட்சியிலே இருக்கிற நானும் சொல்கிறேன் என்றால் நான் ஒரு பட்டு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக இருக்கிறேன். வளர்ந்த சங்கங்கள் கோ-ஆப்டெக்சிற்கு தாங்கள் உற்பத்தி செய்கிற பொருள்களைக் கொடுப்பதில்லை. அப்படியே கொடுத்தாலும் உடனடியாக அவர்கள் பணத்தைப் பெற்றுக்கொள்கிற நிலைமை இருக்கிறது.

(பிற்பகல் 12-20)

ஆனால் எங்கள் சங்கங்களைப் போல உள்ள வளர்கின்ற அந்தச் சிறிய சங்கங்களில் உள்ளவர்கள் எல்லாம், கடனிலே தான் நாங்கள் கோட்டாவைப் பெறுகிறோம், கடனிலேதான்

நூலைப் பெறுகிறோம். கடனிலேதான் சரிகையைப் பெறுகிறோம். அப்படிப் பெறுகின்ற நேரத்தில் நாங்கள் வட்டியைக் கொடுக்கிறோம். ஆனால் 6 மாத காலம், 8 மாத காலம் கழித்து அந்தத் தலைமைச் சங்கங்களால் திருப்பிச் செலுத்தப்படுகின்ற நேரத்தில் எங்களுக்கு வட்டியைக் கொடுப்பதில்லை. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து இந்த நிலைமைகளைப் போக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு காஞ்சிபுரத்தை எடுத்துக் கொண்டால் 16 பட்டு கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. அதிலே 7 சங்கங்கள் தொடர்ந்து நஷ்டத்திலே வேலை செய்து வருகின்றன. இதற்கான முக்கியக் காரணம் அந்தச் சங்கங்களில் — நான் ஏற்கனவே சொன்னதைப் போல — அந்தக் கச்சாப் பொருட்களை வாங்குகின்ற நிலைமைகளைப்பற்றி உதாரணமாகச் சொல்லவேண்டும் என்றால், நம்முடைய டான் பெட் என்கிற தமிழ்நாடு பெடரேசன், அதைப்போல கர்நாடகா பெடரேசன், அதைப்போல கர்நாடகா மார்க்கெட்டிங் சொசைட்டி என்று இப்படிப்பட்ட சங்கங்களில் நாம் பொருட்களை எடுக்கின்ற நேரத்திலே அவர்கள் போடுகின்ற வட்டியினால், அதைத் திருப்பிச் செலுத்த முடியாத ஒரு நிலைமையில் இந்த 7 சங்கங்கள் இருக்கின்றன. அதைப்போலவே வட ஆர்க்காடு மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், பல பட்டு கூட்டுறவுச் சங்கங்கள் அப்படிப் பட்ட நிலைமையில் இருக்கின்றன. எனவே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைத் தீர்ப்பதற்கு வழிவகை செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுமல்லாமல், தனியார்களிடமும் தறி நெய்யும் நெசவாளர்கள் இருக்கிறார்கள். அவர்களும், அரசாங்கம் வழங்கும் சலுகைகளைப் பெறவும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் தலைமையில் இயங்கும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். நான் ஏற்கனவே சொன்னதைப் போல, குறைந்தபட்சக் கூலியை இந்த நெசவாளர்களும் பெறுவதற்கு நாம் வழிவகை கண்டாக வேண்டும். அதைப் போலவே இன்றைக்கு கைத்தறித் துணியை ஏற்றுமதி செய்கின்ற நிலைமை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு மட்டுமே அளிக்கப்





படுகிறது. இந்த நிலையை மாற்றி, பெரும் அளவில் தரமான பருத்தி, மற்றும் பட்டு ரகங்களை உற்பத்தி செய்யும் பிரைமரி சங்கங்கள் ஏற்றுமதித்துறையில் நேரடியாக கலந்துகொள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழிவகை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பட்டு உற்பத்தியில் ஈடுபட்டு உள்ள சிறு முதலாளிகள் தங்கள் உற்பத்தியை கூட்டுறவு முறையில் விற்பனை செய்ய தற்போது முக்கிய சங்கங்கள் இருப்பதைப்போல நூல் ரகங்களையும் விற்பனை செய்ய தமிழ்நாட்டில் முக்கிய இடங்களில் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தினால், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தை மட்டுமே நம்பி உள்ள சிறுசிறு சங்கங்கள் இந்த மார்க்கெட்டிங் சங்கங்கள் மூலமாக தங்கள் உற்பத்தியை விரைவில் விற்று பண மாக்க வழிவகை ஏற்படும், அதனால் கோ-ஆப்டெக்சுக்கும் சுமை குறைய வழிஉண்டு என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப்பட்டது).

அதுமட்டுமல்லாமல், தற்போது நெசவாளர்களுக்காக செயல் பட்டு வரும் சேமிப்பு மற்றும் விடு கட்டும் திட்டத்தின்கீழ் நெசவாளர்களிடமிருந்து சந்தாவாக வசூலிக்கப்படும் 6 சதவீதத் திற்குப் பதிலாக அவர்கள் கூலியிலிருந்து 10 சதவீதம் பிடித்தம் செய்து, அதே அளவுத் தொகையை அரசாங்கம் மானியமாக வழங்கினால், நெசவாளர்களின் இறுதிக் காலத்தில் ஒரு கணிச மான தொகை அவர்களுக்குக் கிடைக்க வழி ஏற்படும். ஏன் இதை நான் கூறுகிறேன் என்றால், நடைபெற்று முடிந்த இந்த கைத்தறி வார விழாவில் அங்கே பங்கேற்ற பல்வேறு நெசவாளர் சங்கங்களுடைய தலைவர்கள் இந்தக் கருத்தைத்தான் எடுத்து வைத்தார்கள். எனவே இதை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மேலும் இந்தத் திட்டத்தில் சேர்ந்துள்ள நெசவாளர்கள் காலமாகிவிட்டால் தற்போது வழங்கப்படும் தொகையான 3 ஆயிரத்திற்குப் பதிலாக 10 ஆயிரம் ரூபாயாக வழங்க வேண்டும் என்றும், தாய் உள்ளம் கொண்ட புரட்சித் தலைவர் அவர்கள் ஆவன செய்யவேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள் வதற்கு கிறேன். கடலில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள் கடலிலே ஏற்படுகின்ற விபத்தின் காரணமாக மரணம் அடைந்தால் ரூபாய்

10 ஆயிரம் வழங்குவதை நான் இங்கே உதாரணமாகச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். காஞ்சிபுரத்திலேதான் மிகவும் நாம் வாய்ந்த ஜரிகைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. நம்முடைய இதயத்திலே தெய்வமாக வாழ்ந்துகொண்டு இருக்கிற பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த காஞ்சிபுரத்திலேதான் இன்றைக்கு ஏராளமான நெசவாளர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்குத் தேவையான சரிகையை நாம் இப்போது சூரத்திலிருந்து எதிர்பார்க்கிறோம். எனவே அவர்களுடைய தேவையை நாம் முழுமையாகப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் அவர்களின் தேவைகளை நிறைவேற்றித்தர வேண்டும். ஆண்டு ஒன்றுக்கு கிட்டத்தட்ட 90 ஆயிரம் மார்க்குகளை நாம் உற்பத்தி செய்யவேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கனவு கண்டார்கள்.

ஆனால் இன்றைக்கு அங்கே ஆயிரமாக இருந்ததை 500 ஆக குறைத்து இன்றைக்கு மேலும் ஆயிரம் மார்க் உற்பத்தி செய்வதற்கு முயற்சி செய்கிறோம் என்று இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆகவே, பேரறிஞர் அண்ணாவின் கனவை நனவு ஆக்குகின்ற இந்த அரசு அந்த சரிகை தொழிற்சாலையை விரிவு செய்து அதிலே வெள்ளி கம்பியை இழைக்கின்ற நிலையை நாம் உருவாக்க வேண்டும். வெள்ளிக் கம்பியை சூரத்தில் இருந்து பெறுகிறோம். அதற்கு இங்கே முலாம்தான் பூசுகிறோம். ஆகவே அதை செய்ய வேண்டும். அப்படி முடியவில்லை என்று சொன்னால் நஷ்டத்தை தவிர்க்க அந்த யூனிட்டை தனியாருக்கு நீண்ட கால அடிப்படையில் உற்பத்தி விலையில் இத்தனை சதவீதம் தான் நீங்கள் லாபம் வைத்து விற்கவேண்டும் என்கின்ற முறையில் அவர்களுக்குக் கொடுக்கலாம். அதைப் போல நெசவாளர்களுக்கு வீடு கொடுக்கின்ற திட்டம். அதிலே ஏ.பி.சி. என்று இருக்கிறது. நாம் நெசவாளர்களை பெரிய சங்கத்தில் இருப்பவர்களைத்தான் நெசவாளர்கள் என்றும் சிறிய சங்கத்தில் இருப்பவர்கள் நெசவாளர்கள் அல்ல என்ற கண்ணோட்டத்தோடு பார்க்காமல் அவர்களுக்கு நாம் இப்போது 12 ஆயிரம் ரூபாய் தருகிறோம். அதிலே ஆயிரம் ரூபாய் மானியம் என்றும், ஆயிரத்து சொச்சம் ரூபாயை நெசவாளர்கள் கட்டவேண்டும் என்றும், மீதம் உள்ள 9 ஆயிரத்து சொச்சம் ரூபாய் அங்கே கடனில் கொடுக்க வேண்டும் என்ற நிலையை நாம்





தயவுசெய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஒரு நெசவாளர் குறைந்தது 2 தறிகளை வைக்கும் அளவுக்கு அவர்களுக்கு இடம் வேண்டும். ஆகவே அந்த கூடத்தோடு ஒரு இல்லத்தையும் கட்டுவதற்கு கிட்டத்தட்ட 20 ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும். அதிலே 2 ஆயிரம் ரூபாய் அரசு மானியமாக வழங்கவேண்டும் என்பதையும் இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டும் அல்லாமல் பல்வேறு கோரிக்கையை நான் எடுத்து சொல்ல வேண்டும் என்று இருந்தும் ஒன்றை மட்டும் கூறி முடிக்கலாம் என்று இருக்கிறேன். விசை தறி பற்றி இங்கே பேசி ஆகவேண்டும். எங்களுக்குக் கொடுத்த அறிக்கையில் லட்சம் விசைத்தறிகள் என்று சொன்னால் அதிலே லட்சம் விசை ..றிகளும் அனுமதி பெறாமல் இருப்பதாகச் சொல்கிறார்கள். நான் இல விசைத் தறிக்காரர்களைக் கேட்டேன், அவர்கள் சொல்கி றார்கள் நாங்கள் அனுமதி பெறவில்லை, 2 ஆண்டு காலம், 3 ஆண்டு காலம் அதிகாரிகள் வருவார்கள், அவர்கள் எங்களுக்குத் தண்டத் தீர்வை போடுவார்கள், 4 ஆண்டுகளில் எங்களுக்கு அனுமதி வழங்கிவிடுவார்கள். ஆகவேதான் நாங்கள் போடுகிறோம் என்று அவர்கள் சொன்னார்கள். அந்த ஊக்கத்தை நாம் தடுத்து ஆக வேண்டும். இங்கே நம்முடைய இந்திய மார்க்கிஸ்டு கட்சியை சார்ந்த நண்பர் பேசியதைப்போல் அதை எல்லாம் நாம் பறிமுதல் செய்யவேண்டும் என்பதை இந்த நேரத்தில் நான் பணிவன்போடு கூறிக்கொள்கிறேன்.

அடுத்து கதர் வாரியத்தைப்பற்றி ஒரே ஒரு கருத்தைக் கூறி நான் விடைபெறலாம் என்று இருக்கிறேன். இன்றைக்கு பனைப் பொருட்களை பயன்படுத்தி தேவையான இடங்களில் பனைப் பொருட்கள் தயாரிக்கும் மையங்களை அமைத்து அதை மக்கள் விரும்பி வாங்கி பயன்படுத்தத் தக்க வகையில் விரிவு படுத்த ஊக்குவிக்க வேண்டும். இதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும என்று கேட்டுக் கொள்கிறேன். அது மட்டும் அல்லாமல், கிராமிய நூற்பாலைகள் இன்னும் அதிகமான அளவில் அதாவது பஞ்சாயத்துக்கு ஒரு மையம் என்ற அடிப்படையில் ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் கிராமத்தில் உள்ள பெண்களுக்கு நம்முடைய தமிழக

[திரு. கே. பாலாஜி] [1985 ஜூன் 18

முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் எண்ணுகின்ற அந்த எண்ணம் நிறைவு பெறும் என்பதையும் நான் கூறிக்கொண்டு தஞ்சை மாவட்டம் சுந்தர கோட்டையில் பனைப்பொருள் கேந்திரம் 34 லட்ச ரூபாய் செலவில் ஏற்படுத்த திட்டம் போடப் பட்டுள்ளது. அங்கே நிலத்தை கூட கையகப்படுத்தியிருக் கிறார்கள். ஆனால் ஏன் அந்தத் திட்டம் காலதாமதம் ஆகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை கவனித்து உடனடியாக அடுத்து வர இருக்கின்ற அந்த மானிய கோரிக்கைக்குள் அதை நிறைவு செய்து தரவேண்டும் என்று கேட்டு எனக்கு வாய்ப்பு அளித்த மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, கைத்தறி துறை, கதர் துறை மானிய கோரிக்கைகள் மீது பேச அனுமதி அளித்ததற்கு முதலில் நன்றி தெரிவித்துக்கொண்டு ஜனதா கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற கைத்தறி நெசவாளர்கள் ஒரு வேளை, இரண்டு வேளை கூட. சாப்பிட முடியாத சூழ்நிலையில் கஷ்டப் பட்டுக்கொண்டு இருப்பதை நான் முதலில் இந்த அரசுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய கோரிக்கை எல்லாம் தேங்கிக் கிடக்கின்ற கைத்தறி துணிகளை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் கொள்முதல் செய்யவில்லை என்ற புகார் பரவலாக தமிழ்நாடு முழுவதும் இருந்துகொண்டிருக்கின்றது. அமைச்ச ரவர்கள் கவனம் செலுத்தி, கோ-ஆப்டெக்ஸ் வழக்கம்போல் கொள்முதல் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 12-30)

நீண்ட நாட்களாக, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் சுந்தர பாண்டியத்தில் கைத்தறி மையம் அமைக்கச் சொல்லி, அங்கே உள்ள நெசவாளிப் பெருமக்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதை அமைச்சர் அவர்கள் பரிவோடு கவனித்து, கைத்தறி மையத்தை அமைத்து நெசவாளப் பெருமக்களுக்கு வாழ்வு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1985 ஜூன் 18] [திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்]

நான் இந்த அரசுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, நாட்டிலுள்ள கைத்தறியாளர்களுடைய சிரமங்களை மிக விளக்க மாகச் சொல்ல வேண்டுமானால், முதலாவதாக, சேலம் அம்மாப் பேட்டையிலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்: அது இந்தியாவிலேயே மிகப் பெரிய சங்கம் என்று அவர்கள் அறிக்கை யிலேயே இருக்கிறது. இந்தச் சங்கமானது, சென்ற 20—5—1985 தேதியன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு ஊர்வலமாகச் சென்று மகஜர் கொடுத்தார்கள். அதைப் போல், சென்ற 12-6—1985 அன்று உண்ணாவிரதம் இருந்தார்கள். அவர்கள் பல கோரிக்கைகள் வைத்திருக்கிறார்கள். 11 வருஷங் களாக இந்தச் சங்கத்திற்கு நிர்வாகிகள் தேர்வு நடைபெற வில்லை. அதே போல், 25 சதவிகிதம் கூலி உயர்வு வேண்டும். காலகாலத்தில் நூல் கொடுக்கப்படவில்லை. ஒரு மாதத்திற்கு ஒரு தடவைதான் நூல் கொடுக்கிறார்கள் என்று புகார் இருக் கிறது. இன்னும் பல புகார்கள், அங்கே முறைகேடுகள் நடப்ப தாக அறிக்கையிலே கொடுத்து இருக்கிறார்கள். அதையெல்லாம் முறையாகக் கவனித்து அமைச்சரவர்கள் வேண்டிய நடவடிக் கைகள் எடுக்கவேண்டும். அதேபோல், ராஜபாளையம் தொகுதி யிலே உள்ள சத்திரப்பட்டியிலே இருந்து புகார் ஒன்று வந்திருக் கிறது. அங்கே நூல் கொடுக்கும்போது இரண்டு சிட்டம் குறை வாக கொடுப்பதாகவும், அதிலேயே அவர்கள் செய்து கொடுக்க வேண்டும் என்று நிர்வாகிகள் கெடுபிடி செய்வதாகச் சொல்கி றார்கள். அதைக் கவனித்து, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விருதுநகரிலே 42 ஆண்டு காலமாக, ஒரு சங்கம் இயங்கி வருகிறது. அந்தச் சங்கமானது, மிக நல்ல முறையிலே இயங்கிக் கொண்டிருந்தது. இப்போது கொஞ்சகாலமாக மிகவும் பின் தங்கிய நிலையில் அச்சங்கம் இருக்கிறது. அதற்குக் காரணம் நிர்வாகிகள்தான் என்று சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவரும் ஆண்களும் பெண்களும் என்னுடைய அலுவலகத்திற்கு நூற்றுக்கணக்கிலே வந்து, அவர்களை நான் அழைத்துச் சென்று, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு கொடுத்திருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக சொல்லி இருக்கிறார். அமைச்சர் அவர்களிடமும் அந்த மனுவைக் கொடுக்க இருக்கிறேன்: அவர்கள்

பல கோரிக்கைகளைக் கொடுத்து இருக்கிறார்கள். அதிலே சொல்லியிருப்பது, ஊழல், துணிகளை விற்கும்போது, நிர்வாகிகள் போலி பில் போட்டு விற்பதாக சொல்லி இருக்கிறார்கள். அந்த போலி பில்-லின் ஜெராக்ஸ் காப்பி கொடுத்து இருக்கிறார்கள். திண்டுக்கல்லிலே கண்காட்சி நடத்தும்போது அவர்கள் சேலை ஒன்றுக்கு 2 ரூபாய் 40 பைசா கூடுதலாக வைத்து விற்று, போலி பில் போட்டு பின்னால் ஒரிஜினல் பில்-லைப் போட்டு கணக்கு வைத்திருப்பதாக புகார் வந்திருக்கிறது. இதில் நிர்வாகிகள் அரசினுடைய ஆதரவோடு செயல்படுகிறார்களா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. இப்போது இருக்கிற சூழ்நிலையினைப் பார்க்கும் போது, உதாரணத்திற்கு ஒன்று சொல்ல வேண்டுமானால், விருதுநகரிலே அகில இந்திய 31-வது கண்காட்சியின் அழைப்பிதழ், அதிலே காமராஜர் மாவட்டத்திலே நடைபெறுகிறது அந்த விழா. தலைநகர் விருதுநகர். ஆனால் அதிலே அழைப்பிதழைப் பார்க்கும்போது, வேறு மாவட்டத்திலே உள்ள சட்டமன்ற உறுப்பினர்களை எல்லாம் போட்டு, அதன் பிறகு விருதுநகர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சுந்தரராஜன் பெயரைப் போட்டு, அதற்கு அடுத்தபடியாக விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் பெயரைப் போட்டு இருக்கிறார்கள். இது பாரபட்சமான முறை என்றாலும் அதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை என்றாலும் கூட அதைப் பார்த்தவர்கள் இந்த அரசைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்று கேட்க விரும்புகிறேன். முறையாக அழைப்பிதழ்கள் அச்சிடப்பட வேண்டும் என்று மரபு இருக்கிறது என்று நினைக்கிறேன். அதற்கு ஏதும் சட்டம் இருக்கிறதா என்று தெரியவில்லை. சாத்தூரிலே அரசு விழா. அதிலே மாண்புமிகு அமைச்சர் ப.உ.ச. அவர்களும், மாண்புமிகு அமைச்சர் சாத்தூர் இராமச்சந்திரன் அவர்களும் கலந்து கொண்டு இருக்கிறார்கள். அந்த அழைப்பிதழிலேயும் அப்படித்தான் இருக்கிறது. அதிலேயும் 3 எம்.எல்.ஏ.க்கள் பெயர்களைத் தான் போட்டு இருக்கிறார்கள். ஸ்ரீவில்லிபுத்தூர் எம்.எல்.ஏ. தாமரைக்கனி * * பெயர் போடவில்லை. விருதுநகர் ஆறுமுகம் * * பெயர் போடவில்லை. ராஜபாளையம் எம்.எல்.ஏ. ராமன் பெயர் போடவில்லை.

* * மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வே. இரா. ஜெயராமன்) :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, தாங்கள் இதுபற்றி ஸ்பீக்கரிடம் எழுதிக் கொடுங்கள். இப்போது கைத்தறித் துறை மானியத்தின் மீது மட்டும் பேசுங்கள்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** இந்த மாவட்டத்திலே பரவலாக அரசு * * புறக்கணிக்கிற, அவமதிக்கிற நிலை இருக்கிறது. ** சேர்ந்து அந்த நிலை இருக்கிறது என்று அரசின் கவனத்திற்குத் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே இப்படிப்பட்ட சம்பந்தம் இல்லாத குற்றச்சாட்டைக் கூறி, ஜாதி வெறியைத் தூண்டிவிடக்கூடிய வகையிலே சொல்லியிருப்பது அவைக் குறிப்பிலே இருக்க வேண்டுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வே. இரா. ஜெயராமன்) :** மாண்புமிகு உறுப்பினர்கள் பெயர்களோடு ஜாதியையும் இணைத்துச் சொன்னதில், ஜாதியைக் குறிப்பிட்டுச் சொன்னதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** அரசு விழாவிலே, அங்கேயிருக்கின்ற 6 சட்டசபை உறுப்பினர்களில் மூன்று உறுப்பினர்களின் பெயர்களை மட்டும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வே. இரா. ஜெயராமன்):** அதைப்பற்றி நீங்கள் சபாநாயகரவர்களிடத்தில் தனியாக எழுதிக் கொடுங்கள். இப்பொழுது இந்தத் துறை மானியத்தின் மீது பேசுங்கள்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** மாண்புமிகு முதல்வரவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் திரு. ப. உ. ச. அவர்களுக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, * * * என்ற வார்த்தையை எடுப்பதற்கு நான் சம்மதிக்கிறேன். ஆனால், பெயர்களைப் போடவில்லை என்ற வார்த்தை இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தினமணி, இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகைகளில் செய்தியாக வெளிவந்திருக்கிறது என்பதை மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்] [1985 ஜூன் 18

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

இந்தக் கைத்தறி மானியத்தில் பேசுகின்றபொழுது மேலும் நான் சொல்ல விரும்புவது, அனைத்து கைத்தறி நிர்வாகிகளையும்—சங்க நிர்வாகிகளையும் முறையாகத் தேர்ந்தெடுப்பதற்கு ஏற்பாடு செய்யும்படி அமைச்சர் அவர்களையும், அரசையும் கேட்டுக்கொள்கிறேன்.

கதர் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். அது சீக்கிரம் கிழிந்து விடுகிறது என்பது உண்மை. அது நீண்ட காலம் உழைக்கும் முறையில் நூல் உற்பத்தி செய்வதற்கு அமைச்சரவர்களும், அந்த இலாக்காவும் மேலும் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கதர்த் துணிகளைச் சுதந்திரப் போராட்ட வீரர்களும், காந்திய வாதிகளும் அணிகின்றார்கள். கதர்த் துணியின் விலை கைத்தறித் துணியின் விலையை விடக் கூடுதலாக இருக்கிறது. ஆகவே வருஷம் பூராவும் 25 சதவீதம் தள்ளுபடி கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

**திரு. பு. கோ. நாராயணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கைத்தறி, கதர்த் துறை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பு கொடுத்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயத்திற்கு அடுத்தபடியாக அதிகமான மக்கள் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 31 இலட்சம் மக்கள் நெசவுத் தொழிலை நம்பியிருக்கிறார்கள். தமிழகத்தில் மொத்தம் ஐந்து இலட்சம் தறிகள் இருக்கின்றன என்றால், அதில் மூன்றரை இலட்சம் தறிகள் கூட்டுறவுத் துறையில் செயல்பட்டு வருகின்றன. இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் 67 சதவீதம் நெசவாளர்களைக் கூட்டுறவுத் துறையின்கீழ் கொண்டு வந்து மிகப் பெரிய சாதனையை இந்த அரசு நிகழ்த்தியிருக்கிறது.



1985 ஜூன் 18] [திரு. பு. கோ. நாராயணன்]

இன்றைக்குப் புரட்சித் தலைவரவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகுதான், நெசவாளர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு நெசவாளர்கள் நிம்மதியாக இருக்கிறார்கள். கைத்தறித் துறையில் பிரச்சினைகள் நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டே வருவதால் புரட்சித் தலைவரவர்களின் அரசு புதிய திட்டங்களை உருவாக்கியும், பல்வேறு நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்தும் நெசவாளர்களைப் பாதுகாத்து வருகிறது.

தமிழகத்தில் கிட்டத்தட்ட 1,600 பிரதம சங்கங்கள் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. நெசவாளர்களின் இரண்டு முக்கியமான பிரச்சினைகள் தீர்க்கப்பட்டாக வேண்டும். தேவையான நூல் தட்டுப்பாடு இல்லாமல் நியாயமான விலையில் கிடைக்க வேண்டும். இதற்காக இந்த அரசு மூலப்பொருள் வங்கியை ஏற்படுத்தி நூல் பிரச்னையைத் தீர்க்க முன் வந்ததைப் பாராட்டுகிறேன்.

நெசவாளர்கள் உற்பத்தி செய்யும் துணிகளைத் தேக்கமில்லாமல் விற்பனை செய்ய வேண்டும். இதற்காகக் கோவாப்டெக்ஸ் நிறுவனம் ஓரளவிற்குத் துணிகளை வாங்கினாலும் துணித் தேக்கப் பிரச்னை இருந்துகொண்டுதான் இருக்கிறது.

மக்களிடம் வாங்கும் சக்தி குறைந்திருக்கிறது என்பது ஒரு காரணம் என்றாலும், மக்களுக்குத் தேவையான, மக்கள் விரும்புகின்ற துணி ரகங்களை உற்பத்தி செய்யாதது இன்னொரு காரணம். இதற்காக வடிவமைப்பு நிலையங்கள்—டிசைன் சென்டர் தனிக் கவனம் செலுத்திச் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அடிப்படையில் ஆராய்ச்சி நடத்தி, மக்கள் விரும்பும் துணி வகைகளை உற்பத்தி செய்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கருதுகிறேன்.

(பிற்பகல் 12-40)

துணி தேக்கம் இருப்பதால் புதிய பிரதம சங்கங்களை ஏற்படுத்த தடை கடந்த இரண்டு ஆண்டுகளாக இருந்து வருகிறது. நெசவாளர்கள் புதிய சங்கம் ஏற்படுத்த வேண்டுமென்று மனு செய்தால், அதிகாரிகள் அதை கவனிப்பதில்லை. இந்த அரசினுடைய நோக்கமே மாஸ்டர் வீவர்கள் என்று சொல்லப்படுகின்ற பெரிய முதலாளிகளிடமிருந்து நெசவாளர்களை விடுவித்து, கூட்டுறவுத்

துறையிலே அவர்களை ஈடுபடுத்த வேண்டுமென்பதுதான். இந்த நல்ல நோக்கம் நிறைவேற வேண்டுமென்றால் புதிய சங்கங்களை ஏற்படுத்த இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

புள்ளி விவரங்களைத் தயாரிப்பவர்கள் நெசவாளர்களுக்குத் தான் அதிக அளவில் காச நோய் வருகிறது என்று சொல்கிறார்கள். மூன்று மாதத்திற்கு ஒரு முறை கட்டாயமாக நெசவாளர்கள் மருத்துவப் பரிசோதனை செய்துகொள்ள வேண்டுமென்ற முறை இருக்க வேண்டும். காச நோய் கண்ட நெசவாளர்கள் காச நோய் மருத்துவ மனையில் மாதக் கணக்கில் காத்துக் கிடக்கின்ற ஒரு நிலை இருக்கிறது. அவர்கள் அனுமதி பெற நீண்ட காலம் ஆவதால், அதற்குள் நோய் முற்றி அவர்களுக்கு ஆபத்து ஏற்படுகின்ற சூழ்நிலை கூட இருக்கிறது. ஆகவே, முன்னுரிமை அளித்தோ அல்லது வேறு ஏதாவது ஏற்பாடு செய்தோ, காச நோய் கண்ட நெசவாளர்கள் உடனே சிகிச்சை பெறுவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பவானி பகுதியில் நெசவுத் தொழிலை நம்பி வாழ்கிற நெசவாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். பவானி பகுதி ஜமுக்காள உற்பத்திக்குப் பெயர் போனது. உற்பத்தியான ஜமுக்காளத்தை விற்க முடியாமல் அங்கே சிரமப்படுகிறார்கள். விற்பனை ஆகாமல் இருக்கிற ஜமுக்காளத்தை விற்பனை செய்யவும், விற்பனையை அதிகரிக்கவும், நல்ல ஆர்ட்டிஸ்டுகளை உருவாக்கவும் கார்ப்பெட் டெக்னாலஜி என்ற ஒன்றை பவானியில் ஏற்படுத்த அமைச்சர் அவர்கள் மைய அரசின் அனுமதியைப் பெற்று, அதை பவானியிலே ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடையாளக் கார்டுகளை நெசவாளர்களுக்கு வழங்க அரசு முன்வந்தது பாராட்டத்தக்கதாகும். ஒரே உறுப்பினர் பல கூட்டுறவுச் சங்கங்களிலே உறுப்பினராக இருப்பதால், அரசு உதவிகள், மானியம் இவையெல்லாம் ஒரே உறுப்பினருக்குப் பல தடவை வழங்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அடையாளக் கார்டுகள் வழங்குகின்ற அந்த முறையின் மூலம் இப்படிப்பட்ட தவறுகளை எல்லாம் களைய ஒரு நல்ல வாய்ப்பு உருவாகும்.





தறிகளை நவீனப்படுத்தும் இந்தத் திட்டத்திற்குத் தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்தில் குழித் தறிகள்தான் அதிகமாக இப்பொழுது செயல்பட்டு வருகின்றன. சாதாரணமான தறியில் ஒரு நாளைக்கு ஒரு நெசவாளி ஐந்து மீட்டர் நெய்தால், நவீனத் தறியின் மூலம் அவன் 20 மீட்டர் துணியை நெய்ய முடியும். அதேபோல அவனுக்குக் கூலியும் நான்கு மடங்கு உயர்கிறது. ஆகவே, நவீனப்படுத்தும் திட்டத்தில் தனிக் கவனம் செலுத்த ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, கைத்தறித் துறையானது எதற்கெடுத்தாலும் அரசையே நம்பியிருக்கும் நிலை மாறி, தன்னுடைய சொந்தக் காலில் நிற்கிற துறையாக வளரக்கூடிய சக்தியை இந்தத் துறை பெறவேண்டும். அதற்குத் தகுந்த ஆய்வு அல்லது ஆராய்ச்சி செய்யும் வகையில் இந்தத் துறை ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. கிருஷ்ணராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களும் காதித் துறை அமைச்சர் அவர்களும் கொண்டு வந்த எண்கள் 26, 27 ஆகிய இரண்டு மானியக் கோரிக்கைகளை வரவேற்று, பேச வாய்ப்பளித்த தங்களுக்கு முதலில் என் நன்றியைப் பரிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். நெசவாளர் சமுதாயத்தைச் சேர்ந்தவரும், வெள்ளுடை வேந்தன் என்ற பெயர் கொண்டவரும், கொடை வள்ளலும், பேரறிஞர் அண்ணா அவர்களின் பாசத்தை நிரம்பப் பெற்றவருமான சர் பி. டி. தியாகராயருக்குத் தமிழக அரசு விழாக் கொண்டாடியதற்கு, நெசவாளர் சமுதாயத்தைச் சேர்ந்த நான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றியைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நகர்ப்புறத்தில் கைத்தறி நெசவாளர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தை அமல்படுத்திய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தக் கைத்தறி மானியக் கோரிக்கையில் மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் தள்ளுபடிக்காக 10 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது வரவேற்கத்தக்கது. இந்தியாவில் மிகவும்

பழைய சொசைட்டி சேலம் அம்மாப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம். அங்கே சுமார் இரண்டு கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடக்கின்றன. இப்போது ஒதுக்கியிருக்கும் 10 கோடி ரூபாயிலிருந்து இரண்டு கோடி ரூபாயை ஒதுக்கி, அந்தத் துணிகளைக் கொள்முதல் செய்தால் அந்தப் பகுதி வாழ் நெசவாளர் துயர் நீங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சேலத்தில் ஏற்றுமதிக்காக கைத்தறி நெசவாளர்கள் நெய்யும் துணியின் மதிப்பு சுமார் ஐந்து கோடி ரூபாய்க்குமேல் இருக்கும். கைத்தறியை நம்பியிருக்கிற சேலம் மாவட்ட கைத்தறி நெசவாளர்களுக்கு உதவும் பொருட்டும், அவர்களை ஊக்குவிக்கும்பொருட்டும் சேலம் மாநகரில் 'ஹான்ட்லூம் ஹவுஸ்' என்கிற மத்திய அரசு அமைப்பை ஏற்படுத்த, தமிழக அரசு பரிந்துரை செய்யவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

"ஹட்கோ" விதிகளின்படி கைத்தறி நெசவாளர்களுக்கு கட்டப்படுகின்ற வீடுகள் 326 சதுர அடி பரப்பளவு இருக்க வேண்டும். இது சில ஆண்டுகளுக்கு முன்னால் வகுக்கப்பட்ட கொள்கையாகும். ஆனால் தற்போதைய நடைமுறைக்கு இது ஏற்றதாக இல்லை, உற்றதாக இல்லை. சுமார் ஆயிரம் சதுர அடி பரப்பளவுள்ள வீடுதான் பொருத்தமாக இருக்கும். ஓரளவுக்கு கைத்தறி நெசவாளர் குடும்பம் அங்கு வாழ ஏதுவாக இருக்கும் என்று கைத்தறி நெசவாளர்கள் பலரும் கருதுகின்ற காரணத்தால் இதை தமிழக அரசு மத்திய அரசின் ஹட்கோ நிறுவனத்திற்குப் பரிந்துரை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சமீபத்தில் மத்திய அரசு எடுத்த டெக்ஸ்டைல் பாலிசியில் தமிழ்நாடு அரசு கைத்தறி நெசவாளர்களுக்கு ஆயிரம் ரூபாய் மானியமாக வீடு கட்டக் கொடுப்பதைப்போல மத்திய அரசும் கொடுப்பது வரவேற்கத்தக்கது. மத்திய அரசுக்கும் அதற்காக [illegible] தெரிவித்துக்கொள்கிறேன்.

[illegible]களுக்கு வீடு கட்டும் திட்டத்தில் இருக்கும் கோரிக்கை [illegible]வர்களுக்கு கொடுக்கும் தொகையை அதிகப்படுத்தி, 17,500 ரூபாய் என்ற அளவுக்கு உயர்த்த தமிழக அரசு மத்திய





அரசுக்கு பரிந்துரை செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அதற்குக் காரணம் கட்டுமானப் பணி. அதனுடைய செலவு தற்காலத்தில் அதிகமாக இருக்கிறது. முன்பு நெசவாளர் வீட்டுக்கு கொடுத்த கடன் தொகை அந்த நேரத்திற்கு ஏற்றதாக இருந்தது. ஆனால் நடைமுறையில் இன்றைக்கு கட்டுமானப் பணிச் செலவு அதிகமாக இருப்பதால் 17,500 ரூபாய் கொடுத்தால் தான் சரியாக இருக்கும் என்று நெசவாளர்கள் கருதுகிறார்கள். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர் விரும்பினால் அவரது குடும்பத்தில் வேலையின்றி இருக்கும் தனது மகனுக்கு தொழில் அமைத்துக் கொடுக்க விரும்பினால், அந்த கைத்தறியை அரசிடம் ஒப்படைத்தால், கைத்தறி நெசவாளருக்கு பவர் லூம் வைப்பதில் முன்னுரிமை கொடுத்து, பெர்மிட் வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெசவாளர் இனத்தில் அதிகமான இளைஞர்கள் வேலையின்றி இருக்கிறார்கள். மிகவும் பிற்பட்ட மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எப்படி வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கிறோமோ அதைப் போன்று நெசவாளர் அனைவருக்கும் வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்க தமிழக அரசு முன்வர வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

இந்தக் கைத்தறித் துறை மானியக் கோரிக்கையில் எனக்கு முன்பு பேசிய அன்புச் சகோதரர் திரு பாலாஜி அவர்கள் ஃபெடரேஷனில் வாங்குவது பற்றியும் அதில் இருக்கும் சிரமம் பற்றியும் எடுத்துக் கூறினார்கள். சேலம் நகரமும், காஞ்சிபுரம் நகரமும் கைத்தறியில் பருத்தியானாலும் பட்டானாலும் பிரசித்தி பெற்ற நகரங்களாகும். அங்கு நமது அண்டை மாநிலத்தினர் வந்து வாங்கும் அளவுக்கு நிலைமை இருக்கின்றது. எனவே கைத்தறி மார்க்கெட்டிங் காம்ப்ளக்ஸ் ஒன்று சேலம் நகரத்திலும், காஞ்சிபுரத்திலும் ஏற்படுத்திக் கொடுப்பது பற்றி அன்புடன் அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் அதிகமான கைத்தறி நெசவாளர்கள் இருக்கிறார்கள். அங்கே ஹெல்ட் டையிங் ஃபேக்டரிஸ் அதிகமாக இருக்கின்றன. அந்த மக்கள் மிகவும் சிறுபான்மையோராக இருக்கிறார்கள். டையிங்கைப் பொறுத்தவரையில் விற்பனை வரி விதிக்கப்பட்டிருக்கின்றது. இது கைத்தறித் துறையைப் பாதிக்கின்றது என்று நெசவாளர்கள் கூறுகிறார்கள். ஆகவே அதற்குத் தமிழக அரசு விற்பனை வரியைத் தளர்த்துவது பற்றிப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தாரமங்கலத்தில் போதிய இடம் இருப்பதன் காரணத்தால் கதர் காம்ப்ளக்ஸ் ஒன்றை அங்கே அமைக்க இடத்தைத் தேர்ந்தெடுத்து இருக்கிறார்கள். எனவே அதற்காக மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் அவர்கள் விரைவாக நடவடிக்கை எடுத்து அங்கே காம்ப்ளக்ஸ் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கைத்தறி நெசவாளர் குடும்பம் வாழ்கின்ற வகையிலும், அவர்களுடைய திறமையை வெளிநாடுகளுக்கு உணர்த்தும் வகையிலும் ஏற்றுமதி செய்வதற்காக ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு தையல் இயந்திரம் கொடுத்து பெண்களுக்கும் வேலைவாய்ப்பு அளிக்க மத்திய அரசிடமிருந்து மானியமாகப் பெற தமிழக அரசு பரிந்துரை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே தயாரிக்கப்படும் துணிகளைக் கொண்டு டெல்லி, பாம்பே போன்ற நகரங்களில் ரெடிமேட் ஆடைகளைத் தயாரித்து வெளிநாட்டிற்கு அனுப்பி அதிக இலாபம் பெற்றுக்கொண்டு வருகிறார்கள் தனியார்கள். அந்த இலாபத்தைக் கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் அடையக்கூடிய வகையில் மத்திய அரசிடம் வலியுறுத்தி இங்கேதான் கைத்தறித் துணி அதிகமாகத் தயாரிக்கப்படுகின்றது. எனவே இங்கிருக்கும் பெண்களுக்கும் நெசவாளர் பெருங்குடி மக்களுக்கும் வேலைவாய்ப்பு தந்து அவர்கள் வீட்டில் அவர்கள் சம்பாத்தியம் அதிகமாகச் செய்ய வேண்டும் என்ற வகையில் மானியமாகப் பெற்று அந்த ஒவ்வொரு குடும்பமும் அந்தத் தொழிலில் ஈடுபடக் கூடிய அளவுக்கு ஆவன செய்ய [illegible] தமிழக அரசு பரிசீலிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்து சேலம் அம்மாபேட்டை சொசைட்டியைப் பற்றி எனக்கு முன்பு பேசிய ஜனதா கட்சி உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் பேசினார்கள். நெசவாளர்கள் கூலி உயர்வு கேட்டு பல கோரிக்கைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் முன் வைத்தார்கள் என்று சொன்னார்கள். அவர்களுக்குக் கூலி உயர்வு அதிகமாகக் கொடுக்கப்பட்டுள்ளது என்பதைப் பணிவாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அந்தக் கூலி உயர்வுக்கான குழுவில் உள்ள ஜனதா கட்சியைச் சேர்ந்த சகோதரர்களும் மற்றும் தோழமைக் கட்சிக்காரர்களும், அனைத்துக் கட்சியினரும், நானும் சென்று கூலி உயர்வு தரவேண்டும் என்று கேட்டு பெற்றோம். கன்டென்டட் லைஃப் என்ற வகையில் பெரும்பாலான நெசவாளர் அரசு கொடுத்த கூலி உயர்வால் திருப்தி அடைந்திருக்கிறார்கள். ஒரு சிலர்தான் எது கொடுத்தாலும் அவர்களுக்குப் பற்றவில்லை, போதவில்லை என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இருப்பதைக் கொண்டு தான் கொடுக்க முடியும். இரண்டு கோடி ரூபாய் கோரிக்கையை வைத்துக் கொண்டிருந்தபோது மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சரிடம் இதுபோல் கேட்கிறார்கள் கொடுக்கவேண்டும் என்று கேட்டவுடனே அவர்கள் உத்தரவிட்டார்கள் அதிகக் கூலி உயர்வு கொடுப்பதற்காக; எனவே அதற்காக இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கைத்தறித்துறை நன்றாக வளர்ச்சி அடைய தமிழக அரசு எக்ஸ்பர்ட்ஸ்களைக் கொண்டு ரிசர்ச் செய்கின்ற வகையில் அதாவது வெளிநாட்டில் . எவற்றை எல்லாம் விரும்புகிறார்கள் என்று ஆய்ந்து அதைச் சங்கங்களுக்கு அனுப்பி அவற்றைத் தயாரிக்கவேண்டும் என்பதையும் அரசு அதுபற்றிப் பரிசீலிக்க வேண்டும் என்பதையும் கேட்டுக்கொள்கிறேன். இப்போது ஜப்பானில் தயாராகும் சேலைகளுக்கு பல புதிய பெயர்களை வைக்கிறார்கள். இங்கே நாம் நம்முடைய சேலைகளுக்கு மேனகை என்றும், ஊர்வசி என்றும் பெயர் வைத்து விற்பனை செய்கிறோம். அந்த வகையில் வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்காக தயாரிக்கும் கைத்தறித் துணிகளுக்கு, அந்தந்த நாட்டில் யார் யார் பெயர் பெற்றவர்களோ, அதற்கு ஏற்ப பெயர்களை வைத்து தயாரித்து அனுப்பினால் அங்கு நல்ல விற்பனை நடக்கும். அந்த வகையில் நம் கைத்தறியில் தயாராகும் துணிகளுக்கும், சேலைகளுக்கும் பெயர்களை இட்டு புதிய ரகங்களை

தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை, யோசனைகளை அரசு செய்தால் நல்லது என்று கூறி, இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று, இந்த வாய்ப்பை நல்கிய துணைத் தலைவருக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கைத்தறியும் நெசவுத் தொழிலும் என்ற மானியக் கோரிக்கையின் மீதும், கதர்த் தொழில் என்னும் மானியக் கோரிக்கையின் மீதும் நான் சார்ந்திருக்கிற காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

தமிழகத்திலே நெசவுத் தொழிலை மிகுந்த சிரமத்தோடு செய்ய வேண்டிய ஒரு தொழிலாகத்தான் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். நெசவாளர்கள் சிரமப்பட்டு உற்பத்தி செய்யும் அந்தப் பொருள்களை கோவாப்டெக்ஸ் நிறுவனம் உடனுக்குடன் கொள்முதல் செய்து, அவர்களுடைய அன்றாடத் தேவைகளுக்கு தகுந்த அளவிற்காவது அவர்களுக்கு ஊதியம் தரும் வகையில் கொள்முதலை வினியோகிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நெசவாளர் குடும்பங்களுக்கு அரசு எல்லா வகையிலும் உதவிகளைச் செய்ய வேண்டும். ஏனென்றால் அவர்கள் மற்ற இனத்தவர்களைப்போல் வாழ்வதற்கு தெரியாதவர்கள், வாழ்க்கையில் முன்னேறாதவர்கள். அவர்கள் ஏற்பாடு செய்துள்ள அனைத்துச் சங்கங்களிலும் கோவாப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலம் கொள்முதல் செய்வதற்கு அரசு முன் வரவேண்டும். அதன் மூலம் அவர்களுடைய தொழிலை விரிவுபடுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். விவசாயத் துறையைப் போல நெசவாளர்களும் மிகவும் சிரமத்துடன் இந்தத் தொழிலை பட்டினிக் கிடந்துதான் செய்கிறார்கள்.

அந்த நெசவாளர் குடும்பங்களுக்கு குடியிருப்பதற்கு அரசாங்கம் மானியத்துடன் கடன் கொடுத்து வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய பகுதியைப் பொறுத்தவரையில் பாமன்குறிச்சி, சாயர்புரம் போன்ற பகுதிகளில் நல்ல முறையில் முன்பு அவர்கள் இந்த நெசவுத் தொழிலைச் செய்து வந்தார்கள். இன்று நலிவுற்று,





அந்த தொழிலை செய்ய முடியாத நிலையில் இருந்து வருகிறார்கள். அவர்களுக்கு அரசாங்கம் மானியம் மூலமாக நூல்களை வழங்கி தறிகள் ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல என்னுடைய தொகுதியில் நாசரேத் என்னுமிடத்தில் முன்பு சிலோன் அகதிகளுக்காக கூட்டுறவு நூற்பு ஆலை ஒன்று ஏற்படுத்தப்பட்டு இன்று அது நல்ல முறையிலே இயங்கி வருகிறது. கிட்டத்தட்ட 20 ஆண்டுகளுக்கு முன்பு நிறுவப்பட்ட அந்த நூற்பு ஆலையில் 12 ஆயிரம் கதிர்கள் இருக்கின்றன. சுமார் ஆயிரம் தொழிலாளர்கள் அங்கே பணிபுரிகிறார்கள். அது ஒரு தேரியினுடைய பகுதியாக இருப்பதன் காரணமாக இப்போது அங்கே கட்டிடங்களும் நல்ல முறையில் கட்டப்பட்டு, சிறந்த நிலையில் அந்த ஆலை இருந்து வருகிறது. ஆகவே, அந்த மில்லை மேலும் ஆய்வு செய்து விரிவு படுத்தினால் மீண்டும் அந்தப் பகுதியிலே வாழ்கிற மக்களில் ஒரு ஆயிரம் பேர்களுக்கு தொழில் கொடுப்பதற்கு ஒரு வாய்ப்பாக அமையும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்த ஆலையை பரிசீலித்து புதிய கதிர்களை அமைத்துக் கொடுத்து, அந்தப்பகுதியில் வாழும் மக்களில் இன்னொரு ஆயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இன்று கதர் உற்பத்தியைப் பற்றி இரண்டொரு கருத்துக்களை சொல்ல நான் ஆசைப்படுகிறேன். நெல்லை மாவட்டத்தில் கள்ளிக்குளத்தில் ஒரு கதர் வாரியப் பணி நிலையம் அமைக்கப்பட்டு அதனால்தான் அந்தப் பகுதியில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதைப்போல சாத்தான் குளம் பின்தங்கிய பகுதியாக இருப்பதன் காரணமாக கள்ளிக்குளத்தில் நிறுவியிருக்கும் வாரியத்தின் பணிகளைப் போல சாத்தான் குளத்திலும் ஒரு கதர் வாரியப் பணி நிலையம் அமைத்துக் கொடுத்தால் அங்கே வேலையில்லாமல் இருக்கும் நெசவாளர் தொழிலாளர்களுக்கும் வேலை கொடுக்க வாய்ப்பளிக்க முடியும். எனவே அதனை அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, பல கிராமங்களில் படித்த பெண்கள் வேலையற்று இருக்கிறார்கள். அவர்களுக்கு அம்பர் சர்க்கா என்றழைக்கப்படும் அம்பர் ராட்டையை அந்தப் பகுதியிலேயிருக்கும் பஞ்சாயத்து

யூனியன் மூலமாக கொடுக்கச் செய்தால், அந்தப் பெண்களுக்கு மட்டுமல்ல, அது அந்த கிராமத்திற்கே தொழில் கொடுக்கும். அந்த வகையில் தொழில் இல்லாத கிராமங்களில் தொழில் அபிவிருத்தி செய்வதற்கு ஏற்பாடு செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் இன்றைக்கு கதர்த் துணிகளுக்கு பெருந்தலைவர் காமராஜர், பெரியார், அண்ணா ஆகியவர்கள் பிறந்த நாட்களில் வழங்கப்படும் ரிபேட்டை ஆண்டு முழுவதும் 30 காசுகளாக நீடித்துக் கொடுத்தால் கைத்தறித் துணிகளுக்கும், கதர்த் துணிகளுக்கும் விற்பனை பெருகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00)

பனையிலிருந்து பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்கிற தொழில்கள் பல இடங்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் நெல்லை மாவட்டத்தில் எனது தொகுதியைச் சேர்ந்த சாத்தான்குளம் பகுதியில் பனை மரங்கள் அதிகமாக இருக்கின்றன. அந்தப் பகுதியில் பனைவெல்ல கூட்டுறவுச் சங்கம் என்றாலும் சரி, உற்பத்திச்செய்கிற தொழில் அமைப்பு என்றாலும் சரி அங்கே ஏதாவது ஒன்றை நிறுவி அந்தப் பிற்பட்ட பகுதியில் வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த அளவிற்கு இந்த மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய கருத்துக்களை தெரிவிக்க வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**திரு. க. நரசிம்மபல்லவன்:** துணைத் தலைவர் அவர்களே, கைத்தறி பஞ்சாலை மற்றும் கதர் துறை மானியக் கோரிக்கைகள் மீது என் கருத்துக்களை தெரிவிக்க வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவர் புண்ணியவான் ஆட்சியில் தான் மக்களுக்கு அடிப்படைத் தேவைகளான உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் நல்ல முறையில் கிடைத்து வருவதை எண்ணி பெருமையடைகிறேன். சத்துணவுத் திட்டம் மூலம் குழந்தைகளுக்கும், வயதானவர்களுக்கும் நல்ல சத்துணவை அளித்து, அதேநேரத்தில் பிற்பட்ட உழைக்கும் தொழிலாளர்களும் வாங்கி உண்கிற அளவில் நியாயமான விலையில் அரிசியை வழங்கி, நல்ல நிலைமைகளை ஏற்படுத்தியிருக்கிற இந்த அரசு, எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கிற வகையில் செய்திருக்கிறது. நிலப்பட்டாக்





களையும், வீட்டு மனைப்பட்டாக்களையும், இலவச வீடுகளையும் கொடுத்து வருகிறார்கள். அதேபோல் உடுக்க உடை என்ற அடிப்படையில் இன்றையதினம் அதனை சீராக மக்களுக்கு கொடுக்கவேண்டுமென்ற அடிப்படையில், முடங்கிக் கிடந்த நூற்பாலைகள் எல்லாம் நல்லமுறையில் ஓட்டி துணி உற்பத்தியைப் பெருக்கி ஏழை விவசாயிகள், ஏழை தொழிலாளர்கள் வாங்கி உடுக்கிற அளவில் நல்ல தரமான துணிகளை உற்பத்தி செய்து வருவதை பாராட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

மேலும் கைத்தறித் துறையில் நல்லமுறையில் ஊக்கம் கொடுத்து வெளிநாட்டுச் செலாவணியை அதிகமாக ஈட்டுகிற அளவில் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்காக கைத்தறித் துறைக்கு தனி வாரியம் ஒன்றை அமைக்க அரசு முன் வரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். நினைத்ததை முடிப்பவன் ஆட்சியில் சொல்வதைத் தான் செய்வார்கள்; செய்வதைத்தான் சொல்வார்கள். அந்த அடிப்படையில் நெசவாளர்களுக்கு நல்ல வசதி வாய்ப்புகளை வழங்குகிற வகையில் குரூப் இன்ஷுரன்ஸ் திட்டத்தின் கீழ் அரசு 500 ரூபாய் வழங்கிக் கொண்டு வந்ததை நம்முடைய புரட்சித் தலைவர் அரசு 3,000 ரூபாயாக உயர்த்தியதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதனை மேலும் ரூபாய் 5,000 ஆக உயர்த்த ஆவன செய்யவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். நெசவாளர்களுக்கு எந்த அரசும் செய்யாத அளவிற்கு கூலி நிர்ணயம் செய்துள்ளதை பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அதேநேரத்தில் நெசவாளர்களுக்கு நல்ல ஆரோக்கியமான வாழ்வை தருகிற அளவில் அரசு மேலும் பல சலுகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கரை போட்ட வேட்டியும், சேலையும் கைத்தறிக்கே ஒதுக்கி விரைவில் அதை சட்டப்பூர்வமாக செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கைத்தறி நெசவாளர்களுக்கு காச நோய், வாத நோய், கண் நோய் மற்றும் தொழில் ரீதியான நோய்கள் ஏற்படுவதால் இலவச மருத்துவ உதவிகளை செய்து அரசு அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று நபார்ட் திட்டத்தின் கீழ் நிதி உதவி மானியம் பெற ஏ.பி.சி. என தகுதி நிர்ணயித்து அறிவித்து உள்ளதை மாற்றி, ஏ.பி.சி. என்று இல்லாமல் அனைத்துச் சங்கங்களுக்கும், வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளவர்களுக்கும் கடன் உதவி பெறுகின்ற அளவில் இதைச் செயல்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதைப்போல பல நல்ல சலுகைகளைச் செய்கின்ற இந்த அரசைப் பாராட்டுவதோடு எனது தொகுதியான ஜயம்பேட்டையில் நெசவுத் தொழில் அதிகமான அளவில் நடைபெறுகின்றது. எனவே இந்த இடத்தில் சாயத் தொழில் அதிகமான அளவில் செய்வதால் அந்த சாய நீர் காரணமாக அங்கே பெருத்த சுகாதாரக் கேடுகள் ஏற்படுகின்றன. எனவே இந்தத் துறை சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் இதைத் தீர்க்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கதர் துறையைப் பொறுத்தவரையில் என்னுடைய பகுதியில் பனை மரங்கள் அதிகமாக இருக்கின்றன. ஆகையினாலே பனை சம்பந்தப்பட்ட நார் உற்பத்தியோ, அல்லது பனைவெல்ல உற்பத்தியைப் பெருக்குகின்ற வகையில் அங்கே தொழில்களைப் பெருக்கினால், ஏழை எளியவர்களுக்கும், குடிசையில் வாழ்கின்ற மக்களுக்கும், தொழில் பெருகும், அவர்களுக்கும் உதவி செய்கின்ற வகையில் அமையும் என்று கூறி, அதற்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன், வணக்கம்.

**திரு. கே. ஆர். கணபதி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1985-86-ஆம் ஆண்டிற்கான கைத்தறி மற்றும் கதர் வாரியத்தின் மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். கைத்தறி நெசவாளர்களுடைய தொழிலை வளப்படுத்துவதற்கும், அவர்களைப் பாதுகாப்பதற்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், இதற்கு என்று தனியாக கேபினட் அந்தஸ்து உள்ள அமைச்சர் அவர்களை நியமித்து இருக்கிறார்கள். அதற்காக என்னுடைய நன்றியறிதலை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களை விட தமிழ்நாட்டில் தான் கைத்தறித் துணிகள்



அதிகமான அளவில் உற்பத்தி செய்யப்பட்டு, அதிலே ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு நல்ல பாதுகாப்புகளை கொடுத்து வருவது என்பது பாராட்டுக்குரியதாகும். தமிழ்நாட்டில் பல்வேறு ரகங்களில் துணிகள் தயாரிக்கப்படுகின்றன. அவைகள் மற்ற மாநிலங்களுக்கும், உலகத்தில் உள்ள பிற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்கின்ற அளவிற்கு தரமானதாக தயாரிக்கப்படுகின்றன. நெசவாளர்களுக்கு நியாயமான விலையில் தரமான நூல் வழங்கப்படுகிறது. நெசவாளர்களுக்கு குறைந்தபட்சக் கூலியை நிர்ணயித்த அரசு இந்தியாவிலேயே தமிழக அரசுதான் என்பதை நாம் பாராட்டாமல் இருக்கமுடியாது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நெசவாளர்களுடைய தேவையைப் பூர்த்தி செய்கின்ற வகையில், பல கூட்டுறவு நூற்பு ஆலைகளை தமிழ்நாட்டில் தமிழக அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. குறிப்பாக தமிழகத்தில் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, சுமார் 31 கோடி ரூபாய் செலவில் ஐந்து புதிய ஆலைகள் தமிழ்நாட்டில் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன. அதிலும் குறிப்பாக, அதிலே பணியாற்றுபவர்கள் இலங்கையைச் சார்ந்த தமிழர்களும், ஆதிதிராவிட மக்களும், 75 சதவீதத்திற்கு குறையாமல் வேலை வாய்ப்பு பெற்றிருப்பதை எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் பாராட்டுவார்கள் என்று நான் நினைக்கிறேன்.

அடுத்து, துணித் தேக்கம் என்பது சாதாரண விஷயமாகும். அதைத் தவிர்க்க முயற்சி எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். காரணம் நெசவாளர்கள் தொடர்ந்து உற்பத்தி செய்து கொண்டே இருக்கிறார்கள் அதிலும் தாங்கள் தயாரித்த நூலில் 50 சதவீதத்தை தாங்களே விற்க முன்வருவதில்லை. கைத்தறித் துணிகளை யாரும் அணிவதில்லை. கைத்தறித் துறையில் தயாரிக்கும் துணியை மத்திய அரசு வாங்கினால் அந்தத் துணி தேக்கம் இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. கே. ஆர். கணபதி] [1985 ஜுன் 18

கூட்டுறவுத் துறையில் தயாரிக்கும் கைத்தறித் துணியில் 50 சதவீதத்திற்குக் குறையாமல் கோ-ஆப்டெக்ஸ் வாங்க வேண்டும். அதுவும், அதற்குக் குறையாமல் வாங்கிக்கொண்டு இருக்கிறது. அதுவும் இல்லாமல் இந்த ஆண்டு 15 விசேஷ தினங்களில் ரிபேட் அளிக்கும் காலத்தில் சுமார் 40 கோடி ரூபாய் மதிப்புள்ள துணிகள் விற்கப்பட்டு இருப்பதைப் பார்க்கும்போது, இது சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். கைத்தறித் துணியில் புதிய ரகத்தைப் புகுத்தவேண்டும். அதன் தரத்தையும் உயர்த்தவேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 1-10)

அப்படி அதனுடைய தரத்தை உயர்த்துகின்ற நேரத்தில் விழிப்புணர்ச்சியோடு இருந்து, அந்தத் துணிகள் தயாரிக்கப்பட்ட பிறகு அவைகளில் இருக்கக்கூடிய சுருக்கத்தை சரிப்படுத்துவதற்கும், அந்தத் துணிகள் மில்களில் தயாரிக்கப்பட்ட துணிகளைப் போல பளபளப்பாக இருப்பதற்கும் வேண்டிய ஏற்பாட்டினைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் ப்ராசஸிங் யூனிட்டை மாவட்டம் தோறும் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக தென் ஆற்காடு மாவட்டம், தஞ்சை மாவட்டம், திருச்சி மாவட்டம் போன்ற இடங்களில் ஒரு துணை இயக்குநர் அலுவலகம் தான் இருக்கிறது. என்னுடைய தென் ஆற்காடு மாவட்டத்தில் அதிகமான அளவில் கூட்டுறவு சங்கங்கள் இருக்கின்ற காரணத்தினால் அங்கே ஒரு துணை இயக்குநர் அலுவலகம் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் தமிழகத்தில் பருத்தி நூல், பட்டு நூல் தயாரிக்கும் ஆலை இருக்கிறது. ஆனால் பாலியஸ்டர் நூல் தயாரிக்கும் ஒரு ஆலை கூட தமிழ்நாட்டில் இல்லை. அதை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் ப்ராசஸிங் மற்றும் பிரின்டிங் ஆலை ஒன்றை ஏற்படுத்தித் தரவேண்டும். தற்போது கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் பம்பாய்க்கும், ஐதராபாத்துக்கும் ப்ராசஸிங்கிற்கும், பிரின்டிங்கிற்கும் செல்வதால் அதிக செலவு ஆகிறது. அந்த செலவை தவிர்ப்பதற்காக இங்கே அதை ஏற்படுத்தினால் நலமாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் கைத்தறி நெசவாளர் குடும்பங்



1985 ஜுன் 18] [திரு. கே. ஆர். கணபதி]

களின் வருமானத்தை உயர்த்துவதற்கு அந்தக் குடும்பத்தில் உள்ள பெண்களுக்கு உப தொழிலை வழங்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வெள்ளம், புயல், வறட்சி ஏற்படும் போது தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களால் விவசாயிகளுடைய துயர் துடைப்புக்காக வேஷ்டி, புடவை இவைகளை வழங்கியதன் காரணமாக அதனால் கைத்தறி துணி தேக்கம் ஓரளவுக்கு குறைக்கப்பட்டது என்பதாலும் இந்த ஆண்டு காவேரி நீர் வராமல் வேலைவாய்ப்பு இன்றி வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கின்ற அந்த ஏழை விவசாயிகளுக்கு மீண்டும் இலவச வேஷ்டி, புடவை வழங்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*** திரு. மு. இராசாங்கம்:** மாண்புமிகு பேரவையின் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வேளாண்மைக்கு அடுத்தபடியாக நெசவுத் தொழிலை போற்றி பாதுகாத்து வருகிறோம். எட்டாவது சட்டப் பேரவையினுடைய 26, 27 ஆம எண்கள் மானிய கோரிக்கைகள் மீது எனக்கு பேச வாய்ப்பு அளித்தமைக்கு முதற்கண் நன்றியை தெரிவித்துக்கொண்டு என்னுடைய ஒரு சில கருத்துக்களை தெரிவிக்க விரும்புகிறேன்.

தமிழகத்தில் 5.56 லட்சம் கைத்தறிகள் இருப்பதாகவும், கைத்தறி வளரவேண்டும் என்ற நோக்கத்தில் 1985 ஆம் ஆண்டு மார்ச் முடிய 3.75 லட்சம் கைத்தறிகளை 1,590 கைத்தறி நெசவாளர் சங்கங்களின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. 1985-86 ஆம் ஆண்டு 25 ஆயிரம் கைத்தறிகளை கைத்தறி சங்கங்களின்கீழ் கொண்டு வர உத்தேசிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் பாராட்ட கடமைப்பட்டு இருந்தாலும் கூட பல ஆயிரம் கைத்தறிகளும் அதை நம்பி லட்சக்கணக்கான மக்களும் வாழ்கின்ற தமிழகத்தில் 25 ஆயிரம் கைத்தறிகள் மட்டும் கூட்டுறவின்கீழ் கொண்டு வந்தால் மட்டும் போதாது.

நெசவுத் தொழிலை நம்பி இருக்கின்ற ஏழை நெசவாளர்கள் வெளியில் சொல்ல முடியாத அளவுக்கு கொத்தடிமைகளாக வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு விடிவு காலம் ஏற்படுத்த முடியாத நிலையில் இருக்கிறது. ஆகவே தமிழக அரசு கருணை கூர்ந்து 25 ஆயிரம் கைத்தறிகளை கூட்டுறவின்கீழ் கொண்டுவருவதைவிட 50 ஆயிரம் கைத்தறிகளை கூட்டுறவு

சங்கங்களின் கீழ் இணைக்கின்ற ஒரு பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை வேண்டுகோளாக தமிழக அரசுக்கு தெரியப்படுத்த கடமைப்பட்டிருக்கிறேன். சில ஆண்டுகளுக்கு முன்னால் கூட்டுறவு பட்டு சங்கங்களில் உள்ள நெசவாளர்களுக்கு கூலி நிர்ணயம் செய்யப்பட்டு ஏதோ பல்வேறு காரணங்களால், சட்ட நுணுக்கங்களால் தடை செய்யப்பட்டு நிற்கிறது. அந்தத் தடைகளை தமிழக அரசு உரிய முயற்சிகள் மேற்கொண்டு நீக்குவதோடு, மீண்டும் தற்போதைய விலைவாசி புள்ளிவிவரங்களை கணக்கில் எடுத்துக் கொண்டு, இந்தப் புள்ளிவிவரத்திற்கேற்ற வகையில் கூலி நிர்ணயம் செய்யவேண்டும் என்று நான் பணிவன்போடு இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

3.75 இலட்சம் கைத்தறி உடைய 1,590 நெசவாளர் சங்கங்களின் மூலமாக 145.75 மில்லியன் மீட்டர் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்று நிதியாண்டில் தெரிவிக்கப் பட்டுள்ளது. ஆனால் 25 ஆயிரம் கைத்தறிகள் கூட்டுறவு சங்கத்தின்கீழ் கொண்டுவரப்பட்ட பின், 170 மில்லியன் மீட்டர் துணி உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனாலும், உற்பத்தி செய்ய ஊக்கம் அளிக்கின்ற இந்த அரசு, உற்பத்தி ஆகின்ற துணியை விற்பனை செய்கின்ற வகையிலே ஊக்கமும், ஆக்கமும் காட்ட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். உற்பத்தி ஆகின்ற கைத்தறித் துணிகளிலே தலைமைச் சங்கம்—கோ-ஆப்டெக்ஸ் 50 சதவிகிதத்தைக் கொள்முதல் செய்து விற்பனைக்கு வழி வகுக்கிறது. குறிப்பாக 1984-85 ஆம் ஆண்டிலே உற்பத்தியான துணியின் மதிப்பு 157.36 கோடி ஆகும். அதிலே கோ-ஆப்டெக்ஸ் கொள்முதல் செய்துள்ளது 55 கோடி மதிப்புள்ள துணிகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலிருந்து நாம் தெரிந்துகொள்வது, உற்பத்தி ஆகின்ற துணிகளிலே பாதியை தலைமை கூட்டுறவுச் சங்கங்கள் கொள்முதல் செய்தாலும், மீதி உள்ள துணிகளை விற்பனை செய்ய முடியாத பல ஆரம்ப நெசவாளர் சங்கங்கள் வளர்ச்சி அடையாமல் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. விற்பனை செய்ய முடியாத நெசவாளர்கள் சங்கங்களிலிருந்து அரசு குறைந்தபட்சம் 75 சதவிகிதமாவது கொள்முதல் செய்ய உத்தரவிடவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில், கோ-ஆப்டெக்ஸ் கொள்முதல் செய்து, சிறந்த



முறையில் விற்பனை செய்தும்கூட, தாங்கள் கொள்முதல் செய்த தொகையை குறித்த காலத்திற்குள் அந்த சங்கங்களுக்கு கொடுக்க முடியாத காரணத்தால், ஆரம்ப நிலையில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் வளர்ச்சி அடைய முடியாத நிலை இருக்கிறது. அதனால் அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் வங்கியிலிருந்து பெற்ற கடனை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்த முடியாமல், அந்தத் தொகைக்கு அதிகமான வட்டி கொடுக்கின்ற காரணத்தால், சங்கங்களின் வளர்ச்சி வெகுவாகப் பாதிக்கப் படுகிறது என்பதைக் கருத்திலே கொண்டு, கொள்முதல் செய்கின்ற துணிகளுக்கு கூட்டுறவுச் சங்கம் உடனுக்குடன் அந்தத் தொகையைப் பட்டுவாடா செய்ய அரசு உரிய முயற்சியை மேற்கொள்ளவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

விற்பனைத் தள்ளுபடியைப் பற்றி ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கைத்தறித் துணியின் உற்பத்தியைப் பெருக்குவதற்காக இந்திய அரசும், தமிழக அரசும் சேர்ந்து, 1984-85 ஆம் ஆண்டிலே 16 கோடி அளவுக்கு அனுமதி வழங்கியுள்ளது. ஆனால் வரவிருக்கின்ற ஆண்டிலே தமிழக அரசு 10 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. உற்பத்தி 145 மில்லியன் மீட்டரிலிருந்து 170 மில்லியன் மீட்டர் என்று குறிப்பிட்டு இருக்கின்ற காரணத்தால், ஒதுக்கப்பட்டுள்ள நிதி 10 கோடி என்பது போதுமானது அல்ல. அதைப் பரிசீலித்து அதிகமாக்க வேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில் திருவிழாக் காலங்களில், தலைவர்களுடைய பிறந்த தின நாட்களிலே கைத்தறிக்கு தள்ளுபடி கொடுக்கப் படுகின்றது. ஆண்டுக்கு 60 நாள் என்று குறிப்பிடப்பட்டு இருப்பதை, மத்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்போடு குறைந்த பட்சம் 100 நாட்களாவது ஆண்டுக்கு தள்ளுபடி விற்பனை செய்ய வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்கள் தள்ளுபடி கொடுக்கின்ற அந்த 'ரிபேட்' தொகைக்கு, எங்கள் பகுதியிலே உள்ள குடந்தை, திருபுவனம் போன்ற பல பட்டுக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பல இலட்சக் கணக்கான ரூபாய்கள் அரசிடமிருந்து வரவேண்டி இருக்கின்ற நிலை இருக்கிறது. அந்தச் சங்கங்கள் பல இலட்சம் ரூபாய்

[திரு. மு. இராசாங்கம்] [1985 ஜூன் 18

வங்கியிலிருந்து கடன் பெற்றுள்ளன. அதையும் அரசு கவனத்திலே கொண்டு, செயல்படவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, நெசவாளர்களுடைய சேமிப்பு பாதுகாப்பு திட்டத்தைப் பொறுத்தவரையில், ஒரு சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். நம்முடைய மாநிலத்தில் கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள நெசவாளர்களுக்கு நலத் திட்டத்தின்கீழ் நெசவாளர் பாதுகாப்பு மற்றும் சேமிப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

(பிற்பகல் 1-20)

நெசவாளர்கள் தன்னுடைய கூலியில் ஒரு ரூபாய்க்கு ஆறு காசு வீதமும், அரசு ஒரு ரூபாய்க்கு மூன்று காசு வீதமும் மானியம் அளிக்கிறது. இதன் மூலம் சேரும் தொகைக்கு ஆண்டொன்றுக்கு ஏழு சதவிகிதம் வட்டி அளிக்கிறது. இத் திட்டத்தின்கீழ் ஒரு நெசவாளி இறக்க நேரிட்டால் அவரது வாரிசுதாரருக்கு சேமிப்பில் உள்ள தொகையும், அரசு மானியமும் அதற்குண்டான வட்டியுடன் 3,000 ரூபாய் ஆயுள் காப்புறுதிக் கழகத்தின் மூலம் வழங்கப்படுகிறது. ஆனால் இந்தத் தொகையை 10,000 ரூபாய் ஆக அதிகரித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு நெசவாளி தான் நெய்து கொண்டு இருக்கும்பொழுது நோய்வாய்ப்பட்டால் பல மாதங்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டோ அல்லது மருத்துவ ஆலோசனையின்பேரில் ஓய்வு எடுத்துக்கொண்டோ இருந்தால் அவர் இந்தச் சேமிப்பு நிதிக்குக் கட்ட வேண்டிய தொகையைக் கட்டமுடியாமல் இருக்கக்கூடும். அம்மாதிரி மருத்துவச் சான்றிதழ் பெற்றுத்தரும் நோயாளிகளுக்கு இந்தச் சேமிப்பு நிதியின் மூலம் கொடுக்கும் தொகையான 3,000 ரூபாய் என்பதை உயர்த்தி 10,000 ரூபாயாக ஆக்கி அவர் இறந்துவிட்டால் அவருடைய வாரிசுதாரர்களுக்குப் பிறகு கொடுக்க அரசு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், நெசவுத் தொழிலை நம்பி இருப்பவர்கள், ஒருவர் நெசவாளியாக இருந்தால் அவருக்கு உதவியாக மூன்று பேர் இருக்க வேண்டும். இப்படி நான்கு பேர்கள் செய்து கொண்டிருக்கக் கூடிய இந்தத் தொழிலில் அந்த நெசவாளி இறந்தபிறகு குறைந்தபட்சம் பத்தாயிரம் ரூபாயாவது



1985 ஜூன் 18] [திரு. மு. இராசாங்கம்]

கொடுத்தால்தான் அந்தக் குடும்பத்தை வாழவைக்க முடியும் என்ற மனிதாபிமான நோக்கத்தோடு இந்த அரசு பரிசீலிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நெசவாளர்களைப் பொறுத்தவரையில் வீட்டு வசதி பற்றி ஒருசில கருத்துக்களைக் கூற வேண்டியிருக்கிறது. மாண்புமிகு கைத்தறி அமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் இந்த மாவட்டத்தின்மீது மிகுந்த அக்கறையும் பாசமும் கொண்டவர்கள். ஏனென்றால் குடந்தை, திருநாகேஸ்வரம், திருபுவனம் போன்ற நெசவாளர்கள் வாழும் பகுதிகளை அவர்கள் நேரிலே கண்டவர்கள் என்ற அடிப்படையில் அவர்களுக்கு அதிகமாக நான் சொல்ல வேண்டியதில்லை. ஒவ்வொரு வீட்டிலேயும் நான்கைந்து குடும்பங்கள் வாழ்கின்றன. அதுவும் அவர்கள் தொழிலுக்காக அமைத்துக்கொண்டிருக்கின்ற தறிகளின் கீழேயே சமையல், இருக்கை போன்ற எல்லாவற்றையும் ஓரேயிடத்தில் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆக்வே, சுகாதாரம் இல்லாமல் வாழ்கிறார்கள். பல்வேறு வியாதிகளால் பிடிக்கப்பட்டிருக்கிறார்கள். இதைப்போன்று நெசவாளர்கள் அதிகமாக வாழுகின்ற பகுதியிலே அரசு உரிய முயற்சியை மேற்கொண்டு மருத்துவமனை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அவர்களுக்காக வீடுகள் கட்டித் தருவதற்கு அரசின் சார்பிலே 12,000 ரூபாய் என்று கணக்கிடப்பட்டுள்ளது. அந்த 12,000 ரூபாயிலே 1,000 ரூபாய் அரசு மானியம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் தற்போதுள்ள விலைவாசியின் காரணமாக அவர்களுக்கு அளிக்கின்ற கடன் உதவியை 20,000 ரூபாயாக ஆக்கியும், அரசு அளிக்கின்ற மானியத்தை 5,000 ரூபாயாகவும் உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். முன் பணம் ஆக அளிக்க வேண்டிய தொகையும் இல்லாமல் இந்தக் கடனை அளிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பட்டு நெசவாளர்களைப்பற்றிச் சொல்ல வேண்டும். தமிழகத்தில் உள்ள பட்டு நெசவாளர்களின் தங்க ஜரிகை தேவையைக் கருதி காஞ்சிபுரத்தில் செயல்பட்டு வருகின்ற தமிழ் நாடு ஜரிகை நிறுவனத்தைப்போல, கும்பகோணம், திருபுவனம் பகுதிகளிலேயும் தமிழ்நாட்டில் பெயர் பெற்ற வர்த்தகம்

[திரு. மு. இராசாங்கம்] [1985 ஜூன் 18

நடைபெறுவதால் அந்தப் பகுதியிலேயும் ஜரிகை நிறுவனத்தை அரசின் சார்பில் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நவீன முறையிலே தொழில் நுட்ப டிசைன்கள் அமைக்கின்ற ஒரு இடமும், சாயச் சாலைகளும் குடந்தை, திருபுவனம் பகுதிகளிலே அமைக்கப்பட அரசு உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

நெசவாளர் சங்கங்களைப் பொறுத்தவரையில் ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். கடந்த பத்தாண்டுகளாகக் கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளே இல்லை. நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள்தான் இருப்பதால் கூட்டுறவுச் சங்கங்கள் சீர்கேடடைந்து, ஏன், மூடி விடுகின்ற நிலையிலேகூட பல்வேறு கூட்டுறவு நிறுவனங்கள் இருக்கின்றன. காரணம், நெசவுத் தொழில் தெரியாதவர்கள், அசம்பந்தமாக எதைப் பற்றியும் அறியாதவர்கள் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தலைவர்களாக ஆளுங்கட்சியினுடைய அனுசரணையோடு புகுந்துகொண்டு அதிகாரத்தைப் பயன்படுத்துவதால், அவர்கள் தலைவர்களாக வந்து அந்தக் கூட்டுறவுச் சங்கங்களை நிர்வாகம் செய்ய முடியாமல் பல கூட்டுறவுச் சங்கங்கள் இன்றைக்குச் சீர் கேடு அடைந்து உள்ளன. ஆகவே, விரைவிலே கூட்டுறவுத் துறை அமைச்சரைக் கலந்து கொண்டு மாண்புமிகு கைத்தறி அமைச்சர் அவர்கள் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்த உரிய முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பட்டுப்பூச்சியைப் பொறுத்தவரையிலே சமீபத்திலே தஞ்சை மாவட்டத்திலே ஆட்சித் தலைவராக இருந்த கங்கப்பா திறம்பட செயலாற்றி, பட்டுத் தொழிலை அம்மாவட்டத்திலே அதிகமாக அபிவிருத்தி செய்தார். தொடர்ந்து அந்தத் தொழிலைத் தஞ்சை மாவட்டத்திலே அபிவிருத்தி செய்து, தனியார் உற்பத்தி செய்கின்ற பட்டை உபயோகித்து, பட்டு முறுக்காலை ஒன்றைத் தஞ்சை மாவட்டத்திலே நிறுவி அதன் மூலமாக, பட்டு உற்பத்தியாளர்களுக்கு ஊக்கம் அளிப்பதோடு, கும்பகோணம், திருபுவனம் பகுதியிலே உள்ள பட்டுச் சேலை



1985 ஜூன் 18] [திரு. மு. இராசாங்கம்]

உற்பத்தியாளர்களுடைய தேவையைப் பூர்த்தி செய்கின்ற வகையிலே பட்டு முறுக்காலை ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறித் துணிகளைப் பொறுத்தவரையில் பழைய முறைகளிலே தயாரிக்கப்படுகின்ற காரணத்தால், மில் துணிகள் பல்வேறு டிசைன்களிலே, கண்கவர் வண்ணங்களிலே வருகின்ற காரணத்தால், மில் துணிகள் பேரில் மக்கள் பெரிதும் கவர்ச்சி அடைந்து, அதனை வாங்குகிற காரணத்தால், கைத்தறி துணி விற்பனை பெரிதும் பாதிக்கப்படுகிறது. அதனால் புதிய டிசைன்களை உற்பத்தி செய்ய அரசு ஆக்கமும் ஊக்கமும் தர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்கிறேன்.

நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மற்றும் ஒரு கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். ஈரோட்டில் சாயம் பூசும் தொழிற்சாலை ஒன்று உள்ளது. பெரியார் மாவட்டம் ஈரோட்டில் அமைந்துள்ள தமிழ்நாடு துணி பதப்படுத்தும் கூட்டுறவு ஆலையைப்பற்றி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த ஆலையின் மேலாண்மை இயக்குநராக இருக்கிற அரசாங்க அதிகாரி அந்த ஆலையின் தொழிலாளர்களின் நல்வாழ்வுத் திட்டங்கள் தீட்டாமல் அவர்களுடைய கையையும் பையையும் நிரப்பிக் கொள்ளும் வகையில் திட்டங்கள் தீட்டுவது வேதனை அளிக்கக்கூடிய நிகழ்ச்சியாகும். இந்தத் தொழிற்சாலையில் பணிபுரியும் மாஸ்டர்கள், அதாவது விற்பன்னர்கள், அந்த ஆலையின் உற்பத்தித் திறனையும் செயல் திறனையும் நினைவில் கொள்ளாது, வருகின்ற வாடிக்கையாளர்களை திசை திருப்பி குறைபாடுள்ள துணிகளைக் கொடுத்து அவர்கள் அந்த ஆலையின் மீது நம்பிக்கை இழக்கச் செய்து அதே சமயத்தில் அவர்களுடைய சொந்த உபயோகத்திற்காக நடத்தப்படுகின்ற ஆலையின் உற்பத்தியை, தரத்தை உயர்த்தி வியாபாரம் செய்து கூட்டுறவு நூற்பாலைக்கு வரவேண்டிய வருமானத்தையும் இலாபத்தையும் கெடுத்து வருகிறார்கள். அதை அரசு தடுக்க வேண்டும். அதே நேரத்தில் தொழிற்சாலையில் உண்மையாகச் செயல்படும் தொழிலாளர்களுக்கு நியாயம் வழங்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கு ஒன்றை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். கைத்தறி நெசவாளர்கள் வாழ வேண்டும். கைத்தறித் தொழில் வளர வேண்டுமென்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கைத்தறி துணிகளை தோளிலே சுமந்து விற்றார்கள். ஆனால், இதே மாமன்றத்தில் அமர்ந்துள்ள அமைச்சர் பெருமக்களில் ஒருசிலரே கைத்தறி துணிகளை அணிந்து வருகிறார்கள். ஏனைய அமைச்சர் பெருமக்களும் கைத்தறி துணிகளைத் தொடர்ந்து அணிய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு கைத்தறியைப் பொறுத்தவரையில் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

கதர் கிராமத் தொழில்கள் சம்பந்தமாக ஒருசில கருத்துக் களைக் கூறவிரும்புகிறேன். அண்ணல் காந்தியடிகளால் வளர்க்கப் பட்ட தொழில் கதர்த் தொழில். குடிசைத் தொழில் தமிழகத்திலே பரவலாக பரிபாலிக்கப்பட்டு இருந்தது. ஆனால் கதர் இன்று எல்லோராலும் கட்டக் கூடிய நிலையில் இல்லை. அதற்கும் ஆண்டுதோறும் எல்லா நாட்களுக்கும் தள்ளுபடி வழங்குகின்ற வகையிலே தமிழக அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் பனை மரங்கள் அதிகமாக இருக்கிற காரணத்தால் குடிசைத் தொழிலாக பனை சம்பந்தப்பட்ட மூலப் பொருளிலிருந்து பல்வேறு பொருள்கள் செய்கிறார்கள். அந்தக் குடிசைத் தொழிலுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

பனைமரம் ஏறும் தொழிலாளர்களுக்கு ஒருசில ஆண்டுகளுக்கு முன்னால், பல்வேறு வேண்டுகோள்கள் விடுத்ததன் பேரில், லைசன்ஸ் முறை ரத்து செய்யப்பட்டது. ஆனால் சமீபகாலத்தில் சில சுயநல சக்திகளினால் அவர்களுக்கு மீண்டும் லைசன்ஸ் முறை கொண்டு வரப்பட்டு அவர்கள் சுதந்திரமாகச் செயல்படாத ஒரு முறை இருக்கிறது.

(பிற்பகல் 1-30)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.





**திரு. மு. இராசாங்கம் :** அவர்களுக்கு மீண்டும் கொண்டுவர விருக்கிற லைசென்ஸ் முறையை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதிக்கு கதர் கிராமத் தொழில் வாரியம் டான்சி நிறுவனம் மூலமாக சுமார் 500-க்கு மேற்பட்ட மின்விசை நாட்டுச் செக்குகளை வழங்கியிருக்கிறது. கதர் துறை அமைச்சர் அவர் களுக்கும் இது நேரடியாகத் தெரியும். அந்த 500 மின்விசைச் செக்குகளும் கடந்த மூன்று ஆண்டுகளாக வேலை செய்யாமல் இருக்கின்ற காரணத்தால் அந்த கதர் வாரியத்தின் மூலமாக கடனாக வழங்கப்பட்ட மின் விசைச் செக்குகளை திரும்ப எடுத்துக் கொண்டு புதிய செக்குகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது)

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த 15 மாண்புமிகு உறுப்பினர்கள் கைத்தறி மற்றும் நெசவாளர் மானியத்தின் மீது தங்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்லி யிருக்கிறார்கள். 16 வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கப்பட் டிருக்கின்றன. பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியதும், வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருப்பதும் ஒருசில குறிப்பிட்ட பிரச்சனைகள் பற்றித்தான் இருக்கின்றன.

குறிப்பாக கைத்தறித் துணி பெருமளவுக்குத் தேங்கிக் கிடக்கிறது, எல்லாம் விற்கப்படவில்லை என்று குறிப் பிட்டார்கள். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களில் யாராவது இப்படித் தேங்கியிருக்கிற துணிகளை விற்பதற்கு இன்னின்ன யோசனை, இதை நீங்கள் ஏற்று நடத்துங்கள் என்று கட்டளை போடுவார்கள் என்று நான் எதிர்பார்த்தேன். யாரும் அப்படிப்பட்ட யோசனைகளைச் சொல்லவில்லை. தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் கைத்தறித் துணியின் மதிப்பு 157 கோடி ரூபாய் என்பதை இந்த அறிக்கையில் கொடுத்திருக்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

கோவாப்டெக்ஸ் நிறுவனம் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து துணிகளைக் கொள்முதல் செய்தும் பெருமளவுக்கு கைத்தறித் துணி தேங்கிக் கொண்டிருக்கிறது. 157 கோடி ரூபாய் துணி உற்பத்தியில் தேங்கியிருக்கிறது

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1985 ஜூன் 18

என்பது உண்மைதான். ஆனால் இந்தியாவில் டி.சி.எம். என்ற மில் முதலாளிக் குடும்பம் மட்டும் 1984 ஆம் ஆண்டில் துணி ஆலை மூலம் 519 கோடி ரூபாய்க்கு உற்பத்தி செய்திருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர்களில் ஒருசிலர் குறிப்பிட்டதைப்போல இந்த கைத்தறித் துணி பழைய முறையிலேயே போற்றப்பட்ட துணியாகும். இன்றையதினம் 120-ம் நம்பர் பற்றி புகழ்ந்து பேசுகிறோம். பண்டைக் காலத்தில் அரபு நாடுகளுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் அனுப்பப்பட்ட துணி பால் ஆவி போன்ற மிக மெல்லிய துணி. அதனுடைய கவுண்ட் என்று சொல்கிறோமே அந்த நம்பர் 200 முதல் 300 வரை இருக்கும் என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள். வெள்ளைக்காரர்கள் இந்த நாட்டுக்கு வந்தபோது கூட இந்தியாவில் நெய்யப்பட்ட துணியின் தன்மையைப் பார்த்து பொறாமைப்பட்டார்கள். சில நெசவாளர்கள் நகத்திலே துவாரங்கள் போட்டு, இயந்திரங்களில் நூற்பதைவிட சிறந்த முறையில் நூல் நூற்று, அதன் மூலம் நெய்த துணியை ஒரு மோதிரத்தில் அடக்கிக் கொள்ளத்தக்க அளவுக்கு சிறப்பான மெல்லிய துணிகளை உற்பத்தி செய்தார்கள் என்று சொல்லப்படுகிறது. அத்தகைய பெருமை வாய்ந்த துணி இந்தியாவில் கைத்தறிகளில் நெய்யப்பட்டு வருகிறது. அப்படியிருந்தும் தேங்கிக் கிடப்பதற்குக் காரணம் என்ன என்று கேட்டால் 'பெர் காபிட்டா கன்சம்ஷன்' என்று சொல்கின்றார்களே அந்த தனி நபர் பயன்பாட்டு அளவு மிகவும் குறைவாக இருக்கிறது.

இந்தியாவில் மக்கள் எவ்வளவு துணி பயன்படுத்துகிறார்கள் என்றால் 2.1 கே.ஜி. என்ற அளவுக்குத்தான். அமெரிக்காவில் 22.2 கே.ஜி. அளவுக்குப் பயன்படுத்துகிறார்கள். ரஷியாவில் 13.4 கே.ஜி. என்ற அளவுக்குப் பயன்படுத்துகிறார்கள். இந்தியாவில் பயன்படுத்தும் 2.1 கே.ஜி. எடை துணியிலே கூட கைத்தறித் துணிகளை எத்தனைபேர் பயன்படுத்துகிறார்கள் என்று பார்த்தால் நமக்கு சந்தேகம் ஏற்படுகிறது. கைத்தறித் துணி விலை போகாமல் இருப்பதற்கு விலை அதிகமாக இருக்கிறது என்று மற்றும் ஒரு காரணம் சொல்லப்படுகிறது.



1985 ஜூன் 18] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

மாண்புமிகு உறுப்பினர்களாகிய உங்களிடம்தான் நான் இந்தப் பிரச்சினையைச் சொல்லவேண்டும். கைத்தறித் துணி தயாரிப்பதினுடைய செலவில் 75 சதவீதம் நூலுக்குப் போகின்றது. பாக்கி நெசவாளர்களுடைய கூலி என்ற பெயரால் சம்பளம் என்ற பெயரால் 20 முதல் 25 சதவீதம் வரை போகின்றது. கூட்டுறவு நூற்பாலைகளில் தயாரிக்கக்கூடிய நூல்களைப் பற்றி சிலபேர் சொன்னார்கள். கூட்டுறவு நூற்பாலைகளில் தயாரிக்கப்படுகின்ற நூல்கள் அத்தனைக்கும் ஐ.எஸ்.ஐ. மார்க் வழங்கப்பெற்று தரமான நூல்கள் என்று சான்று பெற்றிருக்கின்றன. தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறைக்கு எவ்வளவு தேவையோ அதைவிட இரண்டு மடங்கு நூல்கள் எல்லாவிதமான கவுண்ட்களிலும், எண்ணிக்கையிலும் தயாரிக்கப்பட்டு மற்ற தனியார் நூற்பாலைகள் கொடுக்கின்ற விலையை விட மிகவும் மலிவாகக் கொடுக்கப்படுகின்றது. அதுவும் இந்தியாவிலேயே நூற்பாலைகள் தயாரிக்கின்ற நூல்களைக் கைத்தறி நெசவாளர்களுக்கு கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலம் வழங்குவது தமிழ்நாட்டில் மட்டும்தான் என்பதை இங்கே சொன்னால் அது மிகையாகாது.

இங்கே தமிழ்நாட்டிலே திறமை வாய்ந்த நெசவாளர்களால் தயாரிக்கப்படுகின்ற பருத்தித் துணியானாலும், பட்டானாலும், பாலியஸ்டரானாலும் அத்தனையும் மாதம் ஒன்றுக்கு 13 கோடி ரூபாய் மதிப்புள்ள துணிகள் தயாரிக்கப்படுகின்றன. 31—5—1985 தேதியன்று தேங்கியிருக்கின்ற துணிகளின் மதிப்பு 30 கோடியே 95 இலட்சம் ரூபாயாகும். அதாவது 2½ மாதங்கள் துணி உற்பத்தி செய்தால் எவ்வளவோ அவ்வளவுதான். அதாவது அந்த அளவுக்கு மதிப்புள்ள துணிகள்தான் தற்போது தேங்கியிருக்கின்றன. ஆண்டில் 12 மாதமும் தொடர்ந்து கூட்டுறவுத் துறையில் துணிகள் நெய்யப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இந்தத் துணிகளை விற்பதற்கு மாநில அரசு ஒரு உத்தரவு போட்டிருக்கின்றது. அதாவது மாநில அரசினுடைய துறைகள் கைத்தறித் துணிகளை வாங்குவதில் அக்கறை செலுத்தவேண்டும். இரண்டாவதாக கதர்த்துணி வாங்குவதிலும் அக்கறை செலுத்தவேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் மத்திய அரசில் உள்ள இராணுவ இலாக்காவில் எவ்வளவோ ஆயிரம் கோடி ரூபாய்க்குத் துணிகளை வாங்குகிறார்கள். மத்திய அரசின் பல்வேறு துறையினரும் அவ்வாறு வாங்குகிறார்கள். அவ்வாறு வாங்குகின்ற துணிகளில் 10 சதவீதம் அல்லது 20 சதவீதத்தை நமது

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1985 ஜூன் 18

துணிகளை வாங்குவது என்று அவர்கள் முடிவெடுத்துவிட்டால் தமிழ்நாட்டில் இந்தமாதிரி துணி தேங்காது. அவ்வாறு அவர்கள் வாங்குவதில் 10 சதவீதம் அல்லது 20 சதவீதம் என்று வாங்க முன்வந்தாலே போதும். நம்மிடத்திலே துணிகள் தேக்கம் என்று யாரும் சொல்ல முடியாத நிலைமை ஏற்படும். வேண்டுமென்றால் அவர்கள் ஒரு நிபந்தனையை ஏற்படுத்தலாம். அதாவது அவர்கள் சொல்கின்ற மாதிரி தரமான துணிகளை உற்பத்தி செய்ய வேண்டும் என்று நிபந்தனைபோட்டால் அதன்படி தயாரித்துக் கொடுக்க, அந்தக் கருத்தினை ஏற்றுக்கொள்ள தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் தயாராக இருக்கின்றன. இதுபற்றி மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதி இருக்கிறார்கள். இப்படி மத்திய அரசு இந்தத் துணிகளை வாங்க முன்வந்தால்தான் துணிகள் தேக்கம் தீரும்.

அடுத்து ரிபேட் கொடுப்பது பற்றிச் சொன்னார்கள். ஒரு ஆண்டு மதிப்பீட்டில் ஏற்கெனவே இரண்டு கோடி என்று ஒதுக்கீடு செய்திருந்தார்கள். அந்த இரண்டு கோடிக்கு மேல் அதிகமாகப் போவது என்றால் திருத்திய மதிப்பீடு பெறவேண்டும். பிறகு 10 கோடி என்று திருத்திய மதிப்பீட்டுக்கான அனுமதி வாங்க வேண்டி வந்தது. இப்போது 16 கோடி ரூபாய் என்று ஆகியிருக்கின்றது. இது எத்தனை கோடியாகும் என்று நம்மால் சொல்ல முடியாது. அறுபது நாட்கள் கொடுக்கின்ற ரிபேட்டில் மொத்த விற்பனைக்கு 12 சதவீதமும், சில்லரை விற்பனைக்கு 20 சதவீதமும் அதில் மத்திய அரசு 10 சதவீதம், மாநில அரசு 10 சதவீதம் என்றும் கொடுக்கப்படுகின்றது. அவ்வாறு ரிபேட் கொடுக்கின்ற கொள்கையைப் பொறுத்தவரையில் 60 நாட்கள் என்பதை அதிகப்படுத்தவேண்டும் என்று பல்வேறு உறுப்பினர்கள் வற்புறுத்தினார்கள். ஆனால் மத்திய அரசு 1984-85 ஆம் ஆண்டு 60 நாள் ரிபேட் கொடுத்ததற்கான ஆணையையே இன்னும் பிறப்பிக்கவில்லை. அந்த ஆணை பிறப்பிக்கப்படும் என்று எதிர்பார்த்து கடந்த நாட்களில் 15 நாட்கள் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை செய்தது. இப்போது கூட ரம்சான் பண்டிகைக்காக ஐந்து நாள் ரிபேட் கொடுக்க அரசு முன்வந்திருக்கிறது. இவ்வாறு ரிபேட் கொடுப்பதைப் பற்றி பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் சொன்னார்கள். அறுபது நாள் கொடுப்பதைப் பொறுத்தவரையில் யார், யாருக்குக்



1985 ஜூன் 18] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

கொடுக்கவேண்டும், எந்தெந்தப் பண்டிகைக் காலத்தின்போது கொடுக்கவேண்டும் என்றெல்லாம் பார்த்துக் கொடுக்கின்ற உரிமையை மாநில அரசுக்குக் கொடுக்கவேண்டும் என்று நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அப்படிக் கொடுத்தால், 12 மாதமும் அந்த ரிபேட் முறையைக் கொண்டு இப்பொழுது ஒவ்வொரு மாதமும் ஒரு விழா அல்லது கண்காட்சி என்று ஏதாவது பண்டிகை வந்தால் ஏற்பாடு செய்து கொடுத்து வருவதைப் போல—அந்த விற்பனையைச் செய்யலாம். ஏனெனில் புள்ளி விவரத்தைப் பார்க்கிறபோது ரிபேட் தருவதன் மூலம்தான் தமிழ் நாட்டில் தயாராகிற கைத்தறித் துணிகள் 75 சதவீதம் விற்பனை ஆகிறது. அத்தோடு கைத்தறி துணிகளின் தேக்கம் குறைவதற்கு மத்திய அரசு அந்தத் துணிகளை தங்களுடைய பல்வேறு இலாக்காக்களில் வாங்குவதற்கும் முன் வரவேண்டும். அது சம்பந்தமாக நாங்கள் கடிதம் எழுதியிருக்கிறோம்.

(பிற்பகல் 1-40)

தமிழ் பழங்கால இலக்கியங்களில் நம்முடைய கைத்தறி துணிகள் அரபு நாடுகளுக்கும், ஐரோப்பிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்ததைப் பற்றி படித்திருக்கிறோம். ஆனால் இன்றையதினம் அவ்வாறு ஏற்றுமதி செய்வதற்கு நமது கூட்டுறவுத் துறையிலே உள்ள கைத்தறி நெசவாளர்கள் முன்வர வேண்டும். நாம் இன்றைக்கு இருக்கிற நிலையை நினைத்துப் பார்த்தால், தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதி ஆகிற துணிகளில் பெரும்பகுதி கிட்டத்தட்ட 110, 120 கோடி அளவில் தனியார்கள் தான் ஏற்றுமதி செய்கிறார்கள். அவர்கள் ரிபேட் இல்லாமல், குறைந்தவிலையில் அல்லது மூலதன விலையில் கூட்டுறவு நூற்பு ஆலைகள் நூலைக் கொடுக்காமல் இருக்கக்கூடிய நிலையிலேயே, தனியார் துறையினர் 110 கோடி அளவில் ஏற்றுமதி செய்கிறார்கள்—தமிழ்நாட்டில் இருந்து சுமார் 300 கோடிக்கு மேல் மதிப்புள்ள துணிகள் ஏற்றுமதி ஆகின்றன, அதில் அவர்கள் மூன்றில் ஒரு பங்கை வகிக்கிறார்கள்—என்கிறபோது ஏன் கூட்டுறவுத் துறையில் உள்ள நெசவாளர்கள் அவ்வாறு ஏற்றுமதி செய்வதற்கு முன் வரக்கூடாது என்று சிந்தித்தே தீரவேண்டும். அத்தோடு தேக்கம் இருக்கிறது. தேக்கம் இருக்கிறது, என்கிறார்கள். ஆனால் பட்டுத் துணிகளை — பல கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள நெசவாளர்கள் நெய்கிற பட்டுச் சேலைகளை அவர்கள் தயாரித்தபிறகு திருபுவனம் போன்ற இடங்களிலும்,

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1985 ஜூன் 18

காஞ்சிபுரம் போன்ற இடங்களிலும் சென்று அங்கேயே தங்கி யிருந்து வாங்கிக் கொண்டு போகக்கூடியவர்கள் இருக்கிறார்கள். அவைகளை கோவாப்டெக்ஸ் நிறுவனத்திற்கு கூட விற்பனைக்கு கொடுப்பது கிடையாது. ஆகவே தேக்கம் எதில் இருக்கிறது? யாரும் வாங்க மாட்டேன் என்று சொல்லி தள்ளுபடி செய்கிற சில ரகங்களில் மட்டும் தான் தேக்கம் இருக்கிறது. அதற்கு மக்களின் விருப்பத்தை அறிந்து புதுமையான ரகங்களை தயாரிப்பதற்கு அவர்கள் முன் வரவேண்டும். தரமானதாக அளிக்க வேண்டும். பருத்தித் துணி நெய்பவராக இருந்தால், அவர்கள் அதையே நெய்து கொண்டிருக்கக் கூடாது.

மக்கள் இப்போது பெரும்பாலும் பாலியஸ்டர் நூலைக் கொண்ட துணிகளையே, அல்லது சட்டைகளையே போட ஆரம்பித்திருக்கிறார்கள். ஆகவே, பருத்தித் துணியை நெய்கிற போது அவற்றோடு கலந்து, பருத்தி-பட்டு, பருத்தி-பாலியஸ்டர் போன்று இணைந்த நூல்களைக் கொண்டு துணிகளைத் தயாரிப்பதற்கு முன் வரவேண்டும். ஆனால் எப்படி எல்லாம் சலுகை அளித்தாலும் கைத்தறித் துணிகளினுடைய விலை அதிகமாகவே போகிறது. அதனால்தான் மத்திய அரசு தனித்தோ அல்லது மாநில அரசுடன் சேர்ந்தோ, இந்த விலை ஏற்றத்தை தடுப்பதற்கு முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக் கிறேன்.

சில மாநிலங்களில் விற்பனை வரி இருக்கிறது. தமிழ்நாட்டில் உற்பத்தி செய்கிற துணிகளை பம்பாய்க்கு கொண்டு போனால் மகாராஷ்டிர மாநிலத்தில் ஆக்டிராய் வரி அதற்குப் போடப் படுகிறது. அதனால் அந்தத் துணிகளினுடைய விலை அதிகமாகப் போகிறது. ஆகவே தமிழ்நாட்டில் நெய்கிற துணிகளை அயல்நாடு களுக்கு அனுப்பலாம் என்று சொன்னால், மத்திய அரசின் ஏற்றுமதி கொள்கை தடுக்கிறது. கைத்தறித் துணிகளை ஏற்றுமதி செய்வதற்கு தனியாக மத்திய அரசு கோட்டா முறையை ஒதுக்க வேண்டும். தற்போது கோட்டா முறை ஒதுக்கப்படுவதில்லை. ஆனால் வெளிநாட்டுக்காரர்கள் மிக நல்ல விருப்புடன் இருக்கிறார்கள். அமெரிக்க நாட்டினர் இந்தியாவில் உற்பத்தி யாகும் கைத்தறியாலான ரெடிமேட் சட்டைகளை அனுப்பச் சொல்லி கோட்டா கொடுத்திருந்தார்கள். சிலர் கைத்தறி துணி



1985 ஜூன் 18] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

என்று சொல்லி, மில்லால் ஆன துணிகளை அனுப்பியதால், அவர்கள் அதை ஏற்க மறுத்துவிட்டார்கள். அதனுடைய மதிப்பு பல கோடி ரூபாய் ஆகும்.

அதேபோல தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் ஒரு ரகத் துணி குறிப்பாக நைஜீரியா நாட்டிற்குச் செல்கிறது. ரியல் மெட்ராஸ் ஹாண்ட் கர்ச்சீப் என்ற ரகம் அது. அந்த ரகத்தின் மூலம் கிட்டத்தட்ட 35 கோடி, 45 கோடி ரூபாய் வருமானம் வரக்கூடிய வாய்ப்புடையது. அந்த ரகம் தமிழகத்திலும், ஆந்திரா எல்லையில் உள்ள சில நெசவாளர்களாலும் தயாரிக்கப்படுகிறது. உலகத்தில் ஜப்பான் நாட்டிலும், தைவான் நாட்டிலும் கூட அந்த ரக துணியைத் தயாரிக்க முடியாத நிலையில் தமிழ்நாட்டில் தயாராகும் அந்த துணியை ஏற்றுமதி செய்ய இயலாமல் தேக்கம் இருக்கிறது. நைஜீரியா நாட்டு மக்கள் அதைத் தங்கள் தேசீய உடைகளில் ஒன்றாக ஏற்றிருக்கின்றனர். அதை ஏற்றுமதி செய்ய இயலாமைக்கு காரணம், நைஜீரியா நாட்டில் இருந்த ராணுவ தளபதி மாற்றப்பட்டு வேறு ஒருவர் பொறுப்பேற்றிருப்பதோடு மட்டும் அல்லாமல் நம்முடைய இந்திய நாட்டினுடைய ஏற்றுமதிக் கொள்கையும் கொஞ்சம் தடுக்கிறது. அதைக் கொஞ்சம் தளர்த்துவதுடன், தேங்கிக் கிடக்கின்ற கைத்தறித் துணிகளுக்கு ஏதாவது மானியம் கொடுக்கவும் அவர்கள் முன் வரவேண்டும்.

இன்னொன்றையும் கைத்தறித் துணிகளைப் பற்றி இங்கே உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். அந்தத் துணிகளை கோவாப்டெக்ஸ் கொள்முதல் செய்கிறபோது, அதற்கான பணத்தை உடனடியாக கொடுப்பதில்லை என்று சொன்னார்கள். அதேபோல ரிபேட் தொகையையும் திருப்பிக் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். அது உண்மைதான். அதை நான் மறைக்க விரும்பவில்லை. ஆனால் அதற்குக் காரணம், பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட தொகையைவிட, நான்கு மடங்கு, மூன்று மடங்கு அதிகமாக ரிபேட் தொகை வந்துவிடுவதால், கோவாப்டெக்ஸி னுடைய நிதிநிலைமை அதற்கு உடனேயே கொடுக்க முடியாமல் இருக்கிறது. இப்படி கொடுக்க முடியாததால் ஆரம்ப கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் கோ-ஆப்டெக்சிடம் துணிகளைக் கொடுத்துவிட்டு, கொடுத்த துணிகளுக்கு பணத்தைப் பெறாததால் அவர்கள் தொடர்ந்து வேலை வாய்ப்பைப் பெறுவதற்கு மத்திய மாவட்ட வங்கிகளிடம் கடன் கேட்கிற

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1985 ஜூன் 18

போது அவர்கள் உதவி இயக்குநர் கொடுத்த சான்றிதழ் மீது கொஞ்சம் கடன் கொடுக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல 8½ சதவீதமல்ல; 7½ சதவீதம் தான் அவர்கள் வட்டி கொடுக்கிறார்கள். அது கூட கடினம் என்று தான் நாங்கள் உணர்ந்திருக்கிறோம். பொதுவாக கோ-ஆப்டெக்ஸ் கொள்முதல் செய்யும் துணிகளுக்கு உடனடியாக பட்டுவாடா செய்வதைப்போல ஒரு புதிய முறையிலே, 'ரிவால்விங் பண்ட்' என்கிற முறையில் கொஞ்சம் முதலீடு செய்து, மத்திய அரசையும் கூட்டாக முதலீடு செய்யச் சொல்லி, துணி கொள்முதல் செய்தவுடன் கூடுமானவரையில் ஒரு மாதத்திற்குள் அதைத் திருப்பிக் கொடுப்பதற்கான திட்டத்தை இப்போது தயாரித்துக் கொண்டிருக்கிறோம். அந்த முறை அடுத்த ஆண்டிற்குள் கடைப்பிடிக்கப்பட்டு துணி கொடுத்தால் வரவேண்டிய பணம் கோ-ஆப்டெக்சில் தேங்காமல் இருப்பதை நாம் கவனித்துக் கொள்ளலாம்.

அடுத்து கோ-ஆப்டெக்சின் 600-க்கு மேற்பட்ட விற்பனை நிலையங்கள் மூலமாக 420 ரகத் துணிகளை, ஆண்டு ஒன்றுக்கு 100 கோடி ரூபாய் பெறுமானமுள்ள துணிகளை தற்போது அது கொள்முதல் செய்கிறது. அதைக்கூட வருகிற 1—7—1985 முதல் கம்ப்யூட்டர் மூலம் நவீன முறையில் எந்தெந்த மாவட்டத்திற்கு எந்தெந்த துணிகள் வாங்கப்படுகிறது; எந்தெந்தத் துணிகளுக்கு கிராக்கி இருக்கிறது என்பதைப் பார்த்து, அவர்களுக்கு முன்கூட்டியே மூன்று மாதங்களுக்கு முன்னதாக கம்ப்யூட்டர் மூலமாக இந்தெந்த ரகத் துணிகளை இந்த இந்த மாவட்டங்களில், இந்த இந்த கைத்தறி நெசவாளர் மையங்களில் தயாரியுங்கள் என்று சொல்லி, அதைக் கொள்முதல் செய்து பிற்பாடு உடனடியாக விற்பனை செய்வதற்கு இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நெசவாளர்களுக்கு தரமாக நூல், நியாயமான விலையில் கிடைப்பதற்கு சுமார் 17 ஆலைகள் தமிழ் நாட்டில் இருக்கின்றன. அதிலே உள்ள நெசவாளர்களின் நிலைமை மிகவும் திருப்திகரமாக இருக்கிறது. அவர்களுக்கு பல்வேறு வசதிகள் கிடைப்பதுடன் அவர்களுடைய மாத சம்பள விகிதம் இந்தியாவில் மற்ற மாநிலங்களில் கிடைப்பதை விட தமிழ்நாட்டில் தான் அதிகமாக இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்கு கொண்டு வர கடமைப் பட்டிருக்கிறேன். 1983 ஆம் ஆண்டு அகமதாபாத்தில் கூட்டுறவு



1985 ஜூன் 18] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

நூற்பாலையில் வேலை செய்கிற தொழிலாளிக்கு கிடைத்தது ரூ. 1,110 ஆகும்; பம்பாயில் ஒரு தொழிலாளி பெறுகிற சம்பளம் ரூ. 1,199 ஆகும். தமிழ் நாட்டில் தொழிலாளி பெறுவது 1,225 ரூபாயாகும். மேற்கு வங்கத்தில் ரூ. 859 ஆகும். இந்த முறையில் தமிழ்நாட்டில் நூற்பாலைகளின் வேலை செய்கிற நிரந்தரமான தொழிலாளியின் மாத சம்பளம் அதிகமாக இருக்கிறது. அது மாத்திரமல்லாமல் அந்தக் கூட்டுறவு நூற்பாலைகளில், மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் தெரிவித்ததைப் போல இலங்கையிலிருந்து வந்த அகதிகளுக்கும், ஆதிதிராவிட மக்களுக்கும், பிற்பட்ட மக்களுக்கும் நல்ல வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

அடுத்து கோ-ஆப்டெக்ஸ் கொள்முதலைப் பற்றி சொன்னார்கள். கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் நான் பொறுப்பேற்ற பிறகு முதலில் 16½கோடி ரூபாயும், பிற்பாடு 7½ கோடி ரூபாயும், அதற்குப் பிறகு 15 நாட்களில் விற்ற துணிகளின் மதிப்பு ரூ. 40 கோடியாகும். மொத்தம் மூன்று, நான்கு மாதங்களில் 64 கோடி ரூபாய் பெறுமானமுள்ள துணிகளை விற்றிருக்கிறது. இந்த 15 நாட்களில் 20 சதவீதம் கழிவு பிரகாரம் மாநிலத்தில் விற்ற துணிகளின் மதிப்பு இதுவரையில் சரித்திரத்திலே இந்தியாவில் எந்த மாநிலத்திலும் விற்காத அளவுக்கு 40 கோடி ரூபாய் அளவிற்கு விற்றிருக்கிறது.

(பிற்பகல் 1-50)

அடுத்து, சாதாரணமாக கைத்தறி நெசவாளர்கள் உபயோகப் படுத்துகிற அந்த கைத்தறி கருவி கிட்டத்தட்ட 30 சதவீதம் தான் திறமை உள்ளதென்றும், அதனால் உற்பத்தியை பெருக்க முடியவில்லை என்றும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதனால் அதனை நவீன மயமாக்கும் முயற்சியில் ஈடுபட்டு அதிலே சர்க்கார் பணத்தை அதிகமாக செலவு செய்து கொண்டிருக் கிறார்கள். நலிந்த ஆலைகள் என்ற முறையில் தமிழ் நாடு சர்க்கார் பின்னி ஆலை, காவேரி கூட்டுறவு ஸ்பின்னிங் மில்ஸ், சோமசுந்தரம் ஸ்பின்னிங் மில்ஸ் போன்ற ஆலைகளை அவர்களுக்கு உறுதி யளித்து அவற்றை நிர்வகித்து வருகிறது. குறிப்பாக புதுக்கோட்டை மாவட்டம் மிகவும் பிற்பட்ட மாவட்டமாக இருப்பதால் காவேரி மில்ஸ்ஸை எடுத்திருக்கிறது. இதுபோன்று பல்வேறு நலிந்த ஆலைகளை தமிழக அரசு நேஷனல் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷனைப் போன்று நடத்துகிறது. தொழிலாளர்களுடைய வேலை பாதுகாப்பிற்காகவும்,

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1985 ஜுன் 18

உறுதிக்காகவும் அவற்றை அரசு நடத்துகிறது. குறிப்பாக புதுக்கோட்டையில் உள்ள காவிரி ஸ்பின்னிங் நூற்பாலையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நாட்டுடைமையாக்கலாமா என்று தீவிரமாக யோசனை செய்துகொண்டிருக்கிறார்கள். 30—6—1985 இந்த மாத இறுதிக்குள் அதற்குக் கொடுத்த காலக்கெடு தேதி முடிவு அடைவதால், வெகுவிரைவில் அந்த நூற்பாலையை— அது பிற்பட்ட மாவட்டமாக இருப்பதாலேயும், இது சுமார் 10½ கோடி ரூபாய் மதிப்புள்ளதாக இருப்பதாலும், இதுபோன்ற ஒரு புதிய ஆலையைத் துவங்க இனி முடியாது என்பதாலும்— மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதை நாட்டுடைமையாக்க தீவிரமாக யோசித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல பேர்கள் நெசவாளர்களுடைய கூலிப் பிரச்சனையைப் பற்றிச் சொன்னார்கள். நெசவாளர்கள் குறைந்தபட்சக் கூலியை நிர்ணயித்ததே மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் காலத்தில் தான் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அரசு சட்டங்களை அறிவிக்குமே தவிர, அதை அமுல்படுத்தாது என்று மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் சொன்னார்கள். இந்தக் குறைந்தபட்சக் கூலிச் சட்டத்தின் மூலம் எவ்வளவு பெற வேண்டுமோ, அதைவிட 20 சதவீதம் அதிகமான கூலியை, எனக்குத் தெரிந்த வரையில் காஞ்சிபுரம், திருச்சி, புவனகிரி குடியாத்தம் மற்றும் சேலம் போன்ற பல்வேறு ஊர்களில் அவர்கள் பெற்றுக்கொண்டு இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

கூட்டுறவுத் துறைக்கு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து அந்தச் சட்டம் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் செல்லாது அதை அமுல்படுத்த முடியாமல் இருப்பதாகச் சொன்னார்கள். எனக்கு அப்படி இருப்பதாகத் தெரியவில்லை எனவே இந்தக் குறைந்தபட்சக் கூலிச் சட்டத்தை அமுல்படுத்துவதே, இந்த கூட்டுறவு ஸ்தாபனங்கள் என்பதையும், தற்போது குறைந்தபட்சக் கூலியை விட அதிகமாக 20 சதவீதம் கொடுக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



1985 ஜுன் 18] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

இன்னொன்று. 1981 ஆம் ஆண்டு பொதுவாக கூட்டுறவுத் துறையிலே உள்ளவர்களுக்கும், கூட்டுறவுத் துறையில் அல்லாத நெசவாளர்களுடைய வேலை முறையை, பணிமுறையை சீர் செய்வதற்காக, முன்னேற்றம் அடைவதற்காக ஒரு சட்டத்தை தமிழ்நாடு அரசு கொண்டுவந்தது, அது அப்படியே இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் முத்துராமலிங்கம் அவர்கள் சொன்னார்கள். அந்தச் சட்டம் 1981 ஆம் ஆண்டு இயற்றப்பட்டு, ஹைகோர்ட்டிலே, — முதலிலே ஒரு நீதிபதி கொடுத்த தீர்ப்பை எதிர்த்து, ஹைகோர்ட்டிலே ஒரு ரிட் பெஞ்ச் என்ற முறையில் போட்டார்கள். ரிட் அப்பீலிலே தோற்று, இன்றைக்கு தமிழக அரசுக்கு சாதகமாக அந்த உத்தரவு இருக்கிறது. எனவே 1981 ஆம் ஆண்டிலே நெசவாளத் தொழிலாளர்களுடைய நலனின் பாதுகாப்பிற்காக ஏற்படுத்தப்பட்ட சட்டத்தை அமுல் படுத்துவதில் எந்தவித சங்கடமும் இல்லை. அதை நிச்சயமாக அமுல்படுத்த சர்க்கார் முன்வரும் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் முத்துராமலிங்கம் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அதாவது ராமச்சந்திர மூர்த்தி ஸ்பரிசம் பெற்றவுடன் அகலிகை பெண்ணானாள் என்று சொல்லி, மீண்டும் அந்தப் பெண் கல்லானாள் என்று சொன்னார்கள். ராமச்சந்திரமூர்த்தி ஸ்பரிசம் பெற்ற உடன் கல்லாயிருந்த அகலிகை பெண்ணாக ஆனாள். அவள் அப்படியேத் தான் இருக்கிறார்கள். மீண்டும் அவள் கல்லாக ஆகவில்லை. எனவே கல்லாக ஆக சாபம் கொடுக்க வேண்டாம் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, வீடு கட்டும் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். இந்த திட்டத்தின்கீழ் கொடுக்கப்படுகின்ற 12 ஆயிரம் ரூபாயில் 9,700 ரூபாயை ஹட்கோ மூலமாகவும், மீதி இருக்கக்கூடிய தொகையில் ஆயிரம் ரூபாயை அரசு மானியமாகவும், மற்றும் 1,300 ரூபாயை பயனடையும் நெசவாளர்கள் கொடுக்கவேண்டும் என்றும் திட்டம் இருந்தது. இப்போது மத்திய சர்க்கார் புதிதாக அறிவித்து இருக்கிற ஜவுளிக் கொள்கையின் பிரகாரம் அவர்கள் தாங்களும் மேலும் ஆயிரம் ரூபாய் மானியமாக மாநில அரசு கொடுப்பதைப் போல, கொடுப்பதற்கு முன் வந்திருக்கிறார்கள். அத்துடன் குடியிருக்கிற இடத்திலே, கைத்தறித்

துணியைத் தயாரிக்கிற கருவிகள், செட்டுகள் இருப்பது நல்லது என்று சொன்னார்கள். அதற்கும் புதிதாக ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதன்படி ஒரு செட் போடுவதற்கு 3 ஆயிரம் ரூபாய் கொடுக்கலாம் என்று மத்திய அரசு அந்த ஜவுளிக் கொள்கையில் அறிவித்திருக்கிறது. அத்துடன் கிராமப் புறங்களில் வீடு கட்டுபவர்களுக்கு 6,000 ரூபாய் என்று சொல்லி யிருக்கிறார்கள், கிராமப்புறங்களில் 6 ஆயிரம் ரூபாய் வீடு கட்டு வதற்கும், 3 ஆயிரம் ரூபாய் செட் போடுவதற்கும், ஆக 9 ஆயிரம் ரூபாய் அளவிலே வீடு கட்ட, அந்த செட் போட, இரண்டுக்கும் கொடுப்பதற்கு ஒரு திட்டம் வந்து கொண்டிருக்கிறது.

அதைப்போலவே நகர்ப்புறங்களில் இருப்பவர்களுக்கு ஏற்கனவே அவர்கள் 12 ஆயிரம் ரூபாய்க்கு வீடு கட்டுகின்ற திட்டத்தின் மூலம் செட் போட்டுக் கொள்ளலாம் என்றால், மேலும் 3 ஆயிரம் ரூபாய் பெற்று, 15 ஆயிரம் ரூபாய் பெறும் அளவிற்கு இப்போது கொள்கையிருக்கிறது. இதைப் பற்றி மாநில அரசு ஆய்ந்து மத்திய அரசோடு தொடர்பு கொண்டு, அந்த மாதிரியான நல்ல திட்டங்களை அமுல்படுத்த முன்வரும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கைத்தறித் துணி மேலும் சிறப்பாக தயாரிப்பதற்கு, புதிய யுக்திகள் தேவை என்று உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். அந்த முறையில் தமிழ்நாட்டில் புதிதாக ஹாங்காங், தைவான், ஜப்பான் போன்ற நாடுகளில் உள்ளதைப் போல, ஒரு பேசன் இன்ஸ்டிடியூட், பள்ளியை சென்னையில் ஏற்படுத்த நாம் திட்ட மிட்டுக்கொண்டு இருக்கிறோம். ஏற்கனவே நெசவாளர்கள் இறந்துவிட்டால் 3 ஆயிரம் ரூபாய் கொடுத்து வந்தார்கள், அதை உயர்த்தவேண்டும் என்று சொன்னார்கள். நடைமுறை ஆண்டு கோ-ஆப்டெக்சினுடைய பொன்விழா ஆண்டாக இருப்பதால், 1—4—1984 முதல் நெசவாளர்கள் இறந்துவிட்டால், 3 ஆயிரம் ரூபாயுடன், கோ-ஆப்டெக்ஸ் 2 ஆயிரம் ரூபாய் கொடுத்து, அவர்கள் 5 ஆயிரம் ரூபாய் பெறும்படியான உத்தரவு ஒன்று பிறப்பிக்கப்படும்.





அத்துடன் பெரிய வளாகங்கள் வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம் போன்றவர்கள் சொன் னார்கள். மேலும் சூரத்திலே உள்ள மார்க்கெட்டைப் பார்க்க வேண்டும் என்று சொன்னார்கள் நான் பார்க்கவில்லை. பார்த்த பலர் சொன்னார்கள். அதைப் போல தமிழ்நாட்டில் தற்போது சென்னையில் கோ-ஆப்டெக்ஸ் ஸ்தாபனம் உள்ள அந்த மைதானத்தில் பல அடுக்கு மாடிகளைக் கொண்ட ஒரு பெரிய எல்லாவிதமான கடைகளைக் கொண்ட, பாலியஸ்டர், பட்டு, பருத்தி, இன்னும் சர்வீஸ் சென்டர்ஸ், என்று சொல்கிற வீவர்ஸ் சர்வீஸ் சென்டர்ஸ் என்று மத்திய சர்க்காரில் இருக்கிற அந்த சர்வீஸ் சென்டர்களையும் இங்கே கொண்டுவந்து பேசன் இன்ஸ்டிடியூட்டையும் இங்கே கொண்டுவந்து, அயல்நாட்டவர் களும் மற்ற மாநிலத்தில் உள்ளவர்களும் வந்தாலும் கூட தங்குவதற்கு நல்ல ஹோட்டல் வசதிகளுடன், கட்டும்படியான, முடிந்தால் பெரிய அகில இந்திய அல்லது வோர்ல்ட் பேர் அல்லது டிரேட் நடத்துவது போல் அந்த இடத்தை உயர்த்துவதற்கு இப்போது திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

அதைப்போலவே அண்ணா சாலையில் இதுவரை ஆலை முதலாளிகளுடைய துணிகளை காண்பிக்கிற கடைகள்தான் இருந்தன. விற்பனை நிலையங்கள் இருக்கின்றன. ஆனால் இந்த வருஷத்தில் நம்முடைய காதி கிராப்ட் அண்ணா சாலையிலே அதற்குப் பக்கத்திலே உள்ள இடத்திலே கோ-ஆப்டெக்சுக்குச் சொந்தமான இடத்தில்—இப்போதுதான் ஹைகோர்ட்டினுடைய தீர்ப்பிலே இருந்து, 21 வருடம் போராடி அந்த இடத்தைப் பெற இருக்கிறோம், அந்த இடத்திலே ஒரு பல அடுக்கு மாளிகை விற்பனை நிலையம் கட்டுவதற்கு ஏற்பாடும் செய்யப்படும்.

அதைப்போல கரூர் ஈரோடு போன்ற இடங்களில் மார்க்கெட் காம்ப்ளெக்ஸ் கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுக்கொண்டு இருக்கின்றன. இப்போது கைத்தறித் துணி விற்காமல் இருப்பதற்கும் பினிசிங்தான் காரணம் என்று சொல்கிறார்கள். முதலிலே ஸ்பின்னிங், வீவிங், பிறகு பினிசிங் என்று சொல்கிறார்கள். இந்த ஸ்பின்னிங் பிரட் என்று சொன்னால், வீவிங் பட்டர் என்றும், பினிசிங் ஜாம் என்றும் ஆங்கிலத்திலே சொல்கிறார்கள். சரியானபடி பினிசிங் பண்ணாததாலேதான்

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1985 ஜூன் 18

மிருதுவாகவும், நன்றாகவும் இல்லாததினால்தான் கைத்தறித் துணிகள் ஏற்றுமதி ஆகாமல் உள்நாட்டில் விலை போகாமல் இருக்கிறது என்பதை உத்தேசித்து, இந்தியாவிலே யாரும் ஏற்படுத்தாத அளவிற்கு தற்போது கோ-ஆப்டெக்சும் தனியாரும், தங்களுடைய துணிகளை பதனிடுவதற்கு, பிராசஸ் செய்வதற்கு பிரிண்ட் செய்வதற்காக அகமதாபாத்திற்கும், சூரத்திற்கும், பம்பாய்க்கும் செல்லுகிறார்கள். அந்த முறைகளைத் தவிர்த்து, தமிழ்நாட்டிலே ஒரு நவீனமயமான பிராசசிங் அன்ட் ஆரின்டிங் யூனிட் ஒன்றை ஏற்படுத்துவதற்கு சர்க்கார் இப்போது திட்டம் தயாரித்துக் கொண்டு இருக்கிறது.

அதைப்போலவே ஜரிகையைப் பற்றிச் சொன்னார்கள். பட்டுப் புடவையைப் பொறுத்தவரையில், பட்டு நூலை எடுத்துக் கூட பவர் காம்ப்ளக்ஸ் உள்ளவர்கள் விசைத் தறியிலே பட்டு புடவையைத் தயாரிக்க ஆரம்பித்துவிட்டார்கள். அதனால் மார்க்கெட்டிலே பட்டு நூலின் விலை அதிகமாகிவிட்டது, அது கிடைக்காமல் போய்விட்டது. ஆகவே பட்டு நூலை தமிழ்நாட்டிலுள்ள பருத்தி நூல் வழங்கும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் நேரடியாக இறக்குமதி செய்து, அந்தப் பட்டுத் துணி தயாரிப்புத் தொழிலுக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் படும். அதைப்போல ஜரிகை தயாரிக்கின்றவர்கள் இந்தியாவிலே 6 பேர்கள் உள்ள ஒரு குடும்பமாகத்தான் இந்தத் தொழிலை தங்களுடைய கையில் வைத்துக் கொண்டு வேறு யாருக்கும் சொல்லாமல் இருக்கிறார்கள். அதை மாற்றி, எப்படியாவது நடைமுறை ஆண்டுக்குள் காஞ்சிபுரத்திலுள்ளது போல், கூட்டுறவையிலும், ஆரணியிலும் மாதம் ஒன்றுக்கு ஆயிரம் மார்க் ஜரிகையினை உற்பத்தி செய்யக்கூடிய அளவுக்கு தொழிற்சாலைகள் துவக்கப்படும். அத்துடன் வெள்ளியை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு கம்பியாக இழுப்பது தற்போது காஞ்சிபுரத்திலே நடைபெறவில்லை. ஆகவே, கம்பியையும்—ஜரிகை தயாரிப்பதற்குத் தேவையான கம்பியையும் இழுப்பதற்குத் தேவையான நவீனக் கருவிகளையும், அந்த மூன்று இடங்களிலேயும் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.



1985 ஜூன் 18] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

(பிற்பகல் 2-00)

தமிழ்நாட்டில் தயாரிக்கப்படும் பாலியஸ்டர் துணிக்கு தேவைப்படுகிற பாலியஸ்டர் நூல் சுமார் 50 டன் ஆகும். அந்த 50 டன்னில், தமிழ் நாட்டினுடைய கூட்டுறவு நூற்பாலைகள் சுமார் 25 டன்னை தயாரித்து விநியோகிக்கிறார்கள். மீதி 25 டன் பாலியஸ்டர் நூலுக்கு, தமிழ்நாட்டில் ஒரு நல்ல நவீனமய மான பாலியஸ்டர் நூல்கள் தயாரிக்கிற ஆலையைத் துவக்கு வதற்கும் திட்டம் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

ஏற்கனவே கோ-ஆப்டெக்ஸ்-க்குத் தேவையான பணத்தையும், இன்னும் அந்தத் தொழிலாளர்களுக்குத் தேவையான பணத்தை யும் மத்திய அரசு கொடுத்து உதவிடவேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டேன். மத்திய அரசு நலிந்து போன ஆலைகள், ஆலைகளிலே வேலை செய்யும் தொழிலாளிகள், 1½ இலட்சம் பேருக்கு பாதுகாப்புக் கொடுப்பது என்ற முறையில், ஆண்டு ஒன்றுக்கு 100 கோடி ரூபாயைச் செலவழிக்கிறது. ஆனால், கைத்தறி நெசவாளர்கள் சுமார் 50 இலட்சம் பேர் இருக் கிறார்கள். அந்த 50 இலட்சம் பேர்களுடைய கவலையை அவர்கள் ஏற்கவில்லை. ஆகவே, 1½ இலட்சம் தொழிலாளர் களுக்கு, நோய்வாய்ப்பட்டு ஆலையிலே வேலை செய்கிறவர் களுக்கு செலவு செய்கிற மத்திய சர்க்கார் இந்த நெசவாளர்கள் 50 லட்சம் பேருக்கு எதுவும் செய்ய இல்லை. பல உறுப்பினர்கள் சொன்னதைப் போன்று 1,500 ரூபாய் செலவு செய்தால் மாதம் 400 ரூபாய் சம்பளம் பெறுகிற ஒரு தொழிலை இன்றையதினம் உற்பத்தி செய்யலாம். பட்டை தயாரிக்கும் தொழிலாளிக்கு, நெசவாளிக்கு 800 ரூபாய் கிடைக்கும். மின் சக்தி கூட தேவை யில்லை. இவ்வளவு அற்புதமான தொழிலைக் காப்பாற்றுவதற்கு, மத்திய அரசு பணத்தை அதிகமாக ஒதுக்கவேண்டும். அவர்கள் இந்த ஆண்டு பிளான் அலோகேஷனில் ஒதுக்கிய தொகை 30 கோடி ஆகும். அந்த 30 கோடியைப் பிரித்துக் கொடுத்தால் ஒரு நபருக்கு 60 ரூபாய்தான் வரும். எனவே, குறைந்தது 250 கோடி ரூபாயை மத்திய சர்க்கார் பிளான் அலோகேஷனிலே செய்ய வேண்டும்.

மாநில சர்க்கார் தன்னுடைய அரசாங்கத்தின் துறைகளில் வேலை செய்கிறவர்களுக்கு 'கிரெடிட் சேல்-இல் துணிகளைக் கொடுக்கிறார்கள். அதைப் போல மத்திய சர்க்காரிலே பணி செய்கிற அலுவலர்கள் கிரெடிட் சேலில் கைத்தறித் துணி வாங்கத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் மத்திய சர்க்கார் அதற்கு அனுமதி வழங்க மறுத்துக் கொண்டிருக்கிறார்கள். மத்திய சர்க்காரே பாதுகாப்பு இலாகாவுக்கும், ராணுவ இலாகாவுக்கும் மற்றும் அது சம்பந்தப்பட்ட பொதுத் துறைக்கும் தேவையான துணிகளை உபயோகிக்க வாங்குவதுடன், மத்திய சர்க்காரிலே பணிபுரிகிற பல்வேறு அலுவலர்களை கிரெடிட் சேலிலே கூட்டுறவுத் துணிகளை வாங்குவதற்கு அனுமதி அளித்தால் நிச்சயமாகக் கூட்டுறவுத் துணிகள் தேங்கியிருக்காது. மேலும் ஒரு சட்டத்தின் மூலம், மத்திய சர்க்கார் 175 வகையான பொருட்களைக் குறிப்பிட்டு, 'ஸ்மால் இண்டஸ்டிரீஸ்' சிறு தொழில்கள் தான் அதைத் தயாரிக்க வேண்டும் என்றும், அவர்கள் தயாரிக்கிறதை அரசாங்கமே வாங்கவேண்டும் என்றும் உத்தாவினைப் போட்டு இருக்கிறார்கள். அந்த மாதிரி உத்தரவின்கீழ் இதையும் ஒரு சிறு தொழிலாகக் கருதி தயாரிக்கின்ற கைத்தறித் துணியை அரசாங்கம் வாங்கவேண்டும் என்று ஆணை பிறப்பிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

60 நாள் ரிபேட்டைப் பொறுத்தவரையில் அதை மேலும் நீடிக்கிறார்களோ இல்லையோ, தயவுசெய்து மத்திய அரசு 60 நாளைக்குக் கீழ் குறைக்காமல் இருக்க வேண்டும் என்று நாங்கள் கேட்டுக் கொண்டு இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்களும் அதனை வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கைத்தறித் துணிப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், வெட்டுத் தீர்மானங்கள் பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்து இருக்கிறார்கள். அவர்கள் கூறிய பல்வேறு பிரச்சினைகளுக்கு நான் பதில் அளித்த இருக்கிறேன். சில இடங்களில் தனியாக ஆலை ஏற்படுத்தவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள் கேட்டார்கள். ஆனால் ...சரத்திலே ஏற்கனவே உள்ள ஆலை மிகப் பழமையானது. அதற்கு 1 கோடி செலவில் நவீனமயமாக்கத் திட்டம் இட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்து. இந்தத் திட்டம் முடிவடைந்தவுடன் விஸ்தரிக்கிற யோசனையைச் செய்யலாம்.





பல்வேறு மாவட்டங்களில், மாவட்டந்தோறும் ஒரு நூற்பாலை வேண்டும் என்று சொன்னார்கள். கிட்டத்தட்ட எல்லா மாவட்டங்களிலேயும், சென்னை, நீலகிரி, கோவை போன்ற மாவட்டங்கள் தவிர, அது இருக்கிறது. ஆகவே, எல்லா இடங்களிலும் நூற்பாலைகள் இருக்கின்றன. நம் தமிழ்நாட்டில் கைத்தறி நெசவுக்குத் தேவையான நூலைப் போல், 2 மடங்குக்கு மேல் உற்பத்தி செய்கிறோம். ஆகவே, அதை யோசித்து, புதிதாக நூற்பாலை துவங்க, உங்களுடன் கலந்து யோசித்து, நடவடிக்கை எடுக்கலாம் என்று சொல்லி, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்த வெட்டுப் பிரேரணைகளைத் திரும்பப் பெற்றுக் கொண்டு இந்த மானியக் கோரிக்கையை ஒருமனதாக நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். வணக்கம்.

**திரு. கு. வடிவேல்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறி மானியத்தைப் பொறுத்தவரையிலும் நம்முடைய அமைச்சரவர்கள் சொல்லிய பதிலிலே ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். இந்தக் கைத்தறித் தொழிலே நசிந்து போகின்ற அளவிற்கு அரசாங்கம் ஒரு உத்தரவைப் போட்டிருக்கிறது. அதாவது, கரூர் என்று சொன்னால் கைத்தறிக்குப் பெயர்போன ஊர்; அந்தப் பகுதியிலே மட்டுமல்லாமல் தமிழகத்திலுள்ள கைத்தறி நெசவுத் தொழிலில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும், சாயம் போடக் கூடிய அந்தக் தொழிற்சாலைகளிலே, சாயக் கூலிக்கு என்று வரி போடுகிறார்கள். அதுகூட போட்டு ஒரு ஆண்டுக் காலம் ஆகிறது என்று நினைக்கிறேன். அந்த வரியை நம்முடைய அரசும், அமைச்சரவர்களும் பரிசீலனை செய்து அதை ரத்து செய்ய முன்வருவார்களா? அப்படி ரத்து செய்தால்தான் அந்தத் தொழில் பிழைக்கும். அப்படி ரத்து செய்யவில்லை என்றால் கைத்தறித் தொழில் இன்னும் நசிந்து கொண்டேதான் இருக்குமே தவிர வளர்ச்சிக்கு இடமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கு. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, பஞ்சாலை முதலாளிகளுக்கு ஆதரவாகவும், பொதுத் துறைக்கு எதிராகவும் மத்திய அரசு அறிவித்துள்ள புதிய ஜவுளிக்

[திரு. கு. சுப்பராயன்] [1985 ஜூன் 18

கொள்கைப்பற்றி மாநில அரசின் கொள்கை நிலை என்ன என்பதை அறிய விரும்புகிறேன். அதுபற்றிய விளக்கத்தை அமைச்சரவர்கள் சொல்லவில்லை.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றைக்குக் கைத்தறி மானியமாக இருப்பதால் சட்ட மன்ற உறுப்பினர்கள் அவ்வளவு பேர்களுக்கும் ஒரு டவலும், லுங்கியும், மற்றும் பையும் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இப்பொழுதே மணி 2-க்கும் மேல் ஆகிவிட்டது (மணியடிக்கப் பெற்றது).

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்திய அரசின் புதிய ஜவுளிக் கொள்கையில் சரியான விளக்கங்கள் இல்லை. Co-existence of power looms, mills and handloom sector என்ற முறையில் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதிலே பல புதிர்கள் இருக்கின்றன. அதை இதுவரையில் ஆலை முதலாளிச் சங்கமும், விசைத்தறிச் சங்கமும்தான் வரவேற்றிருக்கின்றனவே தவிர, கைத்தறி நெசவாளர் சங்கம் எதுவும் வரவேற்க வில்லை என்பதிலேயிருந்தே நீங்கள் இந்த அரசாங்கத்தின் கொள்கையைப் புரிந்துகொள்ளலாம். ஏற்கனவே முதலமைச் சருடன் கலந்து கொண்டிருக்கிறேன். அந்த முறையில் நிச்சய மாக அரசின் கொள்கையைப்பற்றி அடுத்த வாரம் நான் அறிக்கை சமர்ப்பிப்பேன் என்று சொல்லிக்கொள்கிறேன்.

கடைசியில், மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதைப்போல, புதிதாக டை-ஒர்க்ஸ் என்ற முறையில் புதிதாக ஒரு வரி போடப் பட்டது. அந்த வரி போடப்பட்டதே தவிர, அந்த வரி அமல் படுத்தப்படாமல், போட்ட நாளிலேயிருந்து, சென்னை ஹைகோர்ட்டில் வழக்கு போட்டு தடை வாங்கியிருக்கிறார்கள். ஆகவே, அமலுக்கு வராத சட்டத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் கவலைப்பட வேண்டாம். பல்வேறு வரிகளை, எப்படிச் சலுகைகளைத் தரலாம், எடுக்கலாம் என்பது பற்றி எல்லோரும் சேர்ந்து முடிவு எடுக்கலாம். வணக்கம்.



1985 ஜூன் 18]

***திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தக் கதர்—கிராமத் தொழில் மானியக் கோரிக்கையில் 15 உறுப்பினர்கள் தங்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். இதில் தமிழ் நாட்டிலுள்ள ஏழை எளிய மக்கள், நலிந்த மக்கள்—அவர்களுடைய வாழ்வை வளம் பெறச் செய்யவும், அவர்களுடைய ஏழ்மை நிலையைப் போக்கவும் அண்ணல் காந்தியடிகளார் அவர்கள் ஒரு சில திட்டங்களைத் தீட்டித் தந்துள்ளார்கள். அந்தத் திட்டத்தின்படி பேரறிஞர் அண்ணா அவர்கள் தன்னுடைய ஆட்சிக் காலத்தில் மக்களுக்குத் தேவையான தொழில்களையெல்லாம் கொண்டு வந்து அந்தத் தொழிலுக்குத் தேவையான ஊக்கத்தையும் ஆக்கத்தையும் காட்டிச் சென்றுள்ளார். அதனை அடிப்படையாகக் கொண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் இன்றையதினம் இதில் தனிக் கவனம் செலுத்தி, மக்களுக்குத் தேவையான அவர்களுடைய பொருளாதார வளர்ச்சியில் மிகவும் அக்கறை கொண்டு கதர்—கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் பல்வேறு கிராமத் தொழில்களைக் கொண்டு வந்து அதன்மூலம் அவர்களுக்குத் தேவையான தொழில்களை உண்டாக்கி அவர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பும் அளித்து, அவர்களுக்கு இந்தத் தொழில் திறன் ஓங்க வேண்டும் என்ற வகையில் இன்றையதினம் கதர்—கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் செயலாற்றிக்கொண்டிருக்கிறார் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுவரை கதர்—கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் 6.13 இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப் பட்டிருக்கின்றது. இந்த மானியக் கோரிக்கையில் கலந்து கொண்டு பேசிய உறுப்பினர்கள்கூட, இன்னும் பல்வேறு கிராமங்களிலே கிராமிய நூற்பு நிலையம் அதிகமாக ஆரம்பிக்க வேண்டும் என்ற கோரிக்கையை எல்லாம் வைத்திருக்கிறார்கள். இதுநாள் வரை தமிழ் நாட்டில் உள்ள பல கிராமங்களில் 566 கிராமிய நூற்பு நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அவை மூலம் 16,980 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப் பட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி] [1985 ஜூன் 18

(பிற்பகல் 2-10)

1985-86 ஆம் ஆண்டில் சுமார் 63 கிராமிய நூற்பு நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டு அதன்மூலம் 1,890 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள் கிறேன்.

மேலும் இப்பொழுது தமிழ்நாட்டிலுள்ள கிராமங்களில் நேபாளி தறிக்கூடங்கள் அமைக்கப்பட்டு, அந்த நேபாளி தறிக் கூடங்கள் நல்லமுறையில் செயலாற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதுவரை அரசின் பல்வேறு சிறப்புத் திட்டத்தின் மூலம் 52 நேபாளி தறி அலகு களும் கதராணைக் குழு மூலம் 16 தறி அலகுகளும் ஆக மொத்தம் 68 அனுமதிக்கப்பட்டு, அவற்றை அமைத்து ஆரம்பிக்க துரித ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இந்த 68 அலகுகள் மூலம் 5,440 நபர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்துகிற அளவுக்கு இருக்கிறது. ஒரு நேபாளி தறி அலகுக்காக, சுமார் ரூ. 7½ இலட்சம் வீதம் 63 அலகுகளுக்கும் ரூ. 518 இலட்சம் அரசின் பல்வேறு திட்டங்களின் மூலம் செயல்பட இருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். வெளிநாட்டிற்குக் கைவினைப் பொருட்கள் ஏற்றுமதி செய்யும் நிறுவனம் மூலம் அலகுகளினால் இதுவரை வெளிநாட்டிற்கு ரூ. 20 இலட்சம் மதிப்புள்ள கதர்த் துணிகள் ஏற்றுமதி செய்யப் பட்டிருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் கிராமங்களில் கைமுறை காகிதத் தொழில் நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டு அதன்மூலம் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. தமிழகத்தில் 10 கைமுறை காகித ஆலைகள் சிறப்பான முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. மேலும் சிறப்புத் திட்டத்தின் கீழ் [illegible]களுக்காக 15 நிலையங்கள் அனுமதிக்கப் பட்டிருக்கின்றன. இதன்மூலம் சுமார் 1,500 அரிசன மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட இருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.





1985 ஜூன் 18] [திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி]

இன்றையதினம் தமிழக அரசு இலவச சீருடை வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்துள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் 110 இலட்சம் மீட்டர் துணிகளில் கதர்த் துணியும் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. தமிழக அரசின் ஒத்துழைப்பின் மூலம் இத்தகைய பெரும் விற்பனை செய்யும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இன்று இத்துறை சோப்பு அலகுகளின் மூலமும் வேலைவாய்ப்பு அளித்து வருகிறது. இதுவரை 38 சோப்பு அலகுகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவைகள் மூலம் ரூ. 355 இலட்சம் மதிப்புக்கு சோப்பு உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இங்கு உற்பத்தி ஆகும் கோபுரம் மார்க் துணி துவைக்கும் சோப்புக்கு கேரளம் போன்ற வெளி மாநிலங்களில் கிராக்கி உள்ளன. குளியல் சோப்பு உற்பத்தி அலகு ஒன்று திருக்கழுக்குன்றத்தில் செயல்பட்டு வருகிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

காலணி தைக்கும் தொழிலாளர்களுக்கும் பல்வேறு வகையில் கதர்—கிராம வாரியம் உதவி செய்து வருகிறது. அந்த வகையில் இதுவரை 4,802 காலணி தொழிலாளர்களுக்கு ரூ. 1¼ இலட்சமும், 1,403 தோல் பதனிடும் தொழிலாளர்களுக்குச் சுமார் ரூ. 50 இலட்சமும் கடன் மற்றும் மானியமாக அரசு மூலம் உதவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், தமிழ்நாட்டில் அதிக பனை மரங்கள் இருக்கின்றன. அந்தப் பனை மரங்களின் மூலம் பல்வேறு பனைப் பொருட்களை உற்பத்தி செய்து, பல பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் பனைப் பொருட்களை உற்பத்தி செய்து, கதர்—கிராமத் தொழில் வாரியம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறது. அந்த வகையில் ஆண்டுதோறும் ரூ. 40 இலட்சம் மதிப்பிற்கு உட்பட்டு பனைப் பொருட்களை வெளிநாடுகளுக்கு இன்று ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி] [1985 ஜூன் 18

ஐந்தாண்டுத் திட்ட மதிப்பீட்டில், 1985–86 ஆம் ஆண்டில் சுமார் 60,000 நபர்களுக்கு பல்வேறு தொழில்களின் மூலம் வேலை வாய்ப்பு அளிக்கின்ற நிலை இருக்கின்றது. அடுத்தாண்டிற்கு மேலும் சுமார் 70,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் கிராமத் தொழில்கள் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் இவ்வாண்டு 60,000 புதிய நபர்கள் பயன்படும் வகையில் சுமார் 22 கோடி ரூபாய் செலவிலும், 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் சுமார் 3 இலட்சம் புதிய நபர்கள் பயன்படும் வகையில் ஏறத்தாழ 90 கோடி ரூபாய்ச் செலவிலும் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும் நமது அரசிடமிருந்து பல்வேறு சிறப்புத் திட்டங்கள் மூலம் கதர்-கிராமத் தொழில் வாரியம் நிதி உதவி பெற்று, செயல்படுத்தி வருகிறது. ஊரக வளர்ச்சித் திட்டம், இளைஞர்கள் சுயவேலைவாய்ப்புத் திட்டம், சிறப்பு கூட்டுத் திட்டம், கிராமத் தொழில் வளர்ச்சித் திட்டம், வறட்சிப் பகுதித் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், அரிசன நலத் திட்டம் ஆகிய திட்டங்களுக்கு டாட்கோ மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சித் துறையிடமிருந்து நிதி உதவி பெற்று, திட்டங்களை நிறைவேற்றி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கையில் 15 மாண்புமிகு உறுப்பினர்கள் கலந்து கொண்டு கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்களிலே இரண்டாவதாகப் பேசிய அருமைச் சகோதரி வளர்மதி அவர்கள் நீலகிரி மாவட்டத்தில் நடத்துவது போன்று கொடைக்கானல், தாண்டிக்குடி பகுதியில் திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். கொடைக்கானல் மற்றும் தாண்டிக்குடி பகுதியில் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. வாரியத்தின் ஆலோசனையின் பேரில் ஏற்கனவே நடைபெறுகின்ற ஒன்று தாண்டிக்குடி பகுதியில் ஒரு தேனி வளர்ப்பு கூட்டுறவுச் சங்கம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு நடைபெற்று வருகிறது. அடுத்து,



1985 ஜூன் 18] [திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி]

கொடைக்கானலில் ஜிரேனியம் எண்ணெய் உற்பத்தி செய்யும் திட்டம் ஒன்று பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் பேசும்போது கதர்த் தொழிலாளர்களுக்கு கூலி நிர்ணயம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை வைத்தார்கள். அவர்களுக்கு நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஏற்கெனவே சட்ட மன்றத்தில் சென்ற பட்ஜெட் கூட்டத்தில் ஒருசில உறுப்பினர்கள் இந்தக் கருத்தை வலியுறுத்திக் கூறினார்கள். அதற்கேற்ப தமிழக அரசு பம்பாயிலுள்ள கதர் ஆணைக் குழுவுக்கு சிபாரிசு செய்ததன் பயனாக 1—4—1985-லிருந்து அவர்களுக்கு கூலி உயர்வு அளிக்கப் பட்டிருக்கிறது. இதற்கு முன்னால் 5 ரூபாய் முதல் 7 ரூபாய் வரை கூலி பெற்று வந்தவர்கள் 1—4—1985 முதல் 9 ரூபாயிலிருந்து 13.50 ரூபாய் வரை அவரவர்களின் திறமையைப் பொறுத்து கூலி பெறுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப் போன்று நெசவு நெய்கிறவர்களுக்கு கூலியை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று ஒரு கோரிக்கையை வைத்தார்கள். இதற்கு முன்னால் நாள் ஒன்றுக்கு 15 ரூபாயிலிருந்து 17 ரூபாய் வரையில் கூலி பெற்று வந்தவர்கள் 1—4—1985 முதல் 17 ரூபாயிலிருந்து 19 ரூபாய் வரை கூலி பெற்று வருகிறார்கள் என்பதையும் இது 10 சதவீதம் முதல் 15 சதவீதம் வரையில் உயர்ந்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் கதர்–கிராமத் தொழில் வாரியத்தில் சோப்பு அலகில் பணியாற்றும் பணியாளர்களுக்கு 5 ரூபாயிலிருந்து 7 ரூபாய் வரை கூலி உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப் போன்று கைமுறை காகித உற்பத்தி அலகு தொழிலாளர்களுக்கும் ஊதியத்தை உயர்த்தி அளிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் அந்தக் கோரிக்கை பரிசீலனை செய்யப்பட்டது. அது இப்போது தொழிலாளர் நீதிமன்றத்தில்

விசாரணையில் உள்ளது. அவர்களுக்கும் கணிசமான அளவு ஊதிய உயர்வு அளிக்க வாரியம் முன்வந்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலாஜி அவர்கள் பேசும்போது ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் கதர்க் கிராமிய நூற்பு நிலையங்களை ஆரம்பிக்க வேண்டுமென்றும், அதன்மூலம் பெண்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்க வேண்டுமென்றும் கோரிக்கை வைத்தார்கள். தற்போதுள்ள 378 ஊராட்சி ஒன்றியங்களில் 304 ஊராட்சி ஒன்றியங்களில் மொத்தம் 566 நூற்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன. மீதமுள்ள 74 ஊராட்சி ஒன்றியங்களிலும் படிப்படியாக கதர்த் திட்டங்களை ஆரம்பிக்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 2-20)

மேலும் திரு. பாலாஜி அவர்கள் பேசுகின்ற நேரத்தில் தஞ்சாவூர் மாவட்டத்தில் மன்னார்குடியில் ஒரு பனைப் பொருள் மையம் அமைக்க அரசுக்கு ஏற்கனவே கருத்து அனுப்பப்பட்டது. அது எந்த நிலையில் இருக்கின்றது என்றும்; எப்போது ஆரம்பிக்கப்படும் என்றும் இங்கே கேள்வியை எழுப்பினார்கள். தஞ்சாவூர் மாவட்டத்தில் மன்னார்குடியில் யுனிசெஃப் நிதியுதவியுடன் 34.31 இலட்சம் ரூபாயில் ஒரு பனைப் பொருள் மையம் அமைக்க அரசுக்குக் கருத்துரு அனுப்பப்பட்டது. இதை சமூக நல வாரியம் பரிசீலித்து பின்னர் தமிழ்நாடு பெண்கள் முன்னேற்றக் கழக நிர்வாக இயக்குநரால் பரிசீலிக்க அங்கு அனுப்பி வைக்கப்பட்டது. அந்தக் கழகம் நிதியுதவி அளிக்க போதிய நிதியில்லை என்று சொல்லி அந்தப் பகுதியிலுள்ளவர்கள் ஆதி திராவிடர்களாக இருப்பின் சிறப்புத் திட்டத்தில் செயல்படுத்த முயற்சித் தெரிவித்துள்ளார்கள். இதன் அடிப்படையில் பனைவெல்ல சம்மேளனமும் இந்தக் கோரிக்கையைப் பரிசீலித்து வருகின்றது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.





மேலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் பேசியபோது கதர்த் துணிகளுக்கு வருடம் முழுவதும் தள்ளுபடி அளிக்க வேண்டும் என்ற கோரிக்கையை எடுத்து வைத்திருக்கிறார்கள். தற்சமயம் தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் 90 நாட்களுக்கு பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார், பெருந்தலைவர் காமராஜர் ஆகியோருடைய பிறந்த நாட்களை ஒட்டியும், காந்தி ஜெயந்தி, தீபாவளி, ரம்சான், கிறிஸ்துமஸ் மற்றும் பொங்கல் ஆகிய பண்டிகைக் காலங்களிலும் 10 சதவீதம் கதர் மற்றும் கதர்ப் பட்டு விற்பனையில் தள்ளுபடி கொடுத்து வருகின்றது. இது தவிர கதர் பாலியஸ்டர் துணிகளுக்கும் 10 சதவீதம் தள்ளுபடி 60 நாட்களுக்கும் தரப்படுகின்றது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணராஜ் அவர்கள் பேசுகின்றபோது தாரமங்கலம் தொகுதியில் ஒரு காம்ப்ளக்ஸ் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை எடுத்து வைத்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கெனவே தாரமங்கலம் பகுதி ஜலகண்டபுரத்தில் கதர் காம்ப்ளக்ஸ் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதற்கு இப்போது அனுமதியளிக்கப்பட்டு அது செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதில் பல்வேறு கிராமத் தொழில்கள் நடைபெறுகின்றன. கிராமிய நூற்பு நிலையம், நேபாளித் தறி, கார்டின் அலகு, பட்டுநூல் முறுக்கேற்றும் அலகு ஆகியவை சாயப் பட்டறை, மேலும் ப்ளோ ரூம் என்று அங்கே நடந்து வருகின்றன. ஏற்படுத்த சொல்லப்படுகின்ற காழ்றியக்கப் பொறியலகு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்பதையும் நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமசாமி அவர்கள் கதருக்கு ஆண்டு முழுவதும் 30 சதவீதம் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்டுள்ளார்கள். அப்படிப்பட்ட கோரிக்கை ஏற்கெனவே அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றது. அது அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி] [1985 ஜூன் 18

மேலும் சாத்தான்குளம் பகுதியில் பனை வெல்லம் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுள்ளார்கள். அவ்வாறு ஆரம்பித்து அதனை ஹ்பனைத் ஊக்குவிக்க வேண்டும் என்று கேட்டுள்ளார்கள். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் மூலம் ஸ்ரீவில்லிபுத்தூர் பனை ஆராய்ச்சி நிலையம் திருச்செந்தூர் பகுதிகளை உள்ளடக்கிச் செயல்படுவதால் சாத்தான்குளம் தொகுதியில் உள்ள பேய்க் குளத்தில் தனியாக ஆராய்ச்சி நிலையம் நிறுவத் தேவையில்லை என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் கள்ளிகுளத்தில் கதர் காம்ப்ளக்ஸ் நிறுவ வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நரசிம்மபல்லவன் அவர்கள் தனது தொகுதியில் அதிகமாக பனை மரங்கள் இருப்பதால் அங்கே பனை வெல்ல உற்பத்திக்கு வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். செங்கற்பட்டு மாவட்டத்தில் அச்சிறுபாக்கம் வட்டாரத்தில் கிராமத் தொகுதி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஒரு பனைத் தொழில் வளர்ச்சி நிலையம் ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் குடந்தை சட்ட மன்ற உறுப்பினர் திரு. ராஜாங்கம் அவர்கள் பேசுகின்றபோது பனை ஏறும் தொழிலாளர்களுக்கு லைசன்ஸ் முறையை ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை வைத்துள்ளார்கள். அந்தக் கோரிக்கை இப்போது அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



1985 ஜூன் 18] [திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி]

மேலும் இன்னொரு கருத்தையும் மாண்புமிகு உறுப்பினர் ராஜாங்கம் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அவர் பகுதியில் 500 விசைச் செக்குகள் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் அவைகள் எல்லாம் நன்கு வேலை செய்யவில்லை, அதனால் உபயோகப் படாமல் இருப்பதாகவும், ஆகவே அவைகளை திருப்பி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அந்த விசைச் செக்குகள் டான்சி மூலம் வழங்கப்பட்டவை. அவைகளை பழுது பார்க்க, டான்சி நிறுவனம் ஒரு தொழில் நுட்ப உதவியாளரை அனுப்பி மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதாக கூறியுள்ளார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு தெரிவித்துக் கொண்டு, இந்த மானியக் கோரிக்கையில் கலந்து கொண்டு பேசிய அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசியவைகளில் சில கூற்றுகள் நான் பதில் அளிக்காமல் விட்டு போய் இருந்தாலும், அவற்றிற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொண்டு இந்தக் கதர்த் தொழில் மானியத்தை, வெட்டுத் தீர்மானங்களை உறுப்பினர்கள் திரும்பப் பெற்றுக் கொண்டு, நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

**கோரிக்கை எண் 26—கைத்தறியும் நெசவுத் தொழிலும்**

திருவாளர்கள் என். எஸ். வி. சித்தன், கோ. வீரய்யன், கு. சுப்பராயன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாக கருதப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண் 26 — கைத்தறியும் நெசவுத் தொழிலும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 19,27,07,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 27 — கதர்த் தொழில்.

திருவாளர்கள் கே. எம். தங்கமணி, கோ. வீரய்யன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாக கருதப் பெற்றன.

திரு. எஸ். என். இராமசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண் 27 — கதர்த் தொழில் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,27,81,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 19—6—1985 புதன்கிழமை காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-28 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.



## 7. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்

### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

எதுவுமில்லை.

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

116. கோரிக்கை எண் 26 — கைத்தறி மற்றும் பஞ்சாலை ஆகியவற்றின் கொள்கையும், திட்டங்களும் பற்றிய குறிப்பு 1985–86 (தமிழ், ஆங்கிலம்).

117. கோரிக்கை எண் 27—தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கொள்கைகளும் திட்டங்களும் பற்றிய குறிப்பு 1985–86 (தமிழ், ஆங்கிலம்).

118. 1985—86 ஆம் ஆண்டு கைத்தறி மற்றும் பஞ்சாலை பற்றிய சாதனைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

## இணைப்பு

(838-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## கைத்தறி பஞ்சாலைத் துறையின் கொள்கைகளும் திட்டங்களும். 1985-86.

தொடக்கவுரை :

பாரம்பரியம் மிக்கதும், தொழிலாளர்கள் பலர் ஈடுபட்டுள்ளதும், வேலை வாய்ப்பில் வேளாண்மைக்கு அடுத்த இடத்தை வகிக்கிற கைத்தறித் தொழில், பஞ்சாலைகள், விசைத்தறிகள் ஆகியவற்றுடன் போட்டி போட்டுக்கொண்டு இயங்க வேண்டியுள்ளது. கைத்தறி, பஞ்சாலை, விசைத்தறி ஆகிய மூன்று பிரிவுகளும் ஒன்றுடன் ஒன்று இணைந்து ஒன்றின் தேவையைப் பிறிதொன்று பூர்த்தி செய்யும் வகையில் செயல்படுவதற்கும், தேவையற்ற போட்டியைத் தவிர்ப்பதற்கும் இம்மூன்று துறைகளின் நடவடிக்கைகளையும் முறைப்படுத்த அரசு முயற்சி எடுத்து வருகிறது.

2. கைத்தறித் தயாரிப்புப் பொருள்களுக்கு இலட்சக் கணக்கான வாடிக்கையாளர்கள் உள்ளனர். உண்மையைக் கூறின், நம் நாட்டில் மட்டுமல்லாது வெளிநாட்டிலுங்கூட, பருத்தி, கையினால் தயாரிக்கப்பட்ட நூலிழை, பட்டு ஆகியவற்றாலான கைத்தறித் தயாரிப்புப் பொருட்களின் தேவை உயர்ந்துள்ளது.

3. நம் மாநிலத்தில் குறிப்பாக கிராமப் பகுதிகளில் இத்தொழில் நன்கு வளர்ந்துள்ளது. கைத்தறி வளர்ச்சிக்குத் தனிக் கவனம் செலுத்தும் பொருட்டு, அண்மையில் தலைமைச் செயலகத்தில் கைத்தறி பஞ்சாலைத் தொழில் கதர் என்கிற புதிய துறை ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது. கைத்தறித் தொழில் இயங்குவதற்குத் தேவையான அளவு இயல்பான ஆதாரவையும், விற்பனை வசதியினையும் கொண்டுள்ளது. இருப்பினும், பஞ்சாலை விசைத்தறித் துறைகளின் தேவையற்ற போட்டியிலிருந்தும், அவற்றின் ஆதிக்கத்திலிருந்தும் அதனைக் காப்பாற்றுவதற்கு இன்னும் இந்திய அரசின் ஆதரவும், தமிழ்நாடு அரசின் ஆதரவும் அவசியமாகிறது.



4. அடிப்படை வசதி, மூலப் பொருட்கள் வழங்கல், உற்பத்தி, விற்பனை ஆகிய வசதிகள் அடங்கிய ஒருங்கிணைந்த அணுகுமுறை ஒன்றை புதிய இருபது அம்சத் திட்டம் கைத்தறித் துறையின் வளர்ச்சிக்கு வகை செய்கிறது. மேலும், 7,695 கைத்தறி நெசவாளர்களை அவ்வாறு விடுவிக்கவேண்டி, இத்திட்டத்தின்கீழ் ரூ. 44.30 இலட்சம் அளவுக்கு நிதியுதவி வழங்க வங்கிகள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன.

### III. கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சலுகை அடிப்படையில் நிதி உதவி வழங்குதல்.

10. வங்கி வட்டி வீதத்தைக் காட்டிலும் 2½ சதவீதம் குறைவான கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சலுகை அடிப்படையில் நிதியுதவி வழங்கும் தேசிய வேளாண்மை-ஊரக வளர்ச்சி வங்கித் திட்டம் "நபார்டு" (Nabard) 1985-86 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது. தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், தலைமை கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில், 1983-84, 1984-85 ஆம் ஆண்டுகளில் இந்திய ரிசர்வ் வங்கி அனுமதி வழங்கிய மொத்தக் கடன் உதவி பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | 1983-84. | 1984-85. |
|---|---|---|
| | (ரூபாய் கோடியில்.) | |
| 1. தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள். | 53.58 | 56.25 |
| 2. தலைமைக் கூட்டுறவுச் சங்கம். | 40.00 | 50.00 + 20.00 (பண்டிகை காலங்களில்.) |

11. தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு/தலைமைச் சங்கத்திற்கு 7.5 சதவீத வட்டி வீதத்தில் 'நபார்டு' நிதியுதவி வழங்க நிதியுதவி வங்கிகளுக்கு இயலும்பொருட்டு, வழக்கப்படி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு மூன்று சதவீத வட்டியினை வட்டி மானியமாகவும் தமிழ்நாடு மாநிலக்

கூட்டுறவு வங்கிக்கு ஒரு சதவீத வட்டியினை வட்டி மானியமாகவும், அரசு வழங்கும். இதற்காக 1985-86 ஆம் ஆண்டிற்காக ரூ. 125.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

12. மத்திய கூட்டுறவு வங்கிகள், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கிய நடைமுறை மூலதனக் கடன் தொகையில் வசூல் ஆகாமல் நிலுவையிலுள்ள தொகைக்கு அரசு 90 சதவீத அளவிற்கு மானியம் வழங்குகிறது; மீதமுள்ள 10 சதவீத தொகையைச் சம்பந்தப்பட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளே ஏற்றுக்கொள்கின்றன. இதற்காக 1985-86-ல் ரூ. 3.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## IV. கைத்தறி தொழில் நுட்பத்தினை மேம்படுத்தும் திட்டம்.

13. வேகமாக மாறிவரும் நாகரீக நடைஉடை பாவனைகள், நுகர்வோரின் விருப்பம் ஆகியவற்றிற்கேற்ப இருக்கவும், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வளர்ந்துவரும் புதிய கைத்தறித் துணிகளின் தேவையை நிறைவு செய்வதற்கும், கைத்தறித் தொழிலில் நவீனத் தொழில் நுட்ப உத்தியினைப் பயன்படுத்தி கைத்தறி துணிகளை உற்பத்தி செய்யவேண்டும். இதற்காக, கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், தங்களுடைய தறிகளைப் புதுப்பித்துக் கொள்ள/நவீனப்படுத்திக்கொள்ள அல்லது புதிய நவீன தறிகளை வாங்கிக் கொள்ள ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன. மேற்சொன்ன திட்டத்திற்காக, 1984-85-ல் ரூ. 42 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. அத்திட்டத்திற்காக 1985-86-ல் ரூ. 21 இலட்சம் செலவிடவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## V. இடுபொருள்கள் வழங்குதல்.

### (a) கூட்டுறவுத் துறை.

14. தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு நூற்பாலைகள், 3.35 இலட்சம் கதிர்கள் திறனைக் கொண்டு ஆண்டிற்கு சுமார் 10,000 பேல்கள் பலதரப்பட்ட வகைகளில் உற்பத்தி செய்கின்றன. கூட்டுறவு நூற்பாலைகளில் அவ்வாறு தயாராகும் நூல்கள் கோ-ஆப்டெக்ஸ்க்கு விற்கப்பட்டு அவை தமிழ் நாட்டில் முக்கிய நெசவாளர்கள் மையங்களில் அமைந்துள்ள கோ-ஆப்டெக்சின் [illegible] நிலையங்கள் மூலம் ஆரம்பக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இவை



தவிர, தமிழ்நாட்டில் ஐந்து புதிய கூட்டுறவு நூற்பாலைகள் ரூ. 31.54 கோடி மூலதன செலவில் அமைக்கப்பட்டுள்ளன. ஊத்தங்கரை, அறந்தாங்கி, தேனி, எட்டையபுரம் மற்றும் கமுதி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள ஐந்து கூட்டுறவு நூற்பாலைகள் உற்பத்தியை ஆரம்பித்து விட்டன. இவற்றுள், எட்டையபுரம் கூட்டுறவு நூற்பாலை பாலியஸ்டர் போன்ற ரகங்களை உற்பத்தி செய்வதற்கான நூல்களை உற்பத்தி செய்து வருகின்றது. கமுதியில் அமைந்துள்ள கூட்டுறவு நூற்பாலை, ஆதி திராவிடர்கள் நலனுக்காகவென்றே அமைக்கப்பட்ட ஒன்றாகும். கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரைத் தலைவராகக் கொண்ட நூல் விலை நிர்ணய குழு, நூற்பாலைகள் கோ-ஆப்டெக்ஸ்க்கு வழங்கும் நூல்களின் விற்பனை வீதங்களை வரையறுக்கிறது. ஒவ்வொரு விற்பனை நிலையத்துக்கும் தேவைப்படும் நூலின் அளவுகளுக்கேற்ப, கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநர், அவைகளுக்கு பலதரப்பட்ட எண்ணிக்கையில் நூல் ஒதுக்கீடு செய்துவருகிறார். தனிப்பட்ட நூற்பாலைகள், இந்த ஒதுக்கீடுகளை கோ-ஆப்டெக்ஸின் பல்வேறு விற்பனை நிலையங்களுக்கும் வழங்குகின்றன. இதனால் அனைத்து நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும் நூல் தாராளமாக கிடைப்பதுடன், சங்கங்களில் உறுப்பினர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பினையும் நல்கி வருகிறது.

### (b) தனியார் துறை.

15. தனியார் துறையில் உள்ள நெசவாளர்கள் அண்மையில் நூலின் விலை ஏற்றத்தினால் அதிலும் குறிப்பாக குறைந்த எண் மோட்டா ரக நூலின் விலை ஏற்றத்தினால், மிகுந்த இன்னலுக்கு ஆளாயினர். மேலும் மின்வெட்டின் காரணமாக தனியார் துறை நூற்பு ஆலைகளில் நூல் உற்பத்தி குறைந்ததால் கச்சா பொருட்கள் பற்றாக்குறையாயிருந்தன. தென்னிந்திய ஆலைகள் சங்கத்தின் உறுப்பினர் ஆலைகளிலிருந்து நூல் ஒதுக்கீடு பெற்று அவற்றை நெசவாளர் சங்கங்களுக்குப் பகிர்ந்தளித்ததன் மூலம், அரசு நெசவாளர்களின் குறைகளைப் போக்குவதற்கு உரிய நேரத்தில் நடவடிக்கை எடுத்தது. கடந்த ஆண்டில் தமிழ் நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம், தனியார் ஆலைகளிடமிருந்து நூலினைக் கொள்முதல் செய்து, அவற்றை கைத்தறி நெசவாளர்களுக்கு விநியோகம் செய்தது. செயற்கை

இழைக்கப்பட்டு நூலின் விலை அதிகரித்ததால், தென்னிந்திய "விஸ்கோஸ்" நிறுவனத்திடமிருந்து தனி ஒதுக்கீடு பெற்று அவற்றை தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் மூலம் கைத்தறி நெசவாளர்களுக்கு விநியோகம செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

## VI. கைத்தறி வளர்ச்சித் திட்டங்களுக்கான உதவிகள்.

16. இந்திய அரசின் நிதியுதவியினைக் கொண்டு, தமிழ்நாடு அரசு 4 கூட்டுறவு கைத்தறி தீவிர வளர்ச்சித் திட்டங்களை, காஞ்சீபுரம், ஈரோடு, சேலம் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் நிறுவியுள்ளது. மேலும், இரண்டு கூட்டுறவு கைத்தறி ஏற்றுமதி திட்டங்களை கரூர் மற்றும் குறிஞ்சிப்பாடி ஆகிய இடங்களில் நிறுவியுள்ளது. இந்திட்டங்களின் மூலம், இதுவரையில் 16,674 கைத்தறிகள் கொண்டு வரப்பட்டுள்ளன. இத்திட்டங்களின் மூலம், 31—3—1985 வரை ரூ. 464.23 இலட்சம் மதிப்புள்ள 62.58 இலட்சம் மீட்டர் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டு, ரூ. 590.91 இலட்சம் அளவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன. மேற்படி திட்டங்கள், நலிந்த மற்றும் செயலிழந்த கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைத் தங்கள் பொறுப்பில் எடுத்துக் கொண்டு, அச்சங்கங்களில் உள்ள நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பினை நல்கி வருகின்றன.

## VII. கைத்தறித் தொழிலுக்கான விற்பனை வசதிகள்.

17. கோ-ஆப்டெக்ஸ் என்று எல்லோராலும் அழைக்கப்படும் தலைமைச் சங்கம், நெசவாளர்கள் கூட்டுறவு சங்கம், அதனுடன் இணைந்துள்ள ஆரம்பக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தியில் சுமார் 50 சதவிகிதம் அளவிற்கு விற்பனைக்கு வழிவகை செய்கிறது. 1984-85 ஆம் ஆண்டில் ஆரம்ப நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தி அளவு ரூ. 157.36 கோடியாகும். 1—7—1984 முதல் 31—3—1985 வரையில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம், ஆரம்ப நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து ரூ. 55 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகளைக் கொள்முதல் செய்துள்ளது; இதன் மூலம் இந்நிறுவனம் ரூ. 72 கோடி அளவிற்கு விற்பனை செய்துள்ளது. கோ-ஆப்டெக்ஸ், இந்தியா முழுவதிலும் உள்ள தன்னுடைய 630 விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்துள்ளது.



18. மாவட்ட அளவில் ஆரம்ப நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அடிக்கடி கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு ஆலோசனை செய்யும் வகையில் கோ-ஆப்டெக்ஸ் நிர்வாக அமைப்பின் நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்தும் பொருட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### (a) கைத்தறித் துணி விற்பனையின் மீது தள்ளுபடி:

19. கைத்தறித் துணியின் விற்பனையினைப் பெருக்குவதற்கு, அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளில் நுகர்வோருக்கு கைத்தறி துணி வாங்குவதன் மீது தள்ளுபடி அளிப்பதும் ஒன்றாகும். இத்திட்டத்தின்கீழ் ஏற்படும் மானியத் தொகையினை மைய அரசும், மாநில அரசும் 50:50 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளுதல் என்ற அடிப்படையில் இருந்து அரசு ஆண்டிற்கு 30 நாட்களுக்கு 20 சதவீத சிறப்புத் தள்ளுபடி அளிப்பதற்கு முன்வந்துள்ளது. மேற்படி திட்டத்தின் கீழ் 1984-85 ஆம் ஆண்டிற்கு அரசு ரூ. 16 கோடி அளவிற்கு அனுமதி வழங்கியுள்ளது. மேலும், இத்திட்டத்திற்கு 1985-86 ஆம் ஆண்டிற்கான வரவு—செலவுத் திட்டத்தில் ரூ. 10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கூட்டுறவுத் துறையில் அதிக அளவில் தேங்கிக் கிடக்கும் துணிகளை விற்பனை செய்ய இது உதவியாக இருக்கும்.

### (b) தலைமைச் சங்கத்தின் அடிப்படை பங்குத் தொகையினை அதிகரித்தல்.

20. கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தில், அரசு முதலீடு ரூ. 13.89 கோடி உட்பட ரூ. 15.00 கோடியாகும். சங்கம் கடன்பெறுகிற உயரளவு சக்தியை உயர்த்தும் பொருட்டும் உயர்த்தப்பட்ட விற்பனை ஆதரவு தொடக்கச் சங்கங்களுக்கும் கிடைக்க இயலும் வகையிலும் கோ-ஆப்டெக்ஸ் பங்கு மூலதனத்தில் கூடுதலாக ரூ. 1.00 கோடி முதலீடு செய்ய அரசு கருதியுள்ளது.

**(c) புதிய விற்பனைக்கூடம் தொடங்கவும், தற்போதுள்ள விற்பனைக்கூடத்தை நவீனப்படுத்தவும் தலைமைச் சங்கத்திற்கு நிதியுதவி அளித்தல்.**

21. மாநிலத் தலைநகர்களிலும், நாட்டின் முக்கிய நகரங்களிலும் புதிய விற்பனைக் கூடங்களைத் தொடங்கவும், தற்போதுள்ள விற்பனைக் கூடங்களை நவீனப்படுத்தவுமான திட்டத்தை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் செயல்படுத்தி வருகிறது. இச்செயல் நோக்கத்திற்காக, தலைமைச் சங்கத்திற்கு 1984-85 ஆம் ஆண்டிற்கு ரூ. 68.50 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் Nabard இடமிருந்து ரூ. 100 இலட்சம் நிதியுதவியைப் பயன்படுத்திக் கொள்ள கருதப்பட்டுள்ளது.

**(d) கைத்தறி கடைத் தொகுதிகள்.**

22. இம்மாநிலத்திலுள்ள முக்கிய கைத்தறி மையங்களில் உள்ள கைத்தறித் துணிகளை விற்பனை செய்யத் தக்க அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் பொருட்டு, 1985-86-ல் கரூர், மதுரை, ஈரோடு ஆகிய இடங்களில் மூன்று கைத்தறி கடைத்தொகுதிகள் ஏற்படுத்த கருதப்பட்டுள்ளது.

**(e) மலிவு விலை துணித் திட்டம்.**

23. இம்மாநிலத்தில் வேட்டிகள், புடைவைகள், லுங்கிகள் மலிவு விலை துணிகளை உற்பத்தி செய்வதற்குச் சுமார் 28,000 கைத்தறிகள் இதில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. 1984-85 ஆம் ஆண்டில் 32.80 மில்லியன் மீட்டர் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டன. இத்திட்டத்தின் கீழ நடப்பு ஆண்டில் மேலும் அதிக அளவு கைத்தறிகளை உபயோகப்படுத்தி உற்பத்தி குறியீட்டினை அடைவதற்குப் பங்கீடு முறையை விரிவுபடுத்தக் கருதப்பட்டுள்ளது.

**(f) கடன் விற்பனை திட்டம்.**

24. கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம், அரசு பணியாளர்கள், உள்ளாட்சி நிறுவனத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு, கைத்தறி துணிகளை வாங்குவதற்கான கடன் வசதி திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தினை ஊக்குவிப்பதின் மூலம் 1984-85 ஆம் ஆண்டில் ரூ. 26.55 கோடி மதிப்புள்ள துணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இந்திய அரசும் தம் பணியாளர்களுக்கும் இத்திட்டத்தினைக் கொண்டுவர, மத்திய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.





**(g) ஏற்றுமதி.**

25. கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் ஏற்றுமதிக்கென்று ஒரு தனி அமைப்பினை கோ-ஆப்டெக்ஸ் இன்டெர்நேஷனல் என்ற பெயரில் ஏற்படுத்தி விற்பனையைப் படிப்படியாக அதிகரித்து வருகிறது. 1985-86 ஆம் ஆண்டில் குறைந்தளவு இரண்டு கோடி அளவிற்குத் துணியினை ஏற்றுமதி செய்வதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு துறைக்கும், துணை இராணுவப் பிரிவுகளுக்கும் தேவைப்படும் ஒரு பகுதி துணிகளை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திடமிருந்து வாங்குவதற்குப் பாதுகாப்பு துறையினரை மாநில அரசு அணுகியுள்ளது. முதல் அமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன்படுத்தும் பள்ளிக்கூட மாணவ, மாணவியர்களுக்குக் கைத்தறி சீருடையினை இலவசமாக வழங்க ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**(h) பாலியஸ்டர் துணி உற்பத்தித் திட்டம்.**

26. கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம், பாலியஸ்டர் ரக சட்டைகள், சேலைகள், பேண்டுகள் உற்பத்தி செய்யும் திட்டத்தைக் கொண்டு வந்துள்ளது. இவ்வகைத் துணிகளின் தற்போது ஆண்டு உற்பத்தி 0.35 இலட்சம் மீட்டர்களாகும்.

**(i) சிறந்த ஏற்றுமதியாளர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம்.**

27. இத்திட்டத்தின்கீழ், கைத்தறித் துணி சிறந்த ஏற்றுமதியாளர்களுக்குப் பரிசுகள் வழங்குவதற்காக 1984-85 ஆம் ஆண்டில் ரூ. 0.12 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டிலும் இந்த அளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**VIII பட்டு மற்றும் செயற்கைப்பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவி அளித்தல்.**

28. புதிய பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்கு, பங்கு மூலதனம், நேர்த்தியான சாமான்கள் மற்றும் மேஜை, நாற்காலிகள் முதலியவை வாங்குவதற்கு நிதி உதவி அளிக்கப்பட்டு வருகின்றது. 1985-86 ஆம் ஆண்டில் புதிய பட்டு உற்பத்தி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்காக ரூ. 3.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## நலத் திட்டங்கள்.

### சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டம்.

29. நமது மாநிலத்தில் கூட்டுறவு அமைப்பின்கீழ் உள்ள நெசவாளர்களின் நலனுக்காக "கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர் பாதுகாப்பு மற்றும் சேமிப்பு திட்டம்" என்ற நலத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் 'கூட்டுக் காப்புறுதித் திட்டத்தின்' மூலம் மொத்தமாக அனைத்து நெசவாளர்களும் கொண்டு வரப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை சுமார் 1,06,500 கைத்தறி நெசவாளர்கள் கொண்டு வரப்பட்டுள்ளனர். இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு நெசவாளியும் தன்னுடைய கூலியில் ஒரு ரூபாய்க்கு ஆறு காசு வீதமும் அரசு ஒரு ரூபாய்க்கு மூன்று காசு வீதமும் மானியம் அளிக்கிறது. இதன் மூலம் சேரும் தொகைக்கு ஆண்டொன்றுக்கு எழு சதவிகிதம் வட்டி அளிக்கிறது. இத்திட்டத்தின்கீழ் ஒரு நெசவாளி இறக்க நேரிட்டால் அந்த நெசவாளியின் சேமிப்பில் உள்ள தொகையும், அரசு மானியமும் அதற்குண்டான வட்டியுடன் ரூ. 3,000 ஆயுள் காப்புறுதி கழகத்தின் மூலம் அவரது வாரிசுதாரருக்கு வழங்கப்பட்டு வருகிறது. 1985-86 ஆம் ஆண்டிற்கு ரூ. 120 இலட்சம் இத்திட்டத்திற்கென்று நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு மைய அரசு இணை மானியத்தை வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

### நெசவாளர் வீட்டுவசதி திட்டம்.

30. 1962 ஆம் ஆண்டிற்குப் பின்னர் நிறுத்திவைக்கப்பட்டிருந்த நெசவாளர் வீட்டுவசதித் திட்டம் மீண்டும் கொண்டுவரப்பட்டு 1979-80 ஆம் ஆண்டிலிருந்து புதிய மாற்றி அமைக்கப்பட்ட நெசவாளர் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம்மாற்றியமைக்கப்பட்ட திட்டத்தின்கீழ் ஒரு வீடு கட்டுவதற்கு ரூ. 12,000 செலவாகிறது. இதில் அரசு, மானியமாக ரூ. 1,000 அளிக்கப்பட்டு வருகிறது. வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சி கழகம் ரூ. 9,700 அளவிற்குக் கடன் உதவி செய்கிறது. மீதி, தொகையான ரூ. 1,300-யைப் பயனடையும் நெசவாளர் செலுத்த வேண்டும். கூட்டுறவுத் துறையின்கீழ் கைத்தறி நெசவாளர்களின் பயனுக்காக 3,027 வீடுகள் கட்டுவதற்கு எடுத்துக்கொண்டதில் 31—3—1985 முடிய 2,286 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. மேலும்



741 வீடுகள் பல்வேறு நிலையில் கட்டப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கு 1985-86 ஆம் நிதி ஆண்டில் ரூ. 10 இலட்சம் மானியமாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### X. காஞ்சிபுரம், தமிழ்நாடு ஜரிகை நிறுவனத்துக்கு நிதி உதவி அளித்தல்.

31. தமிழ்நாடு ஜரிகை நிறுவனம், மாதம் ஒன்றுக்கு 1,000 மார்க்குகள் தங்க ஜரிகையினை உற்பத்தி செய்து பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கி வருகிறது. 1984-885 ஆம் நிதி ஆண்டில் 5,114 மார்க்குகள் தங்க சரிகை தயாரிக்கப்பட்டு ரூ. 69,21 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் மாதம் ஒன்றுக்கு 1,000 மார்க்குகள் தங்க சரிகை உற்பத்தியைப் பெருக்கும் வகையில் இப்பிரிவை ஊக்குவிக்கக் கருதப்பட்டுள்ளது.

### XI. நவீன சாயச்சாலை அமைப்பதற்காக தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலைக்கு (ஈரோடு) நிதி உதவி.

32. தமிழ்நாட்டில் உள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் எதிர்நோக்கும் இடர்ப்பாடுகளுள் ஒன்று, அவைகளுக்குப் பதனிடப்படுத்தும் வசதி இல்லாததேயாகும். ஈரோட்டில் உள்ள தமிழ்நாடு கூட்டுறவு துணி நூல் பதனிடும் ஆலை ரூ. 90 இலட்சம் செலவில் திருநெல்வேலி, சேலம், ஈரோடு, திருச்சி, சென்னிமலை, வேலூர், இராமநாதபுரம் ஆகிய எழு இடங்களில் நவீன சாயச்சாலைகள் அமைத்துள்ளது. இவ்வாலை உற்பத்தித் திறனைச் சமப்படுத்தவும் மாதம் ஒன்றுக்கு 10 இலட்சம் மீட்டர்கள் துணிகளை பதனிடப்படுத்துவதற்கும் தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகத்திடம் இருந்து ரூ. 22.50 இலட்சம் நிதி உதவி பெற்று தன் விரிவாக்கத் திட்டத்தை செயற்படுத்தி உள்ளது. திரைச்சீலை பூவேலைப்பாடு அச்சிடும் பிரிவு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது பாலியஸ்டர் துணி பதனிடப்படுத்தும் பிரிவு ஒன்றை இவ்வாலை இந்திய அரசிடம் இருந்து ரூ. 31 இலட்சம் நிதி உதவியினை பெற்று அமைத்துள்ளது.

## XII தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சி கழகத்திற்கு நிதி உதவி வழங்குதல்.

33. கூட்டுறவு அமைப்பின் கீழ்வராத கைத்தறி நெசவாளர்களுக்கு உதவும் பொருட்டு, தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சி கழகம் ஒரு பொதுத் துறை நிறுவனமாக 1964 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. உற்பத்தி செய்வதற்கும், உற்பத்தி செய்த துணியினை செய்முறைப்படுத்துவதற்கும் மேலும் அத் துணியினை விற்பனை செய்வதற்கும் இக்கழகம் தனிப்பட்ட நெசவாளர்களுக்கு நிதி உதவி அளித்து வருகிறது. தனியார் துறையில் உள்ள நெசவாளர்களுக்கு இக்கழகம் அளித்துவரும் கடன் அளவினை அதிகரிக்க திட்டம் வகுத்துள்ளது. 1984-85 ஆம் ஆண்டில் இக்கழகம் அளித்த கடனின் அளவு ரூ. 250 இலட்சம் ஆகும். சென்ற ஆண்டு ரூ. 196.55 இலட்சம் அளவிற்குக் கடன் உதவி வழங்கப்பட்டது. 1984-85 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு இக்கழகத்திற்கு கூடுதல் பங்கு மூலதனமாக ரூ. 10 இலட்சம் அளித்துள்ளது. இத்தொகையை மைய அரசும், மாநில அரசும் சம விகிதத்தில் அளித்துள்ளன.

**மூலப்பொருள்கள் வங்கி அமைத்தல் :**

34. தனியார் துறையில் உள்ள நெசவாளர்களுக்கு அடிக்கடி நூல் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதற்கு நிரந்தர தீர்வு காணும் நோக்குடன் குறிப்பாக மோட்டா ரக நூலை வழங்க மூலப் பொருள் வங்கி ஒன்றினைத் தொடங்க திட்டமிடப்பட்டு உள்ளது. நடப்பு நிதி ஆண்டிலிருந்து இவ்வங்கியினை தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சி கழகம் நடத்தும். இம் மூலப்பொருள் வங்கியினை அமைப்பதற்கு மொத்தச் செலவு ரூ. 100 இலட்சமாகும். 1985-86 ஆம் நிதி ஆண்டில் வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் ரூ. 15 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## XIII. தமிழ்நாடு துணிநூல் கழகத்தின் ஆலைகள், கோயம்புத்தூர்.

35. தமிழ்நாடு துணிநூல் கழகம் நலிந்த ஆலைகளின் நிருவாகத்தினைக் கவனிப்பதற்கென்று அமைக்கப்பட்டதாகும். மேலும் நலிந்த ஆலைகள் செயல்படுவதற்கு முன்பணை உதவியையும் வழங்கிவருகிறது. தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு நூற்பாலைகளுக்குத் தேவையான பஞ்சுகளைக் கொள்முதல் செய்து அவற்றிற்கு வழங்கும் முகவராக அது தற்போது செயல்பட்டு வருகிறது. கூட்டுறவு நூற்பு ஆலைகளின் பஞ்சையும், பருத்தி நூலையும் சோதனை செய்ய தமிழ்நாடு துணி நூல் கழகத்தில் ரூ. 10 இலட்சம் செலவில் ஆய்வுக்கூடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.



36. அருப்புக்கோட்டை, ஜெயம்கொண்டசோழபுரம், சிவகிரி இடங்களில் இக்கழகம் மூன்று விசைத்தறிக் கூடங்களை நிருவகித்து வருகிறது. ஜக்கம்பட்டி (மதுரை மாவட்டம்), தர்மபுரி (தர்மபுரி மாவட்டம்), தளவாய்புரம் (காமராஜர் மாவட்டம்), சங்கரன்கோயில் (திருநெல்வேலி மாவட்டம்), ராசிபுரம் (சேலம் மாவட்டம்), பேராவூர் (புதுக்கோட்டை மாவட்டம்) மற்றும் தாராபுரம் (பெரியார் மாவட்டம்) ஆகிய ஏழு இடங்களில் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் விசைத்தறிக் கூடங்களை அமைத்துள்ளது. இந்த விசைத்தறிக் கூடங்கள் சுமார் 1,400 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பினை நல்குகின்றன. கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள விசைத்தறியில் உற்பத்தியாகும் துணிகளை இக்கழகம் கொள்முதல் செய்துவருகிறது.

## XIV. மூடப்பட்ட ஆலைகளைத் திறத்தல்.

37. 1976-77-ல் பஞ்சாலையில் ஏற்பட்ட நெருக்கடியின்போது தனியார் துறையில் உள்ள ஒன்பது நலிந்த துணி ஆலைகளுக்கு மாநில அரசு உத்திரவாதம் கொடுத்ததின்பேரில் அவை மீண்டும் திறக்கப்பட்டன. இவ்வாறு திறக்கப்பட்ட ஆலைகள் சிறிது சிறிதாக நல்ல பணி நிலையில் இயங்குவதால், கீழ்க்கண்ட ஆலைகள் தொடர்பாக மட்டும் அரசு உத்திரவாதம் இன்னும் செயலில் உள்ளது :—

(அ) மதுரை நூற்பு மற்றும் நெசவு ஆலை, கோயம்புத்தூர்.

(ஆ) காவிரி நூற்பு மற்றும் நெசவு ஆலை, புதுக்கோட்டை.

(இ) பின்னி ஆலை லிமிடெட், சென்னை.

மேற்சொன்ன மூன்று ஆலைகளும் புதுக்கோட்டையில் உள்ள காவேரி நூற்பு மற்றும் நெசவாலை தொழில் 1951 ஆம் ஆண்டு தொழில் (வளர்ச்சி முறைப்படுத்தல்) சட்டத்தின்கீழ் அதிகாரம் பெற்ற நிறுவனமாக தமிழ்நாடு துணிநூல் கழகம் அவ்வாலையின் நிர்வாகத்தினை மேற்கொண்டுள்ளது.

38. மேலும், மாநில அரசு கீழ்க்கண்ட மூன்று ஆலைகளுக்கும் உத்திரவாதத்தினை அளித்துள்ளது :—

(அ) ஸ்ரீ மீனாட்சி ஆலை, மதுரை.

(ஆ) ஜோதி ஆலை, கோயம்புத்தூர்.

(இ) ஜெயலட்சுமி ஆலை, கோயம்புத்தூர்.

உத்திரவாதம் கொடுக்கப்பட்டுள்ள ஆலைகள் நல்ல முறையில் திருப்திகரமாக செயல்படுகிறது என்று சந்தேகமற தெரிந்து கொண்டபின், அரசு உத்திரவாதத்தினைத் திரும்பப் பெற்றுக் கொள்வது மாநில அரசின் கொள்கையாகும்.

**XV. தனியார் துறையில் புதிய ஆலைகளை நிறுவுவதற்கும் ஏற்கனவே இயங்கிவரும் ஆலைகளை விரிவாக்கம் செய்வதற்குமான திட்டங்கள்.**

39. தமிழ்நாட்டில் 15 துணி ஆலைகளை அமைக்க வேண்டி 1984 ஆம் ஆண்டில் பம்பாயிலுள்ள துணிநூல் ஆணையாளர் 15 ஒப்பு அறிவிப்புக் கடிதங்களை அனுப்பியுள்ளார். இந்தப் புதிய ஆலைகளை ஏற்படுத்துவதன் மூலம் சுமார் 3,000 பேருக்கு வேலை வாய்ப்பு கிட்டும்.

**XVI. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இலக்கும் சாதனையும்.**

40. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு, கைத்தறி மற்றும் துணிநூல் துறைக்கென்று ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 8,458.47 இலட்சமாகும். இத்திட்ட காலம் முடியும்போது இத்துறைக்கு செலவான மொத்தத் தொகை ரூ. 10,414.19 இலட்சமாகும். இவ்வாறாக, செலவு செய்த தொகை நிதி இலக்கினைக் காட்டிலும் 20 சதவிகிதம் அதிகமாகும்.

**XVII. காஞ்சிபுரம், திருச்சி சரகங்களின் நிர்வாகத்தினை மாற்றி அமைத்தல்.**

41. காஞ்சிபுரம், திருச்சி சரகங்களின் அலுவலகங்களின் நிர்வாக வரம்பு அதிகமாக இருப்பதால், அவற்றை சீரமைத்து வேலூரை தலைமை இடமாகக் கொண்டு புதிய சரகம் ஒன்றை ஏற்படுத்தவும் கருதப்பட்டுள்ளது. வட ஆற்காட்டிற்கு தனி உதவி



இயக்குநர் ஒருவரை நியமிப்பது குறித்தும், தென் ஆற்காட்டில் தென் ஆற்காட்டிற்கும் தஞ்சாவூருக்கும் மற்றொரு உதவி இயக்குநரையும் நியமிப்பது குறித்தும் பரிசீலிக்கக் கருதப் பட்டுள்ளது. கும்பகோணத்தில் இருக்கும் உதவி இயக்குநரை (விடுவிப்பு) கூடுதல் பொறுப்புகளுடன் கடலூருக்கு மாற்றுவது குறித்து பரிசீலிக்கக் கருதப்பட்டுள்ளது.

**XVII கைத்தறிகளைக் கணக்கெடுத்தலும் அடையாள அட்டை வழங்குதலும்.**

41. கைத்தறிகள் குறித்து 1973-ல் கடைசியாக கணக்கெடுக்கப் பட்டது. உரிய தொலைநோக்கில் திட்டத்தை மதிப்பிட்டு சரிவர செயற்படுத்துவதற்கு கைத்தறிகள் குறித்து கணக்கெடுப்பது தேவையெனக் கருதப்படுகிறது. அதன்படி நடப்பாண்டில் கைத்தறிகளைக் கணக்கெடுக்கக் கருதப்பட்டுள்ளது. நிதி உதவி கேட்டு மத்திய அரசுக்குக் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

43. முதல்முறையாக கூட்டுறவு அமைப்புகளின் கீழ் உள்ள நெசவாளர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கக் கருதப் பட்டுள்ளது.

**XIX விசைத்தறிகள்.**

44. 29—2—1984 ஆம் நாளன்றுள்ளவாறு, தமிழ்நாட்டில், 95,591 விசைத்தறிகள் அனுமதி பெற்று இயங்கி வருகின்றன. அனுமதி பெறாத விசைத்தறிகளும் அதே அளவில் உள்ளன. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மைய அரசு இம்மாநிலத்திற்கு 700 விசைத்தறிகள் ஒதுக்கியது. இவை, 14 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப் பட்டுவிட்டன. புதிய விசைத்தறிகளை அனுமதிப்பதாக இருந்தால், அவைகளைக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு மட்டுமே ஒதுக்க வேண்டும் என்று மைய அரசு ஒரு கொள்கையினை வகுத்துள்ளது. இது வரவேற்கப்பட வேண்டியதொரு கொள்கையாகும். இதனால், கைத்தறி நெசவாளர்கள் சிறந்த தொழில் நுட்ப வசதியினைப் பயன்படுத்தி அதன் மூலம், அதிகமான வருமானம் பெறுவதற்கு ஏதுவாகும்.

**XX முடிவுரை.**

45. கைத்தறித் தொழிலின் வளர்ச்சி பற்றிய விவரங்களை இணைப்பில் காணலாம்.

இணைப்புகள்.

**கைத்தறி மற்றும் பஞ்சாலைத் துறை முன்னேற்றம்—ஒரு கண்ணோட்டம்.**

| | 1980–81. | 1981–82. | 1982–83 | 1983–84. | 1984–85. |
|---|---|---|---|---|---|
| **(1) தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் :—** | | | | | |
| 1. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை. | 1,187 | 1,312 | 1,468 | 1,556 | 1,590 |
| 2. தறிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | 2.63 | 3.02 | 3.33 | 3.56 | 3.75 |
| 3. ஆண்டொன்றுக்கு உற்பத்தி (ரூபாய் கோடியில்). | 72.27 | 86.77 | 113.24 | 139.97 | 157.36 |
| 4. ஆண்டொன்றுக்கு விற்பனை (ரூபாய் கோடியில்). | 75.41 | 96.26 | 112.28 | 117.74 | 155.29 |
| 5. நடைமுறை மூலதனம் (ரூபாய் கோடியில்). | 20.72 | 24.31 | 40.91 | 53.58 | 56.25 |
| **(2) கோ–ஆப்டெக்ஸ் :—** | | | | | |
| 1. கொள்முதல் (ரூபாய் கோடியில்). | 19.27 | 62.56 | 70.46 | 72.12 | 55.00 |
| 2. விற்பனை (கோடியில்). | 48.00 | 70.65 | 82.81 | 106.00 | 72.00 |
| 3. பயன்படுத்தப்பட்ட நடைமுறை மூலதனம் (ரூபாய் கோடியில்). | 15.00 | 22.00 | 40.00 | 40.00 | 50.00 |
| 4. விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை | 444 | 525 | 626 | 626 | 630 |
| **(3) கூட்டுறவு நூற்பாலைகள் :—** | | | | | |
| 1. கதிர்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | 3.14 | 3.24 | 3.32 | 3.33 | 3.35 |
| 2. முதலீடு (ரூபாய் இலட்சத்தில்) | 2,250 | 2,888 | 3,210 | 3,210 | 3,210 |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3. உற்பத்தி (ரூபாய் இலட்சத்தில்) | 4,008 | 4,184 | 5,810.22 | 5,967.61 | 6,472.36 |
| 4. விற்பனை (ரூபாய் இலட்சத்தில்) | 3,996 | 4,773 | 6,003.99 | 5,844.07 | 6,366.21 |
| 5. நடைமுறை மூலதனம் (ரூபாய் இலட்சத்தில்) | 1,000 | 1,045 | 1,239.00 | 1,292.00 | 3,89.01 |
| **(4) தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை, ஈரோடு** | | | | | |
| 1. துணிகளை வெளுத்தல், சாயமிடல் (இலட்சம் மீட்டரில்) | 40 | 45 | 41 | 35.00 | 36.00 |
| **(5) தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் :** | | | | | |
| 1. அனுமதிக்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை. | 2,500 | 2,700 | 1,960 | 2,028 | 2,600 |
| 2. அனுமதிக்கப்பட்ட கடன் தொகை (ரூபாய் இலட்சத்தில்). | 262 | 305 | 166.78 | 196.55 | 250.00 |
| **(6) தமிழ்நாடு சரிகை நிறுவனம், காஞ்சிபுரம்:** | | | | | |
| 1. சரிகை உற்பத்தி (மார்க்குகளில்) | 4,000 | 4,500 | 10,561 | 8,330 | 5,114 |
| 2. விற்பனை மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) | 39.3 | 54.0 | 107.74 | 103.33 | 69.21 |

[1985 ஜூன் 18

இணைப்பு II.

(839-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 27.

தமிழ்நாடு கதர்—கிராமத் தொழில் வாரியம்

கொள்கையும் திட்டங்களும்.

கதர் கிராமத் தொழில்களின் வளர்ச்சியைத் தீவிரப்படுத்துவதற்காக 1960 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் தமிழ்நாடு கதர்—கிராமத் தொழில் வாரியம் ஏற்படுத்தப்பட்டது. கதர் கிராமத் தொழில் திட்டத்தின் குறிக்கோள் குறைந்த மூலதனத்தில் நலிவுற்ற மக்களுக்காக அவரவர் இருப்பிடங்களிலேயே கூடங்களை நிறுவி ஓரளவு வேலை வாய்ப்பை ஏற்படுத்தி அதன் மூலம் கதர் மற்றும் கிராமத் தொழில்களை ஆங்காங்கே கிடைக்கும் பொருட்களைக் கொண்டு கிராமக் கைவினைஞர்களின் இருப்பிடங்களுக்கு அருகிலேயே குறைந்த மூலதனத்தில் வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தருவதாகும். இவ்வடிப்படை நோக்கங்களிலேயே பயிற்சி அளிப்பது உட்பட கிராமத் தொழில் உற்பத்தி வளர்ச்சிக்கான திட்டங்களை வகுத்து அவற்றை மாநிலம் முழுமையும் செயல்படுத்துவது இவ்வாரியத்தின் தலையாய பணியாகும்.

2. கதர்—கிராமத் தொழில் ஆணைக் குழுவினால் கிராமத் தொழில்கள் என வகைப்படுத்தப்பட்ட 26 தொழில்களில் கீழ்க் கண்ட 15 கிராமத் தொழில்களையும், கதர் தொழிலையும் இவ்வாரியம் செயல்படுத்தி வருகிறது:—

(1) பனைத் தொழில்.

(2) செக்கு எண்ணெய்.

(3) கைக்குத்தல் அரிசி மற்றும் தானியங்களையும் பருப்பு வகைகளையும் செய்முறைப்படுத்தல்.

(4) தோல் தொழில்.

(5) மட்பாண்டம் (செங்கற்கள் மற்றும் ஓடுகள்).



1985 ஜூன் 18]

(6) சுண்ணாம்புக்கல் மற்றும் சுண்ணாம்புச் சூளை. (காளவாய்).

(7) தேனீ வளர்த்தல்.

(8) தச்சு, கருமார்த் தொழில்.

(9) பழங்களைப் பதப்படுத்தலும் பாதுகாத்தலும்.

(10) கையால் செய்யப்பட்ட காகிதம்.

(11) வெல்லம் மற்றும் கந்தசாரி சர்க்கரை.

(12) சமையலுக்குப் பயன்படாத எண்ணை மற்றும் சோப்பு.

(13) நார்த் தொழில்.

(14) பிரம்பு, மூங்கில்.

(15) பாலிவஸ்திரா.

3. தமிழ்நாடு அரசால் கிராமத் தொழில்கள் என அறிவிக்கப்பட்ட பின்வரும் தொழில்களையும் இவ்வாரியம் ஊக்குவித்து வளர்த்து வருகிறது:—

(1) ஊதுபத்தி.

(2) நீலகிரித் தைலம்/எலுமிச்சைபுல் தைலம்.

**கதர்.**

4. இவ்வாரியம் கைராட்டை மற்றும் அம்பர் ராட்டை நூற்பாளர்களுக்குப் பஞ்சினை விற்று அவர்களது நூலைக் கொள்முதல் செய்வதன் மூலம் அவர்களைத் தொடர்ந்து ஆதரித்து வருகிறது. வாரியத்தின் கீழ் 566 கிராமிய நூற்பு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்நிலையங்களில் 6 கதிர் அல்லது 12 கதிர் உள்ள ராட்டைகள் உள்ளன. இவற்றை பெரும்பாலும் பெண்களே இயக்கி வருகின்றனர். இவ்வாறு கொள்முதல் மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட நூலை வாரியமே தனது 81 நிலையங்கள் மூலமாக துணியாக நெசவு செய்ய நெசவாளர்களுக்கு வழங்குகிறது. 1—4—1985-க்கு முன்னர் ஒரு நூற்பாளர் புது ரக சர்க்கா மூலமாக தினந்தோறும் ரூ. 5 முதல் ரூ. 7 வரை தினக் கூலியாகப் பெற்றார். ஒரு நெசவாளர் தினந்தோறும் ரூ. 15 முதல் ரூ. 17 வரை பெறுகிறார். கதர் கிராமத் தொழில்

ஆணைக் குழு, வாரியம் மற்றும் அத்தாட்சி பெற்ற நிறுவனங்களுக்கான நூற்போர் நெய்வோர் மற்றும் செய்முறைக்கான கூலி விகிதங்களை நிர்ணயம் செய்கின்றது. இதன் அடிப்படையில் 1—4—1985 முதல் கதர்—கிராமத் தொழில் ஆணைக் குழு நூற்போருக்கான தினக் கூலியினை ரூ. 9 ஆக உயர்த்தியுள்ளது. இதேபோல் நெய்வோர் கூலி விகிதங்களை 10 சதவிகிதம் அதிகரிக்க அறிவுறுத்தியுள்ளது. எனவே 1985—86-ல் ஒரு நூற்போர் குறைந்த பட்ச தினசரி ஊதியம் ரூ. 9 ஆகவும், நெசவாளர் ஊதியம் ரூ. 17 ஆகவும் பெறுவார்கள். இவ்வாரியத்துடன் சேர்த்து அவர்களது ஊதியத்தில் 8 விழுக்காடு ஊக்க ஊதியமும் வழங்கப்படுகிறது.

5. கிராமிய நூற்புக் கூடங்களுக்குத் தேவையான பஞ்சினை உடைக்கும் 3 அலகுகளும், பட்டைபோட 87 இயந்திரங்களும் இயங்கி வருகின்றன.

6. வாரியத்தின் கீழ் 17 பட்டு உற்பத்தி நிலையங்களும், 6 பட்டு முறுக்கும் நிலையங்களும் உள்ளன. வாரியத்தின் பட்டாடைகள் தங்களுக்கென்று ஒரு நற்பெயரை ஏற்படுத்திக் கொண்டுள்ளன.

7. நூல் உற்பத்தி 1982—83 ஆம் ஆண்டில் 377.92 இலட்சம் சிட்டங்களாக இருந்தது. 1983—84-ல் 412.67 இலட்சம் சிட்டங்களாக உயர்ந்துள்ளது. 1984—85 முடிய 121.69 இலட்சம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 1982—83-ல் கதர் துணி உற்பத்தியின் மதிப்பு ரூ. 739.87 இலட்சமாக இருந்தது. 1983—84-ல் ரூ. 805.29 இலட்சத்தை அடைந்து உள்ளது. 1984—85 வரை ரூ. 844.57 இலட்சம் மதிப்புள்ள துணி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. (கதர் மற்றும் பாலியெஸ்டர்).

8. 1982–83-ல் ரூ. 272.23 இலட்சம் மதிப்புள்ள பட்டுத் துணி உற்பத்தி செய்யப்பட்டது. 1983—84-ல் ரூ. 270.76 இலட்சமாக உயர்ந்தது. 1984—85 முடிய ரூ. 263.63 இலட்சம் மதிப்புள்ள பட்டுத் துணி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

9. வாரியத்தின் கீழ் 2 மஸ்லின் நூல் உற்பத்தி அலகுகள் தற்போது செயல்பட்டு வருகின்றன. மேலும் 4 மஸ்லின் நூல் உற்பத்தி அலகுகள் துவங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



10. வாரியத்தில் தற்போது 5 சாய சலவை அச்சு அலகுகள் செயல்பட்டு வருகிறது. 1983—84 ஆம் ஆண்டில் 8.47 இலட்சம் சிட்டங்கள் சாயமிடப்பட்டது. மேலும் 17.43 இலட்சம் மீட்டர் கதர் துணி சாயமிட்டு அச்சிடப்பட்டது. 1984—85-ல் ரூ. 11.29 இலட்சம் மதிப்புள்ள சிட்டங்கள் சாயமிடப்பட்டது. 16.45 இலட்சம் மீட்டர் கதர் துணிகள் சாயமிட்டு அச்சிடப்பட்டது.

11. 1983—84 ஆம் ஆண்டிற்கு முன்பு மாநில அரசு, திரு. காமராஜ், பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார் ஆகியவர்களது பிறந்த நாள் விழாக்களையொட்டி ஆண்டுதோறும் 10 விழுக்காடு கதர் விற்பனையில் 30 நாட்களுக்கு தள்ளுபடி அளித்து வந்தது. விழாக் காலங்களையொட்டி 60 நாட்களுக்கு 5 விழுக்காடு சிறப்பு தள்ளுபடியையும் அரசு அளித்து வந்துள்ளது. பின்பு 1983—84 ஆம் ஆண்டிலிருந்து விழாக் காலங்களையொட்டி 60 நாட்களுக்கு அளிக்கப்படும் தள்ளுபடியை 5 விழுக்காட்டிலிருந்து 10 விழுக்காடாக அரசு உயர்த்தி வழங்கியது. இதனால் ஆண்டு ஒன்றுக்கு மாநில அரசு 90 நாட்களுக்கு கதர் விற்பனையில் 10 விழுக்காடு தள்ளுபடியை அனுமதித்துள்ளது.

12. 1983—84 லிருந்து தமிழக அரசு, விழாக் காலங்களில் விற்கப்படும் பாலியஸ்டர் துணிக்கு வருடத்தில் 60 நாட்களுக்கு 10 விழுக்காடு தள்ளுபடி அளிக்கவும் அனுமதித்து உள்ளது. அனைத்திந்தியாவிலேயே பாலியஸ்டர் துணி விற்பனைக்கு தமிழ்நாட்டில்தான் மாநில அரசின் உதவியோடு தள்ளுபடி அளிக்கப்படுகிறது.

13. கதர் விற்பனைக்கென 155 கதர் அங்காடிகள் உள்ளன. 1982—83-ல் ரூ. 903.68 இலட்சம் மதிப்புள்ள கதர் விற்பனை செய்யப்பட்டது. 1983—84-ல் ரூ. 1078.65 இலட்சத்திற்கு உயர்ந்தது. 1984—85-ல் ரூ. 1074.78 இலட்சம் கதர் விற்பனை செய்யப்பட்டது.

14. 1983—84-ல் 1,830 நபர்களுக்கு கூடுதல் வேலை வாய்ப்பு கதர்த் திட்டத்தின் மூலம் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது. 1984—85-ல் 2,310 நபர்களுக்கு கூடுதல் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

15. குறைந்து கொண்டு வருகின்ற பாரம்பரிய நெய்வோர்களின் எண்ணிக்கையை ஈடுகட்டவும், கிராமப் புறங்களில் உள்ள வாலிபர்களுக்கு கூடுதலாக வேலை வாய்ப்பை ஏற்படுத்தவும், வாரியம் கதர் கிராமத் தொழில் ஆணைக் குழு மற்றும் மாநில அரசின் உதவியுடன் 15 புதுமாதிரி தறி அலகுகளை (நேபாளி தறிகள்) நிறுவி செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு புது மாதிரி தறி அலகிலும் 40 நெய்வோருக்கும், 10 உதவியாளர்களுக்கும் வேலை வாய்ப்பளிக்கப்படும். மெல்லிய, மிக மெல்லிய ரக கதர் துணி வகைகளின் தேவை பெருகி வருகிறது. அரசு நிதி உதவியுடன் அதனை பூர்த்தி செய்ய வாரியத்தின் கீழுள்ள மோட்டா ரகத் துணிகள் உற்பத்தி செய்யும் தறிகளை மெல்லிய, மிக மெல்லிய ரக துணிகளை உற்பத்தி செய்யுமாறு மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

16. தற்பொழுது கதர் அபிவிருத்தி பணிகள், கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், மதுரை, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் முன்னேற்றம் அடைந்துள்ளது. இதனை தற்போது புதுக்கோட்டை, வட ஆற்காடு, தென்னாற்காடு, செங்கற்பட்டு, தஞ்சை, காமராஜர், இராமநாதபுரம் மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டங்களில் விரிவுபடுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள 378 ஊராட்சி ஒன்றியங்களில் 304 ஊராட்சி ஒன்றியங்களில் கதர் பணி திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள ஊராட்சி ஒன்றியங்களிலும் கதர் பணி திட்டங்களை செயல்படுத்த வாரியம் தீர்மானித்துள்ளது.

17. தற்பொழுது கிராமிய நூற்பு நிலையங்களும் புது ரகத் தறி உற்பத்திக் கூடங்களும் பல்வேறு இடங்களில் தனித்தனி அலகுகளாக செயல்பட்டு வருகின்றன. வாரியம் இனி வரும் காலங்களில் 4 அல்லது 5 கிராம் நூற்பு நிலையங்கள் மற்றும் 1 நவீன தறிக் கூடமும் ஒரே இடத்தில் இணைத்து செயல்படுத்துவதன் மூலம் போக்குவரத்து செலவினங்களை குறைக்க உத்தேசித்துள்ளது.

**கிராமத் தொழில்கள் :**

18. கிராமத் தொழில்கள் கிராமப் புறங்களில் கிடைக்கின்ற மூலப் பொருட்களைக் கொண்டும், மனித சக்தியைக் கொண்டும் நுகர்ப் பொருட்கள் உற்பத்தி செய்யும் வகையில் அமையப்





பெற்றுள்ளது. குறைந்த மூலதனத்தில் அதிகமாக வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித் தரக்கூடிய வகையில் கிராமத் தொழில்கள் அமையப் பெற்றுள்ளன. 1983—84-ம் ஆண்டுவரை 5.05 இலட்சம் பேர்களுக்கு நிலையான வேலைவாய்ப்பு கிராமத் தொழில்களின் மூலம் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது. வாரியம் 1984—85-ம் ஆண்டில் கூடுதலாக 65,000 பேர்களுக்கு அதிக வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்துள்ளது.

19. வாரியத்தின்கீழ் மார்ச் 1985 முடிய 225 துறை அலகுகளும், 1,421 தொழில் கூட்டுறவுச் சங்கங்களும் செயல்படுகின்றன. 1,62,625 கைவினைஞர்களுக்கு தத்தம் தொழிலை சிறப்புற ஏற்று நடத்திட ஏதுவாக நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. 1982—83-ல் கிராமத் தொழில்களின் உற்பத்தி, விற்பனை முறையே ரூ. 6,512.02 இலட்சமாகவும், ரூ. 7,150.80 இலட்சமாகவும் இருந்தன. அவை 1983—84-ல் முறையே ரூ. 8,411.79 இலட்சமாகவும் ரூ. 9,000.56 இலட்சமாகவும் உயர்ந்துள்ளன. 1984—85-ல் உற்பத்தி விற்பனை முறையே ரூ. 9,774 இலட்சமும், ரூ. 10,583 இலட்சமும் ஆகும். பின்வரும் கிராமத் தொழில்கள் அதிக வேலைவாய்ப்பு அளிக்கக் கூடியன என கண்டறிந்து அவற்றினை பெருமளவில் நிறைவேற்றிட திட்டமிட்டு வாரியம் செயலாற்றி வருகிறது.

**பனைத் தொழில்:**

20. தமிழகத்தில் மிகவும் அதிக அளவில் பனை மரங்கள் உள்ளன. பனை மரங்களை மிகச் சிறந்த அளவில் பயன்படுத்திட அவற்றிலிருந்து கிடைக்கும் பல பொருட்களையும் ஒரே இடத்தில் உற்பத்தி செய்யும் நிலையங்கள் செங்கற்பட்டு மாவட்டத்தில் மாதவரம், தர்மபுரி மாவட்டத்தில் மாத்தூர், தென்னாற்காடு மாவட்டத்தில் மா. பொதியூர், வடாற்காடு மாவட்டத்தில் மங்கல், மாமண்டூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் புதுக்கோட்டை டவுன் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. மேலும் பனைப் பொருட்கள் செய்யும் நிலையங்களை திருநெல்வேலியிலுள்ள அந்தோனியாபுரத்திலும், இராமநாதபுர மாவட்டத்தில் மாரியூர், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கே. பரமத்தியிலும் நிறுவ ஆலோசனையில் இருக்கிறது.

21. 1983-84-ம் ஆண்டில் 5.50 இலட்சம் பாட்டில்கள் பாம்கூலா உற்பத்தி செய்யப்பட்டன. 1983-84-ம் ஆண்டில் ரூ. 47.09 இலட்சம் மதிப்புள்ள பனைப் பொருட்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. 1984-85-ல் 4.11 இலட்சம் பாட்டில்கள் பாம்கூலா உற்பத்தி செய்யப்பட்டன.

22. நுங்கினையும், பனை வெல்லத்தையும் நீண்ட நாட்களுக்கு பாதுகாக்கவும் பதனீரில் உள்ள சுண்ணாம்பு நெடியை குறைத்து, பருகிட ஏதுவாக இருப்பதற்கும், பனை மரங்களின் உயரத்தை குறைப்பதற்கும், கோவை வேளாண்மை பல்கலைக் கழகம் செய்துவரும் ஆராய்ச்சி திருப்தியளிக்கும் வகையில் முன்னேறி வருகிறது என்று வேளாண்மைப் பல்கலைக் கழகம் தெரிவித்துள்ளது.

23. வாரியத்தினால் 31-3-1984 முடிய 3,428 மின்விசைச் செக்குகள் விநியோகம் செய்யப்பட்டது. 1984-85 ஆம் ஆண்டில் 150 மின்விசைச் செக்குகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. வாரியம் கிண்டியிலுள்ள பொறியியற் கல்லூரியை தற்போதுள்ள மின்விசைச் செக்கின் இயக்கத்தினை எளிதில் இயக்கிடவும், எளிதில் இடம் விட்டு இடம் மாற்றி அமைக்கும் அமைப்புடைய தாக மாற்றவும் ஆலோசனைகளை தெரிவிக்க வாரியம் கோரியது. தற்போது பொறியியற் கல்லூரியின் மூலம் பெறப்பட்ட பிரத்யேக முறையுடைய மின்செக்குகள் தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள புதுப்பேட்டை எண்ணெய் உற்பத்தி கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் பரீட்சார்த்தமாக இயக்கப்பட்டு வருகிறது.

**உண்ணா எண்ணெய் மற்றும் சோப்பு:**

24. 40 உண்ணா எண்ணெய் வித்துக்கள் சேகரிக்கும் நிலையங்கள் வாரியத்தின்கீழ் செயல்பட்டு வருகின்றன. எண்ணெய் வித்துக்கள் சேகரிப்பதன் மூலம் கிராமத்திலுள்ள மக்களுக்கு பயன் தரக்கூடிய வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. தற்போது வாரியத்தின் கண்காணிப்பின்கீழ் 37 சலவை சோப்பு அலகுகளும் செங்கற்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றத்தில் ஒரு குளியல் சோப்பு அலகும் செயல்பட்டு வருகிறது. வாரியம் திருப்பூர், மதுரை மற்றும் தஞ்சாவூர் மண்டலங்களில் இதே போன்று ஒரு குளியல் சோப்பு அலகினை ஆரம்பிக்க தீர்மானித்



துள்ளது. இதனில் முதல் கட்டமாக தஞ்சை மண்டலத்தில் ஓர் குளியல் சோப்பு அலகினை நாஞ்சிக்கோட்டையில் ஆரம்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த அலகிற்கான கட்டிடப் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது. இதற்கான இயந்திரங்களும் வாங்கப்பட்டு விட்டது. இந்த அலகு 1985-86 ஆம் ஆண்டில் செயல்படத் துவங்கும்.

**தோல் தொழில்:**

25. காலணி தயாரிப்பாளரின் நலன் கருதி வழங்கப்பட்ட 'காலணி பெட்டி கூடங்கள்' எல்லோரின் பாராட்டையும் பெற்ற தாகும். வாரியம் 1983-84-ம் ஆண்டில் 500 பெட்டி கூடங்களை அளித்துள்ளது. 1984—85-ம் ஆண்டில் மேலும் 500 பெட்டி கூடங்கள் அளிக்க அனுமதி பெறப்பட்டு அதில் 347 பெட்டி கூடங்கள் வழங்கப்பட்டுள்ளன. தவிர ஒவ்வொரு காலணி தயாரிப்பவருக்கும் பெட்டி கூடங்களுடன் ஒரு தோல் தைக்கும் தையல் இயந்திரமும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. வாரி யத்தின்கீழ் 44 தோல் தொழில் அலகுகள் துறை அலகுகளாக செயல்பட்டு வருகின்றன. வெளிச் சந்தையில் கிடைக்கும் காலணி மற்றும் தோல் பொருட்களைக் காட்டிலும் வாரியத் தினால் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் நல்ல தரமுடைய தாகவும், குறைந்த விலையுடையதாகவும் உள்ளன.

**கைமுறை காகிதம்:**

26. வாரியத்தின்கீழ் 10 கைமுறை காகித அலகுகள் செயல் பட்டு வருகின்றன. அருப்புக்கோட்டையில் ஒரு கைமுறை காகித அலகு விரைவில் செயல்பட உள்ளது. அரசு அலுவலகங் களின் தேவையில் ஒரு பகுதியை கைமுறை காகிதமாகவே வாங்க வேண்டும் என்ற வாரியத்தின் கோரிக்கையை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இது கைமுறை காகித அலகுகள் உற்பத்தியையும், விற்பனையையும் பெருக்கிட கிடைத்த ஒரு புதிய வாய்ப்பாகும்.

**நார் மற்றும் பாய்முடைதல்:**

27. தற்போது வாரியத்தின் கண்காணிப்பின்கீழ் 60 நார் மற்றும் பாய்முடைவோர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்தச் சங்கங்கள் மூலப் பொருட்களை சேகரிக்கவும், உற்பத்தியான பொருட்களை விற்பதிலும் பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டி உள்ளது. திருச்சிராப்பள்ளி மாவட்டம் கரூரில் நார்த் தொழில் தொடர்பான எல்லா பணிகளையும் வாரியம் கவனித்து வருகிறது. உற்பத்தி, மூலப் பொருட்கள் சேகரித்தல், விற்பனை தொடர்பான பணிகளில் பிரதம சங்கங்களுக்கு உதவுவதற்காக, மாநில அளவில் ஒரு சங்க அமைப்பை நிறுவும் பணியினை வாரியம் மேற்கொண்டுள்ளது.

**கிராமத் தொழில் பொருட்கள் விற்பனை:**

28. கிராமத் தொழில் பொருட்களின் தரம் யாவரும் அறிந்ததாகும். கிராமத் தொழில் பொருட்களின் தேவைகள் நகர்ப்புற மக்களிடையே நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வருகிறது. பெருகிவரும் தேவையினை பூர்த்தி செய்யும் வகையில் இப்பொருட்களை நகரத்தின் குடியிருப்பு பகுதிகளில் கதர் அங்காடிகளின் மூலம் விற்பனையை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**பாலிவஸ்திரா :**

29. 1982-83-ம் ஆண்டு முதல் பாலிவஸ்திரா கதர் துணிகள் உற்பத்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1982-83-ம் ஆண்டில் ரூ. 17.12 லட்சம் மதிப்புள்ள துணிகள் உற்பத்தி செய்யப்பட்டது. இது 1983-84-ம் ஆண்டில் ரூ. 26.79 லட்சமாக உயர்ந்துள்ளது. 1984-85 ஆம் ஆண்டில் ரூ. 55.72 லட்சம் மதிப்புள்ள துணிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

**சிறப்பு திட்டங்கள்:**

30. (அ) ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்.—ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் இம்மாநிலத்திலுள்ள 2,000 பழங்குடியினர்களின் பொருளாதார நிலையினை உயர்த்துவதற்கும் அவர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தித்



தரவும் அரசு ரூ. 35.69 இலட்சம் இதுகாறும் வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்படி தேனீப் பெட்டிகள், தச்சு கொல்லுத் தொழில் கருவிகள் வாங்க நிதியுதவியும் அரசின் உதவித் தொகையினைக் கொண்டு அளிக்கப்படுகிறது. பிரம்பு மற்றும் மூங்கில் தொழிலில் பழங்குடியினருக்கு பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இதுகாறும் இத்திட்டத்தின் கீழ் 2,452 நபர்கள் பயனடைந்துள்ளார்கள். சேலம் மாவட்டத்தில் கொல்லிமலை, கல்ராயன் மலை மற்றும் வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள ஜவ்வாது மலை ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் கதர் மற்றும் கிராமத் தொழில் திட்டங்களை தீவிரமாக செயல்படுத்த தனி உதவி இயக்குநர்களின் அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட்டன. 1985-86-ல் பல்வகை திட்டங்களை செயல்படுத்த ரூ. 10 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்:—ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் அரசு 875 நபர்கள் பயன்பெறும் பொருட்டு நீலகிரி மாவட்டத்தில் தேனீப் பெட்டிகள் வழங்கவும் தைலம் காய்ச்சும் கருவிகள் வழங்கவும், எண்ணெய் மற்றும் ரொட்டி தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்துவதற்காகவும் ரூ. 36.40 இலட்சம் வழங்கியுள்ளது. 1985-86-ம் ஆண்டு அரசு இத்திட்டத்தை தொடர்ந்து நடத்திட ரூ. 5 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

(இ) வறட்சிப் பகுதிகளுக்கான திட்டம்:—தர்மபுரி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் 4,655 நபர்கள் பயன்பெறும் பொருட்டு வளர்ச்சிப் பணிக்காக ரூ. 137.55 இலட்சம் அரசு வழங்கியுள்ளது.

(ஈ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்:—ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அரசு அளிக்கும் அனைத்து சலுகைகளையும் பெற்று பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றி வரப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் வறுமைக் கோட்டிற்கு கீழேயுள்ள 13,206 கைவினைஞர்களுக்கு பயிற்சியளித்து இன்ன பிற வசதிகளை ஏற்படுத்தித் தர இதுகாறும் அரசு ரூ. 137.30 இலட்சம் வழங்கியுள்ளது.

[1985 ஜூன் 18

(உ) சிறப்பு மேம்பாட்டுத் திட்டம் மற்றும் கிளஸ்டர் அபிவிருத்தி திட்டம்:—அரசு ஆதி திராவிட மக்களுக்கு கிராமப் புறங்களில் வேலை வாய்ப்பு ஏற்படுத்தி அவர்களை கதர் கிராமத் தொழில் திட்டங்களில் ஈடுபடுத்தும் பொருட்டு சிறப்பு மேம்பாட்டுத் திட்டம் மற்றும் கிளஸ்டர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் வழிவகை செய்துள்ளது. சிறப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 14,759 நபர்கள் பயன்பெறும் பொருட்டு ரூ. 567.70 இலட்சமும், கிளஸ்டர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 9,385 நபர்கள் பயன் பெறும் பொருட்டு, ரூ. 856.98 இலட்சமும் அரசு இதுவரை வழங்கியுள்ளது. இத்திட்டங்களின் செயற்படுத்துவதற்கான பணிகள் பல நிலைகளில் உள்ளது.

**1985-86 ஆம் ஆண்டுக்கான திட்டங்கள்.**

31. 1985—86 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட திட்டங்களை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது:—

| | திட்ட மதிப்பு. | 1985-86ல் நிதி ஒதுக்கீடு. |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1. சிக்குவாரிகள், கோது கருவிகளுடன் தூசு முதலியவற்றை அகற்ற காற்றியக்கப் பொறிக்கு வகை செய்தல். | 16.00 | 0.01 |
| 2. வட ஆற்காடு மாவட்டத்தில் பருத்தியைச் சேமித்து வைப்பதற்கான வசதிகளைச் செய்தல். | 4.49 | 0.01 |

**வாரியத்தின் நிதி நிலை:**

32. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் அரசின் வரவு செலவு திட்ட அமைப்பினை பின்பற்றி, முறையே கதர் நிதி, கிராமத் தொழில் நிதி என இரண்டு தலைப்பு கணக்குகளின் கீழ் தனது வரவு செலவுத் திட்டங்களை தயாரிக்கிறது.

33. கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனது நிதி உதவிக் கொள்கையின்படி பல திட்டங்களை அமுலாக்கி நடத்த நிதி உதவி அளிக்கிறது. வணிக முறை சாராத இனங்களில் வரவுக்கும் செலவுக்கும் இடையே ஏற்படுகிற நிகர வித்தியாசத் தொகையினை தமிழ்நாடு அரசு ஈடு செய்து உதவுகிறது.



1985 ஜூன் 18]

34. 1984-85-ம் ஆண்டில் ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டத்தின் கீழ் கதர்-கிராமத் தொழில் ஆணைக் குழு கீழ்க்கண்ட நிதிகளை ஒதுக்கி உள்ளது.—

| 1984-85. | க.கி.தொ.ஆ. குழுவிடமிருந்து மான்யம். | க.கி.தொ.ஆ. குழுவிடமிருந்து கடன். | வங்கிகளிடம் இருந்து கடன். |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1. கதர் .. | 1.61 | 146.14 | 487.25 |
| 2. கிராமத் தொழில்கள்— | 40.46 | 202.06 | .. |
| அ. வாரியத் திட்டங்கள் | .. | .. | 32.50 |
| ஆ. தீப்பெட்டித் தொழில் (இயக்குநர், தொழில் வணிகத் துறை மற்றும் கண்காணிப்பில் இயங்குவது). | .. | .. | 325.00 |
| மொத்தம் .. | 42.07 | 348.20 | 844.75 |

35. கதர்—கிராமத் தொழில் ஆணைக் குழுவின் நிதி உதவியை தவிர தமிழ்நாடு அரசால் வாரியத்தில் ஒப்படைக்கப்படும் சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்த தமிழ்நாடு அரசிடமிருந்து நிதி உதவி இவ்வாரியத்திற்கு கிடைத்திருக்கிறது. தமிழ்நாடு அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி உதவியின் விவரம் பின்வருமாறு:—

| | திருத்திய மதிப்பீடு, 1984-85. | திட்ட மதிப்பீடு. 1985-86. |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1. மாநில அரசிடமிருந்து கிடைக்கும் மான்யங்கள்: | | |
| அ. கதர் நிதிக்கான நிகர செலவின மான்யம். | 49.39 | 51.84 |
| ஆ. கிராமத் தொழில்கள் நிதிக்கான மான்யம். | 54.74 | 57.14 |
| இ. தணிக்கைக் கட்டணம். | 18.90 | 19.80 |
| ஈ. கதர் விற்பனையில் தள்ளுபடி. | 110.00 | 75.00 |
| உ. மற்ற சிறப்புத் திட்டங்களை செயல்படுத்த. | 43.99 | 24.03 |
| | 277.02 | 227.81 |

2. தமிழ்நாடு அரசிடமிருந்து இடைக்கும் கடன் :

| | திருத்திய மதிப்பீடு, 1984-85 | திட்ட மதிப்பீடு. 1985-86 |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| இதர சிறப்புத் திட்டங்களை செயல்படுத்த. | 0.70 | 0.21 |
| | 277.72 | 228.02 |



மானியக் கோரிக்கை எண் 27—கதர் 1985-86.

321. கிராமக் கைத்தொழில்களும் சிறு தொழில்களும்.

1. திட்டத்தில் சேராதவை.

(ரூபாய்களில்)

| | | |
|---|---|---|
| AA. | கதர் வளர்ச்சிக்காக தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்—09. உதவி மானியங்கள் | 51,84,000 |
| AB. | தணிக்கைக் கட்டணங்கள் செலுத்த தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு மானியங்கள்—09. உதவி மானியங்கள் .. | 19,80,000 |
| AD. | கிராமத் தொழில் நிதிக்காக தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு மானியங்கள்—09. உதவி மானியங்கள். .. | 57,14,000 |
| AF. | பதனீர் இறக்குவோர் துயர் தணிப்பு மறுவாழ்வுக்காக தமிழ்நாடு கதர்–கிராமத் தொழில் வாரியத்திற்கு மானியங்கள்—09. உதவி மானியங்கள் .. .. — | 10,000 |

2. மாநிலத் திட்டம்.

| | | |
|---|---|---|
| JG. | கதர்த் துணி விற்பனைமீது தள்ளுபடி— 09. உதவி மானியங்கள். .. .. | 75,00,000 |
| JF. | கதர் வளர்ச்சிக்கான புதிய திட்டங்கள்— 09. உதவி மானியங்கள் .. .. | 8,18,000 |
| JM. | பழங்குடியினர் பகுதிகள் துணைத் திட்டம் | |
| JA. | பழங்குடியினருக்கு தேனீ வளர்க்கும் பெட்டிகள் வழங்கல்—01. சம்பளங்கள்—09. உதவி மானியங்கள் .. .. | 10,00,000 |
| JN. | நீலகிரி மாவட்டத்தில் தேனீ வளர்ப்பு மேம்பாட்டுக்காக தமிழ்நாடு கதர்–கிராமத் தொழில் வாரியத்திற்காக மானியங்கள்— 09. உதவி மானியங்கள் .. .. | 4,00,000 |

| | | |
|---|---|---|
| | | (ரூபாய்களில்) |
| JJ. | நீலகிரி மாவட்டத்தில் தைலங்கள் வடிக்கவும் தைலங்கள் வடிக்கும் இயந்திரங்கள் வழங்கவும் தமிழ்நாடு கதர்–கிராமத் தொழில் வாரியத்திற்கு மானியம்—09. உதவி மானியங்கள் .. .. .. | 1,00,000 |
| JK. | கண்ணாடிக்கல் மேம்பாட்டுப் பிரிவுக்காக தமிழ்நாடு கதர்–கிராமத் தொழில் வாரியத்திற்கு மானியம்—09. உதவி மானியங்கள் .. | 31,000 |
| JL. | நார் சேகரித்தல், வடிவமைப்பு செய்தல், பிரஷ் தயாரிக்கும் பிரிவு ஏற்படுத்தும் திட்டத்திற்கு மானியங்கள்—09. உதவி மானியங்கள் | 1,000 |
| JM. | மட்பாண்ட கைவினைஞர்களுக்கு பொது சேவை நிலையத்தை ஏற்படுத்துவதற்காக தமிழ்நாடு கதர்–கிராமத் தொழில் வாரியத்திற்கு மானியங்கள்—09. உதவி மானியங்கள் .. .. | 43,000 |
| JN. | மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் இப்புதிய திட்டத்திற்கு ஒட்டு மொத்த நிதி ஒதுக்கீடு .. .. | .. |
| | மொத்தம் | 2,27,81,000 |

136383
சென்னை-600 008
Y211,31 N85
N85-8431